ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருமங்கைமன்னன் திருவாய்மலர்ந்தருளிய

# பெரிய திருமொழி.

[பெருமாள்கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய திவ்யார்த்த தீபிகையுடன் கூடியது.]

## ஒன்பதாம் பத்து—முதல் திருமொழி,

## வங்கமா முந்நீர்.

அவதாரிகை:- *அயர்வறுமமரர்களதிபதியால் மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களுள் மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங்கூற அவதரித்த இவ்வாழ்வார் வாடினேன்வாடி யென்று தொடங்கி முதல் திருமொழியிலே தமக்குத் திருமந்திரம்லபித்தபடியைப்பேசி, அந்தத் திருமந்திரத்தின் அர்த்தத்தையும் கூடவே ஆராய்ச்சி செய்தருளித் திருமந்த்ரார்த்தத்துக்கு எல்லைநிலமான திவ்யதேசங்களிலே சென்று எம்பெருமானை ஸேவிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, திருமந்திரத்தை வெளியிட்டருளின எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடமான ஸ்ரீபதரிகாச்ரமத்தைத் தேடி வடக்கே எழுந்தருளினவளவில் 'திருப்பிரிதி' என்னும் திவ்யதேசம் சேர்பட, இரண்டாந்திருமொழியால் அதனை அநுபவித்து. அதன்பிறகு வதரியை வணங்கி, அதற்குப்பிறகு ஸ்ரீபதரிகாச்ரமத்தில் ஸந்நிதிகொண்டெழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைக் கைதொழுது, பிறகு சாளக்கிராமம் நைமிசாரணியம் சிங்கவேள்குன்றம் திருவேங்கடம் என்னுந்திருப்பதிகளை யாத்திரையடைவே மங்களாசாஸனஞ்செய்து, அவ்வளவோடு வடநாட்டுத் திருப்பதிகளின் அநுபவத்தைத் தலைக்கட்டி, அதன்பிறகு இரண்டாம்பத்தின் இரண்டாந்திருமொழி முதலாகத் தொண்டை நாட்டுத் திருப்பதிகள்சிலவற்றை அநுபவிக்கத்தொடங்கி, ஒன்பதாந்திருமொழியோடே அவ்வநுபவத்தைத் தலைக்கட்டி, அதன்பிறகு திருக்கோவலூர் திருவயிந்திரபுரமென்னும் நடுநாட்டுத் திருப்பதிகளிரண்டையும் இரண்டு திருமொழிகளாலநுபவித்து, அதன்மேல் மூன்றாம்பத்தின் இரண்டாந்திருமொழி முதலாகச் சோழநாட்டுத் திருப்பதிகளை யநுபவிக்கத்தொடங்கித் தில்லைத் திருச்சித்திரகூடம், காழிச்சீராமவிண்ணகரம், திருவாலிதிருநகரி, திருநாங்கூர்ப் பதினொருதிருப்பதிகள், திருவிந்தளூர், திருவெள்ளியங்குடி, புள்ளம்பூதங்குடி, கூடலூர், திருவெள்ளறை, திருவரங்கம், திருப்பேர்நகர், நந்திபுரவிண்ணகரம், திருவிண்ணகர், திருநறையூர், திருச்சேறை, தேரழுந்தூர், சிறுபுலியூர், திருக்கண்ணமங்கை

http://acharya.org

திருக்கண்ணபுரம் ஆகிய இத்திருப்பதிகள்வரையில் அநுபவித்துத் தலைக்கட்டி
ஞர் கீழ் எட்டாம்பத்து முடிய.

இனி, ஒன்பதாம்பத்து முதல்திருமொழியில் திருக்கண்ணங்குடியை அநுப விக்கிறார்.

வங்கமாமுந்நீர்வரிநிறப்பெரிய
வாளரவினணைமேவி *
சங்கமாரங்கைத்தடமலருந்திச்
சாமமாமேனியென்தலைவன் *
அங்கமாறைந்துவேள்விநால்வேதம்
அருங்கலைபயின்று * எரிமூன்றும்
செங்கையால்வளர்க்கும்துளக்கமில்மனத்தோர்
திருக்கண்ணங்குடியுள் நின்றானே. (க)

| | |
|---|---|
| வங்கம் | மரக்கலங்களையுடைத்தாய் |
| மா | பெரிதான |
| முந்நீர் | (திருப்பாற்) கடலிலே, |
| வரி | பல கோடுகளையும் |
| நிறம் | அழகையுமுடைய |
| பெரிய | விசாலமான |
| வாள் | ஒளி பொருந்திய |
| அரவு | திருவனந்தாழ்வானாகிற |
| இன் | இனிமையான |
| அணை | படுக்கையிலே |
| மேவி | பொருந்தி வர்த்திப்பவனும், |
| சங்கம் ஆர் அம் கை | சங்கு பொருந்திய அழகிய திருக்கைகளை யுடையவனும் |
| தட மலர் | பெரியதாமரைப்பூவை |
| உந்தி | திருநாபியிலுடையவனும் |
| சாமம் | நீல நிறத்ததான |
| மா மேனி | சிறந்த திருமேனியை யுடையவனுமான |

| | |
|---|---|
| என் தலைவன் | எம்பெருமான் (எங்கு எழுந்தருளியிருக்கிறு னென்றால்) |
| அங்கம் ஆறு | ஆறு வேதாங்கங்களென்ன |
| ஐந்து வேள்வி | பஞ்சமஹாயஜ்ஞங்க ளென்ன |
| நால் வேதம் | நான்கு வேதங்களென்ன |
| அரு கலை | (வேதங்களுக்கு உபப்ரும் ஹணமாகவுள்ள) அருமை யான நூல்களென்ன ஆகிய இவற்றை |
| பயின்று | காலக்ஷேபமாகக் கொண்டு |
| எரி மூன்றும் | த்ரேதாக்னிகளை |
| செம் கையால் வளர்க்கும் | செவ்விய கைகளாலே ஓம்புகின்றவர்களும் |
| துளக்கம் இல் மனத்தோர் | சலிக்கின்ற அத்யவஸாய முடையவர்களுமான அந்தணர்வாழ்கிற |
| திருக்கண்ணங் குடியுள் | திருக்கண்ணங்குடி யென்னுந்திருப்பதியிலே |
| நின்றான் | எழுந்தருளியிருக்கிறான். |

* * *—திருப்பாற்கடலில் பாம்பணையிற் பள்ளிகொள்ளுகின்ற வ்யூஹ மூர்த்தியே திருக்கண்ணங்குடியில் அர்ச்சாவதார ரூபியாய் எழுந்தருளியுள்ள எம்பெருமானென்கிறார்.

வங்கம்—கப்பல்; கடலுக்குச் சிறப்பாகக் கூறும் விசேஷணமிது. இனி

http://acharya.org

இச்சொல்லை 'ஸம்ம:' என்ற வடசொல்லின் சிதைவாகக்கொண்டால் அலை என்று பொருள் கொள்ளலாம்; "ஸம்ஹ்லாரம ஹுதி-லஹ-ரீ" என்பது அமரகோசம்.

முந்நீர்= ஆற்றுநீர் ஊற்றுநீர் வேற்றுநீர் [மழைநீர்] என்னும் மூன்றுவகை நீரையுடையது எனப் பண்புத்தொகை யன்மொழியாகிய காரணப்பெயரென்பது பழைய கொள்கை; இதனை மறுத்துக்கூறுகின்றார் அடியார்க்கு நல்லார்: ஆற்றுநீரென்பது மழைநீரேயாகையாலும் இவ்விரண்டுமில்லாதபோது ஊற்றுநீருமில்லையாகையாலும் இவற்றை முந்நீரென்பது பொருந்ாதென்று சொல்லி வேறு பொருள் கூறுகின்றார்; அதாவது— முச்செய்கையையுடைய நீர் முந்நீரென்பதாம். முச்செய்கையாவது-மண்ணைப்படைத்தலும் மண்ணையழித்தலும், மண்ணைக்காத்தலுமாம். நீரினின்று நிலம் பிறந்ததென வேதமோதுதலால் படைத்தலும், நீரின்றி உலகம்பிழைபாதாதலால் காத்தலும், இறுதியில் நீரினால் மூடப்பட்டு உலகம் அழிதலால் அழித்தலும் ஆக முத்தொழில்களும் கடலுக்கு உரியனவாம். நச்சினார்க்கினியர் கருத்துமிதுவே. நம்பூர்வாசாரியர்கள் மூன்றுவகைநீரையுடையதென்னும் பொருளையே ஆதரிப்பர். இனி முன்னீர் என றன்னகரப்பாடமோதி, பழைய நீர்என்றுரைப்பாருமுண்டு: ஆதியிற் கடவுள் நீரையேபடைத்தரென்று நூல்கள்கூறும். பொதுவாகக் கடலையுணர்த்துகின்ற இச்சொல் இங்குச் சிறப்பாகத் திருப்பாற்கடலை உணர்த்திற்று.

முதலடியின்முடிவில் மேவி என்றது வினையெச்சமன்று; மேவியவன் என்னும் பொருளதான பெயர்ச்சொல்; இ—பெயர்விகுதி: 'நாடோடி' 'பிறைசூடி' 'குதிரையோட்டி' என்பன காண்க.

சங்கம்—வடசொல்; இது சக்கரத்துக்கும் உபலக்ஷணமென்க. சாமம்—ஸாமமென்னும் வடசொல் விகாரம்.

அங்கம் ஆறு= சிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்று வேதாங்கங்கள் ஆறு. ஐந்துவேள்விகளாவன:— ப்ரஹ்மயஜ்ஞம், தேவயஜ்ஞம், பூதயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், மனுஷ்யயஜ்ஞம் என்பனவாம். வேதமோதுதல் பிரமயஜ்ஞம்; யாகஞ்செய்தல் தேவயஜ்ஞம்; பலியீதல்-பூதயஜ்ஞம்; பித்ருக்களையுத்தேசித்துத் தர்ப்பணம்விடுதல் பித்ருயஜ்ஞம்; விருந்தினர்க்கு உணவளித்தல் மனுஷ்யயஜ்ஞம். நால்வேதமாவன:— ருக்யஜுஸ் ஸாமம் அதர்வணம் என்பன: தைத்திரியம் பௌடியம் தலவகாரம் சாமம் என்னிவை யென்றலுமுண்டு. அருங்கலை யென்றது— வேதங்களுக்கு உபப்ருஹ்மணமாகவுள்ள ஸ்ம்ருதிதிஹாஸ புராணங்களை யென்ப. ஞானமனுட்டானமிவை நன்றாகவேயுடையரான மஹான்கள் வாழுமிடம் திருக்கண்ணங்குடி யென்றதாயிற்று.

துளக்கமில்மனத்தோர்= துளக்கமாவது கலக்கம்; அஃதில்லாத மனமுடையவர்களென்றது நல்ல விவேகமுடையவர்களென்றபடி: 'நாம் செய்கிற கருமங்கள் நமக்கு ஸாதநமல்ல; எம்பெருமானுடைய நிர்ஹேதுகக்ருபையே நமக்கு உஜ்ஜீவநோபாயம்' என்னும் அத்யவஸாயத்தில் குலைதலற்றவர்களென்கை. (க.)

http://acharya.org

கவளமாகதத்தகரியுய்யப் பொய்கைக்
கராங்கொளக்கலங்கி யுள்நினைந்து
துவள * மேல்வந்துதோன்றி வன்முதலை
துணிபடச் சுடுபடைதுரந்தோன் *
குவளைநீண்முளரிகுமுதமொண்கழுநீர்
கொய்ம்மலர்நெய்தலொண்கழனி*
திவளுமாளிகைசூழ் செழுமணிப்புரிசைத்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (உ)

| | |
|---|---|
| கவளம் | கவளங்கொள்ளுமியல்புடையதும் |
| மாகதத்த | மிக்கமதத்தையுடையதுமான |
| கரி | கஜேந்திரன் |
| பொய்கை | ஒருபொய்கையிலிருந்த |
| காரம் | முதலையினாலே |
| கொள | கௌவப்பட்டு |
| கலங்கி | கலக்கமடைந்து |
| உள் நினைந்து | (எம்பெருமானைச்) சிந்தித்து |
| துவள | வருந்திநின்றவளவிலே, |
| உய்ய | அது உஜ்ஜீவிக்கும்படி |
| மேல் வந்து தோன்றி | மேல்வழியாய் எழுந்தருளி ஸேவைஸாதித்து |
| வன் முதலை | வலிவுள்ள (அந்த) முதலை |
| துணிபட | துண்டாக அறும்படி |
| சுடு படை | ஜ்வலிக்கின்ற திருவாழிப் படையை |
| துரந்தோன் | பிரயோகித்தருளின எம்பெருமான், — |
| குவளை | கருநெய்தற்பூக்களென்ன |
| நீள் முளரி | பெரியதாமரைப் பூக்களென்ன |
| [illegible] | ஆம்[illegible] |
| ஒண் கழுநீர் | செங்கழுநீரென்ன |
| கொய் மலர் நெய்தல் | பறிக்கைக்கு உரியமலரை புடைத்தான நெய்தலென்ன ஆகிய இவற்றாலே |
| ஒண் | அழகுபெற்ற |
| கழனி | கழனிகளையுடையதும் |
| திவளும் மாளிகை சூழ் | பிரகாசிக்கின்றதிருமாளிகைகளாலே சூழப்பட்டதும் |
| செழு மணி புரிசை | சிறந்த ரத்நமயமான திருமதிளையுடையதுமான |

திருக்கண்ணங்குடியுள், நின்றான் —.

* * *—இத்திருப்பதியில் வாழ்பவர்கள் வேத வேதாந்தங்கள் கைவந்தவர்களென்றது கீழ்ப்பாட்டில். அந்தவேதத்தின் முக்கிய தாத்பர்யமான கைங்கரியத்தைச் செய்கையில் அதற்குநேரும் இடையூறுகளையொழித்து அக்கைங்கரியத்தைத்தானே கைக்கொண்டருளுமவன் எம்பெருமானென்பதை உணர்த்துமாறு ஸ்ரீகஜேந்த்ராழ்வானது வரலாற்றை இப்பாசுரத்திலெடுத்துரைக்கின்றார்.

கவளம் என்று யானையுணவுக்குப்பெயர். 'மாகதத்த' என்னும் விசேஷணமும் சாதிக்குரியதாக இட்டதாம். கதம்—கோபம். கரி—வடசொல். 'கரா' என்னும் 'காரம்' என்னும் முதலைக்குப் பெயர். கொள—கொள்ள. துவள—மிகவருந்திப் பறிக்கப்பட்ட இப்பூவை எம்பெருமானது திருவடிகளில் ஸமர்ப்

மிக்கப் பெறுகின்றிலோமே!' என்றுவருந்தங்கொள்ள.

நீர்ப்பூவளமும் நகர்வளமும் சொல்வன பின்னடிகள் ... (உ.)

வாதைவந்தடர வானமும்நிலனும்
மலைகளுமலைகடல்குளிப்ப *
மீதுகொண்டுகளும்மீனுருவாகி
விரிபுனல் வரியகட் டொளித்தோன் *
போதலர்புன்னை மல்லிகைமௌவல்
புதுவிரை மதுமலரணைந்து *
சீதவொண்தென்றல்திசைதோறுங்கமழும்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (௩)

| | |
|---|---|
| வாதை வந்து அடர | கஷ்டப்நேர்ந்து அதிகரிக்க |
| வானமும் | ஆகாசமும் |
| நிலனும் | பூமியும் |
| மலைகளும் | மலைகளும் |
| அலை கடல் | அலையெறிகின்ற கடலிலே |
| குளிப்ப | அழுந்திவிட, |
| மீது கொண்டு | (இவற்றை யெல்லாம்) தன் மேலே யேறிட்டுக் கொண்டு |
| உகளும் | களிப்புடன் உலாவுகிற |
| மீன் உரு ஆகி | மத்ஸ்ய ரூபியாகி |
| விரி புனல் | பரம்பின பெருவெள்ள நீரை |
| வரி அகடு | அழகிய (தனது) செலுவிலே |

| | |
|---|---|
| ஒளித்தோன் | அடக்கின எம்பெருமான்,— |
| போது | உரியகாலத்திலே |
| அலர் | விகஸிக்கிற |
| புன்னை | புன்னைகளென்ன |
| மல்லிகை | மல்லிகைகளென்ன |
| மௌவல் | முல்லைகளென்ன (இவற்றி னுடைய) |
| புது விரை மது மலர் | புதிய பரிமளத்தையும் தேனையுமுடைய பூக்களிலே |
| அணைந்து | அளாவி |
| சீதம் ஒண் தென்றல் | குளிர்ந்த அழகிய தென்றற்காற்று |
| திசை தோறும் | எல்லாப்பக்கங்களிலும் |
| கமழும் | வாஸனைவீசப்பெற்ற |
| | திருக்கண்ணங்குடியுள், நின்றானே—. |

* * *— மூவுலகங்களும் பிரளயவெள்ளத்தில் மூழ்கித் துன்பமிருந்த காலத்தில், லக்ஷம் யோஜனை நீளமும் பதினாயிரம் யோஜனை பருமனும் ஒற்றைக்கொம்பும் வாய்ந்த பெருமீனைத் திருவவதரித்துத் தன் ஒரு $ செலுவினகத்தே கடல்வெள்ளம் முழுவதும் ஒடுங்கும்படி யிருந்த பெருமான் வாழுமிடம் திருக்கண்ணங்குடி.

---

$ செலுவாவயது—மீனின் உட்புறத்தேயுள்ள முள்; 'செதின்' எனவும்படும். அன்றி, செலுவாவது மீன்செட்டையெனப்படும் மீன்சிறகுமாம். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் மத்ஸ்யாவதார ச்லோகத்திலே "வக்ஷஸ்தீர்ணார்ணோ ஸஹாஸ்ப்ருஷ்யயஜு விஹாரணாக மதிரவாஸ:" என்றது காண்க.

http://acharya.org

‘பாரயா’ என்னும் வடசொல் வாதையெனத்திரிந்தது.

மீநுகோண்டு = எம்பெருமானுடைய நியமனப்படி பிரளயப் பெருநீரில் ஒரு பெரிய ஓடம்வர, அந்தப்படகில் ஸப்தரிஷிகளும் எல்லா ஓஷதிகளும் ஸமஸ்தபிராணிகளும் ஏறியிருக்குமளவில் ஒரு பெருங்காற்று அடிக்க அதனால் ஓடம் பெருநீரில் அலைய, அப்போது அதனை மத்ஸ்ய ரூபியான பெருமான் தனது ஒற்றைக்கொம்பிலே வஹித்து ரக்ஷித்ததாக வரலாறு உள்ளதாதலால் “மீநு கொண்டு உகளும் மீனுருவாகி” எனப்பட்டது.

விரிபுனல்வரி அகட்டொளித்தோன் = “முடங்கு தெண்டிரைய பௌவம் முற்றுமோர் செலுவுட்சென்று, மடங்கிய துணரகில்லார் மயர்ந்தனர் கேடியன்னோர், ஒடுங்கினரேத்திநின்றுருயர்வொப்பில்லாத மேலோன், தடங்கொள் சேலுருவின்மாண்பு யாவரே சாற்றுநீரார்?” என்ற ஸ்ரீபாகவதத்தைக்காண்க. கடல் நீர்முழுவதையும் ஒரு செலுவினுள்ளடக்கிக் கடலை வெறுந்தரையாக்கி அதிலே சிலகாலம் விளையாடுவதும், மறுபடியும் செலுவில்நின்று கடல்நீரை வெளிப்படுத்திக் கடலிலே சிலகாலம் விளையாடுவதுமாய் நிகழ்ந்த லீலை உணரத்தக்கது.

புன்னை, மல்லிகை, முல்லை முதலியவற்றின் மலர்களிலே படிந்து அவற்றின் நறுமணத்தை முகர்ந்து கொண்டுவருகிற குளிர்ந்த தென்றற்காற்று எங்கும் வீசப் பெறுமிடமாமிது. .... .... .... (௩)

வென்றிசேர்திண்மை விலங்கல்மாமேனி
வெள்ளெயிற்றொள்ளெரித்தறுகண் *
பன்றியாயன்று பார்மகள்பயலை
தீர்த்தவன் பஞ்சவர்பாகன் *
ஒன்றலாவுருவத் துலப்பில்பல்காலத்து
உயர்கொடியொளிவளர்மதியம் *
சென்றுசேர்சென்னிச்சிகரநன்மாடத்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (௪)

| | | | |
|---|---|---|---|
| அன்று | முன்பொருகால், | ஒள் எரி | ஜ்வலிக்கின்ற அக்நியோடொத்த |
| வென்றி சேர் | வெற்றிபெறுந்தன்மையுடையதும் | தறு கண் | வட்டணித்த கண்களையும் உடையதுமான |
| திண்மை | வலிமையுடையதும் | பன்றி ஆய் | வராஹரூபியாய்த் திருவவதரித்து |
| விலங்கல் மா மேனி | மலைபோன்ற பெரிய வடிவுடையதும் | பார் மகள் | பூமிப்பிராட்டியினுடைய |
| வெள்எயிறு | வெளுத்தகோரப்பற்களையும் | பயலை | விரஹவேதனையை |

http://acharya.org

| | |
|---|---|
| தீர்த்தவன் | போக்கினவனும் |
| பஞ்சவர் பாகன் | பாண்டவர்களுக்கு ஸாரதியுமான எம்பெருமான்,— |
| ஒன்று அலா உருவத்து | பலவகைப்பட்ட உருவங்களையுடையவையாய் |
| உலப்பு இல் | முடிவில்லாமல் |
| பல் காலத்து | நீண்டகாலமுள்ளவையாய் |
| உயர் கொடி ஒளி வளர் மதியம் சென்று சேர் சென்னி சிகரம் | உயர்ந்தகொடிகளானவை ஒளிமிக்க சந்திர மண்டலத்தளவும் சென்று சேரும்படியாக ஓங்கின சிகரங்களையுடையவையான |
| நல் மாடம் | அழகிய மாடமாளிகைகளையுடைத்தான |

திருக்கண்ணங்குடியுள், நின்றான்—.

* * *—மஹாவராஹ மூர்த்தியாய்த் திருவவதரித்துப் பூமிப்பிராட்டியின் பிரிவுத்துயரத்தைத் தீர்த்தவனும் பார்த்தனுக்குச் சாரதியாயிருந்து த்ரௌபதியின் துயரைத் தீர்த்தவனுமான பெருமான் உறையுமிடம் திருக்கண்ணங்குடி.

முதலடி முழுவதிலும் வராஹமூர்த்தியின் விசேஷணங்கள். ஜயசீலத்வமும் உருவத்தின் ஒப்புயர்வற்ற பெருமையும் பயங்கரத்வமும் சொல்லப்பட்டன.

பயலைதீர்த்தவன்:—பயலை யெனினும் பசலையெனினும் ஒக்கும். பசலை நிறத்தைப் பற்றிக் குறுந்தொகையில் ஒரு செய்யுளுண்டு; அதாவது— "ஊருண் கேணி உண்டுறைத் தொக்க பாசியற்றே பசலை, காதலர் தொடுவுழித் தொடுவுழி நீங்கி விடுவுழி விடுவுழிப் பரத்தலானே." (399) என்பதாம். ஊரிலுள்ள ஜனங்களாலே நீருண்ணப் பெறுகிற கேணியினுள்ளே படர்ந்து கிடக்கும் பாசிபோன்றது பசலை நிறம்; தண்ணீரில் நாம் கைவைத்தோமாகில் கைபட்ட விடங்களில் பாசி நீங்கும்; கையை எடுத்துவிட்டோமாகில் அவ்விடமெல்லாம் பழையபடியே பாசி மூடிக்கொள்ளும். அதுபோல, கணவனுடைய கைபடுமிடங்களில் பசலை நிறம் நீங்கும்; அணைத்த கை நெகிழ்த்தவாறே அப்பசலை நிறம் படரும்; ஆகலால் பாசிபோன்றது பசலை நிறம் என்றபடி: (தோவுழித் தோவுழி—தொட்ட விடங்கள்தோறும். விடுவுழி விடுவுழி—விட்டவிடங்கள் தோறும். பரத்தலான்—வியாபிக்கிறபடியினால்.) நிறவேறுபாடு பசலையெனப்படும். பூமிப்பிராட்டி எம்பெருமானைப் பிரிந்து பிரளயப் பெருவெள்ளத்தினுள்ளே ஆழ்ந்திருந்ததனால் நிறவேறுபாடு கொண்டிருந்தாளென்றும், "பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள், மாசுடம்பில் நீர் வாரா மானமிலாப் பன்றியாந் தேசுடைய தேவர்" என்கிறபடியே மஹாவராஹமாகத் திருவவதரித்து பூமியைக் கோட்டாற் குத்தி மீட்டுக்கொணர்ந்து நித்ய ஸம்ச்லேஷம் பண்ணி "என்னிறம் பண்டு பண்டுபோலொக்கும்" என்னும்படியான நல்நிறத்தைக் கொடுத்தனனென்றும் கூறியவாறு.

பஞ்சவர்—தொகைக்குறிப்பு; ஐவருள் அர்ஜுநனே இங்கு விவக்ஷிதன்.

இத்தலத்தின்கணுள்ள திருமாளிகைகளின் ஒக்கம் அதிசயோக்தியலங்கார வகையிற் கூறப்படுகிறது பின்னடிகளில். 'ஒன்றலாவுருவத்து' என்பதும் 'உலப்பில் பல்காலத்து' என்பதும் நன்மாடத்துக்கு இட்ட அடைமொழிகள். ஒன்று



http://acharya.org

அல்லாவுருவத்து—திருமாளிகைகள் ஒன்றோடொன்று விலக்ஷணங்களாயிருக்கிற படி. ஒன்றுபோலொன்று இராத என்றபடி. உலப்பில் பல்காலத்து—(உலப்பு—முடிவு)சிலநாளிருந்து அழிந்து போவதன்றியே சாச்வதமாகவுள்ள திருமாளிகைகளென்கை. [உயர்கொடி யித்யாதி.] மேலே கட்டியுள்ள த்வஜங்கள் சந்திரமண்டலத்திலே படும்படி சிகரங்கள் ஓங்கியிருக்கின்றனவாம். சிகரம்—வடசொல். .... .... .... (௪)

மன்னவன் பெரியவேள்வியிற் குறளாய்
மூவடி நீரொடுங்கொண்டு *
பின்னுமேழுலகு மீரடியாகப்
பெருந்திசை யடங்கிட நிமிர்ந்தோன் *
அன்னமென் கமலத் தணிமலர்ப்பீடத்
தலைபுன லிலைக்குடைநீழல் *
செந்நெலொண்கவரி யசையவீற்றிருக்கும்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (௫)

| | | | |
|---|---|---|---|
| மன்னவன் | (மஹாபலியென்னும்) அரசனுடைய | அன்னம் | அன்னப்பறவை |
| பெரிய வேள்வியில் | மஹாயஜ்ஞத்திலே | மென் கமலத்து மலர் | மெல்லிய தாமரைப்பூவாகிய |
| குறள் ஆய் | வாமநமூர்த்தியாய்(ச் சென்று) | அணி பீடத்து | அழகிய ஆஸனத்திலே, |
| நீரொடு | (அவன் வார்த்த) தாரையோடு | அலை புனல் | அலையெறிகிற ஜலத்திலுண்டான |
| மூ அடியும் | மூவடி நிலத்தையும் | இலை | இலையாகிற |
| கொண்டு | கைப்பற்றி | குடை | குடையினுடைய |
| பின்னும் | பிறகு | நீழல் | நிழலிலே |
| ஏழ் உலகும் | ஏழுலகங்களையும் | செந் நெல் ஒண் கவரி அசைய | அழகிய செந்நெற்கவரிவீச |
| ஈர் அடி ஆக | இரண்டடியாலே அளப்பதாக | வீற்றிருக்கும் | வீற்றிருக்கப்பெற்ற |
| பெரு திசை அடங்கிட | பரந்த திக்குக்கள் இடமடையும்படி | | திருக்கண்ணங்குடியுள், நின்றான்—. |
| நிமிர்ந்தோன் | ஓங்கிவளர்ந்த பெருமான்,— | | |

* * *—உலகுக்கெல்லாம் தானே பிரபு என்று அபிமானித்திருந்த மஹாபலி, வேண்டுவார் வேண்டும் பொருள்களெல்லாம் தானமளிப்பதாக ஸங்கல்பம் செய்துகொண்டு நடத்தும் பெருமைவாய்ந்த யாகத்திலே வாமந ப்ரஹ்மசாரி வேஷத்தைப் பரிக்ரஹித்துக்கொண்டு சென்று புக்கு, அவன் தாரைவார்த்துத் தத்தம் பண்ணின மூவடி நிலத்தை ஸ்வீகரித்து, த்யாவாப்ருதிவிகளெல்லாவற்றையும் இரண்டேயடியால் தாவியளப்பதாக விம்மவளர்ந்த பெருமான் உறையுமிடம் திருக்கண்ணங்குடி.

http://acharya.org

ஓரரசன் ராஜசிஹ்நமாகிய வெண்சாமரைவீசக் கொற்றக்குடை நிழலிலே சிங்காசனத்தின்மீது வீற்றிருத்தல்போல, இத்திருப்பதியில் அன்னப் பறவைகள் செந்நெற்கதிர்களாகிய சாமரை வீச இலைக்குடையின் கீழ்ச் செந்தாமரை மலர்களிலேறி வீற்றிருக்கு மென்பது பின்னடிகளிற் கூறிய வருணனையின் கருத்து. பீடம்—வடசொல்திரிபு. .... .... .... (ரு)

மழுவினாலவனியரசை மூவெழுகால்
மணிமுடிபொடிபடுத்து * உதிரக்
குழுவுவார்புனலுட்குளித்து வெங்
கோபம்தவிர்ந்தவன், குலைமலிகதலி *
குழுவும்வார்கமுகும்குரவுநற்பலவும்
குளிர்தருசூதமாதவியும் *
செழுமையார்பொழில்கள் தழுவுநன்மாடத்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (சு)

| | |
|---|---|
| மூ எழு கால் | இருபத்தொரு தலைமுறையளவும் |
| அவனி அரசை | பூமியிலுள்ள ராஜாக்களுடைய |
| மணி முடி | மணியணிந்த கிரீடங்களை |
| மழுவினால் | கோடாலிப்படையினால் |
| பொடிபடுத்து | பொடி பொடியாகச் செய்து [அரசர்களை யெல்லாங் கொன்று] |
| உதிரம் குழுவு | (அவர்களுடைய) ரத்த [illegible] |
| வார் புனலுள் | வெள்ளத்திலே |
| குளித்து | ஸ்நாநம்பண்ணி |
| வெம் கோபம் தவிர்ந்தவன் | மிக்ககோபம் தணியப்பெற்ற பெருமான்,— |
| குலை மலி | குலைகளாலே நிறைந்த |
| கதலி | வாழைகளினுடைய |
| குழுவும் | தோப்பும் |
| வார் கமுகும் | ஓங்கின பாக்குமரங்களும் |
| குரவும் | குரவமரங்களும் |
| நல் பலவும் | நல்ல பலாமரங்களும் |
| குளிர்தரு சூதம் | குளிர்ந்த மாமரங்களும் |
| மாதவியும் | குருக்கத்தியுமாகிய |
| செழுமை ஆர் பொழில்கள் தழுவு | செழிப்புடைய சோலைகளாலே சூழப்பட்டதும் |
| நல் மாடம் | நல்ல மாடமாளிகைகளையுடையதுமான |

திருக்கண்ணங்குடியுள், நின்றான்—.

* * *—ஜமதக்நி மஹர்ஷியின் புத்திரனாகப் பரசுராமனாய்த் திருவவதரித்து, கார்த்தவீர்யார்ஜுநனும் அவனது குமாரர்களும் இயற்றிய குற்றங் காரணமாக அவர்களைக் கொன்றவளவோடு கோபந் தணியப்பெறாமல் க்ஷத்ரிய வம்சம் முழுவதன்மேலும் கோபாவேசங்கொண்டு உலகத்திலுள்ள அரசர்கள் பலரையும் இருபத்தொரு தலைமுறை பொருது ஒழித்திட்டு அவர்களது ரக்த வெள்ளத்தைப் பெரிய ஏரியாகத் தேக்கி அதிலே மூழ்கிப் பித்ருக்களுக்குத் தர்ப்பணக்ரியை நடத்தின பெருமான் உறையுமிடம் திருக்கண்ணங்குடி.

http://acharya.org

இத்தலத்தின் சோலைவாய்ப்புப் பின்னடிகளிற் கூறப்பட்டது.
சூதம், மாதவி—வடசொற்கள். .... .... .... (௬)

வானுளாரவரை வலிமையால்நலியும்
மறிகட லிலங்கையார்கோனை *
பானுநேர்சரத்தால் பனங்கனிபோலப்
பருமுடியுதிர வில்வளைத்தோன் *
கானுலாமயிலின் கணங்கள்நின்றாடக்
கணமுகில் முரசநின்றதிர *
தேனுலாவரிவண்டின்னிசைமுரலும்
திருக்கண்ணங்குடியுள்நின்றானே. (௭)

| | |
|---|---|
| வலிமையால் | (தனது) மிடுக்கினால் |
| வானுளார் அவரை நலியும் | தேவர்களை ஹிம்ஸித்துக் கொண்டிருந்த |
| மறி கடல் இலங்கையார் கோனை | அலைமறியுங் கடல்சூழ்ந்த இலங்கையிலுள்ளவர்களுக்கு அரசனான இராவணனுடைய |
| பரு முடி | பருத்த தலைகள் |
| பானு நேர் சரத்தால் | ஸூர்யனோடொத்த (தீக்ஷ்ணமான) அம்புகளாலே |
| பனங்கனி போல | பனம்பழம்போல |
| உதிர | அற்று விழும்படி |
| வில் வளைத்தோன் | சார்ங்கத்தை வளைத்த பெருமான் |
| கான் உலாம் | காட்டிலே உலாவுகின்ற |
| மயிலின் கணங்கள் | மயில்கூட்டங்கள் |
| நின்று ஆட | நின்று கூத்தாடவும், |
| கணம் முகில் | திரண்டமேகங்கள் |
| முரசம் நின்று அதிர | முரஜவாத்தியம்போல நின்று முழங்கவும், |
| தேன் உலாம் வரி வண்டு | தேன்களிலே திரிகின்ற அழகிய வண்டுகள் |
| இன் இசை முரலும் | இனியராகங்களை ஆலாபிக்கவும் பெற்ற |

திருக்கண்ணங்குடியுள், நின்றான்—.

* * *—நெடுநாள் அருந்தவம் புரிந்து, மானிடரைத் தவிர்த்து மற்று யாவராலும் தனக்குச் சாவு நேரிடாமை வரம்பெற்று அந்த வர பலத்தாலும் புஜபலத்தாலும் இந்திரன்முதலிய அஷ்டதிக்பாலகர்களையும் வென்று அவர்களது செல்வமனைத்தையுங் கொள்ளைகொண்டு அவர்களை ஓரிடத்திற் குடியிருக்கவொட்டாமல் நலிந்து அவர்கள் மனத்தில் பெருந்தீயை மூட்டி, குபேரன் குடியிருந்த இலங்கையில் அவனை யடித்தோட்டித் தான் குடிபுகுந்து, அவன் ஆண்டுவந்த புஷ்பகவிமானத்தைப் பறித்துத் தன்வசமாக்கிக்கொண்டு மஹர்ஷிகளுக்கும் மற்றும் ஸாதுஜனங்களுக்கும் பலவகைத் தீங்குகளை விளைத்துக்கொண்டு கிடந்த இராவணனைப் போர்க்களத்தில் பொன்முடிகள் பத்தையும் பனங்கனிபோல அறுத்துத்தள்ளி யமபுரிக்கு அனுப்பின பெருமான் உறையுமிடம் திருக்கண்ணங்குடி. 'பா நு:' என்னும் வடசொல் 'பானு' எனத் திரிந்தது; ஸூர்யன் என்று பொருள். சரம்—வடசொல். 'பனங்கனிபோல' என்ற உவமை, முடியுதிர்த்த எளிமையைக் காட்டுதற்கென்க.

http://acharya.org

இத்தலத்தில் நாட்டியமும் வாத்ய கோஷமும் ஸங்கீதமும் மலிந்திருக்கு மென்பன பின்னடிகள். மயில்கள் நாட்டிய மாடவும் மேகங்கள் வாத்யம் முழங்கவும் வண்டுகள் களித்து இன்னிசை பாடவுமாயிருக்கை.

முரசம்—'முரஜம்' என்ற வடசொல் விகாரம். .... .... (எ)

அரவுநீள்கொடியோ னவையுளாசனத்தை
அஞ்சிடாதேயிட * அதற்குப்
பெரியமாமேனியண்டமூடுருவப்
பெருந்திசையடங்கிட நிமிர்ந்தோன் *
வரையின்மாமணியும் மரதகத்திரளும்
வயிரமும் வெதிருதிர்முத்தும் *
திரைகொணர்ந்துந்தி வயல்தோறுங்குவிக்கும்
திருக்கண்ணங்குடியுள் நின்றானே. (அ)

அரவு நீள் கொடியோன் — ஸர்ப்பத்வஜனான துரியோதனன்
அவையுள் — ஸபையிலே
ஆசனத்தை — (பொய்யான) ஆஸனத்தை
அஞ்சிடாதே இட — அஞ்சாமல் இட,
அதற்கு — அக்காரணம்பற்றி
பெரிய மா மேனி — பெரிய திருமேனியை யுடையனாய்க்கொண்டு
அண்டம் மூடு உருவ — மேலுலகம் வரையிலுருவிச் செல்லும்படியாகவும்
பெரு திசை அடங்கிட — பெரியதிக்குகள் (தன்னிலே) அடங்கும்படியாகவும்
நிமிர்ந்தோன் — வளர்ந்த பெருமான்,—
வரையின் மா மணியும் — ஸஹ்ய பர்வதத்திலிருக்கிற சிறந்த ரத்னங்களையும்
மரதகம் திரளும் — மரதகக் குவியல்களையும்
வயிரமும் — வயிரங்களையும்
வெதிர் உதிர் முத்தும் — மூங்கில்களினின்று உதிர்ந்த முத்துக்களையும்
திரை — அலைகளானவை
உந்தி கொணர்ந்து — தள்ளிக்கொண்டுவந்து
வயல் தோறும் — கழனிகளெங்கும்
குவிக்கும் — குவிக்குமிடமான
திருக்கண்ணங்குடியுள், நின்றான்—.

* * *—கண்ணபிரான் பாண்டவர்கட்குத் தூதனாய்த் தன்னிடம் வரப் போகிறானென்பதை யறிந்த துரியோதனன் எவ்வகையினாலேனும் க்ருஷ்ணனை முடித்துவிடுவதே கருமமென்று துணிந்து ரஹஸ்யமாகத் தனது ஸபாமண்டபத்தில் மிகப் பெரிய நிலவறை யொன்றைத் தோண்டுவித்து அதில் அனேக மல்லர்களை ஆயுதபாணிகளாய் உள்ளே யிருக்கவைத்து அப்படுகுழியைப் பிறர் அறிய வொண்ணாதபடி மூங்கிற் பிளப்புக்களால் மேலே மூடி அதன்மேற் சிறந்த ரத்நாஸந மொன்றை யமைத்து அவ்வாஸநத்தின்மீது கண்ணபிரானை வீற்றிருக்கச் சொல்ல, கண்ணன் அங்ஙனமே அதன்மேலேறின மாத்திரத்திலே மூங்கிற் பிளப்புக்கள் முறிபட்டு ஆஸனம் உள்ளிறங்கிப் நிலவறையிற் செல்லுமளவில் மல்லர்கள் எதிர்த்துவர, பெருமான் மிகப் பெரிதாக விச்வரூபமெடுத்துப் பல கைகளையுங் கால்களையுங்கொண்டு எதிர்த்து அந்த மல்லர்களை மடிவித்தானென்ற வரலாறு முன்னடிகட்கு அறியத்தக்கது.

http://acharya.org

துரியோதனன் ஸர்ப்பத்தை த்வஜத்திலே யுடையனுதலால் அரவுநீள் கொடியோன் எனப்பட்டான். 'ஸர்வஜ்ஞனைப் ஸர்வசக்தனை பெருமானுக்குத் தீங்கிழைக்க நினைக்கிறேமே! இது நமக்கே அநர்த்தமாய்த் தலைக்கட்டுமே!' என்று அஞ்சவேண்டியிருக்க அங்ஙனம் சிறிதும் அஞ்சாமல் ஸாஹஸமாய்ப் பொய்யாஸனமிட்டதனால் 'அஞ்சிடாதே யிட' எனப்பட்டது.

[பெரியமாமேனி அண்டமூடுருவப் பெருந்திசை யடங்கிட நிமிர்ந்தோன்] ஸ்ரீ காஞ்சீபுரியில் 'திருப்பாடகம்' என்று ப்ரஸித்தமான பாண்டவ தூதர் ஸந்நிதியில் இவ்விதிஹாஸத்துக்குத் தகுதியாக மிகப் பெரிய திருக்கோலங் கொண்டெழுந்தருளி யிருக்கின்றமை அறியத்தக்கது. (பாடகம்=பாடு அகம்—, பாடு—பெருமை; அதுதோற்ற எழுந்தருளியிருக்கும் தலம் என்க.)

ஸஹ்ய பர்வதத்திலிருக்கிற ரத்னங்கள் மாதகந்திரள் வயிரம் மூங்கில் உதிர்த்த முத்துக்கள் ஆகிய இவற்றைத் திரைகளானவை தம்மிலடங்காமையாலே கொண்டுவந்து தள்ளி வயல்களிலே குவிக்குமென்பன பின்னடிகள். (அ)

வேதிர்—மூங்கில். .... .... ....

பன்னியபாரம் பார்மகட்கொழியப்
பாரத மாபெரும்போரில் *
மன்னர்கள்மடிய மணிநெடுந்திண்டேர்
மைத்துனற் குய்த்தமாமாயன் *
துன்னுமாதவியும் சுரபுனைப்பொழிலும்
சூழ்ந்தெழு செண்பகமலர்வாய் *
தென்னவென்றளிகள் முரன்றிசைபாடும்
திருக்கண்ணங்குடியுள் நின்றானே. (கூ)

பார்மகட்கு — பூமிப்பிராட்டிக்கு இருந்த
பன்னிய பாரம் — விஞ்சின பாரமானது
ஒழிய — விட்டுநீங்கும்படி
பாரதம் மா பெரு போரில் — மிகப்பெரிய பாரதயுத்தத்தில்
மன்னர்கள் — அரசர்கள்
மடிய — தொலையும்படி
மைத்துனற்கு — அர்ஜுநனுக்கு
மணி நெடு திண் தேர் உய்த்த — மணிகளுடையதாய்ப் பெரிதாய்த் திடமாயிருந்த தேரை நடத்தின
மா மாயன் — ஆச்சரிய சக்தியுக்தனான பெருமான்,—
துன்னு மாதவியும் — நெருங்கின குருக்கத்திகளும்
சுரபுனை பொழிலும் — சுரபுன்னைச் சோலைகளும்
சூழ்ந்து எழு செண்பகம் — சுற்றிலுமுண்டான செண்பகங்களும் ஆகிய இவற்றினுடைய
மலர் வாய் — பூக்களிலே
அளிகள் — வண்டுகள்
தென்ன என்று — தென்ன தென்ன வென்று
முரன்று — ஆலாபித்து
இசை பாடும் — இசைபாடப்பெற்ற
திருக்கண்ணங்குடியுள், நின்றான்—.

http://acharya.org

* * *—பூமிக்கு வடமொழியில் "ஸர்வம்ஸஹா" என்று ஒரு பெயருண்டு; எல்லாவற்றையும் பொறுக்கவல்லது என்று பொருள். பூமிப்பிராட்டி அப்படி எல்லாவற்றையும் பொறுக்கவல்லவளாயினும், தன்மீது ஸாது ஜனங்கள் எத்தனை கோடிக்கணக்காக இருந்தாலும் அவர்களைச் சுமப்பது இலவம்பஞ்சைச் சுமப்பதுபோல் அவட்கு வருத்தமற்றிருக்கும். ஒரு துஷ்டனுண்டாகிலும் இரும்பு மூட்டையைத் தாங்குவதுபோல் மிகவருத்தமாம். இப்பூமியின்கண் பிறந்திருந்த துரியோதநாதியர்களாகிற பெரும் பாரத்தைப் பொறுக்க மாட்டாமல் மிக வருந்தின பூமிப்பிராட்டியின் வருத்தம் தீருமாறு திருவவதரித்தருளிப் பாரத யுத்தமென்னும் வியாஜத்தினால் பூமிபாரங்கள் பலவற்றையும் போக்கடிக்க வேண்டிப் பார்த்தஸாரதியாக அமர்ந்த பெருமான் உறையுமிடம் சோலைவாய்ப்புப் பொருந்திய திருக்கண்ணங்குடி.

மைத்துனற்குத் தேர் உய்த்த = கண்ணபிரானுக்கு அர்ஜுநன் எப்படி மைத்துனன்? என்று கேள்விபிறக்கும். கேண்மின்; பெண் கொடுத்துக்கொள்ளுதற்கு உரிய உறவுமுறைமையுடையாரை மைத்துனன்மாரென்பது தமிழ் மரபாதல் பற்றிப் பாண்டவர்கள் கண்ணபிரானுக்கு மைத்துனன்மாராவர் என்று பெரியோர் சொல்லக்கேள்வி; "மைத்துனன்மார்காதலியை மயிர்முடிப்பித்து" என்ற பெரியாழ்வார் திருமொழியுங் காண்க. .... .... .... (௯)

கலையுலாவல்குல் காரிகைதிறத்துக்
கடற்பெரும் படையோடுஞ்சென்று *
சிலையினாலிலங்கை தீயெழச்செற்ற
திருக்கண்ணங்குடியுள் நின்றானை *
மலைகுலாமாட மங்கையர்தலைவன்
மானவேல்கலியன் வாயொலிகள் *
உலவுசொல்மாலை யொன்பதோடொன்றும்
வல்லவர்க்கில்லைநல்குரவே. (௰)

கலை உலா அல்குல் — நல்ல ஆடை உலாவுகின்ற இடைப்பையுடையளான
காரிகை திறத்து — அழகிற்சிறந்த ஸீதாபிராட்டிக்காக
கடல் பெரு படையொடும் சென்று — ஸமுத்திரத்திற் காட்டில் பெரிதான (வாநர) சேனையோடே எழுந்தருளி
சிலையினால் — சார்ங்கவில்லாலே
இலங்கை தீ எழ செற்ற — இலங்கை நெருப்புப்பற்றி யெரியும்படி அழித்தவனும்
திருக்கண்ணங்குடியுள் நின்றானை — திருக்கண்ணங்குடியில் எழுந்தருளியிருப்பவனுமான எம்பெருமான் விஷயமாக;
மலைகுலா மாடம் — மலையென்று கொண்டாடிச் சொல்லத்தக்க மாடங்களையுடைத்தான
மங்கையர் — திருமங்கைநாட்டில் உள்ளவர்கட்கு
தலைவன் — தலைவரும்
மானம் வேல் — சிறந்த வேற்படையையுடையவருமான

http://acharya.org

| | |
|---|---|
| கலியன் | ஆழ்வாருடைய |
| வாய் ஒலிகள் | ஸ்ரீஸூக்தியாய் |
| உலவு | லக்ஷணங்களில் குறையற்றவையான |
| சொல் மாலை ஒன்பதோடு ஒன்றும் | இப்பத்துப் பாசுரங்களையும் |
| வல்லவர்க்கு | ஓதவல்லவர்களுக்கு |
| நல்குரவு | ஏழைமை |
| இல்லை | இல்லையாம். |

* * *—ஒரு க்ஷணகாலமும் விட்டுப் பிரிந்து ஜீவித்திருக்க வொண்ணாத உடைவாய்ப்பு முதலிய செயற்கையழகும் இயற்கையழகும் பொருந்தின பிராட்டியை இலங்கையில் நின்றும் மீட்டுக்கொணர்வதற்காக வானரப் பெரும்படையைத் துணைகொண்டு இலங்கைக் கெழுந்தருளி அவ்விடத்தைச் சுடுகாடாக்கின பெருமான் இன்னமும் அப்படிப்பட்ட ஆச்ரித விரோதிகளைக் கிழங்கெடுப்பதற்காகத் திருக்கண்ணங்குடியிலே நித்யஸந்நிதி பண்ணியிராநின்றான்; அப்பெருமான் விஷயமாகத் திருமங்கைமன்னன் திருவாய்மலர்ந்தருளிய இத்திருமொழியைக் கற்றுவல்லவர்கள் நித்ய ஸ்ரீமான்களாயிருக்கப் பெறுவர்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

காரிகை— அழகு; அழகுடையவளுக்கு ஆகுபெயர்; இச்சொல் இங்குச் சிறப்பாக ஸீதையைக் குறித்தது.

**கடல்பெரும்படையோடுஞ் சென்று**—கடலிற் காட்டிலும் பெரிதான சேனையோடே சென்று என்றும், பெரும்படையோடே கடலிலே சென்று என்றும் பொருள் கொள்ளலாம்.

**நல்குரவு**—தரித்ரனாயிருத்தல்; எம்பெருமானை இழந்திருத்தலே தாரித்ர்யமாகக் கருதத்தக்கது. 'நல்குரவு இல்லை' என்றது—பகவத் கைங்கர்ய லக்ஷ்மி இடையறாதிருக்கு மென்றவாறு. இனி, லௌகிகருடைய ஆசைக்கு ஏற்பப் பொருளுரைக்கவுமாம். ... ... .... (க0)

அடிவரவு:—வங்க கவளம் வாதை வென்றி மன்னவன் மழு வானுளார் அரவு பன்னிய கலை போன்.

முதல் திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## ஒன்பதாம்பத்து—இரண்டாந்திருமொழி,

# பொன்னிவர்மேனி.

**உரையவதாரிகை:—** திருக்கண்ணங்குடியில் நின்றும் திருநாகைக்கு எழுந்தருளினார் ஆழ்வார். அங்குறையும் எம்பெருமானுடைய திருநாமம் ஸௌந்தர்யராஜன். அவனது வடிவழகு வாசாமகோசரம். "வாராகவாமனனே அரங்கா வட்டநேமி வலவா ராகவா உன்வடிவு கண்டால் மன்மதனும் மடலூராக வாதரஞ் செய்வன்" என்னும்படியன்றோ பொதுப்படையாக எம்பெருமானது வடிவழகிருப்பது. "கண்ணிற் காண்பரேல் ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்" என்று கம்பருமியம்புகிறார். அவை யெல்லாம் கிடக்கட்டும்;

சூர்ப்பணகை யென்னும் அரக்கி பஞ்சவடியிலே வந்து அபசாரப்பட்டுக் காதும் மூக்கு மறுப்புண்டு ஜநஸ்தானத்திலே சென்று கரன் முன்னிலையில் தரையில் வீழ்ந்து ரத்த வெள்ளம் பெருகக் கதறிப்புரண்டு அழுமளவிலே 'தங்காய்! உன் விஷயத்தில் இப்படிப்பட்ட கொடுமையான பிழையைச் செய்தவன் யாவன்? சொல்லாய்' என்று பெருஞ் சினத்துடனே கரன் கேட்க, அதற்குச் சூர்ப்பணகை என்ன சொல்லத் தொடங்கினாள் தெரியுமோ? (ஸ்ரீ ராமாயணத்தில் ஆரண்ய காண்டத்தில் பத்தொன்பதாவது ஸர்க்கத்தில் ௧௪, ௧௫, ௧௬, ச்லோகங்கள் காண்மின்;—) "𑌤𑌰𑍁𑌣𑍌 𑌰𑍂𑌪𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑍌 𑌸𑍁𑌕𑍁𑌮𑌾𑌰𑍌 𑌮𑌹𑌾𑌬𑌲𑍌। 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍌 𑌚𑍀𑌰𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌜𑌿𑌨𑌾𑌮𑍍𑌬𑌰𑍌॥ 𑌫𑌲𑌮𑍂𑌲𑌾𑌶𑌿𑌨𑍌 𑌦𑌾𑌨𑍍𑌤𑍌 𑌤𑌾𑌪𑌸𑍌 𑌧𑌰𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑍌। 𑌪𑍁𑌤𑍍𑌰𑍌 𑌦𑌶𑌰𑌥𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌾𑌂 𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑍌 𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍌॥ 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌰𑌾𑌜𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍌 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌨𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍌। 𑌦𑍇𑌵𑍌 𑌵𑌾 𑌮𑌾𑌨𑍁𑌷𑍌 𑌵𑌾 𑌤𑍌 𑌨 𑌤𑌰𑍍𑌕𑌯𑌿𑌤𑍁𑌮𑍁𑌤𑍍𑌸𑌹𑍇 = தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ, புண்டரீக விசாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ; பலமூலாசநௌ தாந்தௌ தாபஸௌ தர்மசாரிணௌ, புத்ரௌ தசரதஸ்யாஸ்தாம் ப்ராதரௌ ராமலக்ஷ்மணௌ; கந்தர்வராஜ ப்ரதிமௌ பார்த்திவவ்யஞ்ஜநாந்விதௌ; தேவௌவா மாநுஷௌ வா தௌ ந தர்க்கயிது முத்ஸஹே." என்றாள். [நல்ல யௌவநமுள்ளவர்களும் மிகுந்த ஸௌந்தர்ய முள்ளவர்களும் ஸுகுமாரமான திருமேனி படைத்தவர்களும் மஹாபலசாலிகளும் செய்யதாமரைக் கண்களுடையவர்களும் மரவுரியும் மான்தோலு முடுத்தவர்களும் பழங்களையும் வேர்களையு முண்பவர்களும் ஜிதேந்திரியர்களும் ரிஷிவேஷம் பூண்டவர்களும் தருமநெறி தவறாதவர்களும் தசரதனுக்குப் புதல்வராகப் பிறந்தவர்களும் கந்தர்வராஜனுக் கொப்பானவர்களும் ராஜலக்ஷணங்களுடன் கூடியவர்களுமான ராமலக்ஷ்மணர்களென்னும் அண்ணன் தம்பிமார் இருவர் (பஞ்சவடியில்) இருக்



http://acharya.org

கிறார்கள்; அவர்கள் தேவர்களோ அல்லது மநுஷ்யர்களோ, நிச்சயிக்க முடியவில்லை—]என்று சொல்லிக்கொண்டுபோய் 'அவர்கள் காண் என்னை இப்பாடு படுத்தினர்' என்றாள். 'உன்னை இங்ஙனே அங்கபங்கம் செய்ததுயார்?' என்று கேட்டால், தான்படும் கஷ்டமும் தன் கோபமும் சொல்லுவிக்கிற வார்த்தை எப்படியிருக்கவேணும்? 'இரண்டு படுபாவிகள்' என்று தொடங்கி வாயார வைது செய்திகளைச் சொல்லவேண்டியிருக்க, தூஷணமாக வொன்றும் நெஞ்சிலும்நினையாமல் "தருணௌ ரூபஸம்பந்நௌ" என்று வருணித்துச் சொல்லத் தொடங்கினளென்றால் வயிரவுருக்கான வடிவழகு படுத்துகிற பாடு இது என்றன்றோ நினைக்கவேண்டும். அர்ச்சாவதாரத் திருமேனிகளுள் திருநாகையெம்பிரானுடைய வடிவழகு பேச்சுக்கு நிலமன்றே.

அவ்வழகிலே நெஞ்சைப்பறிகொடுத்த ஆழ்வார் ஆண்மையிழந்து பெண்மையெய்திப் பரகால நாயகியாகி, தன்னை ஈடுபடுத்தின அழகையும் மற்றும் நடந்த செய்திகளையும் தோழியோடு சொல்லித் தரிக்கிறதாய்ச் செல்லுகிறது இத்திருமொழி. மற்றைத் திருமொழிகளிற்போல் இத்திருமொழியில் ஒன்பது பாசுரங்களிலும் திருப்பதியின் திருநாமவிலச்சினை இல்லை; நிகமனப் பாசுரத்தில் மாத்திரமே "நாகையழகியாரை" என்றுள்ளது. மற்றைப் பாசுரங்களொன்பதும் "அச்சோவொருவரழகியவா" என்றே முடிவு புனைந்துள்ளன. ஆழ்வார் தம்மை மறந்ததுபோலத் திருப்பதியையும் மறந்தார்; இவர் மறந்தாரல்லர்; எதிர்த்தலையின் வடிவழகு மறக்கப்பண்ணிற்று;

அதாவதென்? உட்புகுந்து ஸௌந்தர்யராஜனை ஸேவித்தார்; என்றைக்கும் எங்குங்கண்டறியாத திருக்கோலமாயிருந்தது. 1. "ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய வடிகளை இன்னாரென்றறியேன்" என்றாற் போலே அப்பெருமானை இன்னானென்று அறியமாட்டிற்றிலர்; முகத்தை நேரேபார்த்து முன்னிலையாக்கி வார்த்தை சொல்ல முடியாதபடி சோதி வெள்ளம் அலையெறிந்து தள்ளுகின்றது. அதனால் அப்பெருமானுடைய ஒப்புயர்வற்ற வடிவழகையும் திவ்ய பூஷண திவ்யாயுதப் பொருத்தங்களையும் ச்ருங்காரவிலாஸங்களையும் மற்றும்கண்ட அதிசயங்களையும் தோழியோடே சொல்லி வியக்கின்றாள். ....

பொன்னிவர்மேனி மரதகத்தின்
பொங்கிளஞ்சோதி யகலத்தாரம்
மின் * இவர்வாயில் நல்வேதமோதும்
வேதியர்வானவ ராவர்தோழீ! *
என்னையும்நோக்கி யென்னல்குலும்நோக்கி
யேந்திளங்கொங்கையும் நோக்குகின்றார் *
அன்னையென்னோக்குமென் றஞ்சுகின்றேன்
அச்சோவொருவ ரழகியவா! (௧)

1. பெரிய திருமொழி 10—10—9.

http://acharya.org

| | |
|---|---|
| தோழீ | வாராய் தோழியே!; |
| இவர் மேனி | இந்த எம்பெருமானுடைய திருமேனியானது |
| பொன் | பொன்னாயிருக்கின்றது; |
| மரகதத்தின் பொங்கு இள சோதி | மரகதப்பச்சையின் பரம்பின புதிய தேஜஸ்ஸை யுடைத்தான |
| அகலத்து | திருமார்பில் (சாத்தப்பட்டுள்ள) |
| ஆரம் | ஹாரமானது |
| மின் | மின்னலாயிருக்கிறது; |
| இவர் | இப்பெரியவர் |
| வாயில் | வாயினால் |
| நல் வேதம் ஓதும் வேதியர் | நல்ல வேதத்தை உருச் சொல்லுகிற வைதிகரா யிருக்கின்றார்; |
| வானவர் ஆவர் | (மேன்மையில்) தேவர்களோ டொப்பர்; |

| | |
|---|---|
| | (இவர்) |
| என்னையும் நோக்கி | என்னையும் உற்றுப் பார்த்து |
| என் அல்குலும் நோக்கி | எனது நிதம்பத்தையும் உற்றுப் பார்த்து |
| ஏந்து இள கொங்கையும் | ஏந்தப்படுகின்ற இளைய முலைகளையும் |
| நோக்குகின்றார் | உற்றுப்பார்க்கிறார்; |
| அன்னை என் நோக்கும் என்று | தாய் என்ன நினைப்பளோ வென்று |
| அஞ்சுகின்றேன் | பயப்படுகின்றேன்; |
| அச்சோ | ஆச்சரியம்! |
| ஒருவர் அழகிய ஆ | ஒரு பெரியவருடைய ஸௌந்தரியத்தை என்ன சொல்லுவேன். |

* * *—‘தோழீ! நான் பெற்ற பாக்கியமே பாக்கியம்; அந்தோ! இழந் தாயே!; கெடுவாய்! காணப்பெற்றிலையே!’ என்றாள் பராங்குசநாயகி தன் தோழியை நோக்கி; ‘நங்காய்! என்ன அற்புதம் காணப்பெற்றாய்? விரித்துரை யாய்’ என்று தோழி வினவ, வ்ருத்தகீர்த்தனம் பண்ணுகிறாள் தலைவி. திவ்யாத்ம ஸ்வரூபம் திவ்யகுணம் முதலானவை யெல்லாங்கிடக்க முந்துறமுன்னம் திவ்ய மங்கள விக்ரஹத்திலே தன்னெஞ்சு பற்றியுண்டமை தோன்றச் சொல்லுகிறாள் பொன்னிவர் மேனி என்கிறாள். இவருடைய வடிவைப் பார்த்தவாறே 1. “சுட்டுரைத்த நன்பொன் உன் திருமேனியொளி யொவ்வாது” என்கிற படியே நன்றான பொன் என்னலா யிராநின்றது. நீலமேகத்திருவுருவைப் பொன்னிறமாகச் சொல்வதெங்ஙனே யெனில்; “ஹிரண்யவர்ணாம் ஹரிணீம்” என்கிற சுருதியின்படியே பொன்னின் நிறம் போன்ற நிறமுடையளான பிராட்டியின் நித்ய ஸம்ச்லேஷத்தாலே எம்பெருமானுடைய கரிய திருமேனியும் அப்படியே பொன்னிறமாகப் பெறுமென்பர்; பொன் போல் விரும்பத்தக்க திருமேனியென்பர்; சாந்தோக்ய உபநிஷத்தில் (1—6.) “ய ஏஷோ ந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே ஹிரண்யச்மச்ரு ஹிரண்யகேச: ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:” என்று ஓதப்பட்டுள்ளமையால் அது கொண்டு சொல்லிற்று என்பர்; அவையெல்லாம் ஸமாதானங்களேயாகிலும், பிரகிருதத்தில் கேள்வியும் வேண்டா, ஸமாதானமும் வேண்டா; நாகையழகியார்

1. திருவாய்மொழி 3—1—2.

http://acharya.org

திருமேனிநிறத்தைப் பொன்னிற மென்பதில் என்ன சங்கை உதிக்கலாகும்: நிஜமான உருவத்தின் நிறம் அடுத்தபடியாகவே பேசப்படுகிறது காண்மின் 'மரதகத்தின்' என்று தொடங்கி.

மரதகப்பச்சையின் சோதிபோன்ற சோதியையுடைத்தான திருமார்பி லணிந்த ஹாரம் மின்னல் போன்றிரா நின்ற தென்கை.

இதனால் ஸமுதாய சோபைபற்றி 'பொன்னிவர் மேனி' என்ற தென்பது விளங்கும். பசுமை நீலம் கருமை என்னும் நிறங்களை அபேதமாகக் கூறுவது கவிமரபாதலால் எம்பெருமானுடைய காளமேகத்திருவுருவத்திற்கு மரதகப் பச்சையை உவமைகூறினது பொருத்தமேயாம். காணப்புக்கவர்களின் கண்ணை யும் நெஞ்சையும் குளிர்வித்து அவர்களுடைய ஸம்ஸாரதாபங்களை யெல்லாம் போக்குந்தன்மையும் இதில் தொனிக்கும்.

இவர் மேனி பொன்; மரதகத்தின் பொங்கிளஞ்சோதியகலத்து ஆரம் மின்—என்று இரண்டு வாக்கியமாகக் கொள்வதன்றி, மூன்று வாக்கியமாக நிர்வஹிப்பராம் பிள்ளையமுதனார்; எங்ஙனே யென்னில்; இவர் பொன்; மேனி மரதகத்தின் பொங்கிளஞ் சோதி; அகலத்து ஆரம் மின்—என்றும். இந்த நிர்வாஹத்தில் 'இவர் பொன்' என்றது 1. "எண்ணும் பொன்னுருவாய்" என்னுமாபோலே ஸ்வரூபபரமாகச் சொன்னவாறும்.

இவர்வாயில் நல்வேதமோதும்வேதியர்—2. "அன்னேயிவரையறிவன்மறை நான்கும் முன்னேயுரைத்த முனிவர்" என்றாப்போலே ஆதியில் வேதோப தேசம் பண்ணுமவர் என்கிறதன்று; பரமவைதிகரென்றும் விஷயாந்தரங்களில் சிறிதும் கருத்தில்லாதவரென்றும் தோன்றும்படி அந்யபரர் போல வேதங்களை உருச்சொல்லிக் கொண்டிருந்தார் போலும்; அதைச்சொன்னபடி. நல்வேத மென்றதனால் ஸாமவேதமென்றுபொருளருளிச்செய்வர் பெரியவாச்சான் பிள்ளை.

வானவராவர்—மேன்மையைப் பார்த்தவாறே "வெற்றிப்போரிந்திரற்கு மிந்திரனே ஒக்குமால்" என்னும்படியே தேவர்களோடொக்கச் சொல்லலா யிராநின்றார். வடிவழகைப் பார்த்தாலோ ராஜாக்களோடொக்கச் சொல்லலாயிரா நின்றார்; வாக்கைப்பார்த்தாலோ வைதிகப்ராஹ்மணரோடொக்கச் சொல்லலாயிரா நின்றார்; மேன்மையைப் பார்த்தாலோ தேவர்களோடொக்கச் சொல்லலாயிரா நின்றார்; ஆக இன்னாரென்று அறுதியிட முடியவில்லை காண் தோழீ! என்றாளா யிற்று.

இங்ஙனே சொல்லக்கேட்ட தோழியானவள் 'நங்காய்! அவரை நீ நோக்கின வளவேயோ? உன்னை அவர் நோக்கிற்று முண்டோ?' என்று கேட்க, அதையுஞ் சொல்லக் கேளாய் தோழீயென்று மருமங்களையும் வெளியிட்டுச் சொல்லுகிறாள் என்னையும் நோக்கி யென்னல்குலும் நோக்கி ஏந்திளங் கொங்கையும் நோக்குகின் றார் என்கிறாள். "மர்மங்களிலே கடாக்ஷியா நின்றார்; பார்த்த பார்வை ஒருகால் மாறவைக்கிறிலர்" என்பது வியாக்யானம். 'நம்மைப்பாங்காக அநுபவிப்பதற்

1. திருநெடுந்தாண்டகம்—1. 2. பெரிய திருமொழி 11—3—3.

http://acharya.org

குறைப்பான பக்தி இவ்வாழ்வார்க்கு முதிர்ந்ததோ' என்று எம்பெருமான் ஆராய்ந்தமையைச் சொல்லிற்றாகக் கொள்க. போகத்திற்குக் கொங்கை முதலிய உறுப்புகள் எப்படி இன்றியமையாதனவோ அப்படி பகவதநுபவத்திற்குப் பரபக்தி பரஜ்ஞாந பரம பக்திகள் இன்றியமையாதனவாதலால் ஸ்வாபதேசத்தில் அவற்றைப் பொருளாகக் கொள்க.

அவர் நோக்கினவாறே நீ செய்ததென்? என்று தோழி கேட்க, அன்னையென்னோக்கு மென்றஞ்சுகின்றேன் என்கிறாள். அவர் பார்த்த பார்வையெல்லாம் எனக்குப் பரமபோக்யமாகவேயிருந்தது; ஆனால் இந்த நிலைமையை நம் தாய் காண்பளேல் என்ன பாடு படுத்துவளோ வென்று அஞ்சி நிற்பதே என் கருமமாயிற்றுக்காண் என்கை. 'நான் பதறி மேல் விழுவேன்; இதனைத் தாய் நோக்கினளாகில் என்னாகுமோ வென்று அஞ்சி யொழிந்தேன்' என்றவாறு.

[அன்னை] பெற்று வளர்த்துப் பெண் பிள்ளை யௌவன பருவத்தில் நாயகனிடத்துள்ள அன்புமிகுதியால் அவனிருப்பிடத்துக்குச் செல்ல வேணுமென்றும் மேல்விழுந்து அநுபவிக்க வேணுமென்றும் பதறுமளவில் படிகடந்து புறப்படுகை குலமரியாதைக்குப் பொருந்தாதென்று தடுப்பவள் உலகில் தாய் எனப்படுவள்; ஸித்தோபாயமான எம்பெருமானைப் பற்றினவர்கள் பேற்றை விளம்பித்துப்பெறுதலில் காரணமில்லாமையாலே அதனை விரைவில் பெறவேணுமென்கிற ஆவலைப் பிறப்பித்து அதனால் படிகடந்து நடக்க வேண்டிவந்த வளவில் இது ப்ரபந்நர் குடிக்கட்டுப்பாட்டுக்குச் சேராததென்று விலக்கி 'எம்பெருமான் தானே வந்து விஷயீகரிக்கக் கண்டிருக்கவேணும்' என்றுசொல்லித் துடிப்பை அடக்கப் பார்க்கிற [illegible] திற்கூறப்பட்ட உபாய அத்யவஸாயமாகிற் ப்ரஜ்ஞாவஸ்தையைத் தாய் என்பதாக ஸ்வாபதேசத்திற் கொள்ளவேணுமென்பது ஆசார்யஹ்ருதயத்தில் விரிபும். ஆகவே, இங்கு "அன்னை என்னோக்குமென்றஞ்சுகின்றேன்" என்றது—உபயாத்யவஸாயத்தில் ஊற்றத்தாலே பதறுதல் தவிர்ந்தேன் என்றவாறும்.

அச்சோவொருவரழகியவா!—'அச்சோ' என்பது ஆச்சரியக் குறிப்பிடைச் சொல்; எங்கும் என்றுங் கண்டறியாத அழகுடன் ஒருவர் என் கண்ணுக்குத் தோற்றுகிற இவ்வாச்சரியம் வாசாமகோசரம் என்றவாறு. திருநாகை எம்பெருமானாகிய ஸௌந்தர்யராஜனை ஒருவாறாகக் குறிப்பிடுவதாகவுங் கொள்க.

முன்னடிகளிற் கூறப்பட்ட ஸௌந்தர்யம் வைதிகத்வம் பரத்வம் என்ற மூன்றனுள் ஸௌந்தர்யமே தன்னெஞ்சைக் கொள்ளை கொண்டமை கூறிற்றுயிற்று. .... .... .... ... (க)

தோடவிழ்நீல மணங்கமழ்க்கும்
சூழ்புனல்சூழ் குடந்தைக்கிடந்த *
சேடர்கோலென்று தெரிக்கமாட்டேன்
செஞ்சுடராழியுஞ் சங்குமேந்தி *

http://acharya.org

பாடகமெல்லடியார் வணங்கப்
பன்மணிமுத்தோ டிலங்குசோதி *
ஆடகம்பூண் டொருநான்குதோளும்
அச்சோவொருவரழகியவா ! (உ)

| | | | |
|---|---|---|---|
| தோடு அவிழ் நீலம் | இதழ்கள் மலரப்பெற்ற நீலோற்பலங்கள் | சங்கும் | சங்கையும் |
| மணம் கொடுக்கும் | பரிமளத்தைப் புறப்பட விடுகின்ற | ஏந்தி | தரித்துக்கொண்டு, |
| சூழ் புனல் | பாந்த தீர்த்தங்களாலே | பாடகம் மெல் அடியார் வணங்க | பாதகடகம்பூண்ட மெல்லிய பாதங்களையுடைய பெண்டிர்களால் வணங்கப்பெற்று |
| சூழ் | சூழப்பட்ட | | |
| குடந்தை | திருக்குடந்தையிலே | பல் மணி முத்தொடு | பலவகைப்பட்ட ரத்னங்களோடும் முத்துக்களோடும் |
| கிடந்த | திருக்கண்வளர்ந்தருள்கின்ற | | |
| சேடர் கொல் என்று | யௌவன புருஷரோ இவர்! என்று | இலங்கு சோதி ஆடகம் பூண்ட | விளங்குகின்ற தேஜஸ்ஸையுடைய பொன்திருவாபரணங்களை யணிந்துள்ள |
| தெரிக்க மாட்டேன் | தெரிந்துகொள்கின்றிலேன் ; | ஒரு நான்கு தோளும் | விலக்ஷணமான நான்கு திருத்தோள்களுமாய் |
| செம் சுடர் ஆழியும் | சிவந்த ஒளியையுடைய திருவாழியையும் | | அச்சோ ஒருவர் அழகிய ஆ—. |

* * *—தோழீ ! இப்பெரியவர் திருக்குடந்தையிலே திருக்கண் வளர்ந்தருளுகிற யுவா என்னலாம்படி விளங்குகின்றார்; அவர்தானோ இவர்!, நன்றாகத் தெரியவில்லையே. திருவாழி திருச்சங்குகளைத் திருக்கைகளிலே ஏந்தியிருக்கின்றார்; இளமகளிர் யௌவந புருஷர்களைச் சுற்றிக் கொண்டிருப்பார்களாகையாலே இவரும் இளமகளிர்களால் சுற்றி வணங்கப்பட்டிருக்கிறார். அவர்களது உள்ளம் குளிரும்படி முத்துமயமும் பொன்மயமுமான திருவாபரணங்களை அணிந்துகொண்டிருக்கிறார்; அவர்களை உவந்து தழுவுவதற்கு நான்கு திருத்தோள்களையுடையராயிருக்கிறார்; இவருடைய அழகோ நம்மால் பேசப்போகாது, இவர் இன்னாரென்று தெரியவில்லையே தோழீ! என்கிறாள்.

"செஞ்சுடராழியுஞ் சங்குமேந்தி" என்று தொடங்கிப் பின்னடிகளை முந்துற அந்வயித்துக்கொண்டு பிறகு முன்னடிகளை அந்வயித்துக் கொள்ளவுமாம். திருக்குடந்தையில் பொய்கைகளெங்கும் நீலமலர்கள் மணங்கமழ்கின்றனவென்பது முதலடியிலுள்ள விசேஷணத்தின் கருத்து.

சேடர்—இளம்பருவமுள்ளவர்; யுவா என்றபடி. "குடந்தைக் கிடந்த சேடர்கொலென்று தெரிக்கமாட்டேன்" என்றது—இவர் திருக்குடந்தையெம்பெருமானோ திருநாகையெம்பெருமானோ தெரியவில்லை என்றபடியன்று; முதற்பாட்டிற் கூறியபடியே மஹாராஜன் போலவும் வைதிக ப்ராஹ்மணனைத் தமர் போலவும் காட்சிதருகின்ற இவர் அஸாதாரண லக்ஷணங்களாலே ஸாக்ஷாத்

http://acharya.org

ஸ்ரீமந்நாராயணனு யிருக்கவேணும்போல் தெரிகிறது; பாவிகளான நமக்கு எம்பெருமான் ஸேவை ஸாதிக்கும்படியான பாக்கியம் இருக்குமோ என்று நினைக்குங்கால் எம்பெருமானன்றுபோல் தோற்றுகிறது என்பதாகக் கொள்ளலாம்.

பாடக மெல்லடியார்='பாதகடகம்' என்னும் வடசொல் பாடகமெனச் சிதைந்தது. என்னைப்போன்ற பல ஸ்த்ரீகள் இவருடைய யௌவனத்திலீடுபட்டு மயங்கிச் சூழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் காண் என்பதாம். ஸ்ரீதேவி பூதேவி முதலிய தேவிமார்களை நினைக்கிறதாயுமாம்.

'ஹாடகம்' என்னும் வடசொல் ஆடகமெனத் திரிந்தது; பொன். .... (உ)

வேயிருஞ்சோலை விலங்கல்சூழ்ந்த
மெய்யமணாளர், இவ்வையமெல்லாம் *
தாயினநாயக ராவர்தோழீ!
தாமரைக்கண்க ளிருந்தவாறு *
சேயிருங்குன்றம் திகழ்ந்ததொப்பச்
செவ்வியவாகி மலர்ந்தசோதி *
ஆயிரந்தோளொ டிலங்குபூணும்
அச்சோவொருவரழகியவா! (ங)

| | |
|---|---|
| தோழீ | வாராய்தோழியே!, |
| வேய் இரு சோலை | மூங்கில்மயமான பரந்த சோலைகளை யுடைத்தான |
| விலங்கல் | குன்றுகளாலே |
| சூழ்ந்த | சூழப்பட்ட |
| மெய்யம் | திருமெய்யமலையில் எழுந்தருளியிருக்கிற |
| மணாளர் | மணவாளப்பிள்ளையும் |
| இ வையம் எல்லாம் தாயின | இந்த பூமிப்பரப்பை யெல்லாம் தாவி அளந்தவருமான |
| நாயகர் ஆவர் | பரமபுருஷர்போலும் இவர்!; |
| தாமரை கண்கள் இருந்த ஆறு | தாமரைபோன்ற திருக்கண்களிருக்கும்படியை என்சொல்வேன்;! |
| சேய் இரு குன்றம் | ஓங்கியும் பரந்துமிருக்கின்ற மலைகள் |
| திகழ்ந்தது ஒப்ப | விளங்குமாபோலே |
| செவ்விய ஆகி | அழகுடையனவாய் |
| மலர்ந்த சோதி | பரந்த தேஜஸ்ஸை யுடையனவான |
| ஆயிரம் தோளொடு | ஆயிரம்திருத்தோள்களும் |
| இலங்கு பூணும் | விளங்குகின்ற திருவாபரணங்களுமாய் |

அச்சோ ஒருவர் அழகிய ஆ—.

* * *—தோழீ! இவருடைய திருக்கண்களினழகை என் சொல்லுவேன்!, புண்டரீகாக்ஷரென்னலாம்படி யிராநின்றார். ஓங்கிப் பரந்த மலைகள் போலே விளங்குகின்றனவாய்த் தோள்வளைகள் முதலியவற்றின் புகர் விஞ்சி விளங்கப் பெற்றவையான ஆயிரந் திருத்தோள்களும் அவயவந்தோறும் திருவாப்ரணங்களும் விளங்கப் பெறுமழகை என்ன சொல்லுவேன்!; ஒரு அலங்காரமும் வேண்டாதே வடிவுதானே அமையாதோ என்ன வேண்டும்படியான அழகு விலக்ஷணமாயிருக்கின்றது காண்—இவ்வழகை நோக்குங்கால் இவர் ஸாதாரண புருஷரா

http://acharya.org

யிருக்க ப்ரஸக்தியில்லை; திருமெய்யமலையில் எழுந்தருளி யிருப்பவரும் இவ்வுலகையெல்லாம் இரண்டேயடியால் தாவியளந்தவருமான நாயகராகவே யிருக்கத் தகுங்காண் என்கிறாள்.

பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்மின்:—“கீழே ‘நான்கு தோளும்’ என்னச்செய்தே ஆயிரந்தோளென்கிறது-ஆயிரந்தோளாலும் கண்டநுபவிக்கும் கரணங்கள் அனேகங் கொண்டநுபவிக்க வேண்டும்படி யிராநின்றதென்கை” என்பதாம். அதாவது—கீழ்ப்பாட்டில் “ஆடகம்பூண்டொரு நான்கு தோளும்” என்று நான்கு திருத்தோள்களுள்ளனவாகச் சொல்லி, இப்பாட்டில் ஆயிரந் தோள்களாகச் சொல்லி யிருப்பதேன்? என்னில்; நான்கு தோள்களே ஆயிரந் தோள்களாகத் தோன்றினவென்கை. 1. “நம்பியைக்காண நங்கைக்கு ஆயிர நயனம் வேண்டும்” என்றாற்போலே ஆயிரங்கண்கள் கொண்டு காணவேண்டும்படி அழகு விஞ்சின திருத்தோள்களென்றவாறு. .... .... (௩)

வம்பவிழுந்துழாய்மாலை தோள்மேல்
கையனவாழியுஞ் சங்குமேந்தி *
நம்பர்நம்மில்லம் புகுந்துநின்றார்
நாகரிகர் பெரிதுமிளையர் *
செம்பவளமிவர் வாயின்வண்ணம்
தேவரிவரதுருவம் சொல்லில் *
அம்பவளத் திரளேயுமொப்பர்
அச்சோவொருவரழகியவா! (௪)

| | |
|---|---|
| தோள் மேல் | திருத்தோள்களிலே |
| வம்பு அவிழும் துழாய் மாலை | பரிமளம் விஞ்சுகிற திருத்துழாய்மாலையுள்ளது; |
| ஆழியும் சங்கும் | சக்கரமும் சங்கமும் |
| கையன | திருக்கைகளிலுள்ளன; |
| ஏந்தி | (அத்திவ்யாயுதங்களைத்) தரித்துக்கொண்டு |
| நம்பர் | (இந்த) ஸ்வாமி |
| நம் இல்லம் புகுந்து நின்றார் | நம் மனையிலேவந்து ஸாலபராயிராநின்றார்; |
| நாகரிகர் | பெருமதிப்பாயிராநின்றார்; |
| பெரிதும் இளையர் | மிக்க இளம்பருவமுடையரா யிருக்கின்றார்; |
| இவர் | இவருடைய |
| வாயின் வண்ணம் | அதரத்தின் நிறம் |
| செம் பவளம் | சிவந்தபவளமே; |
| தேவர் இவரது | அமாநுஷரான இவருடைய |
| உருவம் சொல்லில் | உருவமிருக்கும்படியைச் சொல்வோமாகில் |
| அம் பவளம் திரளேயும் ஒப்பர் | அழகிய பவளத்திரள் போலே விரும்பத்தக்கவரா யிராநின்றார்; |

அச்சோ ஒருவர் அழகிய ஆ—.

* * *—தோழீ! அவருடைய பரத்வ ஸௌலப்யங்களைச் சொல்லுகிறேன் கேளாய்; மணங்கமழ்கின்ற திருத்துழாய் மாலையைத் தோளிணைமேல் அணிந்

1. கம்பராமாயணம் பாலகாண்டம்.

துள்ளார்; திருக்கைகளிலே திருவாழி திருச்சங்குகளைப் பூவேந்துமாபோலே ஏந்தியுள்ளார்; இப்படிப்பட்ட பரத்வங்கொண்டு எட்டாதவராயிருக்கையன்றியே நாமிருக்குமிடத்தே வந்து புகுந்திருக்கின்றார்! பரமரஸிகராயிருக்கின்றார்; கௌமாரங்கலசின யௌவன பருவம் வாய்ந்தவரா யிருக்கின்றார். இவருடைய திரு அதரத்தின் நிறமோ சிவந்த பவளம்போலிரா நின்றது; தேவாதி தேவராகத் தோற்றும் தோற்றமுடையரா யிருக்கின்றார். திருவுருவமோ பவளத்திரள் போலே மிக விரும்பத் தகுந்ததா யிராநின்றது. உபமானமில்லாதபடி மிக விலக்ஷணமான அழகுபடைத்த இவ்விஷயத்திற்கு நாம் உபமானமிட்டுச் சொல்லுவதும் ஹேயமென்னும்படி அழகிற் சிறந்தவர் காண் என்றாளாயிற்று.

கையன ஏந்தி = கையிலுள்ளனவாக ஏந்தி என்று முரைக்கலாம். நம்பர்— எல்லாராலும் நம்பத்தகுந்தவர்; "நம்பும் ஸோமும் நசையாகும்மே."

இந்த விபூதியில் வந்து தோன்றினது கொண்டு 'நம் இல்லம் புகுந்து நின்றார்' என்றது. அன்றியே மாநஸாநுபவமாகவுமாம். நாகரிகர்-வடமொழித் தத்திதாந்தநாமம். .... .... .... • .... (ச)

கோழியுங்கூடலுங் கோயில்கொண்ட
கோவலரேயொப்பர், குன்றமன்ன *
பாழியந்தோளு மோர்நான்குடையர்
பண்டிவர்தம்மையும் கண்டறியோம் *
வாழியரோ விவர்வண்ணமெண்ணில்
மாகடல்போன்றுளர், கையில்வெய்ய *
ஆழியொன்றேந்தி யோர்சங்குபற்றி
அச்சோவொருவரழகியவா! (ரு)

| | |
|---|---|
| கோழியும் | உறையூரையும் |
| கூடலும் | தென்மதுரையையும் |
| கோயில் கொண்ட | இருப்பிடமாகவுடைய |
| கோவலரே ஒப்பர் | கோபாலக்ருஷ்ணன்போன்றிருக்கின்றார் இவர்; |
| குன்றம் அன்ன | மலைபோன்ற |
| பாழி | வலிமைபொருந்திய |
| அம் | அழகிய |
| ஓர் நான்கு தோளும் | விலக்ஷணமான நான்கு திருத்தோள்களையும் |
| உடையர் | உடையராயிருக்கின்றார்; |
| இவர் தம்மை | இவரை |
| பண்டும் | முன்பொருகாலும் |

| | |
|---|---|
| கண்டு அறியோம் | நாம் பார்த்ததில்லை; |
| வாழியரோ | பல்லாண்டுபல்லாண்டு; (இவர் வாழ்ந்திடுக.) |
| இவர் வண்ணம் எண்ணில் | இவருடைய வடிவிருக்கும் படியை நினைக்கப்புக்கால் |
| மா கடல் போன்று உளர் | பெரிய கடல்போலே யிருக்கின்றாரிவர்; |
| கையில் | ஒரு திருக்கையிலே |
| வெய்ய | தீக்ஷ்ணமான |
| ஆழி ஒன்று ஏந்தி | ஒரு திருவாழியை ஏந்தியும் |

(மற்றொருதிருக்கையிலே)



http://acharya.org

ஓர் சங்கு பற்றி } ஒரு சங்கத்தைத் தரித்துக் கொண்டும் | அச்சோ ஒருவர் அழகிய ஆ—.

* * *—தோழீ! இப்பெரியவர் உறையூரிலும் தென்மதுரையிலும் கோயில் கொண்டிருந்து காட்சிதந்த பெரியவர் போலே யிருக்கின்றார்; மலை போன்று வலிமை பொருந்திய நான்கு திருத்தோள்களை யுடையரா யிருக்கின்றார்; திருமேனி நிறத்தில் கருங்கடலை யொத்திருக்கின்றார்; திருக்கைகளில் திருவாழியும் திருச்சங்குமாய்த் திகழ்கின்றார்; இப்பெரியவரை இதற்கு முன் எங்குங் கண்டதாக நினைவில்லை; இவரது சிற்சில அம்சங்களுக்கு ஏதோ சிலவற்றை உவமை கூறினேனத்தனை யொழிய இவருடைய வடிவழகு பேச்சுக்கு நிலமன்றுகாண்—என்கிறாள்.

கோழி யென்று உறையூர்க்குப் பெயர்; கூடல் என்று தென்மதுரைக்குப் பெயர். கோவலர்='கோபால:' என்னும் வடசொல்லின் விகாரமாகக்கொண்டால் கோபாலக்ருஷ்ணனென்றதாகும்; அன்றி, கோ,வலர் என்று இரண்டு தமிழ்ச் சொற்களாகக் கொண்டால் கோ—அரசர்களுக்குள்ளே, வலர்—வல்லர், (வல்லவர்) ராஜாதிராஜர் என்றபடியாம். இவரைப்பார்த்தால் ஸாமாந்ய புருஷராகத் தோன்றவில்லை; உறையூரையும்மதுரையையும் அரசாட்சி புரிகின்ற அரசர்களோ இவர்! என்னும்படி யிருக்கின்றார் என்பதாம்.

இவர் தம்மைப் பண்டுங் கண்டறியோம்=எம்பெருமானை முதன் முதலாகக் காணும்போது திருமுகமண்டலத்தில் தண்ணளி முதலியவற்றைக் கொண்டு 'இவரை முன் எங்கோ கண்டாற்போலிருக்கிறதே!' என்று தோன்றும்; அதன் பிறகு எவ்வளவு நெருங்கிப் பழகினாலும் தெகுட்டுதலின்றியே "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழிதொறும், அப்பொழுதைக் கப்பொழுதென் னாராவமுதமே" என்னும்படியான விஷயமாகையாலே முன்பு எங்குங் கண்டறியாதது போலவும் அப்பொழுதே அபூர்வமாகக்கண்டு அநுபவிப்பது போலவுந் தோன்றிக்கொண்டே யிருக்கும். மற்ற விஷயங்களிற் காட்டில் பகவத்விஷயத்திற்குள்ள வைலக்ஷண்யம் இது என்க.

இந் நிலவுலகத்துக்குத் தகாத இவ்வழகுக்குக் கண்ணெச்சில் வாராமைக்காக இடையில் வாழியரோ என்கிறாள். 'வாழி அரோ' என்று பிரித்து 'அரோ' என்பதை அசைச்சொல்லாகக் கொள்க. வாழிய என்னும் வியங்கோள் ஈற்றுயிர்மெய்கெட்டு வாழி என நின்றது. இனி வாழியர் ஓ என்று பிரித்து, வாழியர் என்பதை ரகரமெய்யீற்று வியங்கோள் எனக்கொண்டு ஓகாரத்தை அசையென்றலுமாம். .... .... .... .... ... .... (௫)

வெஞ்சின வேழம் மருப்பொசித்த
வேந்தர்கொல்? ஏந்திழையார் மனத்தை *
தஞ்சுடையாளர்கொல்? யானறியேன்
தாமரைக்கண்க ளிருந்தவாறு *

http://acharya.org

கஞ்சனையஞ்சமுன் கால்விசைத்த
காளையராவர், கண்டார்வணங்கும் *
அஞ்சனமாமலையேயுமொப்பர்
அச்சோவொருவரழகியவா! (௯)

| | |
|---|---|
| வெம் சினம் வேழம் | வெவ்விய சீற்றத்தை யுடைய (குவலயாபீடமென்னும்) யானையினது |
| மருப்பு | கொம்பை |
| ஒசித்த | முறித்தொழித்த |
| வேந்தர் கொல் | பிரபுவோ இவர்!; |
| ஏந்து இழையார் | தரிக்கப்படும் ஆபரணங்களை யுடையரான பெண்டிருடைய |
| மனத்தை | நெஞ்சை |
| தஞ்சு உடையாளர் கொல் | தஞ்சமாகவுடையவரோ இவர்!; |
| யான் அறியேன் | நான் அறிகின்றிலேன்; |
| தாமரை கண்கள் இருந்த ஆறு | தாமரைபோன்ற திருக்கண்களிருக்கும்படி என்னே!; |

| | |
|---|---|
| முன் | முன்பு |
| கஞ்சன் | கம்ஸன் |
| அஞ்ச | பயப்படும்படியாக |
| கால் விசைத்த | (தனது) திருத்தாள்களின் வலிமையைக்காட்டின |
| காளையர் ஆவர் | இளையவராக இருக்கின்றார்; |
| கண்டார் வணங்கும் | கண்டவர்களெல்லாரும் வணங்குதற்குரியவராய் |
| அஞ்சனம் மா மலையேயும் ஒப்பர் | பெரியவொரு அஞ்சனமலைபோன் றிருப்பவரான |
| ஒருவர் | ஒருபெரியவருடைய |
| அழகிய ஆ | ஸௌந்தரியமானது |
| அச்சோ | ஆச்சரியம்!. |

* * *—தோழி! இவரைப் பார்த்தால், முன்பு கம்ஸன் தனது அரண்மனை வாசலில் மதமூட்டி நிறுத்திவைத்த குவலயாபீடமென்னும் யானையை வென்றொழித்த வேந்தர்போலே யிருக்கின்றார்; அவர்தானோ இவர்!, ஆபரணங்களை யணிந்திருக்கும் பெண்களுடைய நெஞ்சை ஆச்ரயமாகவுடைய திருமால்தானோ இவர்!; இன்னாரென்று நிச்சயிக்கக்கூடவில்லையே. தாமரைபோன்ற திருக்கண்களிருக்குமழகை என் சொல்வேன்!; முன்பு கஞ்சனை மஞ்சத்தினின்று தள்ளித் திருத்தாளாலுதைத்த தனிவீரராகவே இவர் தோற்றுகின்றார்; 'ந நமேயம் து கஸ்யசித்' [ஒருவற்கும் தலைவணங்கமாட்டேன்] என்ற இராவணனைப் போன்ற வணங்காமுடிகளும் இவரைக் கண்டவாறே பரவசமாக வணங்கும்படியன்றோ இவருடைய அதிசயமிருப்பது; ஒரு அஞ்சன மலைதான் இங்ஙனே வடிவெடுத்து நிற்கிறதோ! என்னலாம்படி யிருக்கின்றார்காண். வாய்கொண்டு சொல்லவொண்ணாத அழகுபடைத்த இவர் திறத்திலே நான் என்னவென்று சொல்லுவேன்! என்கிறாள்.

"வெஞ்சின வேழ மருப்பொசித்த வேந்தர்கொல்" என்றவுடனே "ஏந்திழையார் மனத்தைத் தஞ்சுடையாளர் கொல்" என்றதை நோக்குங்கால், ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் ஐந்தாவது அம்சத்தில் இருபதாமத்யாயத்தில் குவலயா

http://acharya.org

பிட யானையைக் கொன்று வென்ற கதையைக் கூறும் ப்ரகரணத்திலுள்ள ஆச்சரியமான பல ச்லோகங்கள் நினைவுக்கு வருகின்றன. "விஷாணிதாக்ஷிப்ய மஹோரா ராஜாநஸ் ஸம்ப்ரவோஷிதாः। நாமாஸ்த்ரீஸமேதம் ஸம்ஸ்ப்ருஷ்டம் ந விராராமதா:॥ ஸவ்யூ:! பஶ்யத க்ருஷ்ணஸ்ய ஸம்வர்த்யாமணேக்ஷணா:। மஜஸ்ய க்ருதாயாஸ ஸ்வேதாம்பு கணிகாசிதம்." என்று தொடங்கி வடமதுரைப் பெண்கள் நெஞ்சிழந்து சொன்ன சொலவுகள் காண்க. 1. "ஆவரிவை செய்தறிவார் அஞ்சனமாமலை போலே, மேவு சினத்தடல்வேழம் வீழமுனிந்து, அழகாய காவிமலர் நெடுங்கண்ணார் கைதொழ வீதி வருவான்" என்றதும் ஸ்மரிப்பது. அவ்யானையின் மருப்பை யொசித்த காலத்திலே அங்குள்ள பெண்களால் எப்படிப்பட்ட திருமேனியழகு அநுபவிக்கப்பட்டதோ அப்படிப்பட்ட அழகு இன்று இப்பரகாலநாயகியால் அநுபவிக்கப்படுகிறது போலும்.

"மருப்பொசித்த மேவந்தர் கொல்" என்றும் "எந்திழையார் மனத்தைத் தஞ்சுடையாளர் கொல்" என்றும் இரண்டு வாக்கியமாக இருந்தாலும் ஒரு வாக்கியமாகவே விவக்ஷிதம்; யானையின் கொம்பை முறித்து அந்த வீரச்செயலைக் காட்டிப் பெண்களின் மனத்தைக் கொள்ளைகொண்ட பெருமானோ இவர்! என்றவாறு. 'எந்திழையார்' என்று பெண்களுக்கு நிருபகநாமம். இழை—ஆபரணம். .... .... .... .... .... .... .... (கூ)

பிணியவிழ்தாமரை மொட்டலர்த்தும்
பேரருளாளர்கொல்? யானறியேன் *
பணியுமென்நெஞ்சமிதென்கொல்? தோழீ!
பண்டிவர்தம்மையும் கண்டறியோம் *
அணிகெழுதாமரையன்ன கண்ணும்
அங்கையும்பங்கயம், மேனிவானத்து *
அணிகெழு மாமுகிலேயுமொப்பர்
அச்சோவொருவரழகியவா! (எ)

| | | | |
|---|---|---|---|
| பிணி அவிழ் தாமரை மொட்டு அலர்த்தும் | பாவத்தொலையப்பெற்ற (மஹான்களினுடைய) ஹ்ருதயபுண்டரீகமென்கிற தாமரை மொக்கை விகஸிப்பிக்க வல்ல | என் நெஞ்சம் | என்னுடைய நெஞ்சானது |
| பேரருளாளர் கொல் | பேரருளாளப் பெருமானோ இவர்!, | பணியும் | தானே வணங்காநின்றது; |
| யான் அறியேன் | நான் அறிகின்றிலேன்; | இது என் கொல் | இது என்னோ?; |
| தோழீ | வாராய் தோழியே!, | இவர் தம்மை | இவரை |
| | | பண்டும் கண்டு அறியோம் | முன்னமொருகாலும் பார்த்ததில்லை: |
| | | கண்ணும் | இவருடைய (திருக்கண்கள்) |
| | | அணி கெழு | அழகுமிக்க |

1. பெரிய திருமொழி 3—3—7.

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| தாமரை அன்ன | தாமரை போலிருக்கின்றன; | வானத்து அணி கெழு மா முகிலே டும் ஒப்பர் | ஆகாசத்திலே அழகு மிக்கெழுந்த காளமேகத்தை ஒத்திருக்கின்றார்; |
| அங்கையும் | அகங்கைகளும் | | |
| பங்கயம் | தாமரையே, | | |
| மேனி | திருமேனி விஷயத்தில் | அச்சோ ஒருவர் அழகிய ஆ—. | |

* * *—"பிணியவிழ் தாமரை மொட்டலர்த்தும் பேரருளாளர் கொல்" என்றதை இரண்டு வகையாக நிர்வஹிப்பர்கள்; கட்டு அவிழும்படி தாமரை மொக்கை விகஸிக்கச் செய்யவல்ல பரம க்ருபாளுவான ஆதித்யனோ இவர்! என்பது முதல் நிர்வாஹம். இவருடைய தேஜஸ்ஸைப் பார்த்தால் ஸாக்ஷாத் ஸூர்யனே என்னலாம்படி யிருக்கின்றார் என்கை. அன்றியே, 'பிணி' என்று வியாதிக்குப் பேராய், வியாதிக்கு மூலமான பாபத்தைச் சொல்லிற்றாகி, பாவம் தொலையப்பெற்ற யோகிகளின் ஹ்ருதய புண்டரீகத்தை விகஸிப்பிக்க வல்ல பரம தயாளுவான எம்பெருமானோ இவர்! என்பது இரண்டாவது நிர்வாஹம்.

தோழீ! இப்பெரியவரைப் பார்த்தவாறே என்பக்கல் ஒரு நினைவின்றியே இருக்கச் செய்தே என்னெஞ்சானது வணங்கி நிற்கின்றது; தோழீ! உன்னை யறியாமல் எனக்கு வருவதொரு நன்மையில்லையே; அப்படியிருந்தும் உன்னையு மென்னையுமறியாமலே இங்ஙனே ஒரு நன்மையுண்டான விதம் என்னே! இவர் செய்கிற ச்ருங்கார சேஷ்டைகளோ நெடுநாளாக மிகப் பழகினவர் செய்யுமவை போலே யிருக்கின்றன. ஆயினும், இதற்கு முன்பு இவரைக் கண்டதாகவும் எனக்கு நினைவில்லை. உற்று நோக்குகிற திருக்கண்களும் அணைக்க முற்படுகிற திருக்கைகளும் திரளச் செறியப் பூத்த தாமரையென்னலாம்படியிருக்கின்றன. வடிவோ மேகத்திரள் என்னலாம்படி யிருக்கின்றது. லோக விலக்ஷணமான இவரழகுக்கு ஒப்புச் சொல்லலாவதுண்டோ? ஆச்சரியமென்று மித்தனை—என்றாளாயிற்று. .... .... ... ... .... (எ)

மஞ்சுயர்மாமதி தீண்டநீண்ட
மாலிருஞ்சோலை மணாளர்வந்து * என்
நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார்
நீர்மலையார்கோல்? நினைக்கமாட்டேன் *
மஞ்சுயர் பொன்மலை மேலெழுந்த
மாமுகில்போன்றுளர் வந்துகாணீர் *
அஞ்சிறைப்புள்ளுமொன் றேறிவந்தார்
அச்சோவொருவ ரழகியவா! (அ)

| | | | |
|---|---|---|---|
| மஞ்சு உயர் | மேகமண்டலத்தளவும் உயர்ந்ததாய் | மாலிருஞ் சோலை | திருமாலிருஞ்சோலையில் வெழுந்தருளியிருக்கிற |
| மா மதி தீண்ட நீண்ட | சந்திரன்படும்படியாக நீண்டிருப்பதான | மணாளர் | மணவாளப்பிள்ளை |
| | | வந்து | அவ்விடத்தை விட்டுவந்து |

http://acharya.org

| | |
|---|---|
| என் நெஞ்சுள்ளும் | என்னுடைய நெஞ்சினுள்ளும் |
| கண்ணுள்ளும் | கண்களினுள்ளும் |
| நின்று நீங்கார் | நிலைநின்று நீங்கமாட்டாதிருக்கின்றார்; |
| நீர்மலையார் கொல் | திருநீர்மலையெம்பெருமானோ இவர்; |
| நினைக்க மாட்டேன் | இன்னாரென்று தெரிந்துணரகில்லேன்; |
| அம் சிறை புள்ளும் ஒன்று | அழகிய சிறகுகளையுடைய பெரியதிருவடியின் மீது |
| ஏறி வந்தார் | ஏறிக்கொண்டு எழுந்தருளியிருக்கிற இவர் |
| மஞ்சு உயர் பொன் மலை மேல் எழுந்த | மேகமண்டலத்தளவும் ஓங்கினவொரு பொன்மலையின்மேல் எழுந்த |
| மா முகில் போன்று உளர் | காளமேகம்போன்றிருக்கின்றார்; |
| வந்து காணீர் | வந்து சேவியுங்கள்; |

அச்சோ ஒருவர் அழகிய ஆ—.

* * *—மேகமண்டலத்தளவுஞ் செல்ல ஓங்கி, சந்திரன் வந்து தீண்டும்படியான உயர்த்தியையுடைத்தான திருமாலிருஞ்சோலை மலையை இருப்பிடமாகக் கொண்டுள்ள பரமரஸிகர் தாமே எழுந்தருளி என்னுடைய அவயவங்களெல்லாவற்றையும் விரும்பி ஒரு நொடிப்பொழுதும் விட்டு நீங்குமவராயிருக்கின்றிலர்; திருநீர்மலையெம்பெருமான் போலவும் திகழ்கின்றார்; அறுதியிட்டுச் சொல்லமாட்டுகின்றிலேன்; மிகவுயர்ந்ததொரு பொன்மலைமேலே காளமேகம் படிந்து வருமாபோலே பெரிய திருவடியின் மீது வீற்றிருந்து எழுந்தருளுங் கோலத்தைவந்து காணுங்கோள்!; இவ்வழகுக்குப் பாசுரமிட என்னாலாகுமோ? இவருடைய அழகு விலக்ஷணமென்னுமித்தனையே—என்றாளாயிற்று.

“மஞ்சுயர் மாமதி தீண்ட நீண்ட மாலிருஞ்சோலை” என்றதைத் திருவுள்ளம்பற்றிக் கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹு ஸ்தவத்தில் “ஶஶதரரிங்கணாஶ்யஶிகம்—வநகிரிம் = சசதரரிங்கணாச்சயசிகம்—வநகிரிம்” என்றருளிச்செய்தது காண்க. “மதிதவழ் குடுமி மாலிருஞ்சோலை” என்ற திருவாய்மொழியுமுணர்க. “என் நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும்” என்றது மற்றுமுள்ள அவயவங்களுக்கு முபலக்ஷணமென்ப. “இவையுமவையுமுவையும்” என்ற திருவாய்மொழியிற்படியே அநுஸந்தானம் விவக்ஷிதமென்க.

பின்னடிகளில், கருடன் பொன்மலையாகவும் எம்பெருமான் மாமுகிலாகவும் வருணிக்கப்பட்டமையறிக. “காய்சினப் பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல்” என்ற திருவாய்மொழியை அடியொற்றினபடி.

“அஞ்சிறைப் புள்ளுமொன்றேறி வந்தார்” என்றதனால் ஆழ்வார் இத்திருப்பதியில் கருடோத்ஸவம் ஸேவிக்கப் பெற்றாரென்னலாம். “அருளாழிப்புட்கடவீர் அவர் வீதியொருநாள்” என்று நம்மாழ்வார் பிரார்த்தித்தது இவர்க்குக் கைபுகுந்தது போலும். .... .... .... .... (அ)

http://acharya.org

எண்டிசையு மெறிநீர்க்கடலும்
ஏழுலகுமுடனேவிழுங்கி*
மண்டியோராலிலைப் பள்ளிகொள்ளும்
மாயர்கொல்? மாயமறியமாட்டேன் *
கொண்டல்நன்மால்வரையேயுமொப்பர்
கொங்கலர்தாமரைக் கண்ணும்வாயும் *
அண்டத்தமரர் பணியநின்றார்
அச்சோவொருவ ரழகியவா ! (௬)

| | |
|---|---|
| எண் திசையும் எறி நீர் | எட்டுத்திசைகளிலும் வந்து அலையெறிகின்ற நீரையுடைய |
| கடலும் | கடல்களையும் |
| ஏழ் உலகும் | ஸப்தலோகங்களையும் |
| உடனே விழுங்கி | (ப்ரளயத்தில்) ஒருசேர விழுங்கி |
| ஓர் ஆல் இலை | ஒரு ஆலிலையிலே |
| மண்டி | பொருந்தி |
| பள்ளி கொள்ளும் | துயில்கொண்டருளின |
| மாயர் கொல் | ஆச்சரியபூதரோ இவர்!; |
| மாயம் | (இவருடைய) ஆச்சரிய நிலைமையை |
| அறிய மாட்டேன் | அறிகின்றிலேன்; |
| கொண்டல் | நீர்கொண்ட மேகத்தையும் |
| நல் மால் வரையேயும் | அழகிய பெரிய மலையையும் |
| ஒப்பர் | ஒத்திருக்கின்றார்; |
| கண்ணும் வாயும் | (இவருடைய) திருக்கண்களும் திருமுகமும் |
| கொங்கு அலர் தாமரை | பரிமளம்மிக்க தாமரையாயே யிருக்கின்றன; |
| அண்டத்து அமரர் | பரமபதத்திலுள்ள நித்யஸூரிகள் |
| பணிய நின்றார் | வந்து தொழும்படி நிற்கின்ற |

ஒருவர், அழகிய ஆ அச்சோ!—.

* * *—தோழீ! இப் பெரியவரைக் கண்டவாறே 'இவர் ஆபத்துக்கு உதவுமவர்' என்று தோற்ற விராநின்றார்காண். திக்குக்களெட்டிலும் வந்து அலையெறியா நின்றுள்ள கடல்களையும் ஏழுலகங்களையும் ஒருகாலே திருவயிற்றிலே வைத்துப் பிரளயங்கொள்ளாதபடி காத்து ஒரு சிறிய ஆலந்தளிரிலே துயில்கொண்ட ஆச்சர்ய சேஷ்டிதன் என்று தோற்றும்படி யிராநின்றாரிவர். 'கூடாதவற்றையும் கூடுவிப்பவர் இவர்' என்று தெரிகின்றது. ஆயினும் இவருடைய ஆச்சரியங்களை நன்கு அறிகின்றிலேன். வடிவைப் பார்த்தவாறே மேகம்போலவும் மலைபோலவும் சொல்லலா யிராநின்றார். திருக்கண்களும் திருஅதரமும் பரிமளங் கமழ்கின்ற தாமரைபோலே யிராநின்றன. மேன்மையைப் பார்த்தவாறே நித்யஸூரிகளும் வந்து ஆச்ரயிக்கும்படி யிராநின்றார். இவருடைய மேன்மைக்குத் தக்க மேன்மையை யுடையவர்களே இவரைக் கிட்டலாமத்தனை யன்றி நமக்குக் கிட்டப்போகாதென்று பின்வாங்க வேண்டியிருந்தாலும் லோக விலக்ஷணமான அழகு பின்வாங்க வொட்டுகிறதில்லை——என்றுளாயிற்று. ... ..... ..... ..... .... .... .... (௬)

http://acharya.org

அன்னமுங் கேழலு மீனுமாய
ஆதியை நாகை யழகியாரை *
கன்னிநன் மாமதிள் மங்கைவேந்தன்
காமருசீர்க் கலிகன்றி * குன்றா
வின்னிசையாற் சொன்ன செஞ்சொல்மாலை
யேழு மிரண்டுமோரொன்றும் வல்லார் *
மன்னவரா யுலகாண்டு மீண்டும்
வானவராய் மகிழ்வெய்துவரே. (க௦)

| | |
|---|---|
| அன்னமும் | ஹம்ஸமாகவும் |
| கேழலும் | வராஹமாகவும் |
| மீனும் | மத்ஸ்யமாகவும் |
| ஆய | அவதரித்த |
| ஆதியை | ஜகத்காரணபூதரும் |
| நாகை | திருநாகையில் எழுந்தருளியிருக்கின்ற |
| அழகியாரை | அழகிற்சிறந்தவருமான ஸௌந்தர்யராஜப் பெருமாளைக்குறித்து, |
| கன்னி நல் மா மதிள் மங்கை வேந்தன் | அழிவற்ற நல்ல பெரிய மதில்களையுடைய திருமங்கைக்குத் தலைவரும் |
| காமரு சீர் | விரும்பத்தக்க குணங்களையுடையவருமான |
| கலிகன்றி | கலியன் |
| குன்றா இன் இசையால் சொன்ன | குறைவில்லாத இனிய இசையுடனே அருளிச்செய்த |
| செம் சொல் மாலை | அழகிய சொல்மாலையாகிய |
| ஏழும் இரண்டும் ஓர் ஒன்றும் | இப்பத்துப்பாசுரங்களையும் |
| வல்லார் | கற்றுவல்லவர்கள் |
| மன்னவர் ஆய் | (இவ்வுலகில்) சக்கரவர்த்திகளாயிருந்து |
| உலகு ஆண்டு | அரசாட்சிபுரிந்து |
| மீண்டும் | அதற்குமேலும் |
| வானவர் ஆய் | முக்தர்களாகி |
| மகிழ்வு எய்துவர் | ஆனந்தமடைவர்கள். |

* * *—வேதங்களாகிற கண்களையிழந்து பரிதபித்த பிரமனுக்கு அவற்றை மீட்டுக் கொடுக்கைக்காக மத்ஸ்யரூபியாயும் ஹம்ஸரூபியாயும், பூமிப்பிராட்டியின் துயரைத் தீர்ப்பதற்காக மஹாவராஹரூபியாயும், திருவவதரித்தவனும் உலகுக்கு முழுமுதற்கடவுளும் திருநாகையில் அழகே வடிவெடுத்து நிற்பவனுமான எம்பெருமான் விஷயமாகத் திருமங்கையாழ்வார் இன்னிசை பொலிய அருளிச்செய்த இத்திருமொழியைக் கற்றுவல்லார் இவ்வுலகிலுள்ளவரையில் ஸார்வபௌமர்களாய் அரசாட்சிச் செல்வமநுபவித்துப் பின்பு மீட்சியின்றி வைகுந்தமாநகர்புக்கு நித்யகைங்கர்யஸம்பந்நராய் மகிழ்வுறுவர் என்று இத்திருமொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

நாகை=நாகப்பட்டணம் என்பதன் மரூஉ. நாகராஜனுக்குப் பிரத்யக்ஷமான தலம் என்பதுபற்றி வந்த பெயர் என்ப. .... .... (க௦)

http://acharya.org

அடிவரவு:—பொன் தோடு வேய் வம்பு கோழி வெஞ்சினம் பிணி மஞ்சுயர் எண்டிசை அன்னம் தன்னை.

இரண்டாந் திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஒன்பதாம்பத்து—மூன்றாந் திருமொழி;

## தன்னை நைவிக்கிலேன்.

உரையவதாரிகை:—இவ்வாழ்வார்க்குச் சோழநாட்டுத் திருப்பதிகளின் அநுபவம் கீழ்த்திருமொழியோடு தலைக்கட்டிற்றாயிற்று. இனிப் பாண்டிய நாட்டுத்திருப்பதிகள் சிலவற்றின் அநுபவத்திலே ஆவல் கொண்டவராய் இரண்டு திருமொழிகளாலே திருப்புல்லாணித் திருப்பதியை அநுபவிக்கிறார்.

கீழ்த் திருநாகைப்பதியின் அநுபவத்தில் வந்து புகுந்த நாயகிபாவனை இதிலும் தொடர்ந்து வருகின்றது. "பிரிந்தவர்கள் இரங்குவது கடற்கரையிலே" என்பது தமிழருடைய ஸம்ப்ரதாயம். திருப்புல்லாணிதானும் கடற்கரையிலே அமைந்த திருப்பதியாதலால் நாயகனைப் பிரிந்து வருந்துவாளொரு நாயகியின் பாசுரமாகச் செல்லுகின்றன இத்திருமொழியும் மேல் திருமொழியும்.

தலைமகன் தானே வந்து கூடுகிறானென்று இதுவரை ஆறியிருந்தது போதும்; கிடந்த விடத்திற்கிடந்தே உருகியீடுபட்டுக் கொண்டிருப்பதனால் என்னபலனுண்டு? அவன் மன்னிய புல்லாணியே போய்த் தொழுவோம் புறப்படு என்று நெஞ்சையழைப்பதும் தோழியையழைப்பதுமாய்ச் செல்லுகிறது இத் திருமொழி. .... .... .... .... *

தன்னை நைவிக்கிலேன் வல்வினையேன் தொழுதெழு *
பொன்னை நைவிக்குமப் பூஞ்செருந்தி மணநீழல்வாய் *
என்னை நைவித்து எழில்கொண்டகன்ற பெருமானிடம் *
புன்னைமுத்தம் பொழில்சூழ்ந்து அழகாயபுல்லாணியே. (க)



http://acharya.org

| | |
|---|---|
| வல் வினையேன் | கொடியபாவத்தை யுடையேனான நான் |
| தன்னை | என்னை |
| நைவிக் கிலேன் | அழித்துக்கொள்ள மாட்டுகின்றிலேன்; (ஓ நெஞ்சமே!;) |
| பொன்னை நைவிக்கும் | பொன்னுருவத்தைத் தோற்கடிக்கவல்ல |
| அப் பூ செருந்தி மணம் நீழல் வாய் | அப்படிப்பட்ட ஸுரபுன்னைப் பூக்களின் பரிமளமுள்ள நிழலிலே |
| என்னை நைவித்து | என்னை யீடுபடுத்தி |

| | |
|---|---|
| எழில் கொண்டு | (எனது) மேனிநிறத்தைக் கவர்ந்துகொண்டு |
| அகன்ற | பிரிந்துபோன |
| பெருமான் | எம்பெருமானுடைய |
| இடம் | இருப்பிடமாயும், |
| முத்தம் | முத்தரும்பின |
| புன்னை பொழில் சூழ்ந்து | புன்னைமாச்சோலைகளாலே சூழப்பட்டு |
| அழகாய | அழகியதாயுமிருக்கிற |
| புல்லாணி | திருப்புல்லாணியை |
| தொழுதும் | வணங்குவோம், |
| எழு | புறப்படு. |

* * *—அந்தோ! இந்தப்பாழும் உயிர் உடலை விட்டுப் போகமாட்டேனென்கிறதே!, தலைவனைப் பிரிந்து நோவுபடும் இவ்வுயிர் எதுக்கு? நம்மை நாமே முடித்துக் கொள்வோமென்று பார்த்தாலும் இதுவும் செய்து கொள்ள மாட்டுகின்றிலேனே பாவியேன்! என்கிறாள் முதல்வாக்கியத்தினால்.

"வல்வினையேன் தன்னை நைவிக்கிலேன்"—'தன்னை' என்பதற்கு, அவன்தன்னை என்றும் என்தன்னை என்றும் இரண்டுவகையாகப் பொருள் கொள்ளலாம்; கருத்துமாத்திரம் ஒன்றே. எங்ஙனே யென்னில்; என்னை இங்ஙனே பிரிவாலே வருத்துகின்ற அப்பெருமானை "[illegible]—க்ருதப்ரதிக்ருதம் ஸர்வேஷி தத் குர்வதே" என்கிற கணக்கிலே நானும் வருத்தப்படுத்தலாமே, அது செய்யமாட்டுகின்றிலேன்; அவனை வருத்தப்படுத்துகையாவது—தன்னைத் தான்மாய்த்துக் கொள்ளுகையேயாம். ஆகவே கருத்து ஒன்றேயாயிற்று. அசோகவனத்தில் வந்து முகங்காட்டின அநுமானைப் பிராட்டி கண்ட பிறகு ஸ்ரீராமபிரான் பக்கல் ப்ரணயரோஷத்தாலே 'அவரனுப்பின ஆளன்றே இவன்' என்று சீறிச் சில வார்த்தை அருளிச்செய்ய, அதற்கு அநுமான் 'ஸீதே! பெருமாள் தேவரீருடைய போக்கிட மறியாமலிருந்தாரித்தனையல்லது அன்பு குறையப் பெற்றாரென்பதுண்டோ? நீர் இங்ஙனே இலங்கையிலிருக்கிறீர் என்றறிந்த பின்பு இனித் தாமதித்தாராகிலன்றோ அவர் மேல் குற்றஞ் சொல்லலாம்' என்று பிராட்டியின் ரோஷம் ஆறும்படி சில வார்த்தை விண்ணப்பஞ் செய்து அவ்வளவோடு நில்லாமல் 'நீரும் பெருமாளைப் பிரிந்து பத்துமாஸம் தரித்திருப்பதுண்டே; பெருமாள் பக்கலிலே நீர் ஏறிட்டுச் சொல்லுங்குற்றம் உம்மிடத்திலும் உள்ளதன்றோ' என்று தான் கருதியிருப்பதாகக் காட்ட, அதற்குப் பிராட்டி சொன்னதாவது—'ஓராமனுதனே! இப்படியோ நீ நினைக்கிறாய்?

http://acharya.org

காட்டார்க்குத் தாய் என்றும் தந்தையென்றும் உற்றாரென்றும் உறவினரென்றும் ப்ரீதிக்குப் போக்கிடம் பலநிலத்திருக்கையாலே ஸ்நேஹமானது எங்கும் பாவிபாய்ந்திருக்கும்; பெருமாள் அப்படியல்லாமல் எல்லார்பக்கல் பண்ணும் ஸ்நேஹத்தையும் என்பக்கலிலே ஒருமடையாகச் செய்து வைக்கையாலே சிறிது தாமதித்தாகிலும் கடலை அணைசெய்து விரோதிகளையுந் தொலைத்து அளவுகடந்த ஆவலோடே வருவது தவிரமாட்டார்; வந்தே தீருவர்; வெய்யிலில் அடிபட்டவன் பெருவிடாய்ப்பட்டுத் தண்ணீர்ப்பந்தலண்டை வந்து சேர்ந்தவாறே தண்ணீர்ச்சால் உருண்டு கிடந்தால் பிழையாதாப் போலே அவர் பெருமுயற்சிகள் செய்து இங்கு வந்து சேர்ந்தவாறே நான் முடிந்துகிடந்தேனாகில் பின்னை அவர் பிழைக்கும் வகையுண்டோ? உலகமெல்லாம் அநாதமாய்விடுமன்றோ? அங்ஙனாகாமற்பொருட்டு அவர்க்காக என்னுயிரைக் காத்துக் கொண்டிருக்கிறேன் காண் $' என்றாளாம். அப்படியே இப்பரகாலநாயகியும் 'என்னை நான் முடித்துக் கொண்டேனாகில் அவர் முடிந்திடுவரே! உலகு அநீச்வரமாகுமே! என்று நினைந்தே உயிர்தரித்திருக்கிறேன்' என்கிறாள் போலும்.

இங்கே பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்திகள் காண்மின்:- "[தன்னை நைவிக்கிலேன்] நான் ஜகதுபஸம்ஹாரம் பண்ணுகிறிலேன். என்னை நைவித்தானென்று தன்னை நைவித்தால் பின்பு ஆருண்டு? இவள் அவனை நைவிக்கையாகிறது—தான் முடிகையிறே. நீருக்குப்போகக் குடமுடைந்தாற் போலே அவர்வரக்கொள்ள இத்தலை வெறுந்தரையாயிருக்குமன்று அவிரைக் கிடையாதே."

இந்தநிலைமையில் நான் உயிரைத்துறந்து நித்யாநந்த மநுபவிக்கவேண்டியிருக்க, அது செய்யாதே வருந்தி ஜீவித்திருக்க வேண்டும்படியான மஹாபாபத்தைப்பண்ணினேனென்பாள் வல்வினையேன் என்கிறாள். வனவாஸஞ் சென்ற இராமபிரான் பதினான்கு வருஷங்கழித்து மீண்டு வருமளவும் எப்படியாவது உயிரைத் தரித்திருந்து காணவேணுமென்று $$ பாரித்த தசரதசக்ரவர்த்திக்கு உயிர் தன்னடையே போயிற்று; 'உயிர் ஒழிந்தால் நல்லது' என்றிருக்கிற எனக்கு உயிர் தொலையாமை என்ன பாபமோ என்கிறாள்.

---

$ ஸ்ரீராமாயணம் ஸுந்தரகாண்டம் (36-30) "𑌨 𑌹𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌾𑌤𑌾 𑌨 𑌪𑌿𑌤𑌾 𑌨 𑌚𑌾𑌨𑍍𑌯𑌃 𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌦𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌮𑌯𑌾 𑌸𑌮𑍋 𑌵𑌾 । 𑌤𑌾𑌵𑌦𑍍𑌧𑍍𑌯𑌹𑌂 𑌦𑍂𑌤! 𑌜𑌿𑌜𑍀𑌵𑌿𑌷𑍇𑌯𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌶𑍃𑌣𑍁𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 ॥" என்றச்லோகத்திற்குத் திருவாய்மொழி ஈட்டில் (5—4—3) இன்சுவைமிக்க வியாக்கியானங் காண்க.

$$ "[illegible]" என்றச்லோகத்தில் இந்த விருப்பம் உள்ளுறையென்க.

http://acharya.org

முடிந்து பிழைப்போமென்று பார்த்தால் முடியப் பெறுகின்றிலோம்; இனி உயிரை நோக்கிக் கொள்வதற்கு ஒரு பற்றுசு வேண்டுமே; அதற்காகத் திருப்புல்லாணியைத் தொழுவோ மென்கிருள் மேலே. திருப்புல்லாணிக்கு இரண்டு விசேஷணங்களுள்ளன; இரண்டாமடியும் மூன்றுமடியுஞ் சேர்ந்து முதல் விசேஷணம். நம்மோடு கலந்து பிரிந்துபோன பெருமான் உறையுமிடம் என்கை. செருந்தி என்று ஸுரபுன்னைக்குப் பெயர். அதன் மலர்களும் தாதுகளும் பொன்னிறமாயிருக்குமாதலால் "பொன்னைநைவிக்கு மப்பூஞ்செருந்தி" எனப்பட்டது. பொன்னை நைவித்தலாவது—நிறத்திலுல் தோற்பித்தலாம். "மணி நீழல்வாய்" என்று பிகுதியாக வழங்கிவரும் பாடம் மறுக்கத்தக்கது. "நிறமும் மணமும் நிழலும் இவையெல்லாமுண்டாயிருக்கிறபடி. ஓரிந்த்ரியங்கொண்டு ஒதுங்க நிழலில்லைகிடீர்; ஸர்வேந்த்ரியாபஹாரக்ஷமமான தேசம். சக்ஷுரிந்த்ரியத்துக்கு நிறம்; க்ராணேந்த்ரியத்துக்கு மணம்; ஸ்பர்சேந்த்ரியத்துக்கு நிழல்." என்ற வியாக்கியான வாக்கியங்கள் காண்க. அழகிய நிறமும் மணமுமுடைத்தான புன்னைப் பொழிலின் நிழலிலே ஸம்ச்லேஷித்து என் மேனிநிறத்தைக் கொள்ளை கொண்டு என்னை வெறுந்தரையாக்கிவிட்டு அகன்றுபோன பெருமானுறையுமிடமான திருப்புல்லாணியைத் தொழுவோம் நெஞ்சே! புறப்படு என்றாளாயிற்று.

அவன் வஞ்சக்கள்வன் மாமாயனாகையாலே தன் காரியத்தைச் செய்தான்; நாம் சேஷபூதராகையாலே நங்காரியத்தைச் செய்வோமென்றவாறு. (க)

உருகிநெஞ்சே! நினைந்திங் கிருந்தென்? தொழுதுமெழு *
முருகுவண்டுண்மலர்க் கைதையின் நீழலில் முன்னொருநாள் *
பெருகுகாதன்மை யென்னுள்ளமெய்தப் பிரிந்தானிடம் *
பொருதுமுந்நீர்க் கரைக்கே மணியுந்து புல்லாணியே. (உ)

| | |
|---|---|
| நெஞ்சே | மனமே!, |
| இங்கு இருந்து | இங்கே யிருந்துகொண்டு |
| நினைந்து | சிந்தித்து |
| உருகி | உருகுவதனால் |
| என் | என்னபயன்? |
| | (பின்னை என்ன செய்யவேணு மென்கிருயோ, கேள்;) |
| வண்டு | வண்டுகள் |
| முருகு உண் | தேனுண்ணப்பெற்ற |
| மலர் | பூவையுடைத்தான |
| கைதையின் | தாழையினுடைய |
| நீழலில் | நிழலிலே |
| முன் ஒருநாள் | முன்பொருநாள் |
| என் உள்ளம் | என்நெஞ்சானது |
| பெருகு காதன்மை எய்த | மிக்க ஆவல்கொள்ளும்படி |
| பிரிந்தான் | பிரிந்துபோன பெருமானுடைய |
| இடம் | இருப்பிடமாயும் |
| முந்நீர் | கடலானது |
| பொருது | அலையெறிந்து |
| கரைக்கே | கரையிலே |
| மணி உந்து | ரத்னங்களைக்கொழித்துத் தள்ளுமிடமாயுமுள்ள |
| புல்லாணி | திருப்புல்லாணியை |
| தொழுதும் | சென்றுவணங்குவோம்; |
| எழு | எழுந்திரு. |

http://acharya.org

* * *—நெஞ்சமே! இவ்விடத்திலிருந்து கொண்டு அப்பெருமானைச் சிந்தித்து உருகுவதனால் என்ன பலனுண்டாம்? நம்முடைய உருக்கம் தீரவேணு மானாலும் நம்முடைய சிந்தனை தீரவேணுமானாலும் இங்கிருப்பதில் பயனில்லை; புல்லாணியே போய்த் தொழுவேணுங்காண். அவ்விடத்தில் வண்டு முதலிய திர்யக்ஜந்துக்களும் தம்தம் அபிமதம் பெற்றுக் களித்து வாழ்கின்றனவாதலால் நாமும் அங்குப்போய் அபிமதம் பெற்றுக் களித்துவாழப்பெறலாமன்றோ என்கிறாள்.

தொழுதும் எழு=பிராட்டி பெருமாளைப் பிரிந்து அசோகவனத்திலிருந்த காலத்து ஹநுமானிடம் சொன்னதாவது "ஊர்த்⁴வம் மாஸாந்ந ஜீவிஷ்யே-ஊர்த்வம் மாஸாந் ந ஜீவிஷ்யே." (அதாவது, இனி ஒருமாதத்துக்கு மேற்பட நான் உயிர்வாழ்ந்திருக்கமாட்டேன்) என்றாள். பெருமாள் சொன்னவார்த்தையோ வென்னில், "ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்—ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸிதேக்ஷணாம்" (அதாவது, அக் கண்ணழகியை விட்டு ஒரு நொடிப்பொழுதும் தரிக்ககில்லேன்) என்பதாம். ஆகவே நாயகியைக் காட்டிலும் நாயகனுடைய ஆற்றாமைத்துயரம் அதிகமென்று விளங்குகின்றது. அன்னவனுடைய திருமேனியைக் கண்டால் நம்முடைய உருக்கமும் சிந்தனையும் தீருமென்பதுபற்றி 'புல்லாணியே தொழுதுமெழு' என்கிறாள் போலும்.

வண்டுகளிருந்து மதுவுண்ணப்பெற்ற மலர்த்தாழைகளின் நிழலிலே கலந்து பிரிந்து இப்படி பெருகுகாதலை விளைவித்த பெருமான் உறையுமிடமாயும், கரையிலே மணிகளைக் கொழித்துத் தள்ளுகின்ற கடலினருகே உள்ளதுமான திருப்புல்லாணியைத் தொழுவோம் வா நெஞ்சே!; இங்கிருந்து நினைந்துருகுவதனால் பயனில்லை என்றதாயிற்று.

"பொருது முந்நீர் கரைக்கே மணியுந்து" என்றவிடத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்வது;—"உத்தேச்யஸித்திக்கு இருந்தவிடம் விட்டுப் போகவேண்டாத தேசம்; 'பொருள்வயிற் பிரிகிறேன்' என்று அவனுக்குக் கண்ணழிவு சொல்லவொண்ணாத தேசம்" என்று. இதனைச் சிறிது விவரிப்போம். தேசாந்தரஞ்சென்று பொருள் சம்பாதிப்பதற்காக நாயகன் நாயகியைப் பிரிந்து செல்லுதல் 'பொருள்வயிற் பிரிவு' எனப்படும். (பொருள்வயின்—பொருள் நிமித்தமான என்றபடி.) இவ்வுண்மைப் பொருளுணராதே 'பொருளவையில் பிரிகிறேன்' என்று வியாக்கியான வாக்கியத்தை மாறுபடுத்தி அச்சிடுவித்துள்ளார்கள்; திருத்திக்கொள்க. நம்முடைய நாயகன் ஏதேனுமொரு வியாஜத்தைச் சொல்லி நம்மைவிட்டுப் பிரிய நினைத்து 'மாதே! உனக்கும் எனக்கும் நல்வாழ்ச்சிக்கு உறுப்பாக அரும்பெரும் பொருள்கள் திரட்டிக் கொணர்வதற்காக த்வீபாந்தரஞ் சென்று வருகிறேன' என்று சொல்லிப் பிரிந்து போவதற்கு அவகாசமில்லாதபடி திருப்புல்லாணியில் மனைவாயிலே மணியும் முத்தும் மலிந்து கிடக்கின்றன; அங்குச்சென்று கூடினோமாயின் பொருள்வயிற் பிரிவும் நேரமாட்டாதென்றவாறு.

http://acharya.org

இங்கே ஒரு சங்கை பிறக்கலாம்; எல்லாவற்றிலும் பரிபூரணனான பரம புருஷனேயன்றோ இங்குத் தலைமகனாகக் கொள்ளப்பட்டிருக்கிறான்; அவன் பொருள் சம்பாதிக்கும்பொருட்டு நாயகியைப் பிரிந்து தேசாந்தரஞ் செல்ல ப்ரஸக்தியுண்டென்னில் அவன் ஏழையென்று ஏற்படுமே; அன்னவன் தலைவனாயிருக்கத் தகாதே என்று சங்கிக்க இடமுண்டு. இதற்குக் கேண்மின்;—உண்மையில் பரமபுருஷனே இங்குத் தலைமகனாயினும் நாயக நாயகீ ஸமாதிக்கு ஏற்பவும் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்றதற்கிணங்கவும் ஒரு சிறந்த மனிதனை நாயகனாக நாடியிருப்பதாகக் கொள்க. அவன்தானும் பொருளில்லாதவனாய்ப் பொருளீட்டுதற்காகப் பிரிகிறானென்பதில்லை; தனது முதுகுரவரால் படைக்கப்பட்ட பலவகைப் பொருள்கள் நிரம்பப்பெற்றுள்ளவனே; அப்பொருள்கொண்டு துய்ப்பது ஆண்மைத் தன்மையன்றென்று கருதித் தனது ஸ்வயார்ஜிதமாய்ப் படைத்த பொருள்கொண்டு வழங்கி வாழ்வதற்குப் பிரியும் பிரிவு உண்டென்க. தேவகாரியமும் பித்ருகாரியமும் ஸ்வயார்ஜிதமான பொருள்கொண்டு செய்தாலன்றிப் பயன்படா; தாயப்பொருளாற் செய்யுமது தேவர்களையும் பித்ருக்களையும் இன்புறுத்தாதாம்; ஆதலால் அவர்களையும் இன்புறுத்தவேண்டிப் பிரிவது ஏழைமையைக் காட்டாதென்க. செல்வம் நிறைந்த தலைமகன் பொருள்வயிற் பிரிதற்குக் காரணங் கூறுகின்ற திருக்கோவையாருரைகாரர்—'பொருள்வயிற் பிரிதலென்பது—குரவர்களால் படைக்கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ் செய்தால் அதனால் வரும்பயன் அவர்க்கு ஆம் அத்துணையல்லது தமக்கு ஆகாமையால் தமது பொருள்கொண்டு இல்லறஞ் செய்தற்குப் பொருள் தேடப் பிரியாநிற்றல்' என்றதுங் காண்க. .... .... .... .... .... (உ)

ஏது செய்தால் மறக்கேன்? மனமே! தொழுது மெழு *<br>
தாதுமல்கு தடஞ்சூழ்பொழில் தாழ்வர்தொடர்ந்து * பின்<br>
பேதைநின்னைப் பிரியேனினியென்றகன்றானிடம் *<br>
போதுநாளுங் கமழும் பொழில்சூழ்ந்த புல்லாணியே. (ரு)

| | |
|---|---|
| மனமே | நெஞ்சமே!, |
| ஏது செய்தால் | என்னகாரியஞ் செய்தால் |
| மறக்கேன் | (பெருமானை) மறந்தவளாவேன்? |
| | (ஒருவகையாலும் மறக்க முடியவில்லையே!;) |
| தாது மல்கு | பூந்தாதுகள்நிறைந்த |
| தடம் சூழ் | தடாகங்களாற் சூழப்பட்ட |
| பொழில் | சோலைகளினுடைய |
| தாழ்வர் | பர்யந்தங்களிலே |
| தொடர்ந்து | (என்னைத்) தொடர்ந்துகொண்டு |
| பேதை | "பேதாய்! |
| இனி பின் | இனிமேல் |
| நின்னை | உன்னை |
| பிரியேன் | (ஒருநாளும்) பிரியமாட்டேன்" |
| என்று | என்று சொல்லிவைத்து |
| அகன்றான் | பிரிந்துபோன பெருமானுடைய |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| இடம் | இருப்பிடமாயும், | பொழில் சூழ்ந்த | சோலைகளாற் சூழப்பட்ட |
| காளும் | எப்போதும் | புல்லாணி | திருப்புல்லாணியை |
| போது | பூக்கள் | தொழுதும் எழு | வணங்குவோம் வா. |
| கமழும் | மணமுறப்பெற்ற | | |

* * *—உலகிலுள்ள ஸாமாந்ய ஜனங்கள் தங்கள் தங்கள் காதலரைக்கூடிப் பிரிந்தால் கூடியிருந்தபோது மறக்கமாட்டாதவர்களாய்ப் பிரிந்தபோது நினைக்க மாட்டாதவர்களா யிருப்பர்கள்; ஆழ்வார்களின்படி அப்படியன்றே;எனையூழிகள் பிரிந்தாலும் மறக்கமாட்டார்களே. உலகத்தார்படிக்கு விலக்ஷணமாயன்றோ இவர்களுடைய படியிருப்பது. நாட்டாரைப்போலே இவர்களும் பிரிவில் மறந்திருக்க வல்லர்களாகில் ஆறியிருக்கலாமே. மறக்க வழிதெரியாமையன்றோ படாதபாடுகளும் படுகிறார்கள். மறப்பதற்கு ஏதேனும் வழியுண்டோவென்று பார்க்கிறாள் பரகாலநாயகி; 'ஏது செய்தால் மறக்கேன் மனமே!' என்கிறாள். மறந்து பிழைக்க மருந்து தருவாருண்டோ வென்கிறாள் போலும்.

மறப்பதற்கு வழி தேடுகிறவிவள் 'புல்லாணியே தொழுதுமெழு' என்கிறாளே, இது கூடுமோ? என்னில்; இதற்கு இரண்டுவகையாக அருளிச்செய்வர் பெரியவாச்சான்பிள்ளை; நாட்டாருடைய ரீதியிற்காட்டில் இவர்களுடைய ரீதி வேறுபட்டிருப்பதால், அப்பெருமானைக் கிட்டினால்தான் மறக்கலாமோ பார்ப்போம் என்று கிட்டப்பார்க்கிறாள் என்பது ஒன்று. (பிரிந்தகாலத்தில் மறந்தொழிவது நாட்டார்படியாகில் இவர்களுடைய படி அதற்கு எதிர்த்தலையாகும் போது, கிட்டின காலத்தில் மறப்பதாக வேணுமே என்கை.) இனி, எதைப்பெற வேணுமானாலும் எம்பெருமானிடத்துப் பிரார்த்தித்தே அவன் வழியாகப் பெற வேண்டி யிருத்தலால் மறக்கும் வழியைப் பிரார்த்தித்துப் பெறுதற்காகவே புல்லாணியைத் தொழப்பார்க்கிறாள் என்பது மற்றொன்று.

இங்கே கம்பீரமான வியாக்யான ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"நாட்டார் தந்தாமுடைய அபிமதரைப் பிரிந்தால் கூடினபோது மறக்கமாட்டாராய்ப் பிரிந்தபோது நினைக்கமாட்டாரா யிருப்பர்கள். இங்கு அங்ஙனன்றிக்கே பிரிவில் மறக்கவொண்ணாதபடியா யிராநின்றது. இனி அவர்கள் படியன்றிக்கே நம்மது விஸஜாதீயமாயிருந்த பின்பு கிட்டினால்தான் மறக்கலாமாகில் பார்ப்போம் மனமே! போந்துகாணாயென்கிறாள். இவள்படி வ்யாவ்ருத்தமாயிறே யிருப்பது............மறக்கைக்கும் தொழவேணும் போலே காணும்; ஏதேனுமாக அபிமதலாபம் தொழுகையாலல்லது இல்லையாயிருந்தது."

தான் தொழ நினைக்கிற திருப்புல்லாணிக்கு விசேஷண மிடுகிறாள் "தாது மல்கு தடஞ்சூழ் பொழில் தாழ்வர் தொடர்ந்துபின் பேதை நின்னைப் பிரியே னினியென்றகன்றானிடம்" என்று. பிரியக்கூடாத நிலத்திலே பிரிந்து வஞ்சித்த பெருமான் உறையுமிடம் என்று அத்தலத்திற்கு இதனையே நிரூபகமாகச் சொல்

http://acharya.org

லுகிறபடி. ஒரு நீராகப்புணர்ந்த காலத்திலே 'பேதாய்! காலமுள்ளதனையும் இப்படியே கூடியிருப்பேனத்தனையன்றி ஒருநாளும் பிரியமாட்டேன்' என்று சொல்லிவைத்து உடனே பிரிந்து சென்ற கொடுமையை நினைக்கிறாள். நித்ய வஸந்தமான திருப்புல்லாணியைச் சென்று தொழுவோம் நெஞ்சமே! எழுந்திரு என்றாளாயிற்று.

பேதை—அண்மைவிளி; ஆதலால் விளியுருபு ஏற்கவில்லை. .... (௩)

கொங்குண் வண்டே கரியாகவந்தான் கொடியேற்கு * முன்
நங்களீசன் நமக்கே பணித்தமொழி செய்திலன் *
மங்கைநல்லாய் தொழுதுமெழு போயவன் மன்னுமூர் *
பொங்குமுந்நீர்க் கரைக்கே மணியுந்து புல்லாணியே. (௪)

| | |
|---|---|
| நல் மங்காய் | உயிர்த்தோழியே!, |
| கொங்கு உண் வண்டே கரி ஆக | தேனுண்கிறவண்டு ஒன்றே ஸாக்ஷியாக [பிற ரொருவருமறியாதபடி] |
| கொடியேற்கு வந்தான் | பாவியான என்பக்கல் (கலவிக்கு) வந்தவனான |
| நங்கள் ஈசன் | எம்பெருமான் |
| முன் | முன்பு |
| நமக்கே பணித்த | நமக்குச் சொல்லிவைத்த |
| மொழி | சொற்படி |

| | |
|---|---|
| செய்திலன் | நடத்தவில்லை; (ஆதலால்) |
| அவன் மன்னும் ஊர் | அப்பெருமான் பொருந்தி வாழுமிடமாயும் |
| பொங்கு முந்நீர் | அலைமோதுகின்ற கடலானது |
| கரைக்கே | கரையோரத்திலே |
| மணி உந்து | ரத்னங்களைக் கொழித்துத் தள்ளுமிடமாயுமுள்ள |
| புல்லாணி | திருப்புல்லாணியை |
| | போய் தொழுதும் எழு— |

* * *—தோழியை நோக்கிச் சொல்லுகிற பாசுரமிது. பரகால நாயகி தனது உயிர்த்தோழியை நோக்கி 'திருப்புல்லாணியே சென்று தொழுவோம் புறப்படு' என்றாள்; 'அங்குச் செல்லவேண்டுவது எதுக்காக?' என்று கேட்டாள் தோழி. 'நம்முடைய தலைமகன் வர்த்திக்கிற தேசமன்றோ அது' என்றாள் தலைவி. 'நம்முடைய தலைமகன் என்று நீ சொல்லும்படி அவனுக்கும் உனக்கும் ஏதேனும் உறவு நேர்ந்ததுண்டோ?' என்று கேட்டாள் தோழி. 'என் நேரவில்லை, நன்றாக நேர்ந்ததுண்டு; வந்து கலவி செய்ததுண்டே' என்றாள் தலைவி. 'அப்படியாகில் அதற்கு யாரேனும் ஸாக்ஷியுண்டோ?' என்றாள் தோழி. ஸாக்ஷிகளுண்டாகில் அவர்களையுங் கூட்டிக்கொண்டு சென்று அப்பெருமானை வளைத்து வடிம்பிடலாம் என்ற கருத்தாலே கேட்டாள். அதற்கு "கொங்குண் வண்டே கரியாகவந்தான் கொடியேற்கு" என்கிறாள் தலைவி. அந்தோ! ரஹஸ்யமாக வந்து கலந்து போனானே!; அவனும் நானுமேயாம்படியன்றோ வந்தது; தன் துளபமாலையில் மதுபானம் பண்ணுகிற வண்டே ஸாக்ஷியாக வந்து போனானித்தனையே என்கிறாள். அந்த வண்டினுடைய பாக்யமும் ஒருபாக்கியமே!; நான் உபவாஸத்தாலே மெலிந்துகிடக்க, அது தேனைப்பருகிக் களித்

http://acharya.org

திருக்கிறபடி என்னே! என்கிறாள். ஒருநாளும் தாம் நோவுபடாதே பிறர்நோவு மறியாதே உண்டு களித்துத் திரிபுமவர்கள் பிறர்க்குக் காரியஞ் செய்வதுண்டோ? உலகில் இல்லையன்றோ! அப்படியே அந்த கொக்குண் வண்டுகளும் நமக்கு ஸாக்ஷியம் சொல்லமாட்டாவே! என்பதாகக் கொள்க. இருந்த ஸாக்ஷிகளை வைத்து ஸம்ச்லேஷிக்கமாட்டாத பாவியானேனென்று தன்னைப் பொடிந்து கொள்ளுகின்றமைதோன்றக் 'கொடியேற்கு' என்கிறாள்.

ஸாக்ஷிகளில்லையாகிலும் ஸம்ச்லேஷ காலத்தில் அவன் சொன்ன வார்த்தைகள் தானும் ஏதேனுமுண்டோ? என்று கேட்டாள் தோழி; 'கலவியில் நமக்குச் சொன்ன பாசுரங்கள் பலவுண்டு; நான் பிரியமாட்டேன்; பிரிந்தால் தரிக்கமாட்டேன்; உடனே வந்து கூடியேவிடுவேன்; பிரிந்து வருந்துவாருடைய வருத்தத்தைத் துளியும் காணமாட்டேன்; பரமதயாளுத்வமே என்னுடைய ப்ரக்ருதிகாண்—என்றாற் போலே சொன்ன பாசுரங்களுக்கு அளவுண்டோ? அதன்படி ஒன்றும் செய்திலனே, அர்த்தமில்லாத வார்த்தைகளை யன்றோ சொல்லிப் போனான் என்கிறாள்.

'ஸம்ச்லேஷத்துக்கும் ஸாக்ஷியில்லை; அவன் சொன்ன சொற்படியும் செய்திலன்; ஆகவே என்ன பற்றாசு கொண்டு நாம் அவனிடம் போவது' என்று தோழி உபேக்ஷையாயிருந்த வளவிலே, 'மங்கைநல்லாய்! போய்த் தொழுதுமெழு' என்று நிர்ப்பந்தித்தழைக்கிறாள் பின்னடிகளில்.

போய் என்னும வினையெச்சத்தை 'மன்னும்' என்பதிலாவது 'தொழுதும்' என்பதிலாவது அந்வயிக்கலாம்; அவன் போய் மன்னுமூராகிய புல்லாணியே தொழுதும்; அவன் மன்னுமூராகிய புல்லாணியே போய்த் தொழுதும். (௪)

உணரி லுள்ளஞ்சுடுமால் வினையேன் தொழுதுமெழு *
துணரின்னுழல் நறும்போது நம்சூழ்குழல் பெய்து * பின்
தணரி லாவிதளருமென அன்புதந்தானிடம் *
புணரியோதம் பணிலம்மணியுந்து புல்லாணியே * (௫)

| | |
|---|---|
| வினையேன் | பாவியான நான் |
| உணரில் | நினைத்தமாத்திரத்தில் |
| உள்ளம் சுடும் | நெஞ்சு வேம்; |
| ஆல் | அந்தோ!; |
| துணரின் காழல் நறு போது | பூங்கொத்துக்களையுடைத்தான காழலின் மணம் மிக்க புஷ்பங்களை |
| நம் சூழ் குழல் | நமது பரந்த கூந்தலிலே |
| பெய்து | சூட்டி |

| | |
|---|---|
| பின் தணரில் ஆவி தளரும் என அன்பு தந்தான் | 'இனி விட்டுப்பிரிந்தால் உயிர் தடுமாறிப்போகும்' என்னும்படியான அன்பைக் கொண்டிருக்(கு விட்டுப்பிரிக்)த பெருமானுடைய |
| இடம் | உறைவிடமாயும் |
| புணரி ஓதம் | கடலலைகளானவை |
| பணிலம் | சங்குகளையும் |
| மணி | ரத்னங்களையும் |
| உந்து | ஒதுக்கித்தள்ளுமிடமாயுமுள்ள |
| புல்லாணி | திருப்புல்லாணியை |

(தோழீ!) தொழுதும் எழு—.



http://acharya.org

* * *—கீழ் மூன்றும்பாட்டில், மறக்கமுடியவில்லை யென்றாள்; இப்பாட்டில் நினைக்க முடியவில்லை யென்கிறாள்; மறப்பது நினைப்பது என்று இரண்டு உண்டு; அவையிரண்டும் அருமைப்படுகின்றன போலும் இவட்கு. எதையேனும் நினைத்துக் காலங்கழிக்க வேண்டுதலால், காலக்ஷேபத்துக்காக நினைக்கில் அது ஆச்ரயத்தை வேவச் செய்யாநின்றது; நடந்தவற்றை நினைத்தவாறே நெஞ்சு கொதிக்கின்றதே! என்கிறாள். அசோகவனத்திலே பத்துமாஸம் பிரிந்திருந்த பிராட்டி "ஸமா த்வாதஶ தத்ராஹம் ராகவஸ்ய நிவேஶநே। புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ = $ ஸமா த்வாதச தத்ராஹம் ராகவஸ்யநிவேசநே-புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ." என்று பழையகதைகளைச் சொல்லிக்கொண்டு போது போக்கவில்லையா? அவளைவிட உனக்கு விசேஷமென்? என்ன; வினையேன் என்கிறாள். அவளத்தனை பாக்யம் பண்ணிற்றிலேன் நான்; நடந்தவற்றை நினைத்த மாத்திரத்திலே நெஞ்சுகூடும் படியான பாவத்தைப் பண்ணினேனென்கிறாள்.

அப்படிப்பட்டவிஷயந்தான் என்ன நடந்தது? என்ன, "துணிநறுழல் நறும் போது நஞ்சூழ்குழல் பெய்து, பின் தணவில் ஆவிதளருமென அன்புதந்தான்" என்கிறாள்.

கலவி செய்த காலத்திலே அவன் செய்த ச்ருங்கார விலாஸங்களை என்ன சொல்வேன்!; பூங்கொத்துக்களையுடைத்தான நாழலினுடைய செவ்விப்பூக்களைப் பறித்து என்குழலிலே சூட்டினான்; இனி ஒரு நொடிப்பொழுது பிரிந்தாலும் பிராணன் பாறிப் பறந்துபோய்விடு மென்னும்படியாக அளவுகடந்த அன்பைக் காட்டிப் பரிமாறினான்; அத்தனையும் பிரிவுக்கு உடலாகவே செய்தான் போலும்; பிரியேனென்று சொன்ன வாய்மூடுவதற்கு முன்னமே பிரிந்து போனான்; இவையே என்னுள்ளத்தை வேவச் செய்யாநின்றன வென்கிறாள். அப்படிப் பட்டவன் வர்த்திக்கிறவூரிலே போய் முறையிட்டுக் கொள்ளுவோமென்கிறாள்.

நறும்போது நம் சூழ்குழற்பெய்து=ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் [5—13—35] "அத்ரோபவிஶ்ய ஸா தேந காபி புஷ்பைரலங்க்ருதா। அந்யஜந்மநி ஸர்வாத்மா விஷ்ணுரப்யர்சிதஸ் தயா = அத்ரோபவிச்ய வை தேந காபி புஷ்பை ரலங்க்ருதா—அந்யஜந்மநி ஸர்வாத்மா விஷ்ணுரப்யர்ச்சிதஸ் தயா." என்று கண்ணபிரான் ஒரு ஆய்ச்சியை மடியில் உட்கார வைத்துக்கொண்டு தனது திருக் கைகளால் தான் அவள் தலையிலே புஷ்பங்கள் சூட்டினதாகச் சொன்ன விஷயம் இங்கு அநுஸந்திக்கத் தக்கது.

துணிநறுழல்='துணர் இன் நாழல்' என்று பிரிக்க. துணர்—பூங்கொத்து. 'துணரி நாழல்' என்ற பாடத்துக்கு 'துணரி' என்று சொல்வடிவமாகக் கொள்ள

---

$ நான் மாமனாருடைய திருமாளிகையிலே பன்னிரண்டுவருஷம் குறையற அநுபவித்து வாழ்ந்தேனென்கை.

http://acharya.org

வேணும்; அங்ஙனுண்டாகிற் கண்டுகொள்வது. நாழல் எனினும் ஞாழல் எனினும் ஒக்கும்; கோங்குமரமும் குங்குமமரமுமாம்.

புணரி—கடல். பணிலம்—சங்கு. பணிலம்மணி—சங்குகளினின்று முண்டான முத்து என்றுரைக்கவுமாம்; உம்மைத்தொகையாகக் கொள்ளவுமாம். (ரு)

எள்கிநெஞ்சே! நினைந் திங்கிருந்தென்? தொழுதுமெழு *
வள்ளல்மாயன் மணிவண்ணனெம்மான் மருவுமிடம் *
கள்ளவிழும் மலர்க்காவியும் தூமடற்கைதையும் *
புள்ளுமள்ளற்பழனங்களுஞ் சூழ்ந்த புல்லாணியே. (சு)

| | |
|---|---|
| நெஞ்சே | மனமே!, |
| நினைந்து | (அவனைச்) சிந்தித்து |
| எள்கி | ஈடுபட்டு |
| இங்கு இருந்து என் | இங்கேயிருப்பதனால் என்னபலன்? |
| வள்ளல் | உதாரனும் |
| மாயன் | ஆச்சரியச் செய்கைகளையுடையவனும் |
| மணி வண்ணன் | நீலமணிபோன்ற நிறமுடையவனுமான |
| எம்மான் | எம்பெருமான் |
| மருவும் இடம் | விரும்பியுறையுமிடமாயும், |
| கள் அவிழும் மலர் காவியும் | மது ஒழுகுகின்ற மலர்களையுடைய செங்கழுநீர்களும் |
| தூ மடல் கைதையும் | வெளுத்தமடல்களையுடைய தாழைகளும் |
| புள்ளும் | (பலவகையான) பறவைகளும் |
| அள்ளல் பழனங்களும் | சேறுமிக்க வயல்களும் |
| சூழ்ந்த | சூழ்ந்திருக்கப்பெற்றதாயுமுள்ள |
| புல்லாணி | திருப்புல்லாணியை |
| தொழுதும் எழு | தொழுவோம் வா. |

* * ¹—நெஞ்சே! அவன் சொற்களையும் செய்கைகளையும் நினைந்துநினைந்து வருந்திக்கொண்டு இங்கே கிடப்பதனால் என்ன பயனாகும்? பரமபோக்யமான புல்லாணியே சென்று தொழுவோம் புறப்படு என்கிறாள்;

ஸம்ச்லேஷித்த ஸமயத்தில் அப்பிரான் தனது திருமேனியைப் பூர்ணாநுபவயோக்யமாக ஸர்வஸ்வதாநம் பண்ணினபடியை உத்தேசித்து வள்ளல் என்றாள். அப்படி கலந்து பரிமாறினவன் இப்போது நான் இங்ஙனே பதறியோடி வரும்படி எட்டாதவனாய் வஞ்சகம் செய்கிறானென்ற கருத்துடனே மாயன் என்றாள். அவன் நம்மை அபேக்ஷிக்கினுமாம், உபேக்ஷிக்கினுமாம்; கொலை செய்தாலும் விடவொண்ணாத வடிவு படைத்தவன் என்கிறாள் மணிவண்ணன் என்பதால். அவ்வடிவழகைக் காட்டி என்னை அநந்யார்ஹமாக எழுதிக்கொண்டானென்கிறாள் எம்மான் என்று. இப்படிப்பட்டவன் வர்த்திக்கிற புல்லாணியைத் தொழுதும் எழு நெஞ்சே!.

அவன் நித்யவாஸம்பண்ணுகிற இடத்தே சென்றால் அவனுக்கும் நமக்கும் நினைத்தபடி பரிமாறலாம்படியான ஏகாந்த ஸ்தலங்களுண்டு என்கிறாள் பின்னடிகளால். கள்ளவிழும் மலர்க்காவியும்=திவ்ய தம்பதிகள் ஜலக்ரீடை பண்ணும் போது அழகிய செங்கழுநீர்ப் பூக்களைப் பார்த்து இவை செவ்விபழிவதற்கு

http://acharya.org

முன்னே பறிக்கவேணுமென்று ஒருவர்க்கொருவர் முற்பட்டுப் பறித்து ஒருவர் மேலொருவர் ஏறிய, அவை மேலேபட்டு மதுவொழுகுமழகைக் காணலாயிருக்கு மென்ப. [தூமடல் கைதையும்] தலைமகன் தோள்கொடுக்க ஏறிப் பறிக்கலாம் படியான வெள்ளை மடலையுடைய தாழையும். [புள்ளும்] பலவகையான பறவை களைக் கண்டு 'இதன் பெயர் என்ன? இதன் பெயர் என்ன?' என்று தலைவி கேட் கவும் தலைமகன் அவற்றின் பேர்களைச் சொல்லவும் பெற்ற பட்சிகளும். [அள் ளல் பழனங்களும்] அல்லலறியாத செல்வப் பெண்பிள்ளையாக வளர்ந்த தலை மகள் மருமமறியாதே நீர்நிலங்களிலே புக்கு அங்கே சேறுகளில் அழுந்தி நின் ருல் தலைமகன் கைப்பிடி கொடுத்துத் தூக்கியெடுக்க வேண்டும்படியான நிலங் களும். ஆக இப்படிப்பட்ட வாய்ப்புகளமைந்த புல்லாணியே தொழுவோ மென்றளாயிற்று. .... .... .... .... .... (சு)

பரவிநெஞ்சே! தொழுதுமெழு போயவன் பாலமாய் *
இரவுநாளுமினிக் கண் துயிலாதிருந் தென்பயன்? *
விரவிமுத்தம் நெடுவெண்மணல் மேற்கொண்டு * வெண்திரை
புரவியெனப் புதஞ்செய்துவந்துந்து புல்லாணியே. (எ)

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சே | மனமே! | வெண் திரை | வெளுத்த அலைகள் |
| இனி | இப்போது | புரவி என்ன | குதிரைபோல |
| இரவும் நாளும் | இரவும்பகலும் | புதம் செய்து வந்து உந்து | தாவிக்கொண்டு வந்து தள்ளுமிடமான |
| கண் துயிலாது இருந்து என் பயன் | கண்ணுறங்காதிருப்பதனால் என்னபயன்? | புல்லாணி | திருப்புல்லாணியிலே |
| முத்தம் | முத்துக்களோடே | அவன் பாலம் ஆய் போய் | அவ்வெம்பெருமான்பக்கல் ஈடுபட்டோமாய்ச் சென்று |
| விரவி | கலந்து | பரவி தொழுதும் எழு | துதித்து வணங்குவோம் வா. |
| நெடு வெண் மணல் | அதிகமான வெண்மணற்களை | | |
| மேல் கொண்டு | மேலே எறட்டிக்கொண்டு வந்து | | |

* * *—நெஞ்சமே! இரவும் பகலும் உறக்கமற்று இங்கே தடுமாறுவதனால் என்ன பலனுண்டு? போய்த் தொழுவோம் புறப்படு; எங்குப் போகலாமென் கிறயோ? முத்தோடே கூட வெளுத்த மணற்களைக் கலந்து மேல்மண் கொண்டு மேல் மண்ணெறியும்படி வெளுத்த திரைகளானவை குதிரை தாவுமாபோலே தாவிவந்து தள்ளாநின்றுள்ள திருப்புல்லாணியைத் தொழுவோம் என்கிறள்.

போயவன்பாலமாய்='போய்' என்று தனியே பிரிக்கவுமாம், 'போயவன்' என்று முழுச்சொல்லாகக் கொள்ளவுமாம்; முதல் யோஜனையில் 'போய்த்தொழு தும்' என்று அந்வயிப்பது; இரண்டாம் யோஜனையில், போயவன்—போனவன் என்றபடி; பிரிந்துபோனவன் திறத்திலேயே நெஞ்சை வைத்தவர்களாய்க்

http://acharya.org

கொண்டு இரவும் பகலும் இங்கே கண்ணுறங்காதிருத்தலால் என்னபயன்? என்கை.

மேன்மேலும் அலையெறிந்து வருவதைக் குதிரை தாவிவருவதோடொக்கச் சொல்லுதல் கவிமரபு; புதஞ்செய்தல்—தாவிப்பாய்தல். புரவி—குதிரை. (எ)

அலமு மாழிப்படையுமுடையார் நமக்கன்பராய் *
சலமதாகித் தகவொன்றிலர் நாம்தொழுதுமெழு *
உலவுகானற்கழி யோங்குதண் பைம்பொழிலூடு * இசை
புலவுகானற் களிவண்டினம் பாடு புல்லாணியே. (அ)

அலமும் ஆழி படையும் உடையார் — கலப்பையும் சக்கரமுமாகிற திவ்யாயுதங்களையுடையரான பெருமான்
நமக்கு — நம்விஷயத்திலே
அன்பர் ஆய் — அன்புடையவர் போன்றவராய்
சலம் அது ஆகி — கபடத்தையுடையவராகி
தகவு ஒன்று இலர் — சிறிதும் இரக்கமில்லாதவராயிருக்கின்றார்;
(அவர் அப்படியிருந்தாலும்)
உலவு கால் — உலாவுகின்ற தென்றல் காற்றையுடைய
நல் கழி — நல்ல கழிகளிலே
ஓங்கு தண் பை பொழில் ஊடு — உயர்ந்து குளிர்ந்துபரந்த சோலைகளிடத்தே
புலவு கானல் களி வண்டு இனம் — புலால்நாற்றம் நாறுகின்ற கடற்கரைச் சோலைகளிலுள்ள களிவண்டுகளின் கூட்டமானது
இசை பாடு — இசைபாடப்பெற்ற
புல்லாணி — திருப்புல்லாணியை
(நெஞ்சே!) நாம் தொழுதும் எழு—.

* * *—கலப்பையையும் சக்கரத்தையும் திவ்யாயுதமாகக் கொண்டவர் நமக்கு எளியவராகத் தகாதவர்; 'இவரே நமக்கு ப்ராப்யர்' என்று அனைவராலும் எதிர்பார்க்கப் படுமவர். அப்படிப்பட்டவர் தாமே அன்புடையவர்போல வந்து கலந்து, அந்தனையும் கபடமாகவே தலைக்கட்டிநின்று 'ஒரு பெண்பெண்டாட்டியை இப்படி வஞ்சித்தோமே' என்று சிறிது இரக்கமும் இல்லாதவராயிருக்கின்றார். அவர்தாம் இரங்கிற்றிலர் என்று நாம் உதாஸீநமாக இருந்துவிட முடியுமோ? பரதாழ்வான் 'சித்ரகூடத்தேறச் சென்று பெருமாள் திருவடிகளிலே தலையை மடுத்தாகிலும் இரங்கச் செய்வித்துக் கொள்வோம்' என்று பாரித்து அங்ஙனே செய்தாப்போலே நாமும் திருப்புல்லாணியே சென்று தொழுதாகிலும் அவரை இரங்குவித்துக் கொள்வோம், நெஞ்சே! புறப்படு என்கிறாள்.

அலம்—'ஹலம்' என்னும் வடசொல் விகாரம். பலராமாவதாரத்தில் ஆயுதமாக அமைந்தது இது. 'அலமுமாழிப் படையுமுடையார்' என்றதனால், அவர் பரத்வம் பொலிய நிற்பவர் என்றபடி. ஸாமாந்யமாக ஒருவருடைய அன்பையுமே எளிதில் ஏற்றுக்கொள்ளமாட்டாத பரத்வம் வாய்ந்த அவர் நம்மிடத்திலே அன்புடையராக வந்து கலந்தது கபடமாயிற்று என்க. சலம்-ஊலம் (வடசொல்.)

http://acharya.org

உலவுகானல் கழி=உலவு கால் நல்கழி என்று பிரிக்க. கால்—காற்று என்றும் நீர்க்கால் என்றும் பொருள் கொள்ளலாம். .... .... (அ)

ஓதிநாமங் குளித்துச்சிதன்னால் ஒளிமாமலர் *
பாதநாளும் பணிவோம் நமக்கே நலமாதலில் *
ஆதுதாரானெனிலுந் தரும் அன்றியு மன்பராய் *
போதுமாதே! தொழுதுமவன் மன்னுபுல்லாணியே. (கூ)

| | |
|---|---|
| மாதே | தோழிப்பெண்ணே, |
| நமக்கே நலம் ஆதலில் | நமக்கே புருஷார்த்தமாதலால் (நாம்) |
| குளித்து | ஸ்நாநம்பண்ணி |
| நாமம் ஓதி | (பிரானுடைய) திருநாமங்களை ஓதி |
| ஒளி மா மலர் பாதம் | ஒளிபொருந்திய சிறந்த திருவடித்தாமரைகளை |
| நாளும் பணிவோம் | நாள்தோறும் தொழக்கடவோம்; |
| ஆது தாரான் எனிலும் | (அப்பிரான்) ஒன்றும் தாமாட்டானேலும் |
| தரும் | தந்திடுவன்; |
| அன்றியும் | தரினும் தாராதொழியினும் |
| அவன் மன்னு புல்லாணியே | அவன் பொருந்திவாழும் திருப்புல்லாணியையே |
| தொழுதும் | தொழுவோம், |
| போது | வா. |

* * *—[ஓதிநாமமித்யாதி.] இதுவரையில், அவனுடைய விஷயீகாரமே பேற்றுக்கு உபாயமென்றும், நாம் உபாயாநுஷ்டாநம் பண்ணவேண்டியது ஒன்றுமில்லையென்றும் ஸ்வரூபவுணர்ச்சியின்படியே முறை வழுவாதிருந்தோம் இருந்தவளவிலும் அவனை வந்து விஷயீகரிக்கக் கண்டிலோம்; பெற்றபோது பெறுகிறோமென்று ஆறியிருக்குந்தன்மையோ நமக்கில்லை; வழியல்லாவழியே முயன்றாகிலும் பெற்றுத்தீரவேண்டிய அபிநிவேசம் கிளர்ந்தபின்பு இனி நாமே நம்தலையாலே சில உபாயங்களையநுஷ்டித்தாகிலும் பெறப் பார்க்குமத்தனையன்றோ. நாம் காலக்ஷேபத்தின் பொருட்டு ஸ்வயம் போக்யமாகச் செய்யவேண்டிய காரியங்களையும் இனி உபாயமாகச் செய்யக்கடவோம்; இடைவிடாது திருநாம ஸங்கீர்த்தநம் பண்ணக்கடவோம்; பகவத்கீதையில் (9-14.) “ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தச்ச த்ருடவ்ரதா: நமஸ்யந்தச்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே—ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தச்ச த்ருடவ்ரதா:—நமஸ்யந்தச் ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே.” என்ற ச்லோகத்தில் “ஸததம் கீர்த்தயந்தோ மாம்” என்கிறபடியே செய்து வந்தோமாகில் அதற்கொருபலன் கிடைக்காமற்போகுமோ? [குளித்து] ஸாதநாநுஷ்டாநத்திற்கு அதிகாரிகளாக வேண்டுதற்காக ஸ்நாநப்பண்ணிப் பரிசுத்தமாயிருக்கவேணுமென்பதுண்டே; அதுவும் பண்ணக்கடவோம். சுத்தியும் அசுத்தியும் தேடவேண்டாதே இருந்தபடியே அதிகாரியாதற்குரிய நிலைமையிலிருந்த நாம் இனி நியமநிர்ப்பந்தமுள்ள வழியிலே அந்வயிப்போமென்கிறாள். [உச்சிதன்னாலொளிமாமலர்ப்பாதம் நாளுந் தொழுவோம்] ஒளிமாமலர்ப்பாதமாகையாலே அத்திருவடிகளின்

http://acharya.org

போக்யதையிலீடுபட்டு ஸ்வயம் ப்ரயோஜநமாக அவற்றைச் சிரமேற் கொள்ள வேணுமென்றிருந்த நாம் இனி உபாயமாக இக்காரியத்தை அநுஷ்டிப்போம்.

என்றிவ்வளவும் தோழியை நோக்கிப் பரகாலநாயகி சொன்னவாறே தோழியானவள் 'கெடுவாய்!', பெருமான் அரைக்ஷணம் தாமதித்தானென்று இப்படியும் செய்யத் துணியலாமோ? அவனையுமழித்து உன்னையுமழித்துக் கொள்ளப் பார்க்கிறாயே, இது தகுதியன்றே' என்று சொல்ல; அதற்கு உத்தரம் போல 'நமக்கே நலமாதலில்' என்கிறாள். இதன் கருத்தை விவரிப்போம்;— தோழீ! 'ஓதிநாமங் குளித்துச்சிதன்னா லொளிமாமலர்ப்பாத நாளும் பணிவோம்' என்று சொன்ன என்னை நோக்கி என்சொன்னாய் நீ? 'அவனையுமழித்து உன்னையுமழித்துக் கொள்ளப் பார்க்கிறாயே' என்று சொன்னாய்; இதில் என்னையழித்துக் கொள்வதாகச் சொன்னது பழுது; என்னையழித்துக் கொள்ளும் முயற்சியொன்றும் நான் செய்கின்றிலேன்; பகவத்கீதை முதலியவற்றில் ஸாதநாநுஷ்டாநம் பண்ணும்படி அவன்தானே சோதிவாய் திறந்து நியமித்துப் போந்தவற்றையே நான் அநுஷ்டிக்க முற்படுகிறேன்; நிரபேக்ஷமாக ரக்ஷிக்கக் கடவேனென்று சொல்லியிருக்கிற அவனை அழிக்கிறேனென்பது உண்மை; அவனுடைய ஸ்வரூபத்துக்கு ஒரு அழிவுவாராமே நோக்கவேணுமென்று இதுகாறும் விரதங்கொண்டிருந்தது போதும்; இனி மேலுள்ள காலமெல்லாம் நமக்கே நன்மை பார்க்கக்கடவோம்; "தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்—தத் தஸ்ய ஸத்ருசம்பவேத் §" என்றிருந்து நாம் வாழ்ந்த வாழ்வுபோதும்—என்பதாம்.

இப்படி சொன்ன பரகாலநாயகியை நோக்கித் தோழியானவள் 'நங்காய்!' நீ எந்த ஸாதநாநுஷ்டாநம் பண்ணினாலும் பலன் அளிக்க வேண்டியவன் அவனன்றோ; அவன் உனக்கு ஒன்றுங் கொடுப்பதில்லையென்று ஸங்கல்பங் கொண்டிருக்குமளவும் நீ எது செய்தாலென்ன? அவன் உனக்கு ஒன்றும் தாரான் காண்' என்ன; 'ஆது தாரானேனிலும் தரும்' என்கிறாள். அவன் ஒன்றும் கொடுக்கமாட்டேனென்று முஷ்டி பிடித்தாலும் பிடிக்கட்டும்; என்னுடைய ப்ராஹ்மாஸ்த்ரம் [—உபாயாநுஷ்டாநம்] பலன் கொடுத்தன்றி நில்லாது என்றாளாயிற்று.

அன்றியும் அன்பராய் அவன் மன்னு புல்லாணியே தொழுதும்=பலன் கிடைக்கவுமாம், கிடைக்காமற் போகவுமாம்; நாம்பக்தியுக்தராய்க் கொண்டு திருப்புல்லாணியைச் சென்று தொழுவோமென்கை.

இத்தனை பதற்றம் நமக்கு ஆகுமோ என்று தோழி மயங்கினின்றாள் போலும்; போதுமாதே! என்று வலியப் பிடித்திழுக்கிறபடி.

அநந்யோபாயத்வம், அநந்யோபேயத்வம், அநந்யதைவத்வம் என்று மூன்று தன்மைகளுண்டு ப்ரபந்நர்க்கு. எம்பெருமானைத் தவிர்த்து

---

§ "சரைஸ் து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந:—மாம் நயேத் யதி காகுத்ஸ்த: தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்" என்பது அசோகவனத்திற் பிராட்டி வார்த்தை. இராமபிரான்றானே படையெடுத்து வந்து விரோதிகளைக் கழித்து என்னைக் கைக்கொண்டு போவதே அவர்க்குத் தகுதி என்றபடி.

http://acharya.org

வேறோருபாயத்தைக் கணிசியாமை அநந்யோபாயத்வமாம். அத்தலைக்கு அதிசயத்தை விளைக்கையே புருஷார்த்தமென்றிருக்கை அநந்யோபேயத்வமாம். வேறொன்றிலும் தேவதாபுத்தி பண்ணாமை அநந்யதைவத்வமாம். இம்மூன்றிலும் எள்ளளவும் வழுவாமலிருக்கவேண்டும் ப்ரபந்நர்கள் யாவரும். மற்றவர்களிற் காட்டிலும் ஆழ்வார்களுக்கு இவை மிகவும் முக்கியம். அப்படியிருந்தும் அநந்யோபாயத்வம் அநந்யோபேயத்வம் என்ற இரண்டு தன்மைகளும் குலைந்தமை விளங்கும்படியாக இப்பாசுரமுள்ளது. எங்ஙனே யென்னில், 'ஓதி நாமங் குளித்து உச்சிதன்னால் ஒளிமாமலர்ப்பாதம் நாளும் பணிவோம்' என்று தாம் சில வியாபாரங்களிலே இழிவதாகச் சொல்லுகிற விது அநந்யோபாயத்வம் குலைந்தபடியாம்; 'நமக்கேநலமாதலின்' என்கையாலே அத்தலைக்கு அதிசயத்தை விளைக்கையே புருஷார்த்தமென்றிருக்கை தவிர்ந்து தனக்கு அதிசயம் தேடத்தொடங்குகை விளங்குதலால் அநந்யோபேயத்வம் குலைந்தபடியாம். ஆகவிப்படி ஸ்வரூபத்துக்கு முரண்படுமாறு பேசுகை ஒவ்வாதேயெனின்; ஒக்கும்; ப்ரேமபரவசர்க்கு இவை அவத்யமன்று என்று கொள்க. 'ப்ரேமபாரவச்யத்தாலே விளைந்தவையாகிலும் கலக்கத்தாலே வந்தவைதானே இவை; அஜ்ஞாநமூலகமாய் வருமவையொன்றும் ஆதரணீயமன்றே' என்னில்; "ஞானங் கனிந்த நலம்" என்கிறபடியே ஞானத்தினுடைய பரிபாகரூபையான பக்தியின் காரியமான யாதொரு அஜ்ஞாநமுண்டு, அத்தாலே வரும் ப்ரவ்ருத்தி விசேஷங்களெல்லாம் சிறந்தவையாகக் கொள்ளப்படக் குறையில்லை யென்க. இவ்விஷயமாகவே ஸ்ரீவசநபூஷணத்தி லருளிச்செய்துள்ள "ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும். உபாய பலமாய் உபேயாந்தர்ப்பூதமாயிருக்குமது உபாய ப்ரதிபந்தகமாகாது." இத்யாதி ஸ்ரீஸூக்திகளை இங்கே அநுஸந்திப்பது. .... .... (௧)

இலங்குமுத்தும் பவளக்கொழுந்தும் எழில்தாமரை *
புலங்கள்முற்றும் பொழில்சூழ்ந்து அழகாய புல்லாணிமேல் *
கலங்கலில்லாப்புகழான் கலியனொலி மாலை *
வலங்கொள் தொண்டர்க்கிடமாவது பாடில்வைகுந்தமே. (௧௦)

| | |
|---|---|
| இலங்கு முத்தும் | விளங்குகின்ற முத்துக்களையும் |
| பவளம் கொழுந்தும் | பவளத்தளிர்களையும் |
| எழில் தாமரை | அழகிய தாமரைகளையுமுடைத்தாய் |
| புலங்கள் முற்றும் | உள்ள இடங்கள் முழுதும் |
| பொழில் சூழ்ந்து | சோலைகளால் சூழப்பட்டதாய் |
| அழகு ஆய | அழகியதான |
| புல்லாணி மேல் | திருப்புல்லாணிவிஷயமாக, |
| கலங்கல் இல்லா புகழான் | கலக்கமற்ற கீர்த்தியையுடையவரான |
| கலியன் | திருமங்கையாழ்வார் |
| ஒலி | அருளிச்செய்த |
| மாலை | சொல்மாலையாகிய இத்திருமொழியை |
| வலங்கொள் தொண்டர்க்கு | அதிகரிக்கின்ற பாகவதர்களுக்கு |

http://acharya.org

இடம் ஆவது { இருப்பிடமாவது (எவ்விடமென்றால்), | பாடு இல் வைகுந்தம் } ஒரு துன்பமுமில்லாத ஸ்ரீவைகுண்டமே.

* * *—ஒளிமல்குகின்ற முத்துக்களையும் அழகிய பவளக்கொழுந்துகளையும் அலர்ந்த தாமரைப் பொய்கைகளையுமுடைத்தான சோலைகளாலே சூழப்பட்ட திருப்புல்லாணிப்பதிவிஷயமாகத் திருமங்கையாழ்வார் கவிபாடின இத்திருமொழியிலே ஏதேனுமொருவிதமாக அந்வயமுடைய பக்தர்களுக்குத் துன்பமற்ற திருநாட்டில் வாழ்ச்சியாகுமென்று பயனுரைத்ததாயிற்று.

இதில் ஆழ்வார்தமக்குக் 'கலங்கலில்லாப்புகழான்' என்று விசேஷணமிட்டுக் கொண்டதற்கு ஒருகருத்துண்டு; 'உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்' என்று அவன் திருவுள்ளமானபடி செய்யப் பார்த்திருக்குமத்தனையன்றித் தன் தலையாலே ஒரு முயற்சி செய்து பெற நினைப்பது அவத்யம் என்று தெளிவுற்ற குடியிலே பிறந்த விவர் அத்தெளிவுக்கு மாறுபாடாக இத்திருமொழி வன்சொல்லாக அருளிச் செய்கிறாரே! இதுவென்? என்று சிலர் சங்கிக்கக் கூடும்; அதனால் இவருடைய புகழ்க்கு ஏதேனும் கலக்கம் நேரிடக்கூடும்; உண்மையில் அதற்கு ப்ரஸக்தியில்லையென்று காட்டுதற்கே கலங்கலில்லாப்புகழான் என்றது என்க. 'பகவத்விஷயத்தில் இவர்க்கு இத்தனை ப்ராவண்யமுண்டாயிற்றே!' என்று கொண்டாடும்படியிருக்குமேயல்லது பழிக்கும்படியிராது என்றவாறு. (௧௦)

அடிவரவு:—தன்னை உருகி எது கொங்கு உணரில் என்கி பாவி அலம் ஓதி இலங்கு காவர்.

மூன்றாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர்திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## ஒன்பதாம்பத்து—நான்காந்திருமொழி,

# காவார் மடற்பெண்ணை.

உரையவதாரிகை:—திருப்புல்லாணியேறச் சென்று தொழவேணுமென்று முயன்றமை சொல்லிற்று கீழ்த்திருமொழியில்; முயற்சி பயன்படவில்லை; கால் நடைதாராதபடி தளர்ச்சியுண்டாயிற்று: ஆகவே, கண்ணிற்கண்ட பறவைகளைத் தூதுவிடுவது, முன்புள்ளார் நோவுபட எம்பெருமான் அவர்களுக்கு உதவின படிகளைச் சொல்லுவது, உறவினருடைய ஹிதவார்த்தைகளைக் கேளாதபடியான நிலைமை பிறந்தமையைச் சொல்லுவதாய்ச் செல்லுகிறது இத்திருமொழி. .... *

காவார் மடற்பெண்ணை அன்றிலரிகுரலும் *
ஏவாயினூடியங்கும் எஃகிற் கொடிதாலோ *
பூவார் மணங்கமழும் புல்லாணி கைதொழுதேன் *
பாவாய்! இதுநமக்கோர் பான்மையே யாகாதே. (க)

| | | | |
|---|---|---|---|
| கா ஆர் மடல் | சோலையெங்கும் நிறைந்த மடலையுடைய | பூ ஆர் மணம் கமழும் | பூக்களில் பொருந்திய பரிமளம் வீசப்பெற்ற |
| பெண்ணை | பனைமரத்திலுள்ள | புல்லாணி | திருப்புல்லாணியை |
| அன்றில் | அன்றிற்பறவையினுடைய | கை தொழுதேன் | நான் தொழுதபடி வெகு அழகியதாயிற்று!; |
| அரி குரலும் | தழுதழுத்த த்வநியும் | பாவாய் | தோழியே! |
| ஏவாயினூடு இயங்கும் எஃகின் | அம்புபட்ட புண்வாயில் வ்யாபரிக்கின்ற வேற்படையிற்காட்டிலும் | இது | இப்படி நோவுபடுகை |
| கொடிது | கொடியதாயிருக்கின்றது; | நமக்கு | (அப்பெருமானை ஆசைப் பட்டிருக்கிற) நமக்கு |
| ஆல் ஒ | ஐயோ!; | ஓர் பான்மையே ஆகாதே | நித்யஸ்வபாவமாக ஆய்விட்டதன்றோ?. |

* * *—தோழீ! திருப்புல்லாணியைச் சென்று தொழுவோமென்று ஆசைப் பட்டிருந்த நமக்குத் துன்பப்படுவதே பலனாகத் தேறிற்றே!; என்ஞான்றும் துயருற்றிருப்பதே நமக்குத் தொழிலாயிற்றே! என வருந்திக் கூறுகிறாள் பரகால நாயகி.

இப்பாட்டின் முதலடிக்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்தது காணீர்;—"தார்மிகரா யிருப்பார் வைத்த தண்ணீர்ப் பந்தலிலே வழியடிக்காரர் ஒதுங்குமாபோலே, மடலெடுத்தாகிலும் பிழைக்க நட்டபனையிலே அன்றில் வந்து குடிபுகுந்தது." என்று. இதனை விவரிப்போம்;—விடாய்த்தவர்கள் தண்ணீர் பருகிக் களைதீர்ந்து போகட்டுமென்று தார்மப் பிரபுக்கள் தண்ணீர்ப்பந்தல்

http://acharya.org

வைத்தால், வழிபறிக்குங் கள்ளர்கள் அதிலே வந்து தங்கியிருந்து, வருகிறவர்களை கலியுமாபோலே, விரஹிகள் மடலூர்ந்தாகிலும் அபிமதம் பெற்று வாழ்ந்து போகட்டுமென்று (பனைமடல்களின் மிகுதிக்காக) ஏற்படுத்தின பனந்தோப்பிலே அன்றிற்பறவைகள் வந்து குடிபுகுந்து தழுதழுத்த குரலைக்கொண்டு கொலை செய்கின்றனவே! என்கிறாளென்க. நாயகனை ஒருபடத்திலே யெழுதி, வைத்த கண்வாங்காமல் அதைப் பார்த்துக்கொண்டு புஷ்பம் சந்தனம் முதலிய போகத்துக்கு உரிய வஸ்துக்களை விஷமாக உதறித்தள்ளி ஊணும் உறக்கமும் உடம்பு குளிப்பதுமின்றியே பனைமட்டையைக் கையிலெடுத்துக் கொண்டு அதனால் உடம்பை மோதிக்கொண்டு தலைமயிரை விரித்துக்கொண்டு 'இன்ன படுபாவி என்னைக் காக்கமாட்டாதே கைவிட்டான்; அவன் கண்ணற்றவன்; அவனிலும் விஞ்சின கொடியன் இல்லை; பல ஸ்தலங்களிலே அவன் ஸந்நிதிபண்ணி அடியாரைக் காக்கின்றானென்பதும் ராமக்ருஷ்ணாதி அவதாரங்களினால் பலரைக் காத்தான் என்பதும் முழுப்பொய்யான பேச்சுக்கள்' என்று தெருவேறக்கதறிக் கொண்டு கேட்டாரெல்லாரும் நடுங்கும்படியும் இரங்கும்படியும் திரிந்துழல்வதே மடலூருகையாதலால், இப்படிப்பட்ட மடலூர்தலைச் செய்தாகிலும் எம்பெருமானை அணையப் பெறுவோமென்று கருதின பரகாலநாயகி, பனைமடல் கொள்ளுதற்காகப் பனைமரத்தருகே சென்றவாறே, அங்கு அன்றிலின் அரிகுரலைச் செவியுற்று வருந்தி இது கூறினள்போலும். அன்றில் என்பது ஒரு பறவை. அது பெரும்பாலும் பனைமரத்தில் வாழும். அது எப்பொழுதும் ஆணும்பெண்ணும் இணைபிரியாது நிற்கும்; கணப்பொழுது ஒன்றை ஒன்றுவிட்டுப் பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொறாமல் ஒன்றை ஒன்று இரண்டு மூன்றுதரம் கத்திக் கூவி அதன்பின்பும் தன் துணையைக் கூடாவிடின் உடனே இறந்துபடும்: இப்பறவையை வடநூலார் க்ரௌஞ்சமென்பர். ஆணும் பெண்ணுமான அந்த அன்றிற்பறவை இணைபிரியாமல் நெருங்கி ஒன்றோடொன்று வாயலகைக் கோத்துக் கொண்டு உறங்கும்பொழுது அவ்வுறக்கத்தில் வாயலகு தன்னில் நெகிழ்ந்தவளவிலே துயிலுணர்ந்து அந்த நெகிழ்ச்சியையும் பொறாமல் மெலிந்து பெருந்தொனியாகக் கத்துகிற மிக இரங்கத்தக்க சிறுகுரல் காமோத்தீபகமாய்ப் பிரிவாற்றாமைத் துயரை வளர்த்து விரஹிகளை மிக வருத்துமென்ப. "பெண்ணைமேல் பின்னுமவ்வன்றில் பெடைவாய்ச் சிறுகுரலும், என்னுடைய நெஞ்சுக்கு ஓர் ஈர்வாளாமென்செய்கேன்" என்பர் பெரிய திருமடலிலும்.

. "மடல்பெண்ணைக் கா ஆர் அன்றில்" என்று அந்வயிக்கவுமாம். பனந்தோப்பு நிறைய அன்றிலாகவே யிருக்கிறதே! என வருந்துகிறபடி. இலங்கை முழுதும் ராக்ஷஸமயம்! என்னுமாபோலே. அரிகுரல்—அரிதல்—ஹரித்தல்; உயிரை அபஹரிக்கின்ற குரல் என்னலாம்.

ஏவாய்—'ஏ' என்று அம்புக்குப் பெயர்; அம்புபட்டவிடம் என்றவாறு. ஏற்கனவே அம்புபட்டுத் துடிக்கிற இடத்தில் சூலத்தையுங் கொண்டு குத்தினாற் போலும் அன்றிலரிகுரல். "பண்புடை வண்டொடு தும்பிகாள் பண்மிழற்றேல்மின், புண்புரை வேல்கொடுகுத்தா லொக்கும் நும்மின்குரல்" (9—5—9) என்ற

http://acharya.org

திருவாய்மொழியை ஒருபுடை யொத்திருக்குமிது. எஃகு—ஆயுதப் பொதுப் பெயர்; சிறப்பாக வேற்படையையும் ஈட்டியையுஞ் சொல்லும். ஏற்கனவே காம சரங்களாலே புண்பட்டிருக்குமித் தலைவிக்கு அன்றிலரிகுரல் வேலைக்கொண்டு குத்துமாபோலே யிருக்கிறபடி. எஃகின்—வேற்படையிற்காட்டிலும் என்றும், வேற்படைபோலே என்றும் பொருள் கொள்ளலாம்; “மின்னின்னிலையில” “காற்றிற்கடியனாய்” என்னுமிடங்களிற் போல.

[பூவார்மணங்கமழும் புல்லாணி கை தொழுதேன்] திருப்புல்லாணியை வணங்கினேன் என்று சொல்லுகிறபடி யன்று; உண்ணப்புகுந்தவன் சோற்றிலே குற்றங்கண்டால் உண்டு பசிதீரமுடியாத வயிற்றெரிச்சலாலே ‘அழகாக உண்டோம்’ என்று சொல்லுமாபோலே சொல்லுகிறபடி. திருப்புல்லாணியைத் தொழவேணுமென்று ஆசைப்பட்டு ஒருகூடை வாரிக்கொண்டோம் என்று பரிதாபந் தோற்றச் சொல்லுகிறாளாயிற்று.

[பாவாய்! இதுநமக்கு ஓர்பான்மையே யாகாதே] உலகத்தில் இன்ப துன்பங்கள் ஒருசேர நெடுகியிருக்கமாட்டா என்றும், அவை மாறிமாறி வருமென்றும் சொல்லுவார்கள்; ஏகாகாரமாகத் துன்பப்படுவதே நமக்குப் பணியாயிற்றுப்போலும் என்றபடி. இங்கே வியாக்யான ஸ்ரீஸூக்தி காண்மின்;— “மாறுடி வருவதுமன்றிக்கே இது ஸ்வபாவமாய் விட்டதே!; நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணுகின்றார்கள்; இவ்வருகுள்ளார் (ஸம்ஸாரிகள்) விஷயங்களிலே அந்யபராராகா நின்றார்கள்; நோவுபடுகைக்கென்றே நம்மை மூன்றாம் விபூதியாகப் பண்ணிவிட்டதாகாதே யென்கிறாள்” என்று.

ஆகாதே—அல்லவோ? என்றபடி. .... .... .... (க)

முன்னம் குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த *
மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன் *
பொன்னங் கழிக்கானல் புள்ளினங்காள்! புல்லாணி *
அன்னமாய் நூல்பயந்தாற்கு ஆங்கிதனைச் செப்புமினே. (உ)

| | |
|---|---|
| பொன்னங் கழி கானல் | பொன்னங்கழி யென்கிற கடற்கரைநிலங்களிலுள்ள |
| புள் இனங்காள் | பறவையினங்களே!, |
| முன்னம் | முன்பொருகால் |
| குறள் உரு ஆய் | வாமநரூபியாகி (மாவலிபக்கல்) |
| மூ அடி மண் கொண்டு | மூவடிநிலத்தை இரந்து பெற்று |
| அளந்த | (மூவுலகையும்) அளந்து கொண்ட |

| | |
|---|---|
| மன்னன் | தேவாதிதேவனுடைய |
| சரிதைக்கே | செயலுக்கே |
| மால் ஆகி | நான் வியாமோஹமடைந்தவளாகி |
| பொன் பயந்தேன் | நிறவேறுபாடு அடைந்தவளானேன்; |
| இதனை | எனது இந்த நிலைமையை |
| புல்லாணி ஆங்கு | திருப்புல்லாணியென்கிற அவ்விடத்திலே சென்று, |
| அன்னம் ஆய் நூல் பயந்தாற்கு | ஹம்ஸரூபியாய் வேதசாஸ்த்ரங்களை உபகரித்த பெருமானுக்கு |
| செப்புமின் | சொல்லுங்கள். |

http://acharya.org

* * *—சில பறவைகளை விளித்துத் தூதுவிடுகிறாள். அடியார்கட்குக் காரியம் செய்யமாட்டாதவனையோ நான் ஆசைப்பட்டுத் துடிக்கிறேன்; ப்ரயோஜநாந்தரபரனான இந்திரனுடைய கண்ணீரைக் கண்டு பொறுத்திருக்கமாட்டாமல் தன்னை அழியமாறியும் காரியம் செய்தவனன்றோ அவன்; "மாசூணுச் சுடருடம்பாய் மலராது குவியாது" என்னும்படி எப்போதும் ஒருபடிப்பட்ட தன்மையையுடைத்தான திருமேனியை வாமனவடிவாக்கி,* அலம்புரிந்த நெடுந்தடக்கையைக் கொண்டு தானம்பெற்று மூவுலகளந்தான்; ஒருபோது தன்னை அநுவர்த்தித்தும் மற்றொருபோது படையெடுத்து எதிரம்புகோத்தும் திரிகிற இந்திரனுக்காக இத்தனைகாரியஞ் செய்தானென்று கேட்டு, 'அப்படிப்பட்டவன் அந்தோ! அநந்யப்ரயோஜநரான நமக்கு அப்படிப்பட்ட அருந்தொழிலொன்றுஞ் செய்யாவிடினும் முகத்தையும் காட்டமாட்டேனென்கிறானே' என்று க்லேசப்படுகிறேனென்கிறாள் முன்னடிகளால். மேனிநிறம் வேறுபடுவதைப் பொன்பயத்தலாகச் சொல்லுவது கவிமரபு; மேனிநிறம் வேறுபடும்படியான மனத்துயர மடைந்திட்டேன் என்றவாறு.

இப்படிப்பட்ட என்னுடைய நிலைமையைப் புல்லாணியம்மானுக்குப் புகலுங்கோளென்கிறாள் பின்னடிகளால். [பொன்னங்கழிக்கானல்] ஸ்ரீவானமாமலையில் 'சேற்றுத்தாமரை' என்ற (ஆழ்வார் திருவாக்கில் வந்த) திருநாமத்துடனே தடாகமும் 'தேனமாம்பொழில்' என்ற திருநாமத்துடனே தோப்பும், திருமோகூரில் 'தாளதாமரை' என்ற திருநாமத்துடனே தடாகமும் வழங்கி வருதல்போலத் திருப்புல்லாணியில் 'பொன்னங்கழி' என்றொரு நீரோடுகால் வழங்கி வரும் போலும்.

[அன்னமாய் நூல்பயந்தாற்கு] இப்போது இந்த விசேஷணத்தையிட்டு எம்பெருமானைக் குறிப்பிடுதற்கு இரண்டுவகையான கருத்து உண்டு; பிரமன் இழந்த வேதங்களை ஹம்ஸாவதாரத்தில் மீட்டுக் கொடுத்ததனால் அதுபோலே நானிழந்திருக்கும் மேனி நிறத்தையும் மீட்டுக் கொடுக்கவல்லவர் காண்மின் அவர், என்று குறிப்பிடுதல் ஒரு கருத்து. தூதுபோகிற நீங்கள் 'இவள் நம்மைப் பரமபுருஷன்பக்கல் போகச் சொல்லுகிறாளே; இது நம்மாலாகுமோ? அவர் எங்கே, நாம் எங்கே' என்று நீங்கள் அஞ்சவேண்டுவதில்லை; அவன்றான் அன்னமானவனாகையாலே உங்களோடே ஸஜாதீயனாயிருப்பன் காண்மின்; இனத்தார் பக்கல் போவதற்கு அஞ்சவேண்டாவே என்று குறிப்பிடுதல் மற்றொரு கருத்து.

[ஆங்கு இதனைச் செப்புமினே] இங்கே பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்;—"ஒருத்தியின் நிறம் மீட்கைக்காக வந்திருக்கிறவிடத்தே அறிவியுங்கள்; ஒருத்திக்கே காரியம் செய்யக்கடவோமென்னும் நியதியுண்டோ?" என்று. (இதன் கருத்தாவது—) மூலத்தில் ஆங்கு என்றது புல்லாணியைச் சொன்னபடி. 'புல்லணை' என்பது புல்லாணியெனமருவிற்று. பிராட்டியைக் கவர்ந்து சென்ற இராவணனைக் கொல்லுதற்பொருட்டு இராமபிரான் வாநர ஸேனையுடனே புறப்பட்டுச் சென்று தென்கடற்கரையையடைந்து கடல்கடக்க உபாயஞ் சொல்ல

http://acharya.org

வேண்டுமென்று அக்கடலரசனான வருணனைப் பிரார்த்தித்துத் தர்ப்பத்திற் படுத்து ஏழுநாளளவும் பிராயோபவேசமாகக்கிடந்த தலமாதலால் இது வடமொழியில் தர்ப்பசயநம் எனப்படும்; புல்லணையென்பது அதற்கு ஏற்ற தென்மொழி. ஆகவே, தன்னைப் பிரிந்து நிறவேறுபாடடைந்து வருந்திக்கிடக்கிற ஸீதாபிராட்டியின் நிறத்தை மீட்கைக்காக [அதாவது, அவளோடு புணர்தற்காக] வந்து நிற்கிற தலமாதலால் இவ்விஷயத்தை உட்கொண்டு 'ஆங்கு' என்று சொன்னபடி; ஸீதையாகிற ஒருத்திக்கே காரியஞ் செய்யக்கடவோமென்று ஏதேனும் நியதியுண்டோ? பரகாலநாயகிக்கும் சிறிது உதவக்கூடாதோ என்று சொல்லுங்கோளென்றவாறு.

'செப்புமின்' என்றதனால், அப்பெருமானை இங்குக் கொண்டுவர முயல வேண்டா; என்னிலைமையை அவர்க்கு அறிவிக்குமளவே போதுமானது; காரியம் தன்னடையே ஆகும் என்றதாம். .... .... (உ)

வவ்வித் துழாயதன்மேல் சென்ற தனிநெஞ்சம் *
செவ்வியறியாது நிற்குங்கொல்? * நித்திலங்கள்
பவ்வத் திரையுலவு புல்லாணி கைதொழுதேன் *
தெய்வச்சிலையாற்கு என்சிந்தைநோய் செப்புமினே. (௩)

| | |
|---|---|
| துழாய் அதன் மேல் வவ்வி | (தலைவனது) திருத்துழாய் மாலையைப் பற்றிக் கொண்டு |
| சென்ற | புறப்பட்டுப்போன |
| தனி நெஞ்சம் | (எனது) தனிப்பட்ட மனமானது |
| செவ்வி அறியாது நிற்கும் கொல் | முறையறியாமல் (அவ்விடத்தே) தாமதித்திருக்குமோ? |
| பவ்வம் திரை | கடலலைகளில் |
| நித்திலங்கள் உலவு | முத்துக்கள் உலாவப்பெற்ற |
| புல்லாணி | திருப்புல்லாணியை |
| கை தொழுதேன் | கையெடுத்துத் தொழுதவளான |
| என் | என்னுடைய |
| சிந்தை நோய் | மநோவியாதியை |
| தெய்வம் சிலையாற்கு | திவ்யமான வில்லையுடையரான பெருமானுக்கு |
| செப்புமின் | (பறவைகளே!) சொல்லுங்கள். |

* * *—கீழ்ப்பாட்டிலுள்ள 'புள்ளினங்காள்!' என்ற விளியை இப்பாட்டிலும் வருவித்துக் கொள்க. தனது சிந்தை நோயை அத்தலையில் சென்று செப்புமாறு புள்ளினங்களைத் தூதுவிடுகிறாளென்க. தலைவன் பிரிந்து போகிறபோது தோளில் சாத்திக் கொண்டிருந்த திருத்துழாய்மாலையில் ஒருதலையைப் பிடித்துக் கொண்டு என்னைவிட்டுத் தனியேசென்ற நெஞ்சானது இன்னமும் மீளாதே அவ்விடத்தே நிற்கின்றதே, இப்படியும் நிற்குமோ? திருப்புல்லாணியைத் தொழ வேணுமென்று அழகாக ஆசைப்பட்டேன் அந்தோ!; அதற்குப் பலனாகத் தீராத சிந்தைநோயையன்றோ நான் பெற்றது; இப்படி நான் மநோவியாதியடைந்து துடிக்கிறேனென்பதைப் புள்ளினங்காள்! கையும் வில்லுமாய் நிற்குமவர்க்குச் சொல்லுங்கோள் என்றாளாயிற்று.

http://acharya.org

" துழாயதன்மேல் சென்ற தனிநெஞ்சம் " என்றது—திருத்துழாய் மாலையையே தான் இடைவிடாது சிந்தித்துக்கொண்டு ஈடுபட்டிருக்கிறமையைச் சொன்னவாறு. தன்னைப் பிரிந்து நெஞ்சு போய்விட்டதென்பது அஸம்பாவித மன்றோ? நெஞ்சுபோய்விட்டதென்றால் வார்த்தையே சொல்லமுடியாதே; நெஞ்சு நினைத்ததையன்றோ வாய் சொல்லும்; "வவ்வித்துழாயதன்மேல் சென்ற தனி நெஞ்சம்" என்று இப்போது சொல்லுகிற பரகாலநாயகி நெஞ்சையிழந்தவளென்று எப்படி. கொள்ள முடியும்? நெஞ்சோடு கூடியிருந்துதானே இந்த வார்த்தை சொல்லியிருக்கவேண்டும்; அப்படியிருக்க, 'சென்றதனி நெஞ்சம்' என்றுசொல்வது எங்ஙனே பொருந்தும்? என்று சங்கிக்கவேண்டா; தம்மிற்காட்டில் நெஞ்சைவேறுபடுத்திச்சொல்லுதல்ஒருசமத்காரமான கவிமரபு. திருத்துழாய் மாலையணிந்த திருமார்பிலே அணையப்பெறவேணுமென்கிற ஆசையேதமக்கு அதிகரித்திருக்கின்றமையைச் சொன்னபடி. 'நிற்குங்கோல்' என்றதனால், இந்த வீணான ஆசை எதுக்கு? இவ்விருள்தரு மாஞாலத்தின் ஸ்வபாவத்தினால் இவ்வாசை மாறி * உண்டியே உடையே உகந்தோடுமிம் மண்டலத்தாருடைய ஆசையே நமக்கும் உண்டாகில் ஒருவாறு போதைப் போக்கித் தரித்திருக்கலாமே! என்பதாகத் தொனிக்கும்.

நித்திலம்=வடமொழியில் 'நிஸ்தலம்' என்கிறசொல் முத்து என்னும் பொருளில் கவிகளால் பிரயோகிக்கப்படுகின்றது; "[illegible] அதிவிக்ரும மஸ்தநிஸ்தலாளீருசம்" என்று வரதராஜஸ்தவத்திலே கூரத்தாழ்வானும் பிரயோகித்தருளினர்; இங்ஙனே மற்றும் பலருடைய பிரயோகங்களுமுள்ளன. அந்த நிஸ்தலமென்னும் வடசொல்லே தமிழில் நித்திலமென்று திரிந்து கிடப்பதாகக் கூறுவர்; இது தனியே ஒரு தமிழ்ச் சொல் என்பாருமுளர். முத்துக்களைக் கரையிலே கொண்டு தள்ளுகிற அலைகளையுடைய கடலினருகேயுள்ளது திருப்புல்லாணியென்க.

[தேய்வச்சிலையாற்கு என்சிந்தைநோய் செப்புமின்] ஸீதையின் சிந்தை நோயைத் தவிர்ப்பதற்கென்று வில்பிடித்து நிற்குமவர் அந்த வில்லைக்கொண்டே என் சிந்தைநோயையும் தவிர்க்கும்படி சொல்லுங்கோளென்கிறாள் போலும். 'தெய்வச்சிலையார்க்கு' என்று பன்மையான பாடமுமுண்டு. .... (௩)

பரிய விரணியனதாகம் அணியுகிரால் *
அரியுருவாய்க் கீண்டான் அருள் தந்தவா! நமக்கு *
பொருதிரைகள் போந்துலவு புல்லாணி கைதொழுதேன் *
அரிமலர்க் கண்ணீர்ததும்ப அந்துசிலும் நில்லாவே. (௪)

| | | | |
|---|---|---|---|
| பரிய | பருத்த | அரி உரு ஆய் | நரஸிம்ஹ ரூபியாய் |
| இரணியனது | இரணியாசுரனுடைய | அணி உகிரால் | அழகிய நகங்களாலே |
| ஆகம் | மார்பை | கீண்டான் | கிழித்தொழித்த பெருமான் |

http://acharya.org

| | |
|---|---|
| நமக்கு | நம்விஷயத்திலே |
| அருள் தந்த ஆ | கிருபைபண்ணின விதம் என்னே!; |
| பொரு திரைகள் | ஒன்றின்மேலொன்றாக எறிந்துவருகிற அலைகள் |
| போந்து உலவு | கிட்டவந்து உலாவப்பெற்ற |
| புல்லாணி | திருப்புல்லாணியை |
| கை தொழுதேன் | தொழுதவளான என்னுடைய |
| அரி மலர் கண் | வண்டுபடிந்த பூப்போன்ற கண்களினின்று |
| நீர் ததும்ப | நீர் தளும்ப |
| அம் துகிலும் | அழகிய வஸ்த்ரமும் |
| நில்லா | அரையில்தங்குகின்றதில்லை. |

* * *—இப்பாசுரம் ஆத்மகதமாகச் செல்லுகிறது. தனக்கு ஸ்வாமி ஒருவனுளன் என்றும், காண்கிற சரீரத்துக்கு மேற்பட ஆத்மவஸ்து ஒன்று உண்டென்றும் ப்ரதிபத்தியற்றவனாய் வரபலத்தாலே உடலைத் தடிப்பித்தவனான இரணியாசுரனுடைய மார்பை அழகிய திருநகங்களாலே பிளந்து சிறுக்கனான ப்ரஹ்லாதாழ்வானுக்கு அருள்புரிந்த பெருமான் இப்படியே பக்தர்களெல்லாரிடத்திலும் வாசியின்றி அருள்செய்ய வேண்டியிருக்க நம்மளவிலே அது செய்யாமை தகுதியோ என்கிறாள் முன்னடிகளால். அருள்தந்த ஆ'=கல்லாத மூடனைப் பார்த்து 'நீ கற்றவிதம் வெகு அழகிது' என்றால் நீ ஒன்றும் கற்கவில்லையென்று வெளியாவதுபோல, எம்பெருமான் நமக்கு அருள் தரவில்லையென்பது விபரீத லக்ஷணைவகையால் வெளியாகும்.

திருப்புல்லாணியைத் தொழவேணுமென்று ஆசைப்பட்டு அழகாகப் பேறு பெற்றேனென்பது மூன்றாமடியின் கருத்து.

"அரிமலர்க் கண்ணீர் ததும்ப" என்றதற்கு விநோதமானவொரு அர்த்தமருளிச் செய்வர் பெரியவாச்சான்பிள்ளை;—"கடலும் திரையுங்கண்டு கூட அது பவிக்கவேணுமென்று ஆசைப்பட்டோம்; இதுவாகில் இவளுக்குத் தேடிப்போகவேணுமோ என்று என்னுடம்பிலே கண்ணநீரையுமுண்டாம்படி பண்ணினான்" என்பது வியாக்கியானம்;—பொருதிரைகள் போந்துலவு 'புல்லாணியை நான் ஆசைப்பட்டேனாதலால் நீரிலே அவளுக்கு மிக ஆசைபோலும் என்று நினைத்து, அதை நான் தேடியோட வேண்டாமல் உடம்பெலாம் கண்ணநீர் சோரும்படி செய்துவிட்டார் என்கை.

அம்துகிலும்நில்லா = விரஹவ்யஸநத்தாலே உடல் இளைத்துப் போகவே துகில் தரிப்பற்றதாயிற்று. .... .... ... (௪)

வில்லா லிலங்கை மலங்கச் சரந்துரந்த *
வல்லாளன் பின்போன நெஞ்சம் வருமளவும் *
எல்லாரு மென்றன்னை யேசிலும் பேசிடினும் *
புல்லாணி யெம்பெருமான் போய்கேட் டிருந்தேனே. (௫)

| | |
|---|---|
| இலங்கை | லங்காபுரியானது |
| மலங்க | கலங்கியழியும்படியாக |
| வில்லால் | சார்ங்கத்தாலே |
| சரம் | அம்புகளை |
| துரந்த | பொழிந்த |
| வல்லாளன் பின் | மஹாவீரரான பெருமான் பின்னே |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| போன | சென்ற | பேசிடினும் | (கண்டித்துச்) சொன்னாலும் (ஒன்றுக்கும் மீளாதபடி) |
| நெஞ்சம் | மனமானது | புல்லாணி எம்பெருமான் | திருப்புல்லாணி யெம்பெருமானுடைய |
| வரும் அளவும் | மீண்டுவருகிறவரையில், | பொய் | பொய்யுரைகளை |
| எல்லாரும் | தோழிமார் தாய்மார் முதலிய அனைவரும் | கேட்டு இருந்தேன் | நம்பித்தரித்திருக்கின்றேன். |
| என்தன்னை | என்னை | | |
| ஏசினும் | பழித்தாலும் | | |

* * *—பரகாலநாயகியின் உற்றாருறவினரெல்லாரும் வந்து திரண்டு 'நங்காய்! நாங்கள் சொன்ன ஹிதவார்த்தையைக் கேளாதே * மெய்போலும்பொய் வல்லனை அவனுடைய வார்த்தையைக் கேட்டாயிறே; நாங்கள் என்ன சொன்னோம்? 'பெண்களைப் பரிசழிப்பதே அவனுக்குத் தொழில்; அவன் பக்கல் நசையைவிட்டிடு; விடாயாகில் பரிசழிவாய்' என்றன்றோ நாங்கள் பலகாலுஞ் சொல்லுவது; இப்போது எங்களுடைய வார்த்தையே மெய்யாய் அவனுடைய வார்த்தையெல்லாம் பொய்யானபடி கண்டாயிறே; இனியாகிலும் எங்கள் வார்த்தையைக்கேட்கவல்லையோ?' என்ன; 'அவன் பின்னே போயிருக்கிற நெஞ்சு திரும்பிவரட்டும், அப்படியே செய்வோம்' என்கிறாள்.

'அவன் பெண்களைப் பரிசழிப்பவனே யன்றி ஒருநாளும் பெண்களுக்கு உதவுபவனல்லன்' என்று உறவினர் சொன்னதை மறுத்துக்கூறுவாள் 'வில்லா லிலங்கைமலங்கச் சரந்துரந்த வல்லாளன்' என்கிறாள். ஐயோ! அவனுக்கு ஸ்த்ரீகளிடத்துள்ள பக்ஷபாதத்தை நீங்கள் அறிகின்றிலீர் போலும்; * உண்ணாது உறங்காது ஒலிகடலையூடறுத்து இலங்கை நீறெழச் செற்றதெல்லாம் ஒரு பிராட்டிக்காகவன்றோ? அவளுக்காக அத்தனை பாடுகள் பட்டவன் அவளோடே ஸஜாதீயரான நமக்கும் சிறிது உதவாமற் போகான் என்று அக்குணத்தையே பற்றாசாகக் கொண்டன்றோ என்மனம் அவன்பின்னே சென்றிருக்கிறது; அந்த நெஞ்சு மீண்டுவந்தாலன்றோ நான் உங்கள் வார்த்தையைக் கேட்கவும் அதன்படி நடந்துகொள்ளவும் வல்லேனாவேன்; அது மீண்டு வருமளவும் நீங்களெல்லாரும் ஒருமிடறாகத் திரண்டு என்னைப் பரிஹஸித்தாலும் பழித்தாலும் அப்பெருமானைப் பொய்யனென்றாலும் அந்தப் பொய்யுரைகளையே ஜீவநாதாரமாகக் கொண்டு தரித்திருப்பேனென்றாளாயிற்று.

எல்லாரும்=தோழிமாரும் தாய்மாரும்.

புல்லாணி யெம்பெருமான் பொய்கேட்டிருந்தேனே=எம்பெருமானைத் தவிர மற்றையோர்கள் மெய்யுரையே சொல்லுவர்களானாலும் அவைகொண்டு நமக்கொரு காரியமில்லை; எம்பெருமானது வார்த்தை பொய்யேயானாலும் அது தவிர வேறொன்று நமக்குப் புகலில்லை யென்கிறாளென்க. "ராமாவதாரத்தில் மெய்யும் க்ருஷ்ணாவதாரத்திற் பொய்யுமே நமக்குத் தஞ்சம்" என்று ரஸோக்தியாக பட்டர் அருளிச்செய்வதுண்டு. பொய்யாகிலுமாம் மெய்யாகிலுமாம்; அதில்

151

http://acharya.org

ஒரு விசாரமில்லை; 'எம்பெருமானுடையது' என்னுமத்தனையே கொண்டு தரித்திருப்பர் ஆஸ்திகர். ... .... .... .... .... .... . (௫)

சுழன்றிலங்கு வெங்கதிரோன் தேரோடும் போய்மறைந்தான் *
அழன்று கொடிதாகி அஞ்சுடரோன் தானடுமால் *
செழுந்தடம் பூஞ்சோலைசூழ் புல்லாணி கைதொழுதேன் *
இழந்திருந்தே னென்ற னெழில்நிறமும் சங்குமே. (௬)

| | | | |
|---|---|---|---|
| சுழன்று இலங்கு வெம் கதிரோன் | (மேருமலையைச்) சுற்றி வந்து கொண்டு பிரகாசிக்கின்ற ஸூரியன் | செழு | செழுமைதங்கிய |
| தேரோடும் போய் மறைந்தான் | தனது தேரோடே சென்று அஸ்தமித்தான்; | தடம் | தடாகங்களாலும் |
| அம் சுடரோன் தான் | அழகிய கிரணங்களையுடைய சந்திரனோ வென்றால் | பூ சோலை | பூஞ்சோலைகளாலும் |
| அழன்று கொடிது ஆகி | மிகவும் தீக்ஷணனாய்க் கொண்டு | சூழ் | சூழப்பட்ட |
| அடும் | தஹிக்கின்றான், | புல்லாணி | திருப்புல்லாணியை |
| ஆல் | அந்தோ!; | கைதொழுதேன் | கைதொழுத யான் |
| | | என்தன் எழில் நிறமும் | எனது அழகிய நிறத்தையும் |
| | | சங்கும் | வளைகளையும் |
| | | இழந்திருந்தேன் | இழந்துவிட்டேன். |

* * *—உலகப் பொருள்களில் எதையேனுங் கண்டுகொண்டாகிலும் இத் தப் பிரிவாற்றாமையை ஒருவாறு ஆற்றுவோமென்று பார்த்தால் ஆதித்யன் அஸ்தமித்தான்; 'சீதகிரணன்' என்றும் 'தளிர்மதி' என்றும் வழங்கப்படுகிற சந்திரன் நெருப்புப்போலே எரிப்பவனாகி என்னையே முடித்திடாநின்றான்; திருப்புல்லாணியைத் தொழ ஆசைப்பட்டு நல்லபலன் பெற்றேனந்தோ'; மேனி நிறமும் போயிற்று, கைவளைகளுங் கழன்றொழிந்தன; இங்ஙனம் பரிதாபப்படுவதே நமக்குப் பணியாயிற்றே யென வருந்துகிறாள்.

இரண்டாமடியில் 'அஞ்சுடரில்' என்ற பாடத்துக்கு, 'அம்சுடர்இல்' என்று பிரித்து, அழகிய சுடர்க்கு இருப்பிடமான சந்திரன் என்று உரைத்துக்கொள்க. தான் அடும் ஆல்=ஸூர்யன் தான் முடிந்துபோனான்; சந்திரன் தான் முடியாதே என்னைமுடிக்கப் பார்க்கிறான் என்று சமத்காரமாகச் சொல்லுகிறபடி.

[இழந்திருந்தே னித்யாதி.] 'பிரானோடே புணர்ந்து இன்னமும் மேனிநிறம் வளங்கொள்ளப் பெறவேணும், இன்னமும் ஆபரணங்கள் அணியப்பெறவேணும்' என்று ஆசைப்பட்டு ஏற்கனவே உள்ளவற்றையுமிழந்தேனே; வட்டிக்கு ஆசைப்பட்டு முதலையுமிழப்பாரைப் போலே என்கதியாயிற்றே! என்கிறாள்போலும். (௬)

http://acharya.org

கனையா ரிடிகுரலின் கார்மணியின் நாவாடல் *
தினையேனும் நில்லாது தீயிற் கொடிதாலோ *
புனையார் மணிமாடப் புல்லாணி கைதொழுதேன் *
வினையேன்மேல் வேலையும் வெந்தழலே வீசுமே. (எ)

| | |
|---|---|
| கனை ஆர் இடி குரலின் | இடியிடித்தாற்போன்று மிக்க த்வனியோடு கூடின |
| கார் | கறுத்த |
| மணியின் | (மாட்டின் கழுத்திலுள்ள) மணியின் |
| நா ஆடல் | நாக்கு அசைந்து ஒலிப்பதானது |
| தினையேனும் நில்லாது | தினையளவும் [கொஞ்சமும்] ஓயாமல் |
| தீயின் | நெருப்பைக்காட்டிலும் |
| கொடிது | கொடுமைபுரியாநின்றது; |
| புனை ஆர் மணி மாடம் | அழகுமிக்க மணிமாடங்களையுடைய |
| புல்லாணி | திருப்புல்லாணியை |
| கைதொழுதேன் | தொழுவதற்கு ஆசைப்பட்டவளான |
| வினையேன் மேல் | பாவியேன் மேல் |
| வேலையும் | கடல்தானும் |
| வெம் தழலே | வெவ்விய நெருப்பையே |
| வீசும் | வீசுகின்றது. |

* * *—இடிபோன்ற ஒலியையுடைய மாட்டுக்கழுத்து மணிகளின் ஓசையானது நெருப்புக் கதுவுமாபோலே கதுவி நலியாநின்றதே!; திருப்புல்லாணியைத் தொழவேணுமென்று ஆசைப்பட்ட எனக்கு நன்றாயிற்று; கடல்தானும் தனது குளிர்ச்சியழிந்து வெப்பத்தை ஏறிட்டுக்கொண்டு அலைகளென்கிற வியாஜத்தினால் நெருப்பையே வீசுகின்றதே! என் செய்வேனென்கிறாள்.

வயல்களிலே பகலெல்லாம் மேய்ந்துவிட்டு மாலைப்பொழுதிலே மீண்டுவருகின்ற மாடுகளின் கழுத்திலுள்ள மணிகளின் ஓசை விரஹிகளுக்கு உத்தீபகமாகும்; 'மாலைப்பொழுது அணுகிவிட்டதே, தலைவன் இன்னமும் வந்திலனே!' என்று வருத்தத்தையுண்டாக்கி அவ்வழியாலே உத்தீபகமாகிறதென்க. "நாகுகளைச் சேக்கள் தொடருகிறபோது அவை ஓடுகிறது, தலைமகன் மேல்விழத் தான் இருக்கும்படிக்கு ஸ்மாரகமாய் நலியாநின்றதாயிற்று." என்றருளிச் செய்வர் பெரியவாச்சான் பிள்ளை. "மாலையும்வந்தது மாயன்வாரான் மாமணிபுலம்ப வல்லேறணைந்த, கோலநன்னாகுகள் உகளுமாலோ" என்பது திருவாய்மொழி.

தினையேனும்=தினையென்பது மிகச்சிறியதொரு தானியம்; மிக அற்ப அளவுக்கு அதனை உவமைகூறுவதுண்டு; அற்பகாலமும் என்றபடி. தினையைக் கூறுவதுபோல் எள்ளையுங் கூறுவதுண்டு; "எட்டனைப்போது" என்ற திருநெடுந்தாண்டகங் காண்க.

[புனையார்மணிமாட மித்யாதி.] திருப்புல்லாணியிலே பல மணிமாடங்களுண்டு; ஸௌபரி ஐம்பதுவடிவுகொண்டு பலமாளிகைகளிலே பலபடியாக அநுபவித்தாற்போலே மணிமாடங்கள்தோறும் நானுமவனுமாயிருந்து அநுபவிக்க ஆசைப்பட்டது அழகாகச் சமைந்தது!; அருமையானதை ஆசைப்படும்படியான்

http://acharya.org

பாபத்தையன்றோ நான்பண்ணினேன்; ஏற்கனவே விடைமணியோசைக்குத் தப்பினது இங்கு ஒன்றுமில்லை; ஏதேனும் குற்றுயிர் குறையுயிர் இருந்ததாகில் அதையும் தேடிப்பிடித்துக் கொள்ளைகொண்டு போவதற்காகக் கடலையும் வந்து வெந்தழலே வீசாநின்றது; இதுவாயிற்று நான்படும் பாடு என்றாளாயிற்று. (எ)

தூம்புடைக்கை வேழம் வெருவ மருப்பொசித்த *
பாம்பினணையான் அருள்தந்தவா நமக்கு *
பூஞ்செருந்தி பொன்சொரியும் புல்லாணி கைதொழுதேன் *
தேம்ப லிளம்பிறையு மென்றனக்கோர் வெந்தழலே. (அ)

| | | | |
|---|---|---|---|
| தூம்பு உடை கை வேழம் | துளையையுடைத்தான துதிக்கையையுடைய (குவலயாபீடமென்னும்) யானையானது | பூ | அழகிய |
| வெருவ | அச்சமுறும்படி | செருந்தி | சுரபுன்னைமரங்கள் |
| மருப்பு ஒசித்த | (அதன்) கொம்புகளை முறித்த | பொன் சொரியும் | பொன்போன்ற மலர்களை உதிர்க்குமிடமான |
| பாம்பின் அணையான் | சேஷசாயியான பெருமான் | புல்லாணி | திருப்புல்லாணியை |
| நமக்கு | நம் திறத்தில் | கைதொழுதேன் | தொழுவதற்கு ஆசைப்பட்டவளான |
| அருள் தந்த ஆ | அருள் செய்தவிதம் என்னே!; | என்தனக்கு | எனக்கு |
| | | தேம்பல் இள பிறையும் | மிக இளைய சந்திரனும் |
| | | ஓர் வெம் தழல் | வெவ்விய நெருப்புப் போலுள்ளான். |

* * *—"ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந: நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம் = ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:—நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்." என்கிறபடியே திருப்பாற்கடலிலே சேஷசயனத்தைவிட்டு நீங்கி வடமதுரையிலே வந்து பிறந்தருளிக் குவலயாபீடயானை போன்ற விரோதிவர்க்கங்களை வேரோடே தொலைத்துத் தன் திருமேனியை அன்பர்க்குப் பூர்ணாநுபவயோக்யமாகத் தந்தருளினபெருமான் அப்படி நம்திறத்திலும் செய்தருளவேண்டியிருக்க அது செய்யாதே விபரீதமாக அருள்செய்தபடி என்னே! என்கிறாள் முன்னடிகளில்.

அந்த வைபரீத்யத்தைப் பின்னடிகளில் விவரிக்கிறாள்; திருப்புல்லாணியைத் தொழவேணுமென்று ஆசைப்பட்ட எனக்கு இளம்பிறை நெருப்பாகும்படியாயிற்றே!; நான் தவிர மற்றையோரெல்லாம் சந்திரனைக் கண்டவாறே உடலும் குளிர்ந்து கண்களுங்குளிர்ந்து உள்ளமுங்குளிர்ந்து பரமாநந்தப்படாநிற்க நானொருத்தி மாத்திரம் அவ்விளம்பிறையைக் கண்டவாறே நெருப்புக் கதுவினாற்போலே தபிக்கப் பெறுகிறேனே, திருப்புல்லாணியைத் தொழவிரும்பியதன் பலனோ இது!, அப்பிரான் நமக்குச் செய்யும் திருவருள் இதுவோ கொல்!... (அ)

http://acharya.org

வேதமும் வேள்வியும் விண்ணு மிருசுடரும் *
ஆதியு மானான் அருள்தந்தவா நமக்கு *
போதலரும் புன்னைசூழ் புல்லாணி கைதொழுதேன் *
ஓதமும் நானும் உறங்கா திருந்தேனே. (௯)

| | | | |
|---|---|---|---|
| வேதமும் | வேதஸ்வரூபியாகவும் | போது அலரும் | பூக்கள் மலரப்பெற்ற |
| வேள்வியும் | யஜ்ஞஸ்வரூபியாகவும் | புன்னை சூழ் | புன்னைமரங்களால் சூழப்பட்ட |
| விண்ணும் | மேலுலகங்களாகவும் | புல்லாணி | திருப்புல்லாணியை |
| இரு சுடரும் | சந்திரஸூர்யர்களாகவும் | கை தொழுதேன் | தொழவிரும்பியவளான |
| ஆதியும் | ஜகத்காரணபூதனாகவும் | நானும் | நானும் |
| ஆனான் | ஆன பெருமான் | ஓதமும் | கடலும் |
| நமக்கு | நம் திறத்திலே | உறங்காது இருந்தேன் | கண்ணுறக்கமற்றிருக்கிறோம். |
| அருள் தந்தவா | அருள் செய்தவிதம் என்னே !; | | |

* * *—உலகத்துக்குக் கண்காட்டியாக வேதங்களையுண்டாக்கி யருளினான்; அவற்றுக்கு ப்ரதிபாத்யனான தன்னைக் கிட்டுகைக்கு ஸாதநமாக யாகம் முதலியவற்றை ஏற்படுத்தினான்; அவற்றுக்குப் பயனாக ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங்களையும் ஸங்கல்பித்தருளினான்; உலகுக்கு விளக்காக சந்திர ஸூர்யர்களையுமுண்டாக்கினான்; அனைத்துக்கும் தானே வேர்ப்பற்றாயுமிராநின்றான்; ஆக எல்லாப்படியாலும் பிறர்க்கு அருள் செய்வதையே விரதமாகக்கொண்ட பெருமான் நமக்கு மாத்திரம் விபரீதமாயிருப்பது என்னே! என்கிறாள் முன்னடிகளில். 'அருள்தந்தவா' என்றது எதிர்மறையிலக்கணையால் அருள்தாராமையைக் காட்டுமென்க.

[போதலருமித்யாதி.] புன்னை முதலியவை நன்கு சோலை செய்திருக்கப்பெற்ற திருப்புல்லாணித் தோப்புகளிலே விடிவிளக்குவைத்து அவனும் நானுமாக உறங்காதே 1. ராத்ரிரேவ வ்யரம்ஸீத்—ராத்ரிரேவ வ்யரம்ஸீத்." என்னும்படியாக அநுபவிக்கப் பெறவேணுமென்று ஆசைப்பட்டது நன்றாயிற்று!. அவனும்நானு முறங்காதிருக்கவேணுமென்று ஆசைப்பட்டதற்கு ஓதமும் நானுமுறங்காதிருக்கப் பெற்றோம் என்கிறாள். ஓதவண்ணன் தனக்குப் பிரதிநிதியாக ஓதத்தை ஆளாக்கிவைத்தான் போலும். என்னை நலிவதற்கு ஓதமும், அதனால் நலிவுபடுவதற்கு நானும் ஆக இரண்டு வ்யக்திகள் தவிர மற்ற வையமெல்லாமுறங்கிற்று என்கிறாள். விரஹிகளுக்குக் கடலும் உத்தீபகமென்க.

வேதமும் ஆனான்—வேதங்களை உபகரித்தவன் என்னவுமாம். வேதங்களால் பிரதிபாதிக்கப்படுபவன் என்னவுமாம். வேள்வியும் ஆனான்—யஜ்ஞங்களை

1. உத்தராமசரித நாடகம். (இராப்பொழுது முடிந்ததேயன்றி சிருங்கார கேளிகள் முடிந்தனவில்லை யென்றபடி.)

http://acharya.org

அமைத்தவன் என்னவுமாம், யஜ்ஞங்களால் ஆராதிக்கப்படுமவன் என்னவுமாம். விண்ணுமானான்—மேலுலகங்களை நாட்டினவன் என்னவுமாம், மேலுலகங்களை அடைவிப்பவன் என்னவுமாம். .... ... .... (கூ)

பொன்னலரும் புன்னைசூழ் புல்லாணி யம்மானை *
மின்னிடையார் வேட்கைநோய்கூர இருந்ததனை *
கன்னவிலும் திண்டோள் கலியனொலிவல்லார் *
மன்னவராய் மண்ணாண்டு வானாடு முன்னுவரே. (க௦)

| | |
|---|---|
| பொன் அலரும் புன்னை சூழ் | பொன்போன்ற பூக்கள் மலரப்பெற்ற புன்னை மரங்களால் சூழப்பட்ட |
| புல்லாணி | திருப்புல்லாணியிலெழுந்தருளியிருக்கிற |
| அம்மானை | எம்பெருமான் விஷயத்திலே |
| மின் இடையார் | மின்னல்போல் நுண்ணிய இடையையுடையரான பெண்பிறந்தவர்கள் |
| வேட்கை நோய் கூர | ஆசை நோய் மிகும்படியாக |
| இருந்ததனை | இருக்கும் நிலைமையைப் பற்றி |
| கல் நவிலும் திண் தோள் கலியன் | மலையென்று போற்றத் தகுந்த திண்ணிய திருத்தோள்களையுடையரான ஆழ்வார் |
| ஒலி | அருளிச்செய்த இப்பாசுரங்களை |
| வல்லார் | கற்றுவல்லவர்கள் |
| மன்னவர் ஆய் | அரசர்களாகி |
| மண் ஆண்டு | பூமியையாட்சிபுரிந்து(பிறகு) |
| வான் நாடும் | பரமபத நாட்டிற்கும் |
| உன்னுவர் | விரைந்தெழுவர். |

* * *—எப்போதும் வஸந்தருதுவாகவே விளங்கப்பெற்ற சோலைசூழ்ந்த திருப்புல்லாணியிலெம்பெருமான் பெண் பிறந்தவர்கள் ஆசைநோய் மிகும்படி யெழுந்தருளி யிருக்கிறான் (அதாவது) ஆண்களும் பெண்ணுடை யுடுத்துக் கதறும்படியான விலக்ஷணமான அழகுவாய்ந்தவன் என்பதையாயிற்றுத் திருமங்கையாழ்வார் இத்திருமொழியில் வெளியிட்டது. ஆக இத்திருமொழியைக் கற்றுவல்லவர்கள் இவ்வுலகில் வாழுந்தனையும் குறையொன்றுமில்லாத கோமான்களாய் வீற்றிருந்து வாழப்பெற்றுப் பின்பும் மீட்சியின்றி வைகுந்தமாநகர் ஆளப்பெறுவர் என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

(இரண்டாமடியில்) கூர்தல்—மிகுதல். உன்னுதல்-விரைந்தெழும்பல். (க௦)

அடிவரவு:—காவார் முன்னம் வவ்வி பரிய வில் சுழன்று கனை தூம்புடை வேதம் பொன்னலரும் தவள.

நான்காந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## ஒன்பதாம்பத்து—ஐந்தாந்திருமொழி,

# தவளவிளம்பிறை.

உரையவதாரிகை:—நாயகியவஸ்தை இன்னமும் அநுவர்த்திக்கிறது: திருப்புல்லாணியில் நின்றும் நெஞ்சைமீட்டுத் திருக்குறுங்குடியில் செலுத்தினள் பரகாலநாயகி. நெஞ்சு சென்றதேயன்றி உடல் அங்குச் செல்லவில்லை ஆற்றாமையாலே. கால் நடைதாராமையாலே சடக்கெனச் சென்று சேர இயலவில்லை; பாதகபதார்த்தங்களுக்கு ஈடுபட்டுக் கண்ணுறங்காதே துடிக்கும்படியாயிற்று; ஆகவே, சக்தியுடைய தோழிமார் முதலானாரை நோக்கி 'நங்கைமீர்! இங்ஙனே நான் துடிப்பது தகுதியோ? திருமால்தான் இரங்கியருளாதொழியினும் நீங்களாகிலும் இரங்கலாகாதோ! இங்கே எனக்குப்பிரதிகூலமாயிருக்கின்ற பொருள்களடங்கலும் அநுகூலமாகும்படியான இடத்திலே என்னைக்கொண்டு சேர்த்துவிடலாகாதோ? தனியிருப்பிலே என்னை ஹிம்ஸிக்கிற வஸ்துக்களெல்லாம் அவனும் நானுமான சேர்த்தியிலே அநுகூலங்களாகுமன்றோ? அங்ஙனே ஆகும்படி திருக்குறுங்குடியிலே என்னைக்கொண்டு சேர்த்துவிடுங்கோள் என்று வேண்டிக்கொள்ளுகிறாள். .... .... ... .... (*)

தவளவிளம்பிறை துள்ளுமுந்நீர் தண்மலர்த் தென்றலோடன்றிலொன்றித்
துவள * என்னெஞ்சகஞ்சோரவீரும் சூழ்பனிநாள் துயிலாதிருப்பேன் *
இவளுமோர்பெண்கொடி யென்றிரங்கார் என்னலமைந்துமுன் கொண்டுபோன *
குவளைமலர்நிறவண்ணர் மன்னு குறுங்குடிக்கேயென்னை யுய்த்திடுமின். (க)

| | |
|---|---|
| தவளம் இள பிறை | வெண்ணிறமுள்ள பாலசந்திரனும் |
| துள்ளும் முந்நீர் | அலையெறிகின்ற கடலும் |
| தண் மலர் தென்றலோடு | குளிர்ந்த பூக்களில்படிந்து வீசுகின்ற தென்றற் காற்றும் |
| அன்றில் | அன்றிற்பறவையும் |
| ஒன்றி | ஒன்றுசேர்ந்து |
| என் நெஞ்சகம் | என் மனமானது |
| துவள | துர்ப்பலமாம்படியாகவும் |
| சோர | சிதிலமாம்படியாகவும் |
| ஈரும் | நோவுபடுத்துகின்றன; |
| சூழ் பனி நாள் | எங்கும் பனிபரவியிருக்கிற இக்காலத்தில் |
| துயிலாது இருப்பேன் | கண்ணுறங்காதே கிடக்கிறேன்; |
| இவளும் ஓர் பெண் கொடி என்று இரங்கார் | 'இவள் ஒரு இளம் பெண்ணன்றோ?' என்று மனமிரங்காதவராய் |
| என் நலம் ஐந்தும் | எனது பஞ்சேந்திரியவுணர்ச்சியையும் |
| முன் கொண்டு போன | முன்பு கொள்ளைகொண்டு பிரிந்துபோன |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| குவளை மலர் நிறம் வண்ணர் | கருநெய்தற்பூவின் நிறம் போன்ற நிறமுடையரான பெருமாள் | குறுங்குடிக்கே | திருக்குறுங்குடியிலேயே |
| மன்னு | நித்யவாஸம்பண்ணுகிற | என்னை உய்த்திடுமின் | என்னைக்கொண்டு சேர்த்திடுங்கள். |

* * *—இத்திருமொழியில் பாசுரங்களெல்லாம் ‘குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின்’ என்றே முடிகின்றன; ‘உய்த்திடுமின்’ என்ற முன்னிலையேவற் பன்மை வினைமுற்றுக்கு ஏற்ப, பாசுரந்தோறும் ‘அன்னைமீர்!’ என்றோ ‘தோழிமீர்!’ என்றோ விளி வருவித்துக்கொள்க.

நிர்மலமாய்ப் பருவம் நிரம்பாத சந்திரன் உதித்தவாறே அனைவரும் ஆநந்தமாகக் கண்டுகொண்டிருக்க, பாவியேனுக்குமாத்திரம் அவன் நெருப்பாயிருப்பதே!; அனைவரும் கடற்கரையிலேபோய் உலாவி ஆநந்தத்திற்குப் போக்குவிடாநிற்க, அதுவும் பாவியேனுக்கு விஷமாயிருப்பதே!; எல்லாரும் தென்றல் வீசுகிற வழியே எதிர்பார்த்து நின்று அதுமேலேபட இன்பம் நுகராநிற்க, அது பாவியேனுக்குமாத்திரம் தீக்கதுவினாற்போல் ஆவதே!: அன்றிற் பறவைகளின் தொனி அனைவர்க்கும் கர்ணாம்ருதமாயிருக்க, வல்வினையேனுக்குமாத்திரம் கொன்னவிலுமெஃகிற் கொடிதாவதே!; கீழ்ச்சொன்னவை யெல்லாம் தனித்தனியே என்னுயிரைமாய்க்கப் போதுமானவை; அராஜகமான தேசத்தில் எதிரிகளடங்கலும் ஸங்கேதஞ் செய்துகொண்டு உள்ளே புகுந்து நாலு வாசலையும்பற்றிக் குறும்பு செய்யுமாபோலே இவை நான்கும் கூடித் திரண்டு ஒருமுகஞ் செய்து பண்ணுகிற ஹிம்ஸை பேச்சுக்கு நிலமன்று; ஏற்கனவே நாயகனைப்பிரிந்த ஆற்றாமையினால் தரைபற்றி யிருக்கிற என் நெஞ்சு துவளும்படியாகவும் சோரும்படியாகவும் ஈர்கின்றன. இக்காலமோ பனிகாலம்; “ஒழுகு நுண்பனிக்கொடுங்கிய பேடையை யடங்க அஞ்சிறைகோலித், தழுவு நள்ளிருள்” என்னும்படியே, அணைத்த நாயகனுடைய கைக்குள்ளே அடங்கவேண்டுமிக்காலத்திலே அவனைப் பிரிந்து பாதக வஸ்துக்களின் கையிலே அகப்பட்டுக் கண்ணுறங்காதே துடிக்கின்றேன்; ‘சிறுமியான இவள் இவற்றுக்கெல்லாம் ஆடல்கொடுக்க வல்லளோ? நாம் இவளை இத்தனை கொலைபாதகர் கையிலே காட்டிக்கொடுத்து வருத்துவது தருமமன்று’ என்று அப்பெரியவர்க்குத் தன்னடையே திருவுள்ளத்தில் இரக்கம் பிறக்கவேணும்; என்னுடைய தௌர்ப்பாக்யத்தாலே அவர் இரக்கமற்றொழிந்தார்; தம்மைப்பிரிந்து பத்துமாஸம் தரித்திருந்த பிராட்டியைப்போலே என்னையும் நினைத்தாரேயன்றி என்னுடைய வைலக்ஷண்யமறிந்து இரங்குகின்றிலர்; ஆயினுமாகுக; என்னுடைய பஞ்சேந்திரியங்களின் வ்ருத்திகளையும் கொள்ளைகொண்டு அவர்சென்று சேர்ந்து வாழுமிடமான திருக்குறுங்குடியிலே என்னைக் கொண்டு சேர்த்துவிடுங்கோள் என்றாளாயிற்று.

தவளம்—‘தவல’ என்னும் வடசொல்விகாரம்; பால்போல் வெளுத்திருக்கையைச் சொன்னபடி. துள்ளுமுந்நீர்=என்னை முடிப்பதற்கு நான்நானென்று முற்பட்டுக்கொண்டு வருகிற சிறுதிவலையையுடைத்தான கடல் என்றபடி.

http://acharya.org

என்நலமைந்தும் கொண்டுபோன = இதற்கு இரண்டுவகையான நிர்வாஹமுண்டு;—செவி வாய் கண் மூக்கு உடல் என்னும் ஐந்து உறுப்புகளின் அறிவையும் வேறுவிஷயங்களுக்கு ஆகவொண்ணாதபடி செய்து தனக்கே ஆக்கிக்கொண்டுபோன; (அதாவது) பகவத்விஷய வார்த்தைகள் தவிர வேறு எந்த வார்த்தையையும் காது க்ரஹிக்க வொண்ணாமலும், வேறு எந்த விஷயத்தையும் வாய்பேசவொண்ணாமலும், வேறு எதையும் கண் காணவொண்ணாமலும், அவனுடைய திருத்துழாய்ப் பரிமளந்தவிர வேறு எந்த மணத்தையும் மூக்கு க்ரஹிக்கவொண்ணாமலும், உடல் வேறு எந்த வஸ்துவையும் அணையவிரும்பாதபடியும் செய்து போன என்றபடி. இனி இரண்டாவது நிர்வாஹமாவது—திருநெடுந்தாண்டகத்தில் "மின்னிலங்கு திருவுருவும் பெரியதோளும்" (25) என்கிற பாட்டில் "என்நலனும் என்நிறைவும் என்சிந்தையும் என்வளையுங் கொண்டு என்னையாளுங்கொண்டு" என்று ஐந்து வஸ்துக்களைக் கொண்டதாகச் சொல்லிற்றே; அவை ஐந்தும்—என்று அமுதனார் நிர்வஹிப்பராம்.

கொள்ளை கொள்பவர்கள் மயக்கிவிட்டன்றோ கொள்வது; இங்கே நலமைந்துங் கொள்ளைகொள்ளும்போது எதையிட்டுமயக்கிற்றென்ன, வடிவைக் காட்டி மயக்கிக் கொண்டுபோனானென்பதுதோன்றச் சொல்லுகிறாள் குவளைமலர்நிற வண்ணர் என்று.

குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் = மேற்சொன்ன வஸ்துக்களெல்லாம் எனக்குப்பாதகமாவது இத்தனியிருப்பிலன்றோ; நாயகனுள்ள விடத்தே நான் சென்று சேரப்பெறில் இவையெல்லாம் எனக்கு ஆஹ்லாதகரமாகுமன்றோ; ஆகையாலே அங்ஙனமாகும்படி பாருங்கள் என்றாளாயிற்று.

குறியவனான வாமனனது க்ஷேத்ரமாதலால் இத்தலத்திற்குக் குறுங்குடியென்று பெயர் வந்ததென்பர். இத்தலத்திலுள்ள எம்பெருமான்களுள் ஒரு எம்பெருமான் ஸ்ரீபாஷ்யகாரர்பக்கலிலே திருமண்காப்பு சாத்திக் கொண்டு வேதாந்தார்த்தமுங்கேட்டு சிஷ்யனாய் 'நாமும் நம்பிராமாநுசனையுடையோம்' என்கையாலே அப்பெருமானுக்கு வைஷ்ணவநம்பியென்று திருநாமம். ஆனது பற்றியே 'வைஷ்ணவவாமநக்ஷேத்ரம்' என்றும் இத்தலம் வழங்கப்படும். நம்மாழ்வார் திருவவதாரத்திற்குக் காரணமாயிருந்தவரும் இத்தலத்து நம்பியே (௧)

தாதவிழ் மல்லிகை புல்கிவந்த தண்மதியின்னிளவாடையின்னே *
ஊதை திரிதந் துழறியுண்ண ஓரிரவு முறங்கேன் * உறங்கும்
பேதையர் பேதைமையாலிருந்து பேசிலும் பேசுக பெய்வளையார் *
கோதைநறுமலர் மங்கைமார்பன் குறுங்குடிக்கேயென்னை யுய்த்திடுமின். (௨)

| | |
|---|---|
| தாது அவிழ் மல்லிகை | தாதுகள் விரிகிற மல்லிகைகளிலே |
| புல்கி | போய் அணைந்து |
| தண் மதியின் | குளிர்ந்த சந்திரனோடே |
| இன்னே வந்த | இப்படிவந்து வீசுகின்ற |
| இள வாடை | மந்தமாருதமாகிற |
| ஊதை | குளிர்காற்றானது |



http://acharya.org

| | |
|---|---|
| திரிதந்து | இங்குமங்கும் உலாவி |
| உழறி உண்ண | துகைத்து முடிக்க |
| ஓர் இரவும் | ஒரு ராத்திரியும் |
| உறங்கேன் | உறங்காதிருக்கின்றேன் ; |
| பெய் வளையார் | கைவளை கழலாதவர்களாய் |
| உறங்கும் பேதையர் | உறக்கமே போதுபோக்கான விவேகமற்ற பெண்கள் |
| பேதைமையால் | தங்கள் அறிவீனத்தினால் |

| | |
|---|---|
| இருந்து | வேலையற்றிருந்து |
| பேசிலும் பேசுக | (என் விஷயமாக) என்ன பழி சொன்னாலும் சொல்லட்டும்; (தோழிமார்களே!) |
| கோதை | கூந்தலிலே |
| நறு மலர் | மணம்மிக்க பூக்களை அணிந்துள்ள |
| மங்கை | பெரியபிராட்டியாரை |
| மார்பன் | திருமார்பிலேயுடைய பெருமானது |

குறுங்குடிக்கே, என்னை உய்த்திடுமின்,—

* * *—மலர்கின்ற மல்லிகைப்பூவிலே தோய்ந்து அங்குள்ள மணம் முதலியவற்றை வாரிக்கொண்டு இங்கேவந்து வீசித்திரிகின்ற குளிர்காற்றானது என்னுயிரை முடிக்கப்பார்க்கின்றது ; அதற்கு வருந்தி ஓரிரவும் கண்ணுறங்காதிருக்கின்றேன் ; நாயகனைப் பிரிந்தாலுண்டாகும் வருத்தம் இப்படியிருக்குமென்று அடியோடு அறியாத சில பேதைப்பெண்கள் தாங்கள் போது போக்கற்று நம்மைப் பற்றிப் பழிப்பாக ஏது சொல்லிலும் சொல்லுக ; அவர்கள் பேச்சைக் கொண்டு நமக்கு என்ன? நம்முடைய ப்ராவண்யத்தைக் குற்றமாகக் கொள்ளாமல் நற்றமாகக் கொள்பவன் வாழ்கிற திருக்குறுங்குடியிலே என்னைக் கொண்டு போய் விடுங்கள் என்கிறாள்.

இன்னே—இங்ஙனே என்றபடி; வாடை நலிகிறபடியை வாய்விட்டுச் சொல்ல மாட்டாமையாலே 'இன்னே' என்னுமித்தனை. ஊதை—குளிர்காற்று; "ஊதையும் கூதையும் குளிர்பனிக்காற்று" என்பது நிகண்டு.

உறங்கும்பேதையர்—பகவத்விஷயத்தில் காதல் கொண்டால் உறக்கமிருக்கையில்லை; 1. "கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே" என்கிறபடியே எம்பெருமானைக் காண்பதற்கு முன்பு உறக்கமில்லை; கண்டால் "ஸதா பஸ்யந்தி ஸூரய:" "தத் விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாம்ஸ: ஸமிந்ததே" என்று சொல்லுகிறபடியே உறக்கமில்லை; இனி, உறங்குகிறவர்கள் பகவத்விஷயத்தைக் கனவிலும் கேட்டறியாதவர்களேயாவர்; அப்படிப்பட்டவர்கள் அறிவுகேடர்; எந்தப் பொருள்களைக்கண்டு நான் வருந்துகிறேனோ, அந்தப் பொருள்களையெல்லாம் கண்டு அவர்கள் ஆநந்தம் பொலிய நிற்பார்கள். வாடைக்கும் வால்வெண்ணிலவுக்கும் நான் வருந்தினால் அவர்கள் வாடையையும் நிலாவையும் தேடி வெளிநிலம் பார்த்துப் படுக்கைபடுப்பார்கள்; அன்னவர்கள் அவிவேகத்தாலே என்னைப்பற்றி ஏது சொன்னால் எனக்கென்ன? 'இவள் வாடைக்கு வருந்துகிறாள், கண் உறங்குகின்றிலள், தலைவன் வருமளவும்

1. திருவிருத்தம் 97.

http://acharya.org

ஆறியிருக்கின்றிலள்' என்றாற் போலே அவர்கள் பழிசொல்லினும் சொல்லுக; அவர்களுக்கும் நமக்கும் என்ன சேர்த்தியுண்டு; நாமோ வளையிழந்து தவிக்கிறோம்; அவர்களோ பெய்வளையார்;—விரஹவேதனை யென்பதைக் கனவிலும் அறியாதவர்களாகையாலே அவர்கள் கையில் வளை தங்கியேயிருக்கும்; நாள் தோறும் புதிது புதிதாகவும் கனவளை அணிவர்கள்; அவர்கள் சொல்லும் வார்த்தை கொண்டு நமக்குக் காரியமென்? என்கிறாள்.

கோதைநறுமலர் மங்கைமார்பன் குறுங்குடிக்கே=நம்மைப்பழிக்கும் இந்தப் பேதையர்களைப் போலல்லாமல் நம்முடைய குற்றங்களையும் குணமாக வுபாதித்துப் புருஷகாரஞ் செய்து சேர்ப்பிக்குமவளான பெரிய பிராட்டியாருள்ள விடத்தே கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்களென்கை. .... (௪)

காலையும் மாலையொத் துண்டு கங்குல் நாழிகை யூழியின் நீண்டுலாவும் *
போல்வதோர் தன்மை புகுந்துநிற்கும் பொங்கழலேயொக்கும் வாடைசொல்லில் *
மாலவன் மாமணிவண்ணன்மாயம் மற்றுமுள அவை வந்திடாமுன் *
கோலமயில் பயிலும்புறவிற் குறுங்குடிக்கேயென்னை யுய்த்திடுமின். (௫)

| | |
|---|---|
| காலையும் | காலைப்பொழுதும் |
| மாலை ஒத்துண்டு | மாலைப்பொழுதுபோலே யிருந்து கொதிக்கின்றது; |
| கங்குல் நாழிகை | இரவின் நாழிகை |
| ஊழியின் | கல்பகாலத்திற் காட்டிலும் |
| நீண்டு | பெருகி |
| உலாவும் போல்வது ஓர் தன்மை புகுந்து நிற்கும் | (யமபடரைப் போல) ஸஞ்சரிக்கிறாப் போன்ற தன்மை பெற்றிருக்கின்றது; |
| வாடை சொல்லில் | வாடையின் தன்மையைப் பற்றிச் சொல்லப் புகுந்தால் |
| பொங்கு அழலே ஒக்கும் | எரிகின்ற நெருப்பே போன்றிருக்கும்; |
| மாலவன் | மிகப்பெரியவனாயும் |
| மா மணி வண்ணன் | நீலமணிவண்ணனாயு மிருக்கிற அப்பெருமானுடைய |
| மாயம் | (நம்மைக்கொல்வதற்கான) மாயச் செய்கைகள் |
| மற்றும் உள | இன்னமும் பலவுண்டு; |
| அவை வந்திடா முன் | அவையும் தலைகாட்டுவதற்கு முன்னமே |
| கோலம் மயில் பயிலும் புறவின் | அழகியமயில்கள் நெருங்கிவாழ்கிற புறவுகளையுடைய |
| | குறுங்குடிக்கே, என்னை உய்த்திடுமின்—. |

* * *—[காலையும் மாலை யொத்துண்டு] இராப்பொழுதில் விரஹநோயால் வருந்தின பரகாலநாயகியை நோக்கித் தோழியானவள் 'நங்காய்! வருந்தாதே; சிறிது பல்லைக் கடித்துப் பொறுத்திரு; இதோ காலைப்பொழுது வந்திடும்; ஆறியிருக்கலாம்' என்றுசொல்ல, அதுகேட்ட நாயகி 'அந்தோ! எனக்குக் காலைப் பொழுதாகிலென்? மாலைப்பொழுதாகிலென்? இரண்டும் வாசியற்றிருக்கின்றது காண்' என்கிறாள். இதன் கருத்து யாதெனில்; திருக்குறளில்—1. "காலைக்குச்

1. 128 ஆம் அதிகாரம் (பொழுதுகண்டிரங்கல்) 5.

செய்த நன்றி என்கொல்? எவன்கொல்பான், மாலைக்குச்செய்த பகை?" என்று ஒரு குறளுண்டு; அதாவது—காலைப்பொழுது வருத்துகின்றதில்லை, மாலைப் பொழுது மாத்திரம் வருத்துகின்றது; இப்படியாகுமாறு நான் காலைக்கு என்ன வுபகாரம் செய்தேனோ? மாலைக்கு என்ன அபகாரம் செய்தேனோ? அறியேன் என்பதாம். 1. "காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந்நோய்" என்று மற்றொரு குறளுமுண்டு; அதாவது—காமநோயாகிய பூ காலைப்பொழுதில் அரும்பிப் பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து மாலைப்பொழுதின்கண் மலராநிற்குமென்பதாம். காலை தூங்கியெழுந்த பொழுதாதலால் கனவிலே புணர்ந்தமை நினைந்து பொறுத்தல்பற்றி 'காலையரும்பி' என்றும், பிறகுபொழுது செல்லச் செல்ல அநுமறந்து பிரிவுநினைத்துப் பொருளாதல்பற்றி 'பகலெல்லாம் போதாகி' என்றும், தம்தம் துணைகளை நினைத்து மீண்டுவந்து சேரும் விலங்குகளையும் மக்களையுங்கண்டு தான் அக்காலத்து அநுபவித்த இன்பத்தை நினைந்து பொறுமையிருகல்பற்றி 'மாலைமலரும்' என்றும் சொல்லிற்று. ஆகவே, காலைப் பொழுது சிறிது ஆறியிருத்தற்கு உறுப்பானது என்று பொதுப்படையாகக் கொள்ளப்படும்; இக்கொள்கை கொண்டே தோழியானவள் 'நங்காய்! விரைவில் காலைப்பொழுது வந்திடும்; பொறுத்திரு' என்றாள். இப்பரகால நாயகிக்கு இரவில் சிறிதேனும் உறக்கமிருந்தாலன்றோ கனவு நேரவும், அதில் எம்பெருமானோடு புணர்ந்தமை பாவிக்கவும், உறங்கி யெழுந்ததும் அதனை நினைந்து பொறுத்திருக்கவும் இவ்வழியாலே காலைப்பொழுதை ஆறியிருத்தற்குடலாகக் கொள்ளவும் ப்ரஸக்தியுண்டாகும்; இவை யொன்றுமில்லாமையாலே மாலையோடு காலையோடு வாசியில்லை என்றாளாயிற்று.

தோழீ! உன் கருத்தின்படியே காலைப்பொழுதை ஆச்வாஸஹேதுவாகக் கொண்டாலும் அந்தப்பொழுது வருவதற்கு வழியொன்றுங்காணேமே; [கங்குல் நாழிகை ஊழியின் நீண்டுலாவும்போல்வதோர் தன்மை புகுந்து நிற்கும்] என்கிறாள். நாயகனைப் பிரிந்த நாயகி ஆற்றுதாளாய் அவனில்லாமல் இரவு கழிக்க முடியாதபடியைச் சொல்லும்போது 'ஒரு நாழிகைப் பொழுதானது எத்தனையோ யுகமாய்ப் பெருகிச் செல்லுகின்றதே!' என்று இரவு நீட்டித்தலைச் சொல்லுவது வழக்கம்; அப்படியே இப்பரகால நாயகியும் சொல்லுகின்றாள்; நாயக நாயகிகள் கூடியிருக்குங் காலத்தில், நீண்டகாலங்களும் ஒருநொடிப்பொழுதாய்க் கழிந்துவிடுமென்பதும், பிரிந்தகாலத்து ஒரு கணப்பொழுதும் பல்லூழி யூழிகளாய்க் கழியுமென்பதும் அநுபவஸித்தம்; "பலபல வூழிகளாயிடும், அன்றியோர் நாழிகையைப் பலபல கூறிட்ட கூறாயிடும்........அன்பர் கூடிலும் நீங்கிலும் யாம் மெலிதும்" என்ற திருவிருத்தம் காண்க. 2. "கொடியார் கொடுமையிற்றாங் கொடிய இந்நாள், நெடிய கழியுமிரா" என்ற திருக்குறளையும், "காதலரொடு

1. திருக்குறள் 123 ஆம் அதிகாரம்—7.
2. திருக்குறள்—படர்மெலிந்திரங்கல்—9.

http://acharya.org

நாம் இன்புற்ற முன்னாட்களில் குறியவாய், அவர் பிரிவாற்றேமாகின்ற இந்நாள்களிலே நெடியவாய்ச் செல்கின்ற கங்குல்கள்" என்ற அதன் உரையையும் இங்கு உணர்க. நாழிகை—'நாடிகா' என்னும் வடமொழியின் திரிபு. ஊழியின் நீண்டுலாவும்போல்வதோர் தன்மை புகுந்து நிற்கும்=ஊழிப் பொழுதுதான் மிக நீண்டதென்று கேள்விப்பட்டிருந்தேன்; அதிற்காட்டிலும் நீண்டதுபோலிருக்கின்றதென்கை.

மாலவன் மாமணிவண்ணன் மாயம் மற்றுமுள=நம்மை மாய்ப்பதற்கு அவன் பலபல மாயங்களைப் படைத்து வைத்திருக்கிறான்; இராப்பொழுது, வாடை என்ற இவ்வளவேயல்ல; அன்றில், தென்றல், கடலோசை, குழலோசை, திங்களம்பிள்ளை என்றாற்போலே மற்றும் பல மாயங்களையும் படைத்திருக்கிறான்; அவையும் வந்து நம்மை முடிக்கத் தலைகாட்டுதற்கு முன்னமே இவையெல்லாம் நமக்கு அநுகூலமாம்படியான இடத்திலே என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்திடுங்களென்றாளாயிற்று. ... .... .... .... (௩)

கருமணிபூண்டு வெண்ணாகணைந்து காரிமிலேற்றணர் தாழ்ந்துலாவும் *
ஒருமணியோசை யென்னுள்ளந்தள்ள ஓரிரவு முறங்காதிருப்பேன் *
பெருமணி வானவருச்சிவைத்த பேரருளாளன் பெருமைபேசி *
குருமணிநீர்கொழிக்கும் புறவிற் குறுங்குடிக்கேயென்னை யுய்த்திடுமின். (௪)

| | |
|---|---|
| கரு மணி பூண்டு | கறுத்தமணியைத் தரித்துக்கொண்டு |
| வெண் நாகு அணைந்து | வெளுத்தநாகுகளோடே அணைந்து |
| கார் இமில் | கறுத்த முசுப்பை யுடைத்தான |
| ஏறு | காளைகளினுடைய |
| அணர் | கழுத்திலே |
| தாழ்ந்து உலாவும் | தொங்குகின்ற |
| ஒரு மணி | ஒருமணியினுடைய |
| ஓசை | ஒலியானது |
| என் உள்ளம் | என்னெஞ்சை |
| தள்ள | சோர்வுபடுத்த |
| ஓர் இரவும் | ஒரு ராத்ரியும் |

உறங்காது இருப்பேன்—;

| | |
|---|---|
| வானவர் | நித்யஸூரிகள் |
| உச்சி | தங்கள் தலைமீது |
| பெரு மணி | சிறந்த ரத்னமாக |
| வைத்த | வைத்துப்போற்றுகிற |
| பேருளாளன் | பேருளாளனுடைய |
| பெருமை | பெருமைகளை |
| பேசி | பேசிக்கொண்டு |
| நீர் குரு மணி கொழிக்கும் புறவின் குறுங் குடிக்கே | ப்ரவாஹஜலமானது சிறந்த ரத்னங்களைக் கொண்டு தள்ளுகின்ற புறவுகளையுடைய திருக்குறுங்குடியிலேயே |

என்னை உய்த்திடுமின்—.

* * *—மாட்டின் கழுத்துமணியோசை செவிப்பட்டு ஆற்றாத தலைவி உரைக்கும் பாசுரமிது. மாட்டின் மணியோசை மாலைப்பொழுதில் [ஸாயம் ஸந்தியாஸமயத்தில்] அன்றோ செவிப்படும்; கீழ்ப்பாட்டில் "கங்குல் நாழிகை ஊழியின் நீண்டுலாவும்" என்று நடுநிசியின் துயரந் தோற்றச் சொல்லிவைத்து இப்பாட்டில் ஸாயங்காலத்துத் துயரம் சொல்லுவது பொருந்துமோ? என்று

சங்கிக்க வேண்டா; பிரிவாற்றாமையைத் தெரிவிப்பது மாத்திரமே இங்கு விவக்ஷிதமாதலால்.

வயல்களில் மேய்ந்து மீண்டு ஊர்புகுகின்ற மாடுகளின் கழுத்தில் தொங்கும் மணிகளின் ஒலி விரஹிஸ்த்ரீகளின் செவியிற்பட்டவாறே 'அந்தோ! பகற்பொழுது கழிந்திட்டதே; இராப்பொழுது அணுகிற்றே, இன்னமும் காதலரைக் காணோமே' என்று வருத்தமுண்டாகும்; அதுவே இப்பாட்டின் முன்னடிகளிற் கூறப்படுகின்றது. சேக்களும் நாகுகளும் கூட்டமாய்க் கலந்து வரும்போது சேக்கள் நாகுகளோடே அணைந்து மேல்விழ, நாகுகள் இரங்க, அதுகண்டு ஏற்கனவே ஸம்ச்லேஷகாலங்களில் நாயகன் மேல்விழவும் நாயகியாகிய தான் ஸ்த்ரீத்வத்தாலே இரங்கவுமான ஸம்பவங்கள் நினைவுக்கு வந்து அதனாலும் வருத்தம் மிகுகிறபடியை 'வெண்ணாகணைந்து' என்றதனால் தெரிவித்தபடி. "வெண்ணாகணைந்த காரிமிலேற்றணர் தாழ்ந்துலாவும் ஒருமணியோசை யென்னுள்ளந்தள்ள" என்றால் போதுமே, முதலில் "கருமணியுண்டு" என்றது எதுக்கு? என்னில்; மணியின் கொடுமை சொல்லுவித்தகித்தனை. 'அணர்' எனினும் 'அணார்' எனினும் ஒக்கும்; 1. "இடவணரை யிடத்தோளொடு" என்றும் 2. "இருந்தார் நடுவே சென்றணார் சொறிய" என்றுமுள்ள பெரியாழ்வார் பிரயோகங்களுங் காண்க.

மூன்றாமடியின் முடிவில் "பேசி" என்றும் "பேச" என்றும் பாடபேதமுண்டு; 'பேரருளாளன் பெருமைபேசி ஓரிரவு முறங்காதிருப்பேன்' என்று கீழோடே அந்வயிக்கவுமாம்; 'பேரருளாளன் பெருமை பேசிக் குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின்' என்று மேலோடே அந்வயிக்கவுமாம். 'பேச' என்னும் பாடத்திலும் இங்ஙனே இரண்டு வகையான அந்வயங்களும் கூடும். .... (௪)

**திண்டிமிலேற்றின் மணியும் ஆயன் தீங்குழலோசையும் தென்றலோடு ***
**கொண்டதோர் மாலையு மந்தியீன்ற கோலவிளம்பிறையோடுகூடி ***
**பண்டையவல்ல விவைநமக்குப் பாவியேனாவியை வாட்டஞ்செய்யும் ***
**கொண்டல் மணிநிறவண்ணர்மன்னு குறுங்குடிக்கேயென்னை யுய்த்திடுமின். (௫)**

| | | | |
|---|---|---|---|
| திண் திமில் | திடமான முசுப்பையுடைய | இவை | இவை |
| ஏற்றின் | விருஷபத்தினுடைய | அந்தி ஈன்ற | அந்திப்பொழுது தோற்றுவிக்கிற |
| மணியும் | கழுத்துமணியும் | கோலம் இளம் பிறையோடு கூடி | அழகிய இளம்பிறைச் சந்திரனையும் துணைகூட்டிக்கொண்டு |
| ஆயன் | இடையனுடைய | நமக்கு | நம் விஷயத்திலே |
| தீம் குழல் ஓசையும் | மதுரமான புல்லாங்குழலொலியும் | பண்டைய அல்ல | முன் இருந்தாற்போல் இருக்கின்றனவில்லை; |
| தென்றலோடு கொண்டது ஓர் மாலையும் | தென்றற்காற்றோடு ஒருமித்த கோட்பாட்டையுடையதான மாலைப்பொழுதும் ஆகிய | பாவியேன் | பாவியான என்னுடைய |

1. பெரியாழ்வார் திருமொழி 3-6-2. 2. பெரியாழ்வார் திருமொழி 3-5-8.

http://acharya.org

ஆவியை — உயிரை
வாட்டம் செய்யும் — வாடச்செய்கின்றன;
(ஆகையாலே)

கொண்டல் மணி நிறம் வண்ணர் மன்னு — மேகத்தினுடையவும் நீலமணியினுடையவும் நிறம்போன்ற நிற முடைய பெருமான் பொருந்திவாழப்பெற்ற
குறுங்குடிக்கே, என்னை உய்த்திடுமின்—.

* * *—மாட்டின் மணியோசை, தென்றல்காற்று, மாலைப்பொழுது, இளம் பிறை ஆகிய இவை பலநாளும் நம்மை வருத்தியிருந்தாலும் இப்போது வருத்து கிறபடி இதற்கு முன்பு ஒருநாளுமில்லை; இவை ஒவ்வொன்றும் தனித்தனியே கொலைசெய்யப் போதுமானவை; கூட்டமாகக் கூடிவந்து நலிகிற இந்நாள் அந்தோ! பாதை பொறுக்கப் போகின்றதில்லை; ஸாதாரண விஷயங்களை ஆசைப் படாதே * உயர்வற வுயர்நலமுடையவனுய் அயர்வறுமமரர்க ளதிபதியானவனை ஆசைப்படும்படியான பாவத்தைப் பண்ணின என்னுடைய ஆவி இனித் தரிக்க வில்லை; நான் வாழவேண்டில் திருக்குறுங்குடியில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்திடுங்கள்; அங்கே வாழ்ந்தருளியிருக்கின்ற கொண்டல்மணிநிறவண்ண னைக் கண்டவாறே என் வாட்டமெல்லாம் தீரும்; மேகத்தையும் மணியையுங் கண்ட பின்பும் வாட்டம் நிற்குமோ? ஆகையாலே பாதகவஸ்துக்களின் கையிலே அகப்பட்டு நான் நலிவுபடாதே இவையெல்லாம் எனக்கு அநுகூலங்களாகப் பெறும் தேசவிசேஷத்திலே என்னைக் கொண்டுபோய் விடுங்கள் என்றுளாயிற்று.

‘இமில்’ எனினும் ‘திமில்’ எனினும் மாட்டின் முசுப்பு. ஆயன் தீங்குழ லோசை=ஸாதாரணமான இடையர் ஊதும் புல்லாங்குழலோசையும் கோபால க்ருஷ்ணனுடைய குழலோசையை நினைப்பூட்டி வருத்துமென்க. தீம்-இனிமை. கோண்டதோர் மாலை=‘இன்று இவளை முடித்தே விடுவது’ என்னுங்கோட்பா டுடைய மாலைப்பொழுது. .... .... .... (ரு)

எல்லியும் நன்பகலுமிருந்தே யேசிலு மேசுக வேந்திழையார் *
நல்லரவர்திறம் நாமறியோம் நாண்மடமச்சம் நமக்கிங்கில்லை *
வல்லனசோல்லி மகிழ்வரேலும் மாமணிவண்ணரை நாமறவோம் *
கோல்லைவுளரிளமுல்லைபுல்கு குறுங்குடிக்கேயென்னை யுய்த்திடுமின். (சு)

ஏந்து இழையார் — ஆபரணங்களணிந்தவ பெண்கள்
எல்லியும் நல் பகலும் இருந்தே — இரவும்பகலும் போதுபோக்கற்று இருந்துகொண்டு
ஏசிலும் ஏசுக — பழிசொன்னாலும் சொல்லட்டும்;
நல்லர் — (அவர்கள்) பாக்யவதிகளன்றோ?
அவர் திறம் நாம் அறியோம் — அவர்களைப்பற்றி நமக்கு ஆராய்ச்சிவேண்டா;
நமக்கு — நமக்கு
நாண் மடம் அச்சம் இங்கு இல்லை — பெண்மைக்குணங்கள் அற்றுப்போயின;
(அக்குணங்கள் நிறைந்திருக்கப் பெற்ற அவர்கள்)
வல்லன சொல்லி — தங்களாலியன்றவற்றை (வாய்கூசாமல்) சொல்லி
மகிழ்வரேலும் — சிரித்தார்களேயாகிலும்
நாம் — நாம்

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| மா மணி வண்ணனை | நீலமணிவண்ணனான பெருமானை | வளர் | வளர்கின்ற |
| மறவோம் | மறக்கமாட்டோம்; (ஆகையாலே) | இள முல்லை | இளமுல்லைக் கொடிகள் |
| கொல்லை | தோட்டங்களிலே | புல்கு | படரப்பெற்ற |
| | | | குறுங்குடிக்கே, என்னை உய்த்திடுமின்—. |

* * *—ஊர்ப்பெண்டுகள் இரவும் பகலும் வேறு போதுபோக்கற்று எனது நிகழ்ச்சியைப்பற்றியே வம்புகள் பேசிப் பழிகூறினும் கூறுக; அவர்களுக்கும் நமக்கும் என்ன சேர்த்தியுண்டு? அவர்களுடைய வகுப்பு வேறு, நம்முடைய வகுப்பு வேறு; நாமோ விரஹத்தாலே உடலிளைத்து வளையிழந்து வருந்துகின்றோம்; அவர்களோ ஏந்திழையார்;-ஆபரணங்களைச் சுமந்துகொண்டிருக்க வல்லவர்கள். நாம் உற்ற விஷயத்தை அவர்கள் கனவிலும் கண்டறியார்கள்; தத்தம் நாயகரைப் பிரிந்துமறியார்கள்; ஆகவே அவர்கள் பாக்யவதிகள்; அன்னவர்கள் எதைச்சொல்லினும் சொல்லுக. அவர்கள் சங்கதி நமக்குத் தெரியாது; அவர்கள் நாண்மடம் அச்சம் முதலிய பெண்மைக்குணங்களைக் காத்துக்கொண்டு நிலைகுலையாதே யிருக்கவல்லவர்கள்; நமக்கோ அவை அற்றுப்போயின; நம்மைவிட்டுப் போனவன் அவற்றையும் கொள்ளைகொண்டு போயினன்போலும்; அவர்கள் தங்களாலானமட்டும் வசைகூறிச் சிரிக்கட்டும்; அவர்கள் தாம் என்னவென்று சொல்லப்போகிறார்கள்? 'அவனை மறந்திலள்' என்றுதானே சொல்லிச் சிரிக்கப்போகிறார்கள்; அப்படியே சொல்லிச் சிரிக்கட்டும்; அவனை நாம்மறக்கக் கடவோமல்லோம்; மறப்பு நம்கையிலே கிடக்கிறதோ? அவனுடைய மாமணி வண்ணவடிவு நம்மை மறக்கப்பண்ணுமோ? இவர்கள் ஏசுவதெல்லாம் இன்னமும் அவனையே ஸ்மரிப்பதற்கு எருவிட்டதாகுமத்தனை. சிரிப்பார் கண்வட்டத்திலே நமக்கு என்ன காரியம்? மறக்கவொண்ணாத வடிவைக் கண்ணாரக் கண்டு அநுபவிக்கலாம்படியான திருக்குறுங்குடியிலே என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்திடுங்கள் என்றாளாயிற்று.

எல்லியும் நன்பகலும்='நல்' என்ற விசேஷணம் மத்திமதீபமாகி, 'நல் எல்லியும் நல்பகலும்' என்றாகக் கடவது; அவனோடே ஸம்ச்லேஷித்து மகிழ்வதற்குறுப்பான நல்ல இராப்பொழுதையும், அவனுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளைச் சிந்தித்து வாழ்வதற்குறுப்பான நல்ல பகற்பொழுதையும் பாவிகள் வம்புகள் பேசி வாளாகழிக்கிறார்களே! என்ற பரிதாபம் உள்ளுறை. 'ஏந்திழையார்' என்பதும் 'நல்லர்' என்பதும் வியாஜஸ்துதி.

நாண்மடம் அச்சம்=இவை பெண்டிர்க்கு உரிய குணங்கள்; நாணமாவது-தகாத காரியத்தில் மனமொடுங்கி நிற்பது. மடமாவது—எல்லாமறிந்தும் அறியாதுபோலிருத்தல். அச்சமாவது—மிகச்சிறிய காரணத்தினாலும் மனம் நடுங்குதல். ('பயிர்ப்பு' என்பது நான்காவது குணம்; அதாவது—பர புருஷர்களின் ஆடை முதலியன தம்மேற்பட்டால் அருவருப்புக்கொள்வது.) நாண்மடமச்சம் நமக்கிங்கில்லை' என்றது—ப்ராவண்யம் மீதூர்ந்தபடியைச் சொன்னவாறு.

http://acharya.org

வரம்புகடந்த அன்பின்மேலெல்லையில் நிற்பார்க்கு நாணம் முதலியவற்றைக் காத்துக்கொள்ளல் ஆகாதன்றோ.

குறுங்குடிக்கு "இளமுல்லைபுல்கு" என்ற விசேஷணமிட்டதற்கு ஒரு கருத்துண்டு; கொடிகள் ஆதாரமற்றுத் தரைக்கிடை கிடக்கவேண்டாமல் கொள் கொம்பிலே படரும் தேசமன்றோ அது; அப்படியே எனக்கும் தரிப்புக்கிடைக்குமே அங்கு—என்றவாறு. "கோல்தேடியோடுங் கொழுந்ததேபோன்றதே மால்தேடி யோடும் மனம்." .... .... .... (௬)

சேங்கணெடிய கரியமேனித் தேவரொருவ ரிங்கேபுகுந்து * என்
அங்கமெலிய வளைகழல ஆதுகொலோவென்று சொன்னபின்னை *
ஐங்கணைவில்லி தன்னாண்மை யென்னோடாடுமதனை யறியமாட்டேன் *
கோங்கலர் தண்பணைசூழ்புறவிற் குறுங்குடிக்கேயென்னை யுய்த்திடுமின். (௭)

| | |
|---|---|
| நெடிய செம் கண் | நீண்டு சிவந்த திருக்கண்களையும் |
| கரிய மேனி | கறுத்த திருமேனியையுமுடையரான |
| தேவர் ஒருவர் | ஒரு பெருமான் |
| இங்கே புகுந்து | இங்கு எழுந்தருளி |
| என் அங்கம் மெலிய | எனது உடல் இளைக்கும்படியாகவும் |
| வளை கழல | வளைகள் கழன்றொழியும்படியாகவும் |
| ஆது கொலோ என்று சொன்ன பின்னை | அப்படிப்பட்ட பிரிவை உணர்த்தினதுமுதலாக |

| | |
|---|---|
| ஐங் கணை வில்லி | ஐந்து அம்புகளையுடைய வில்லை ஆள்பவனான மன்மதன் |
| என்னோடு ஆடும் | என்விஷயத்திலே காட்டுகின்ற |
| தன் ஆண்மை அதனை | தன்னுடைய பௌருஷத்தை |
| அறிய மாட்டேன் | (எடுத்துச்சொல்ல) அறிகின்றிலேன்; |
| கோங்கு அலர் | தேன் ஒழுகுகின்ற |
| தண் | குளிர்ந்த |
| பணை | மரக்கொம்புகளால் |
| சூழ் | சூழப்பட்ட |
| புறவின் | புறவுகளையுடைய |

குறுங்குடிக்கே, என்னை உய்த்திடுமின்—.

* * *—அவருடைய கண்ணழகையும் கண்களின் பரப்பையும் என்ன சொல்லுவேன்!; கண் ஒரு தலையும் வடிவெல்லாம் ஒரு தலையுமானால் பின்னையும் கண்ணழகே விஞ்சியிருக்குங் காண்மின்; உள்ளுள்ள வாத்ஸல்யமெல்லாம் கண்ணிலே தோற்றும்; அக்கண்களுக்கு ஒருவாறு தப்பினாலும் வடிவில் குளிர்ச்சிக்குத் தப்பவொண்ணாது; [தேவர்] கண்ணழகும் வடிவழகும் பேசி முடித்தாலும் அவருடைய மேன்மையுண்டே, அது பேச்சுக்கு நிலமன்று. [ஒருவர்] தேவரென்று பேர் சுமப்பார் பலருண்டாகிலும் அவருடைய வைலக்ஷண்யம் வாசாமகோசரம்; 'அவரும் ஒருவரே!' என்று வாய்வெருவ வேண்டும்படியிருப்பவர் காண்மின். அப்படிப்பட்டவர் தம்முடைய வடிவழகையும் மேன்மையையுங் கண்டு 'இவையுடைய நம்மிடத்தே எல்லாரும் வரவேணுமேயன்றி நாம் ஓரிடத்துக்குப் போகலாமோ?' என்று பாத்வம் பாராட்டியிருக்க வேண்டியிருந்தும் அதுசெய்யாதே தம்முடைய எளிமைக்குணத்தையே விலைசெலுத்தி நானிருக்கு



http://acharya.org

மிடத்தே வந்து புகுந்தார்; புகுந்தவர் ஒரு வார்த்தைசொன்னார்; அது என்றால் இப்போது அநுவாதம் செய்யவுங்கூடவில்லை; பிரிவுக்காகவே அவர் அந்த வார்த்தை சொன்னார்போலும்; அது சொல்லிப் பிரிந்துபோனதுமுதலாக மன்மதன் என்னைத் $ தாய்என்றும் பாராதே என்னிடத்தில் காட்டும் பராக்ரமங்களை நெஞ்சால் நினைக்கவும்கில்லேனானபின்பு வாய்கொண்டு எங்ஙனே சொல்லப்போகிறேன்? இந்த நலிவுக்கென்னை ஆளாக்காதே திருக்குறுங்குடியில் கொண்டுபோய்ச் சேர்த்திடுங்கள்—என்றாளாயிற்று.

ஆது கோலோ வென்று—'அது' என்பது 'ஆது' என நீண்டுகிடக்கிறது. கூடியிருந்தகாலத்தில் 'உன்னை ஒருநாளும் விட்டுப் பிரியமாட்டேன்' என்று காதலர் கூறும் வார்த்தையுண்டே; அதுவே இங்கு விவக்ஷிதம்; ஸம்ச்லேஷரஸம் அநுபவிக்குங்காலத்தில் 'பிரியேன்' என்று சொல்லுவதானது, நீயொன்று பிரிந்துபோனால் இறந்துபடுவள் என்று, உலகில் பிரிவு என்று ஒன்று உண்டென்று உபாயமாகப் பிரிவைப்ரஸ்தாவித்துப் பிறகு பிரியவேணுமென்று கருதியேயாம். ஆகவே, 'பிரியேன்' என்ற வார்த்தையில் பிரிவை உணர்த்துவதே முக்கிய நோக்கமாகும் என்பது நாயகியின் கொள்கையாம். அந்த வார்த்தையையும் இப்போது தன்வாயாற் சொன்னால் வாய் வெந்துபோம் என்று நினைத்துப்போலும் 'ஆது கோலோ' என்கிறாளிவள்.

'பிரியேன்' என்கிறவார்த்தை செவிப்பட்டவளவிலேயே பிரிவு உண்டானதாகவே நிச்சயித்து மேனி மெலிந்து வளைகழலப்பெறுவது இயல்பாதலால் 'அங்கம் மெலிய வளைகழல' என்றது.

ஐங்கணைவில்லி='பஞ்சபாணன்' என்பது மன்மதனுக்கு வழங்கும் பெயர்; "மதனன் பஞ்சபாணமாவன, முல்லை யசோகு முழுநீலம் சூதப்பூ, அல்லி முளரியோடைந்தென மொழிப." என்ற திவாகரநிகண்டினால் பஞ்சபாணவகைப்பெயர் உணர்க.

ஈற்றடிக்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானம் காண்மின்:—"அவன் கையிலம்புதானே தாரகமான தேசத்திலே கொடுபோய்ப் பொகடப்பாருங்கோள். அவனோடே கூடினவாறே பூக்கொய்கையும் ஜலக்ரீடை பண்ணுவதுமாய் யாரகமாயிறே." என்று. (இதன் கருத்தாவது—) மன்மதன் இப்போது நம்மை வருத்துவது புஷ்பமயமான அம்புகளைக்கொண்டுதானே; ஆக அம்பாகிய புஷ்பங்கள் தாமே அவனுள்ளவிடத்தே நாம் சென்று சேர்ந்தபின்பு நமக்குப் பாதகமாகாதே போக்யமாகுமன்றோ; இருவருமாய்ச்சேர்ந்து பூப்பறிக்கவும்
1. "விஹாரதி ஹாரள லக்ஷ்மீர் லீலாதபத்ரவாரிஷிபாவி நிஜயவியாஸஹிநாஸஹிநிகியாஸஹஹொதுஷாம்=விஹாரதி ஹாரௌ லக்ஷ்ம்யா லீலாதபத்ர

$ மன்மதன் கிருஷ்ணாவதாரத்தில் எம்பெருமானுக்குப் புத்திரனாதலால் அப்பெருமானுக்குத் தேவியான பரகாலநாயகி அவனுக்குத் தாய் என்க.

1. ஸ்ரீரங்கராஜஸ்தவம்-பூர்வ சதகம்-சந்த்ரபுஷ்கரிணீவர்ணக ச்லோகம்.

http://acharya.org

பரிஷ்க்ரியா விதிமபவிதாஸ௳நாஸ௳நிக்ரியாஸபலோத்பலாம்" என்கிறபடியே ஜலக்ரீடைக்கு உபகரணமாகவும் பெற்று அந்தப்பூக்களை போக்யமாகுமே; ஆகையாலே அவ்விடத்திலே கொண்டுபோய்ச் சேர்த்திடுங்கள் என்பதாம். ஈற்றடியில் 'பணை' என்பதை 'பண்ணை' என்பதன் தொகுத்தலாகக்கொண்டு நீர்நிலையென்று பொருளுரைக்கவுமாம். .... .... (எ)

கேவல மன்று கடலினோசை கேண்மின்க ளாயன்கை யாம்பல்வந்து * என்
ஆவி யளவு மணைந்துநிற்கும் அன்றியுமைந்துகணை தெரிந்திட்டு *
ஏவலங் காட்டி யிவனொருவன் இப்படியே புகுந்தெய்திடா முன் *
கோவலர் கூத்தன் குறிப்பறிந்து குறுங்குடிக்கே யென்னை யுய்த்திடுமின். (அ)

| | |
|---|---|
| கடலின் ஓசை | ஸமுத்ரகோஷமானது |
| கேவலம் அன்று | ஸாமாந்யமன்று; |
| கேண்மின்கள் | கேளுங்கள்; |
| ஆயன் | கோபாலனுடைய |
| கை | கையிலுள்ள |
| ஆம்பல் வந்து | குழலோசை வந்து |
| என் ஆவி அளவும் அணைந்து நிற்கும் | என்னுடைய பிராணன் வரையில் கிட்டி நிற்கின்றது; |
| அன்றியும் | அதற்குமேலும் |
| இவன் ஒருவன் | (மன்மதனென்கிற) இப்பாவியொருவன் |

| | |
|---|---|
| ஐந்து கணை | (தனது) பஞ்சபாணங்களை |
| தெரிந்திட்டு | நன்றாக ஆராய்ந்து |
| ஏ வலம் காட்டி | பிரயோகிக்க வல்ல ஸாமர்த்தியத்தைக் காண்பித்து |
| இப்படியே புகுந்து | என்மேல் நோக்கம் வைத்து |
| எய்திடா முன் | பிரயோகிப்பதற்கு முன்னமே |
| கோவலர் கூத்தன் | இடைச்சாதிக்கு ஏற்ற கூத்துகளில் வல்லவனான பெருமானுடைய |
| குறிப்பு | திருவுள்ளக்கருத்தை |
| அறிந்து | தெரிந்துகொண்டு |

குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின்—.

* * *—[கேவலமன்று கடலினோசை] இதுவரையிலும் கடலோசைகள் பலபல செவிப்பட்டிருந்தாலும் இப்போது செவிப்படும் கடலோசை அவை போல்வதன்று; இது இன்று முடித்தேவிடுமதாய்ப் பிரபலமாயிராநின்றதென்கை. ஸுக்ரீவமஹாராஜர் ஸ்ரீராமபிரானை அண்டைகொண்டுவந்து வாலியின் மனைவாசலிலே சென்று அறைகூவினபோது அவருடைய மிடற்றோசைக்கு எப்படிப்பட்ட மிடுக்கு இருந்ததோ, அப்படிப்பட்ட மிடுக்கு இக்கடலோசைக்கு உண்டு போலும்.

கடலோசை தனக்குப் பாதகமாயிருப்பது போலவே மற்றையோர்க்கும் பாதகமாகவே யிருக்குமெனக் கருதி 'கேண்மின்கள்' என்கிறாள்; இக்கடலோசை உங்கள் காதில் படுகிறதில்லை போலும்; சிறிது உற்றுச் செவிகொடுத்துக் கேட்டுப் பாருங்கள்; இது படுத்துகிறபாடு உங்களுக்கே தெரியவரும் என்கிறாள் போலும்.

http://acharya.org

இஃது ஒன்றேயோ? இடையன் ஊதுகிற புல்லாங்குழலின் ஓசையும் வந்து என் உயிரை முடிக்குமளவிலே நிற்கின்றது பாரீர் என்கிறாள் ஆயன்கையாம் பல்வந்து என்னாவியளவுமணைந்து நிற்கும் என்று. ஆம்பல்—இலைக்குழல்.

அதற்குமேலே, 'இவள் கடலோசைக்கும் குழலோசைக்கும் முடிந்தாளாகக்கூடாது, நம்முடைய கையிலுள்ள அம்புகளாலே முடிந்தாளாகவேணும்' என்று கருதிய * கருப்புவில் மலர்க்கணைக் காமனானவன் பெண்களை வதை செய்யத்தகாதே என்றும் நோக்காமல் கண்ணற்று முடிக்கவல்ல சில அம்புகளை ஆராய்ந்து தொடுத்துத் தன்னுடைய பிரயோகஸாமர்த்தியத்தைக் காட்டுதற்கு முன்னே என்னைத் திருக்குறுங்குடியிற் கொண்டு சேர்த்திடுங்கள் என்கிறாள்.

ஏவலம்=ஏ-எய்வதில், வலம்-வல்லமை என்றபடி. இவனொருவன்=பெண்களைக் கொலைசெய்ய வல்லவர்களை எண்ணத்தொடங்கினால் இவனை யெண்ணிப் பின்னை யெண்ணுதற்கு வேறு ஆளில்லாத அத்விதீயன் என்றபடி.

'இப்படியேபுகுந்து' என்றவிடத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளையருளிச் செய்வது;—"இதுக்கு இட்டுச் சொல்லலாவதொரு பாசுரமில்லை; புண்ணறைகளைக் காட்டுமித்தனை." என்று. "ஓர்மீனாய கொடி நெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ" என்றாள் கீழே திருவாலிப்பதிகத்திலும். ஆசை அதிகரித்துச் செல்லுவதையும், அது கைகூடாமையாலே கஷ்டம் மீதூர்ந்து செல்லுவதையும் காமனுடைய ஹிம்ஸையாகச் சொல்லுவது மரபு.

கோவலர் கூத்தன் குறிப்பறிந்து=தான் ஆடுகிற கூத்தின் இனிமையாலே மூட்டாண்களான கோவலர்களையும் ஈடுபடுத்திக் கொள்பவன் என்பது 'கோவலர் கூத்தன்' என்றதன் உட்கருத்து. வன்னெஞ்சர்களான தன்னோடொத்த பருவத்துப் பிள்ளைகளைப் படுத்துகிறபாடே அதுவானால் அபலைகளான நமக்குச் சொல்ல வேணுமோ என்கை. அவனுடைய திருவுள்ளக் கருத்தையறிந்து அங்கே கொண்டு சேர்த்திடுங்கள் என்றதன் கருத்தாவது—அவன் வேணுமென்றிருந்தானாகில் அங்கே கொண்டுபோய்ப் போகடுங்கோள்; வேண்டாவென்றிருந்தானாகில் இவ்விடத்தே முடித்திடுங்கோள் என்பதாம். (அ)

**சோத்தெனநின்று தொழவிரங்கான் தொன்னலங்கொண்டெனக் கின்றுதாறும் ***
**போர்ப்பதோர் பொற்படம் தந்துபோனான் போயின வூரறியேன் * என்கொங்கை**
**மூத்திடுகின்றன மற்றவன்றன் மொய்யகலமணையாதுவாளா ***
**கூத்தனிமையவர்கோன்விரும்பும் குறுங்குடிக்கேயென்னை யுய்த்திடுமின். (கூ)**

| | | | |
|---|---|---|---|
| சோத்தம் என நின்று தொழ | 'சோத்தம்' என்று சொல்லி நின்று தொழுதவளவிலும் | போர்ப்பது ஓர் பொன் படம் | போர்த்துக்கொள்வதற்குரிய ஒரு பீதாம்பரத்தை [பசலைநிறத்தை] |
| இரங்கான் | கிருபைபண்ணுகின்றிலன்; | எனக்கு தந்து போனான் | எனக்குக்கொடுத்து அகன்றுபோனான்; |
| இன்று தாறும் | இன்றளவைக்கும் | போயின ஊர் அறியேன் | அவன்போன ஊரையும் அறிகின்றிலேன்; |
| தொல் நலம் கொண்டு | (எனது) இயற்கைக் குணங்களை யெல்லாம் கொள்ளை கொண்டு | | |

http://acharya.org

| | |
|---|---|
| மற்று | மேலும், |
| என் கொங்கை | எனது முலைகள் |
| அவன் தன் | அவனுடைய |
| மொய் அகலம் | அழகிய திருமார்பை |
| அணையாது | அணையப்பெறாமல் |
| வாளா | வீணாக |
| மூத்திடுகின்றன | பருக்கின்றன; |

(ஆகையாலே)

| | |
|---|---|
| கூத்தன் | மநோஹரமான சேஷ்டிதங்களை யுடையவனும் |
| இமையவர் கோன் | நித்யஸூரிகட்குத் தலைவனுமான பெருமான் |
| விரும்பும் | விரும்பிவர்த்திக்குமிடமான |

குறுங்குடிக்கே, என்னை உய்த்திடுமின்—.

* * *—சோத்தம் + என, சோத்தமென—என்றாக வேண்டுவது 'சோத்தென' என்றானது தொகுத்தல் விகாரம். அஞ்ஜலிபண்ணுமவர்கள் அதுக்கு அநுரூபமாகத் தாழ்ச்சி தோற்றச் சொல்லுவதொரு சப்தமாம் சோத்தமென்பது. ஸ்தோத்ரமென்னும் வடசொல்லின் திரிபு என்பாருமுண்டு. சோத்தம் என்பது கடைக்குறையாய்ச் 'சோத்து' என்று கிடக்கிறதென்பாருமுளர். அப் பெருமானை ஓயாதே அஞ்ஜலி பண்ணி வணங்கி வழிபட்டாலும் அவன் இரங்குவதில்லையே!; இரக்கமென்பது குடிபெயர்த்துக் கொண்டு எங்குப் போயிற்றோ தெரியவில்லையே யென்கிறாள்.

இரக்கமில்லாமையை விவரிக்கிறாள் மேலே தோன்னலங்கோண்டு இத்யாதியால். என்னுடைய பெண்மைக்கு உரிய நாண்மடமச்சம் முதலிய நலங்களைக் கவர்ந்துகொண்டுபோய் (அதாவது—என்னுடைய ஸர்வஸ்வத்தையுங் கொள்ளை கொண்டுபோய்) தான் எனக்கொரு பொன்மயமான பீதாம்பரம் போர்த்துப் போயினான் என்கிறாள். அதாவது என்னென்னில்; நாயகவிரஹத்தினால் மேனியில் தோன்றும் பசலைநிறமென்கிற வைவர்ண்யமானது பொன்னிறத்ததாக வருணிக்கப்படும்; அதைச்சொன்னபடி. "பொன்குலாம்பயலை பூத்தன மென்தோள்" என்றாள் திருவிடவெந்தைப் பதிகத்திலும். என் மேனிநிறத்தை யழித்துப் பிரிந்துபோனான் என்றவாறு.

**இன்றுதாறும்**=இன்றுவரைக்கும். காறு என்பதுபோலத் தாறு என்பதும் எல்லைப்பொருளது. "தனையும் காறும் தாறும் துணையும், வரையும் பிரமாணமும் மாத்திரையும் மட்டுப், அளவின் பெயரென்றறைந்தனர் புலவர்" என்பது பிங்கல நிகண்டு.

**போயினவூரறியேன்**=போனானாகிலும் போன ஊரின்பெயரைச் சொல்லிப் போனானாகில் ஒருவாறு ஆறியிருக்கலாமே; அதுதானுஞ் சொல்லாதொழிந்தானென்கிறாள். போனவூர் தெரியாதாகில் "குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின்" என்பானேன்? என்னில்; அவன் கூடியிருந்தகாலத்தில் பலகாலும் திருக்குறுங்குடியின் இனிமையை வாய்வெருவக்கேட்டிருந்தவளாகையாலே அங்கேதான் புகுந்திருக்கக்கூடுமோ வென்று கருதிச் சொல்லுகிறாள்போலும்.

http://acharya.org

அவள் போனது இன்னவூரென்று ஸ்பஷ்டமாகத் தெரியாதிருக்கும்போது இங்குத் தானே விழுந்து கிடந்தாலாகாதோ என்று சிலர் சொல்ல, ஐயோ! இம் முலைகள் படுத்துகிறபாடு பார்த்திலீர்களோ? இங்கே யிருக்கலாம்படியாயோ இவையிருப்பது! என்கிறாள் மூன்றாமடியால். "கொள்ளும்பயனொன்றில்லாத கொங்கைதன்னைக் கிழங்கோடும், அள்ளிப்பறித்திட்டு அவன் மார்விலெறிந்து என்னழலைத் தீர்வேனே" என்றாள் ஆண்டாள்; அவள் மெய்யே பெண்ணாய்ப் பிறந்தவளாகையாலே முலைபடைத்துப் படுகிற வருத்தமெல்லாந்தோற்ற அப்படி சொன்னாள்; அங்ஙனன்றிக்கே இவ்வாழ்வார் பாவநாப்ரகர்ஷத்தால் மாத்திரம் பெண்மையை ஏறிட்டுக்கொண்டவராதலால் அவ்வளவு ரோஷங்கொண்டு சொல்ல மாட்டாமல் இங்ஙனே சொல்லுகிறாரென்க. .... .... (௯)

செற்றவன் தென்னிலங்கைமலங்கத் தேவபிரான் திருமாமகளைப்
பெற்றும் * என்னெஞ்சகம் கோயில்கொண்ட பேரருளாளன் பெருமைபேசக்
கற்றவன் * காமருசீர்க்கலியன் கண்ணகத்தும் மனத்துமகலாக்
கொற்றவன் * முற்றுலகாளிநின்ற குறுங்குடிக்கே யென்னை யுய்த்திடுமின். (௧௦)

| | |
|---|---|
| தென் இலங்கை | தென்திசையிலுள்ள இலங்காபுரியானது |
| மலங்க | கலங்கும்படியாக |
| செற்றவன் | த்வம்ஸம்பண்ணினவனும் |
| தேவபிரான் | தேவர்களுக்குப் பிரபுவானவனும் |
| திரு மா மகளை பெற்றும் என் நெஞ்சகம் கோயில் கொண்ட | பெரியபிராட்டியாரைப் பெற்றுவைத்தும் என்மனத்தைக் கோயிலாகக்கொண்டுள்ளவனுமான |
| பேரருளாளன் | பேரருளாளப் பெருமானுடைய |
| பெருமை | பெருமையை |
| பேச கற்றவன் | அருளிச்செய்ய வல்லவரும் |
| காமரு சீர் | விரும்பத்தக்க குணங்களையுடையவருமான |
| கலியன் | திருமங்கையாழ்வாருடைய |
| கண்ணகத்தும் | கண்களினுள்ளும் |
| மனத்தும் | நெஞ்சினுள்ளும் |
| அகலா | விட்டுநீங்காத |
| கொற்றவன் | ஸர்வேச்வரனாய் |
| முற்றுலகு ஆளி | ஸகலலோகநாதனுமான பெருமான் |
| நின்ற | நித்யவாஸம்பண்ணப்பெற்ற |

குறுங்குடிக்கே, என்னை உய்த்திடுமின்—.

* * *—மற்ற திருமொழிகளின் கடைப்பாசுரத்தில் பயனுரைத்துத் தலைக்கட்டுமாபோலே இப்பாசுரத்தில் இல்லை; ஆயினும் இதுகற்றார்க்குத் திருக்குறுங்குடி சேருவதே பயனாகும் என்று உணர்த்துகின்றமை உய்த்துணரத் தக்கது.

இலங்கை பாழாளாகப் படைபொருதவனாய்த் தேவர்களுக்குப் பரமோபகாரகனாய்ப் பெரிய பிராட்டியாரை இடைவிடாது அநுபவிக்கப்பெற்றுவைத்தும் அவளை உபேக்ஷித்து என்பக்கலிலே விருப்பம் செய்துவந்து சேர்ந்திருப்பவனும் என்னுடைய கண்ணையும் நெஞ்சையும் ஒரு கொடிப்பொழுதும் விட்டுப் பிரியாதவனான ஸர்வேச்வரனெழுந்தருளி யிருக்குமிடமான திருக்குறுங்குடிக்கே என்னைக் கொண்டு சேர்த்திடுங்கள் என்று தலைக்கட்டினாராயிற்று.

http://acharya.org

"என்னையுய்த்திடுமின்" என்றவிடத்து என்னை என்றது ஆழ்வார் தம்மைப்பற்றின நிர்த்தேசமாகில் மூன்றாமடியில் 'காமருசீர்க்கலியன்' என்றுவேறு வ்யக்திபோலச் சொல்லியிருப்பது தகுமோவென்னில்; தகும்; தன்னைப் பிறன் போலச் சொல்லிக்கொள்வது கவிமரபாதலால். ஆழ்வாரிற் காட்டிலும் பரகால நாயகி வேறுவ்யக்தியே போலும். .... .... (கo)

அடிவரவு;—தவள தாதவிழ் காலை கருமணி திண்டிமில் எல்லி செங்கண் கேவலம் சோத்தென செற்றவன் அக்கு.

ஐந்தாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

# ஒன்பதாம்பத்து—ஆறாந்திருமொழி,

# அக்கும்புலியினதளும்.

**உரையவதாரிகை:**—காலால் நடந்துசெல்ல வல்லமையற்ற என்னை அவனிருக்குமிடத்தே கொண்டுபோய்ப் பொகடுங்கோளென்றார் கீழ்த்திருமொழியில். அதில் ஈற்றுப்பாசுரத்தில் 'திருமாமகளைப் பெற்றும்' என்று பெரியபிராட்டியாரை ஸ்மரித்ததானது தமக்குப் புருஷகாரமாகவல்ல பிராட்டியின் ஸந்நிதானமும் அங்கே உண்டு என்று நினைத்தபடியாம்; அதனாலே தரிப்பு உண்டாகித் தாமே நடந்து செல்லலாம்படியான நிலைமைவாய்ந்தது; அங்குறையும் பெருமானுடைய சீலத்தையும் அநுஸந்தித்தார்; "அக்கும்புலியினதளுமுடையாரவரொருவர்பக்கம் நிற்க நின்றபண்பர்" என்னும்படியே துர்மாநியான தேவதாந்தரத்துக்கும் திருமேனியிலே கூறு கொடுக்கும்படியான சீலமுடைய பெருமானன்றோ, நமக்குக் குறையென்? என்று துணிந்து, அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்களையும் வாருங்கோளென்று கூட்டிக்கொண்டு தாமே திருக்குறுங்குடி சென்று அநுபவிப்பதாக அமைந்ததாம் இத்திருமொழி. .... .... .... .... *

அக்கும் புலியினதளு முடையாரவரோருவர் *
பக்கம் நிற்க நின்ற பண்பரூர்போலும் *
தக்க மரத்தின் தாழ்சினையேறி * தாய்வாயில்
கோக்கின்பிள்ளை வெள்ளிற வுண்ணும் குறுங்குடியே. (க)

| | |
|---|---|
| கொக்கின் பிள்ளை | கொக்கின் குட்டியானது |
| தக்க மரத்தின் | (தனக்கு ஏறத்) தகுந்ததான ஒருமரத்தினுடைய |
| தாழ் சினை ஏறி | தாழ்ந்த கிளையில் ஏறி |
| தாய் வாயில் | தாய்க்கொக்கின் வாயிலிருக்கிற |
| வெள்ளிறவு | 'வெள்ளிறு' என்னும் சாதி மீனை |
| உண்ணும் | உண்ணப்பெற்ற |
| குறுங்குடி | திருக்குறுங்குடியென்னும் தலமானது,— |
| அக்கும் | எலும்பையும் |
| புலியின் அதளும் | புலியின் தோலையும் |
| உடையார் அவர் ஒருவர் | உடையவரான சிவபிரானாகிற ஒருவர் |
| பக்கம் நிற்க | அருகேயிருக்க (இடங்கொடுத்து) |
| நின்ற | எழுந்தருளியிருக்கின்ற |
| பண்பர் | சீலகுணமுடையரான பெருமானுடைய |
| ஊர் போலும் | திவ்யதேசமாம். |

* * *—எம்பெருமானுக்கு ஆகாதாரில்லையென்கிறார் முன்னடியால். 'நானே ஈச்வரன்' என்று அபிமானித்திருக்குமொருவனுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறவன் அநுகூலராய்ச் சென்று கிட்டுகிற நமக்கு முகந்தரச் சொல்ல வேணுமோ? என்பது உட்கருத்து. அக்கும்புலியினதளும்=இவை சிவபிரானுடைய ஆபரணங்கள்போலும். இறந்தவர்களைப் பொசுக்கின பிறகு சுடுகாட்டில் விழுந்துகிடக்கிற எலும்புகளை மாலையாகத் தொடுத்து அணிந்துகொள்வனாகையாலே அக்கு உடையார் என்றது. (அக்கு—எலும்பு.) புலியின் அதள்—புலித்தோல். ஒருகாலத்திற் சிவபெருமான் தன்னைமதியாத தாருகவனத்து முனிவர்களுடைய கருவத்தைப் பங்கஞ்செய்யவும் அவர்களின் மனைவிமார்களது கற்புநிலையைப் பரிசோதிக்கவும் கருதித் தான் ஒரு விடவடிவங்கொண்டு அவரில்லந்தோறுஞ் சென்று பிக்ஷாடனஞ் செய்து, தன்னை நோக்கிக் காதல்கொண்ட அம்முனிபத்நிகளின் கற்புநிலையைக் கெடச்செய்ய, அதுகண்டு பொறுமற் கோபம் மூண்ட அம்முனிவர்கள் அபிசாரயாகமொன்று செய்து அவ்வோமத்தீயினின்று எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, முயலகன், வெண்டலை முதலியவற்றைச் சிவனைக் கொன்றுவரும்படி ஏவ, சிவபெருமான் தன்மேற்பொங்கிவந்த நாகங்களை ஆபரணங்களாகவும் பூதங்களைத் தனது கணங்களாகவும் கொண்டு, மானைக் கையிலேந்திப் புலியைத் தோலையுரித்து உடுத்து முயலகனை முதுகிற்காலால் ஊன்றி வெண்டலையைக் கையாற்பற்றிச் சிரமேல் அணிந்து இங்ஙனமே அவற்றையெல்லாம் பயனிலவாகச் செய்துவிட்டனனென்ற கதை அறியத்தக்கது. 'உடையானவனொருவன்' என்று ஒருமையாகச் சொல்லவேண்டியிடத்துப் பன்மையாகச் சொன்னது அவனுடைய அஹங்காரந் தோற்றுதற்கென்க. இங்கு எலும்பையும் புலித்தோலையுஞ் சொன்னது மற்றுமுள்ள எருக்கம்பூ, சாம்பல் முதலியவற்றுக்கும் உபலக்ஷணமென்ப. இங்குச் சிவனது பெயரையிட்டுச் சொல்லாமல் அவரொருவர் என்றதற்குப் பெரியவாச்சான்பிள்ளை,— "அவன் தவிரவொண்ணு

http://acharya.org

மையாலே முகங்கொடுத்தாலும் தமக்கு இதில் ஓர் ஆதரமில்லாமையாலே முகத்தை மாறவைத்துச் சொல்லுகிறார்" என்று அருளிச்செய்த அழகு காண்மின்.

பக்கம் நிற்க நின்ற பண்பர்=அப்படிப்பட்ட தாமஸனையும் தனது திருமேனியின் வலப்பக்கத்தில் இடங்கொடுத்து ஆதரிக்கும் சீலகுணமுடையவன் எம்பெருமான். திருவாய் மொழியில் "வலத்தனன் திரிபுரமெரித்தவன்" (1-3-9) என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில் "𑌪𑌶𑍍𑌯𑍈𑌕𑌾𑌦𑌶 𑌮𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌨𑍍 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑍍=பச்யைகாதச மே ருத்ராந் தக்ஷிணம் பார்ச்வ மாச்ரிதாந்." என்ற மோக்ஷதர்மவசநத்தை எடுத்துக் காட்டியிருப்பது இங்கே அநுஸந்தேயம். "𑌤𑌪𑌸𑌾 𑌤𑍋𑌷𑌿𑌤𑌸𑍍𑌤𑍇𑌨 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾 𑌪𑍍𑌰𑌭𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾। 𑌸𑍍𑌵𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌶𑌂𑌭𑍋𑌃 𑌨𑌿𑌵𑌾𑌸𑌃 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌃 = தபஸா தோஷிதஸ் தேந விஷ்ணுநா ப்ரபவிஷ்ணுநா—ஸ்வபார்ச்வே தக்ஷிணே சம்போ: நிவாஸ: பரிகல்பித:." என்றொரு வசநமும் இருபத்திநாலாயிரப்படியிற் காண்பதுண்டு. [சிவன் பண்ணின தவத்தினால் திருவுள்ளமுவந்த திருமால் அவனுக்குத் தனது வலவருகிலே வாஸஸ்தானம் அமைத்துக் கொடுத்தருளினன்—என்பது இதன் பொருள்.] "ஏறாளுமிறையோனுந் திசைமுகனுந் திருமகளுந், கூறாளுந் தனியுடம்பன்" என்றும் "பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து" என்றும் ஆழ்வார்கள் அடிக்கடி அருளிச்செய்கிறார்களே, சிவன் முதலானோர் எப்போதும் எம்பெருமானுடைய திருமேனியைப் பற்றி யிருக்கிறார்களோ? என்றொரு சங்கை பிறக்கக்கூடும்; இந்த சங்கையும் இதற்குப் பரிஹாரமும் பூருவர்களின் வியாக்கியானங்களிலேயே உள்ளன; கீழ் உதாஹரித்த திருவாய்மொழிப் பாசுரத்தின் [4-8-1] வியாக்கியானங்களிலே "ஸர்வகாலமும் இவர்கள் எம்பெருமானுடைய திருமேனியிலே யிருப்பர்களோவென்னில்; ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுத்தருளும்; அது மஹாகுணமாகையாலே ஆழ்வார்கள் எப்போது மேய்க்க அருளிச்செய்து கொண்டு போருவர்கள்; ஸாமந்தர்க்குப் புறம்பே நாடுகள் கனக்கவுண்டாகிலும் மாளிகைக்குள்ளே செம்பாலே நாழியரிசியைத் தங்களுக்கு வரிசையாக நினைத்திருப்பர்களிறே; அப்படியே இவர்களும் திருமேனியில் பண்ணிவைக்கும் ப்ராப்தி விடார்களிறே. ஓரோ கலஹங்களிலே அடையவளைந்தானுக்குள்ளே குடிவாங்கி யிருந்து கலஹந் தெளிந்தவாறே புறம்பே புறப்பட்டாலும் 'இவ்விடம் இன்னார் பற்று, இவ்விடம் இன்னார் பற்று' என்று பின்னும் ப்ராப்தி சொல்லி வைக்குமாபோலே" என்றருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் இங்கு அநுஸந்திக்கத்தக்கன.

[சில விஷ்ணுவாலயங்களிலும் உள்ளே எம்பெருமான் திருக்கோயிலுக்கு அருகில் சிவபிரானுடைய கோயில் அமைந்திருக்கு மிருப்பைக் கருதியே ஆழ்வார்கள் இப்படியருளிச் செய்கிறார்களென்று சிலர் சொல்லுவதுண்டு; அது மறக்கத்தக்கது. அவை பிற்பட்ட அமைப்புகளென்ப.]

பண்பர்=மஹாதர்மிஷ்டர் என்றபடி. 'தர்மாதிசளாயிருந்து இன்னமும் வருகிறவர்கள் வாருங்கோள், தாராளமாக இடங் கொடுக்கிறேன்' என்பவர்

போல நிற்கும் சிலத்தைத நினைக்கின்றது. [ஊர்போலும்] இங்குப் 'போலும்' என்றது உவமைப் பொருளதன்று; ஒப்பில் போலியாய் வந்ததென்க. வடமொழியில் "கிமிவஹி ஈயோராணா" இத்யாதி ஸ்தலங்களில் இவ சப்தம்போல வாக்யாலங்கார மென்க.

[தக்க மரத்தின் இத்யாதி.] இதற்கு இரண்டுவகையாகப் பொருள் கூறுவர்; அவ்விடத்து எம்பெருமான் எப்படி ஸௌசீல்யகுணம் வாய்ந்தவனோ அப்படியே அங்குள்ள மரமும் சிறுவர்க்கும் தவழ்ந்து ஏறலாம்படி தாழ்ந்திருக்குமென்பது பற்றித் 'தக்கமரம்' எனப்பட்டது; எம்பெருமானோடு தகுதியையுடைய மரம் (அதாவது—எம்பெருமானோடு குணஸாம்யமுடைய மரம்) என்றபடி. இது பட்டர் நிர்வஹிக்கும்படியாம்.

இங்ஙனன்றியே, மேலே 'கொக்கின் பிள்ளை' என்கையாலே இங்குத் 'தக்க மரம்' என்றது—அந்தக் கொக்குதன்னோடு ஸமானமான நாமமுடைய மரம் என்றபடியாய் மாமரத்தைச் சொல்லுகிறது என்னவுமாம்; கொக்கு என்று மா மரத்துக்கும் பெயர்; "சூதஞ் சேதாரம் ஆம்பிரங் கொக்கு, தேமா மரத்தினை தேமாவாகும்" என்பது திவாகர நிகண்டு; "எக்கலிடு நுண்மணல்மேல் எங்குங் கொக்கின் பழம் வீழ் கூடலூரே" என்றார் கீழும். தாய்ப்பறவை நீர் நிலங்களிலலைந்து உணவுதேடிக் கொடுக்க, குட்டிப்பறவை மாக்கிளையிலிருந்துகொண்டு வாயலகினால் வாங்கியுண்ணுமிடமான திருக்குறுங்குடி யென்க. .... (௧)

துங்காரரவத்திரைவந் துலவ * தொடுகடலுள்
பொங்காரரவில்துயிலும் புனிதரூர்போலும் *
செங்காலன்னம் திகழ்தண் பணையில் பேடையோடும் *
கொங்கார் கமலத்தலரில் சேரும் குறுங்குடியே. (௨)

| | | | |
|---|---|---|---|
| செம் கால் | சிவந்தகால்களையுடைய | ஆர் அரவம் | பெரிய ஆரவாரத்தை யுடையனவைகளான |
| அன்னம் | அன்னப்பறவை | திரை | அலைகள் |
| திகழ் தண் பணையில் | அழகிய குளிர்ந்த நீர்நிலைகளிலே | வந்து உலவ | வந்து வீச |
| கொங்கு ஆர் கமலத்து அலரில் | மணம்மிக்க தாமரைப்பூவில் | தொடு கடலுள் | ஆழ்ந்த திருப்பாற்கடலிலே |
| பெடையோடும் | பேடையுடனே | பொங்கு ஆர் அரவில் | பெரியதிருமேனிவாய்ந்த திருவனந்தாழ்வான்மீது |
| சேரும் | சேர்ந்துவாழுமிடமான | துயிலும் | திருக்கண்வளர்ந்தருளாநின்ற |
| குறுங்குடி | குறுங்குடியானது,— | புனிதர் | பரமபவித்திரரான பெருமானுடைய |
| துங்கம் | ஓங்கினவைகளாய் | | ஊர் போலும்—. |

* * *—திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்ந்தருளுமழகு எளியர்க்குக் கிட்டவொண்ணாதிருக்குமென்பது மாத்திரமேயல்லாமல் பிரமன் முதலியோர்க்

http://acharya.org

கூப்பிடும்படி இக்கரையிலே நின்று கூப்பிடவேண்டும்படி யிருக்குமாதலால் அவ்வருமையைப் போக்கி எல்லார்க்கும் எளியனாக எழுந்தருளியிருக்குமிடம் திருக்குறுங்குடி யென்கிறார்.

துங்கார்—'துங்கம்' என்பது வடசொல்; உந்நதம் என்றபடி: 'துங்கார்' என்றது விகாரப்புணர்ச்சி. பொங்கு × ஆர், பொங்கார்; பொங்கு—முதனிலைத்தொழிற்பெயர்; பொங்குதல் நிறைந்த அரவம் என்றபடி; எம்பெருமான் இடைவிடாது தன்மேல் சாய்ந்தருளப் பெறுவதனாலுண்டாகிய மகிழ்ச்சி மிக்கவன் என்றபடி. இனி, 'பொங்கு' என்பதையும் 'ஆர்' என்பதையும் அரவுக்குத் தனித்தனி விசேஷணங்களாக்கி யுரைக்கவுமாம்; அப்போது 'பொங்கு' என்பது வினைத்தொகை; பொங்குகின்ற என்றபடி. ஆர்—விசாலமாயிருக்கின்ற என்றபடி. புனிதர்—பரிசுத்தமான திருவுள்ளமுடையவர் என்றவாறு; எம்பெருமான் திருவனந்தாழ்வான் மீது திருக்கண் வளர்ந்தருள்வதானது ஜகத்ரக்ஷண சிந்தை பண்ணுவதற்காகவாதலால் ஸ்வப்ரயோஜநத்துக்காக வன்றியே ஆச்ரிதர்கட்காக வாகையாலே வந்த பரிசுத்தியைச் சொன்னபடி.

பணை—நீர் நிலம்; 'பண்ணை' என்பதன் தொகுத்தல். .... .... (உ)

வாழக்கண்டோம் வந்துகாண்மின் தொண்டீர்காள்! *
கேழல் செங்கண்மா முகில்வண்ணர் மருவுமூர் *
ஏழைச்செங்கால் இன்துணை நாரைக்கிரைதேடி *
கூழைப்பார்வைக் கார்வயல்மேயும் குறுங்குடியே. (ந)

| | |
|---|---|
| தொண்டீர்காள் | பாகவதர்களே! |
| வாழ கண்டோம் | உஜ்ஜீவிக்கும் வகையறிந்தோம்; |
| ஏழை செம் கால் | மிருதுவாய்ச் சிவந்த கால்களையுடைய |
| இன் துணை நாரைக்கு | இனிய துணையாகிய நாரைச்சேவலுக்கு |
| இரை தேடி | உணவுதேடிக்கொண்டு |
| கூழை பார்வை | க்ருத்ரிமமான பார்வையையுடைய பேடையானது |
| கார் வயல் மேயும் | கருவடைந்த வயல்களிலே மேயப்பெற்றதும் |

| | |
|---|---|
| கேழல் | வராஹாவதாரம் செய்தருளினவராய் |
| செம் கண் | செந்தாமரைக்கண்ணராய் |
| மா முகில் வண்ணர் | காளமேகம்போன்ற நிறத்தையுடையவரான பெருமான், |
| மருவும் ஊர் | பொருந்திவாழும் திவ்ய தேசமாயிருப்பதுமான |
| குறுங்குடி | திருக்குறுங்குடியை |
| வந்து காண்மின் | வந்து ஸேவியுங்கள். |

* * *—பாசுரந் தொடங்கும்போதே 'வாழக்கண்டோம்' என்று தொடங்குகிற ஆழ்வாருடைய களிப்பை என் சொல்லுவோம்!; கீழ்த்திருமொழியில் "என்னெஞ்சகஞ் சோரவீரும்" என்றும் "ஓரிரவுமுறங்கா திருப்பேன்" என்றும், "பாவியேனுவியை வாட்டஞ் செய்யும்" என்றும் கூறின அலமாப்பெல்லாம் பகலவனைக் கண்ட பனிபோல் அகன்றொழிந்தமை தோன்ற "வாழக்கண்டோம்"

http://acharya.org

என்று களித்துப் பேசுகிறார். "ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்" என்றாற்போலே தொண்டுபூண் டமுதமுண்பதில் பாரிப்புக் கொண்டிருக்குமவர்களே! நாம் ஸத்தை பெறுவதற்கு ஒரு நல்விரகு கண்டோம் திருக்குறுங்குடியை ஸேவிப்போம் வாருங்கள் என்கிறார். பிரளயப் பெருவெள்ளத்தில் அழுந்திப் பாசிதூர்த்துக்கிடந்த பார்மகட்காக வராஹமூர்த்தியாய்த் திருவவதரித்தவரும், அப்படி ஸம்ஸாரப் பெருவெள்ளத்தில் அழுந்திக் கிடக்கின்ற நம்மையெல்லாம் கரை சேர்ப்பதற்காகக் கொண்ட கொந்தளிப்பு திருக்கண்களில் விளங்கும்படியிருப்பவரும், கண்ட மாத்திரத்தில் தாபமெல்லாமாறும்படியாய்க் குளிர்ந்து முகில்போன்ற வடிவையுடையராயிருப்பவர் அவதாரம்போலே தீர்த்தம் பிரஸாதித்துப் போய்விடாதே நித்யவாஸம் பண்ணுகிறவிடங் காண்மின் திருக்குறுங்குடி.

[ஏழைச் செங்கால் இத்யாதி.] ஸுகுமாரமாய்ச் சிவந்த காலையுடைத்தாய் ஸம்ச்லேஷத்தாலே போதுபோக்க வேண்டும்படியிருப்பதான இன்துணைச் சேவலுக்கு உணவு தேடிக்கொண்டே கள்ளப்பார்வை பார்க்குமதான நாரைப் பேடையானது கருவடைந்த பயிர்களிலே போய் மேயாநிற்குமிட மென்கை. (௫)

சிரமுனைந்து மைந்தும் சிந்தச்சென்று * அரக்க
னூரமும் கரமும் துணித்த உரவோனூர் போலும் *
இரவும்பகலும் ஈன்தேன் முரல * மன்றெல்லாம்
குரவின் பூவேதான் மணநாறும் குறுங்குடியே. (௬)

| | | | |
|---|---|---|---|
| இரவும் பகலும் | எப்போதும் | அரக்கன் | இராவணனென்னும் ராக்ஷஸனது |
| தேன் | வண்டுகள் | சிரம் ஐந்தும் ஐந்தும் | பத்துத் தலைகளும் |
| ஈன் | இனிமையாக | சிந்த | சிதறும்படி |
| முரல | ரீங்காரஞ் செய்யப் பெற்றதும் | சென்று | (இலங்கைக்கு) எழுந்தருளி |
| மன்று எல்லாம் | வெளிநிலமுழுதும் | உரமும் கரமும் | (அவனது) மார்பையும் கைகளையும் |
| குரவின் பூவே தான் | குரவம்பூக்களே | துணித்த | துணித்தொழித்தவனான |
| மணம் நாறும் | பரிமளிக்கப் பெற்றதுமான | உரவோன் | பெருமிடுக்குடைய பெருமானுடைய |
| குறுங்குடி | திருக்குறுங்குடியானது,— | ஊர்போலும் | திவ்யதேசமாகும். |
| முன் | முன்பு [ராமாவதாரத்தில்] | | |

* * *—இராவணனுடைய பத்துத்தலைகளும் மார்பும் கைகளும் துணிபடும்படியாக இலங்கைசென்று வியாபரித்த பெருமான் இன்னமும் அப்படிப்பட்ட ஆச்ரித விரோதிகளைத் தொலைப்பதற்காகக் கோயில்கொண்டிருக்குமிடம் திருக்குறுங்குடி. இத்தலம் செவிக்கும் மூக்குக்கும் மிக இன்பம் தருவது; எப்போதும் மதுபானமயக்கத்தாலே வண்டுகள் ஆளத்திவைத்துப் பாடுமது செவிக்

http://acharya.org

இன்பம்; வெளியிலெம் முழுதும் குரவம்பூக்களின் மணமே கமழநிற்றல் மூக்குக்கு இன்பம். இவை மற்ற இந்திரியங்களின் இன்பத்துக்கும் உபலக்ஷணமென்க.

சிரஸ், உரஸ் என்ற வடசொற்கள் முறையே சிரம், உரம் எனத் திரிந்தன. கரம்—தற்சம வடசொல். உரவோன்—உரமுடையவன்; உரமாவது வலிமை.

மன்று—நாற்சந்தி. ... .... .... (ச)

கவ்வைக்களிற்று மன்னர்மாளக் கலிமாந்தேர்
ஐவர்க்காய் * அன்றமரிலுய்த்தா னூர்போலும் *
மைவைத்திலங்கு கண்ணார் தங்கள் மொழியொப்பான் *
கோவ்வைக் கனிவாய்க் கிள்ளைபேசும் குறுங்குடியே. (ரு)

| | |
|---|---|
| கொவ்வைக் கனி வாய் | கோவைப்பழம்போற் சிவந்தவாயையுடைய |
| கிள்ளை | கிளிகளானவை |
| மை வைத்து இலங்கு கண்ணார் தங்கள் மொழி ஒப்பான் | மையிட்டு விளங்குகின்ற கண்களையுடைய பெண்களின் பேச்சுப்போல |
| பேசும் | பேசுமிடமான |
| குறுங்குடி | திருக்குறுங்குடியானது—, |
| அன்று | முன்பொருகால், |
| அமரில் | பாரதயுத்தத்தில் |
| கவ்வை களிறு மன்னர் | பேரொலிகொண்ட யானைகளையுடையரான அரசர்கள் |
| மாள | மாண்டுபோம்படியாக |
| ஐவர்க்கு ஆய் | பஞ்சபாண்டவர்களுக்காக |
| கலி மா தேர் | திண்ணிய பெரியதேரை |
| உய்த்தான் | நடத்தின பெருமானுடைய |
| ஊர்போலும் | திவ்யதேசமாகும். |

* * *—பாரதப்போரில் பாண்டவர்கட்குப் பக்ஷபாதியாயிருந்து எதிரரசர்கள் தொலையும்படியாகப் பார்த்தஸாரதியாய்த் தேரைநடத்தின பெருமான் அப்படிப்பட்ட ஆச்ரிதபக்ஷபாதம் இன்னமும் விளங்கத் திருக்கோயில் கொண்டிருக்குமிடம் திருக்குறுங்குடி. இத்தலம், கிளிகள் பெண்களைப்போலே அழகாகப் பேசும்படியான நிலைமைவாய்ந்தது.

களிறு+மன்னர், களிற்று மன்னர். கவ்வை என்று இரைச்சலுக்குப் பெயர்; பெரிய கோஷம் செய்யவல்ல யானைகளென்றபடி.

கோவ்வைக்கனிவாய்க்கிள்ளை=கிளிகளுக்குக் கோவைப்பழம் இனிய உணவாதலால், கொவ்வைக் கனியை வாயிலேயுடைய கிளி என்றுமுரைக்கலாமென்ப.

தீநீர்வண்ண மாமலர்கோண்டு விரையேந்தி *
தூநீர் பரவித் தோழுமின் எழுமின் தோண்டீர்காள்! *
மாநீர் வண்ணர் மருவியுறையுமிடம் * வானில்
கூனீர்மதியை மாடம் தீண்டும் குறுங்குடியே. (சு)

| | |
|---|---|
| தொண்டீர்காள் | தொண்டர்களே! |
| தூ நீர் | பரிசுத்தியை யுடையரான நீங்கள் |

| | |
|---|---|
| தீ | (தூபதீபங்களுக்கான) அக்நியையும் |
| நீர் | (அர்க்யத்துக்கான) தீர்த்தத்தையும் |
| வண்ணம் மா மலர் | நாநாவர்ணமுடைய சிறந்த புஷ்பங்களையும் |
| விரை | பரிமளத்ரவ்யங்களையும் |
| ஏந்திக் கொண்டு | எடுத்துக்கொண்டு |
| பரவி | (எம்பெருமானைத்) துதித்து |
| தொழுமின் | தொழுங்கோள்; |
| எழுமின் | உஜ்ஜீவிக்கப் பாருங்கோள்; |

| | |
|---|---|
| வானில் | ஆகாசத்தில் |
| கூன் நீர் | வளைந்திருப்பதை இயற்கையாகவுடைய |
| மதியை | சந்திரனை |
| மாடம் நீண்டும் | மாடங்கள் ஸ்பர்சிக்கும்படியாக ஓங்கியுள்ள |
| குறுங்குடி | திருக்குறுங்குடியானது,– |
| மா நீர் வண்ணர் | கடல்வண்ணரான பெருமாள் |
| மருவி உறையும் இடம் | பொருந்திவாழுமிடமாயிருக்கின்றது. |

* * *—எம்பெருமானுக்குக் கைங்கரியம் பண்ணவேணுமென்னும் விருப்புடைய பாகவதர்களே! மிகப் பரிசுத்தமான தன்மையையுடைய நீங்கள், திருவாராதனத்துக்கு உபகரணமான தூபதீபங்களையும், செண்பகம் மல்லிகை செங்கழுநீர் இருவாட்சி யென்னும் பூக்களையும், ஏலக்காய் சாதிக்காய் லவங்கமென்னும் பரிமள வஸ்துக்களையும் ஸம்பாதித்துக் கொண்டு சென்று தொழுது உஜ்ஜீவிக்கப்பாருங்கள்; எவ்விடத்திற்கு? என்கிறீர்களோ? திருக்குறுங்குடிக்கு. அத்தலம் கடல்வண்ணன் நித்யவாஸஞ் செய்யுமிடம்; அங்குள்ள மாடமாளிகைகள் சந்திரமண்டலத்தளவும் சென்று படியும்படியான ஓக்கமுடையன.

'கூனீர்' என்பதில் 'நீர்மை' என்னும் பண்பு ஈறுபோயிற்று; நீர்மையாவது ஸ்வபாவம். .... .... .... (௬)

வல்லிச்சிறு நுண்ணிடையாரிடை நீர் வைக்கின்ற *
அல்லல் சிந்தைதவிர அடைமினடியீர்காள்! *
சொல்லில் திருவேயனையார் கனிவா யெயிறொப்பான் *
கொல்லைமுல்லை மெல்லரும்பீனும் குறுங்குடியே. (௭)

| | |
|---|---|
| அடியீர்காள் | பகவத்பக்தர்களே!, |
| நீர் | நீங்கள் |
| வல்லி சிறு நுண் இடையாரிடை | கொடிபோன்று மிக நுண்ணிய இடையையுடையரான பெண்களிடத்து |
| வைக்கின்ற | வைத்திருக்கிற |
| அல்லல் சிந்தை தவிர | துக்ககரமான சிந்தனையைத் தவிர்த்து,– |
| கொல்லை முல்லை | கொல்லைகளிலுள்ள முல்லைகளானவை |

| | |
|---|---|
| சொல்லில் திரு அனையார் | சொல்லுமிடத்து ஸ்ரீமஹாலக்ஷ்மியையொத்திருக்கின்ற ஸ்த்ரீகளினுடைய |
| கனி வாய் | கோவைக்கனிபோன்ற வாயிலுள்ள |
| எயிறு ஒப்பான் | பற்களோடொப்ப |
| மெல் அரும்பு | அழகிய அரும்புகளை |
| ஈனும் | புறப்படவிடுமிடமான |
| குறுங்குடி | திருக்குறுங்குடியை |
| அடைமின் | அடையுங்கோள். |

http://acharya.org

* * *—எம்பெருமானுக்கே அடிமைப்பட்டிருக்கக் கூடிய ஸ்வரூபம்வாய்ந்த பாகவதர்களே!, விஷயாந்தரத்தில் தாக்கமான சிந்தனையைத் தவிர்த்து திருக்குறுங்குடியை அடையப் பாருங்கள்; பெண்களின் பற்களைப்போல முல்லையரும்புகள் உண்டாகப் பெற்ற தலம் இது.

விஷயபோகங்களைக் காறியுமிழ்ந்து பகவத்விஷயத்தைப் பற்றும்படி உபதேசிக்கிற ஆழ்வார் விரக்தர்களுக்கும் விஷயாந்தர ருசியுண்டாகும்படியாக 'வல்லிச் சிறுநுண்ணிடையார்' என்று ஸ்த்ரீகளை வருணித்துப் பேசுவது எதுக்காக? என்று கேட்கக்கூடும்; இதற்கு நம் ஆசார்யர்கள் அருளிச்செய்வதாவது—உலகத்தில் வாக்குப்படைத்தவர்கள் பலவகைப்படுவர்; சிலர் உள்ளதை உள்ளபடியே பேசுவர்கள்; சிலர் சிறந்த விஷயத்தைப்பற்றிப் பேசத்தொடங்கினாலும் தங்களுடைய வாக்கின் திறமை போராமையினால் குறைபடப் பேசுவர்கள்; சிலர் நாவீறுடைமையினால் அற்பவிஷயங்களையும் கனக்கப்பேசுவர்கள்; இப்படி பேச்சில் பலவகைகளுண்டு. பேசுகிறவர்களின் வாக்கின்போக்கை அநுசரித்து விஷயங்கள் சிறுத்துப் போவதும் பெருத்துப் போவதுமுண்டு; திருமங்கையாழ்வாருடைய நாவீறு லோகவிலக்ஷணமாகையால் அற்பவிஷயங்களைப் பற்றிப் பேசும்போதும் பெருக்காறு பெருகுமாபோலே யிருக்குமேயன்றி அவ்விஷயங்களின் சிறுமைக்குத் தக்கபடி சிறுத்திராது இவருடைய சொற்போக்கு. 'வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள் மாதரார்வனமுலை' என்றாப்போலே பெருத்திருக்கும்; ஆகவே விஷயங்கள் அற்பமென்பதில் தடையில்லை; இவருடைய வாக்குத்தான் பரமகம்பீரமாகையால் அற்பவிஷயத்தையும் கனக்கப் பேசுகின்றது, என்றும். கீழ் ஆறாம்பத்தில் "துறப்பேனல்லேன்" என்னுந் திருமொழியில் "சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்ப வெள்ளத்தாழ்ந்தேன்" என்ற நான்காம்பாட்டின் வியாக்கியானத்தில் இக்கருத்துப்படப் பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்துள்ளவை காண்க.

வல்லி—வடசொல். அல்லல்சிந்தை-விஷயபோகங்கள் தற்காலத்தில் இன்பம் நுகர்வதுபோலிருந்தாலும் முடிவில் துன்பமாகவே தலைக்கட்டுதல்பற்றி 'அல்லல்சிந்தை' எனப்பட்டது. ... .... (எ)

**நாராரிண்டை நாண்மலர்கொண்டு நந்தமர்காள்! ***
**ஆராவன்போடு எம்பெருமானூ ரடைமின்கள் ***
**தாராவாரும் வார்புனல் மேய்ந்து வயல்வாழும் ***
**கூர்வாய்நாரை பேடையோடாடும் குறுங்குடியே.** (அ)

| | | | |
|---|---|---|---|
| நம் தமர்காள் | நம்மோடொத்த பகவத்பக்தர்களே! | கொண்டு | எடுத்துக்கொண்டு |
| நார் ஆர் இண்டை | நார்களில் நெருங்கக் கோக்கப்பட்ட மாலைகளையும் | ஆரா அன்போடு | பரபக்தியுக்தராய்க் கொண்டு (எம்பெருமான் ஊர் அடைமின்கள்—;) |
| நாள் மலர் | அப்போதலர்ந்த பூக்களையும் | தாரா | ஸாரஸபக்ஷிகள் |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| ஆரும் | நெருக்கிவிருக்கப் பெற்ற | பேடையொடு | பேடைகளுடனே |
| வார் புனல் | நீண்ட நீர்நிலங்களிலே | ஆடும் | களித்துவர்த்திக்கப்பெற்ற |
| மேய்க்கு | இரைமேய்க்கு | குறங்குடி | திருக்குறங்குடியென்கிற |
| வயல் | வயல்களிலே | எம்பெருமான் ஊர் | திவ்யதேசத்தை |
| வாழும் | வாழ்கின்ற | | |
| கூர் வாய் நாரை | கூர்மையுள்ள வாயலகுகளை யுடைய நாரைகள் | அடைமின்கள் | சென்று சேருங்கள். |

* * *—என்னைப்போலே பதியேபாவித்தொழுந் தொண்டர்களே! நல்ல புஷ்பங்களையும் தொடுத்தமாலைகளையுங் கையிற்கொண்டு பரிபூர்ணபக்தியுடனே திருக்குறுங்குடியைச் சென்று சேருங்கள்; அத்தலத்தில் அஃறிணைப் பொருள்களும் தம்தம் அபிமதம் பெற்றுக் களித்து வாழுமாதலால் நீங்களும் அங்குச் சென்று வேண்டினபடி கிஞ்சித்கரிக்கப்பெற்றுக் களித்து வாழலாமென்றுராயிற்று.

தாரா—நீர்வாழ்பறவை. .... .... .... .... .... (௮)

நின்றவினையும் துயரும்கெட மாமலரேந்தி *
சென்று பணிமினெழுமின் தொழுமின் தொண்டீர்காள்! *
என்றுமிரவும் பகலும் வரிவண் டிசைபாட *
குன்றின்முல்லை மன்றிடை நாறும் குறுங்குடியே. (௯)

| | | | |
|---|---|---|---|
| தொண்டீர்காள் | பகவத்பக்தர்களே!, | வரி வண்டு இசை பாட | வரிவண்டுகள் இசை பாடப் பெற்றதும் |
| நின்ற வினையும் | ஸஞ்சிதகருமங்களும் | குன்றின் முல்லை | மலையிலுள்ள முல்லைப் பூக்கள் |
| துயரும் | ப்ராரப்தகருமங்களும் | மன்றிடை | வெளிநிலங்களிலே |
| கெட | ஒழியும்படியாக | நாறும் | கமழப்பெற்றதுமான |
| மா மலர் | சிறந்த புஷ்பங்களை | குறங்குடி | திருக்குறங்குடியை |
| ஏந்தி | எடுத்துக்கொண்டு, | சென்று | அடைந்து |
| இரவும் பகலும் என்றும் | இரவும் பகலுமாகிய எக்காலத்திலும் | பணிமின் | ஸேவியுங்கள்; |
| | | தொழுமின் | அஞ்ஜலிபண்ணுங்கள்; |
| | | எழுமின் | (இவ்வகையாலே) உஜ்ஜீவிக்கப்பாருங்கள். |

* * *—தொண்டர்களே! உங்களுடைய ஸகல பாபங்களும் தீரும்படியாக நல்ல புஷ்பங்களைக் கொண்டுபோய்த் திருக்குறுங்குடியைத் தொழுங்கோளென்கிறார்.

நின்றவினையும் துயருங்கெட=கருமங்கள் ஸஞ்சிதமென்றும் ப்ராரப்தமென்றும் இருவகைப்படும்; எந்தக் கருமங்கள் பலன்கொடுக்க ஆரம்பம் செய்யவில்லையோ, அக்கருமங்கள் ஸஞ்சிதகரும மெனப்படும்; எந்தக் கருமங்கள் பலன்

http://acharya.org

கொடுக்க ஆரம்பித்துவிட்டனவோ அவை ப்ராரப்த கருமங்களெனப்படும். நாம் செய்யும் கருமங்கள் உடனே பலனளிப்பனவையல்ல; ஆதலால் இப்பாகுபாடுகள் ஏற்பட்டன. ‘துயர்’ என்று துக்கத்துக்குப் பெயராயினும் “காரணே கார்யோபசார:” என்கிற வடநூலார் நியாயப்படி துக்கத்திற்குக் காரணமான கருமத்தை இங்குச் சொல்லுகிறதென்க.

இவ்விடத்தில் ஒரு சங்கை:—“ நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி ஶதைரபி — நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி சதைரபி.” [எத்தனை கற்ப கோடிகாலமானாலும் கரும பலன்களை அநுபவித்தாலன்றிக் கருமம் தொலையாது] என்று சாஸ்த்ரமிருப்பதால் அதற்கு விரோதமாகத் திருக்குறுங்குடியைத் தொழுதவளவில் நின்றவினையும் துயருங் கெடுமென்று எங்ஙனே சொல்லலாம்? என்று.—சாரீரகமீமாம்ஸையில் நான்காமத்தியாயத்தில் முதற்பாதத்தில் “தததிகம உத்தரபூர்வாகயோரஶ்லேஷவிநாஶௌ தத்வ்யபதேஶாத்” என்ற ஸூத்ரத்தின் பொருள் இங்கு உணரத்தக்கது; அது வருமாறு:—வித்யாஸ்வரூபம் விசோதிக்கப்பட்ட பின்னர் வித்யையின் பலன் விசோதிக்கப்படுகின்றது; ப்ரஹ்மவித்யை யுணர்ந்த புருஷனுக்கு அதற்கு முந்தின பாபங்கள் நசித்தொழிதலும் அதற்குப் பிந்தின பாபங்களின்பற்று உண்டாகாமையும் சுருதியிற் கூறப்பட்டுள்ளன; “தத்யதேஷீகதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத, ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே.” என்கிற சுருதியானது முந்தின பாபங்களின் விநாசத்தைக் கூறுவது; “தத்யதா புஷ்கரபலாஶ ஆபோ ந ஶ்லிஷ்யந்த ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே” “தஸ்யைவாத்மா பதவித்தம் விதித்வா। ந கர்மணா லிப்யதே பாபகேந।” என்கிற சுருதிகள் பிந்தின பாபங்களின் பற்றில்லாமையைக் கூறுவன. இவ்விரண்டும் பொருந்துமா பொருந்தாதா? என்ற விசாரத்தில், பொருந்தாதென்று பூர்வபக்ஷம். எங்ஙனே யென்னில், “நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிஶதைரபி” [கருமபலன் அநுபவித்தே அறவேணும்] என்ற சாஸ்திரத்தோடு விரோதிக்குமாதலால்.— ஆகில், முந்தின பாபங்கள் நசித்தொழிதல் பிந்தின பாபங்களின் பற்றுண்டாகாமை என்கிற இவ்வர்த்தமும் சாஸ்த்ரோக்தமாகையால் அதை அப்ராமாணிகமாகக் கூறுதல் தகுமோ? எனின்; மேற்கூறிய [பூர்வபாபவிநாச, உத்தரபாப அச்லேஷரூபமான] அர்த்தம் மோக்ஷஸாதநமான வித்யையை விதிக்கும் வாக்ய சேஷத்தி லுள்ளதாகையால் அது வித்யையின் ஸ்தோத்ரத்திற்காகப் பிறந்ததென்று உபபத்தி கூறிவிடலாம். ஆகையினால், ‘கருமபலன் அநுபவித்தே அறவேணும்’ என்கிற சாஸ்த்ரத்திற்கு விருத்தமாகச் சொல்லுவது பொருந்தாது என்ற இப் பூர்வபக்ஷத்தின்மேல் ஸித்தாந்தம் கூறப்படுகின்றது—[தததிகம இத்யாதி.] “ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே” என்ற சுருதி பூர்வபாபவிநாசத்தையும், “ஏவம்விதி பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே” என்ற சுருதி உத்தரபாப அச்லேஷத்தையும் சொல்லுகையாலே ப்ரஹ்மவித்யையை உணர்ந்த



http://acharya.org

புருஷனுக்கு அவ்வித்யையின் மஹிமையினால் உத்தரபூர்வ பாபங்களின் அச்லேஷ
விநாசங்கள் கூடும். "நாஹ்யுக்தம் க்ஷீயதே கர்ம" என்ற சாஸ்த்ரத்தோடு விரோதி
க்குமென்று சொன்னதேயென்னில்; விரோத மொன்றுமில்லை; விஷய பேதங்
கொண்டு இரண்டு சாஸ்த்ரங்களையும் பொருந்த விடவேணும். விஷயபேதம் எவ்வா
றெனில் "நாபுக்தம் க்ஷீயதே கர்ம" என்ற சாஸ்த்ரம்-கருமங்கள் பலன் தருவதில்
திண்ணிய வல்லமையுள்ளன வெனக் கூறுவதை விஷயமாகவுடையது. "ஏவம்
ஹாஸ்ய" இத்யாதி ச்ருதிகள்—பூர்வ பாபங்களுக்குள்ள ஸம்ஸ்காரந சக்தியை
நாசஞ் செய்வதிலும், மேல்வரும் பாபங்களுக்குள்ள பலனளிக்கும் சக்தியைத்
தடை செய்வதிலும் ப்ரஹ்மவித்யை வல்லமையுள்ளதெனக் கூறுவதை விஷய
மாக வுடையன. ஆகவே இரண்டிற்கும் விஷயம் வேறுபட்டதாயிற்று. அக்நிக்
குத் தாப ஸாமர்த்தியத்தையும் ஜலத்திற்குத் தாப நிவாரண ஸாமர்த்தியத்தை
யும் கூறுகின்ற இரண்டு பிரமாணங்கள் விஷய பேதத்தாலே அவிருத்தமாவது
போல இதனைக் கொள்க. இவ்விஷயத்தை ஸ்ரீ பாஷ்யாதிகளில் விரிவாகக் கண்டு
கொள்க.

பாபங்களைப் போக்குகையாவது—அவற்றுக்குள்ள சக்தியைப் போக்குகை.
உத்தர பாபங்களுக்கு அச்லேஷத்தைப் பிறப்பிக்கையாவது—வைதிக கருமங்
களில் அயோக்யதைக்கும் பாபகரும வாஸனைக்கும் ப்ரத்யவாயத்திற்கும்
ஹேதுவான சக்தியைப் பிறக்கவொண்ணாமற் செய்கை. பூர்வ பாபங்களை நசிப்
பிக்கையாவது, மேற்கூறிய சக்தி பிறந்தபின்னர் அதனைத் தடிக்கை. எம்பெரு
மான் திருவுள்ளத்தில் பிறக்கும் அப்ரீதியேதான் சக்தியெனப்படும். திருக்
குறுங்குடியைத் தொழுத பின்பும் அந்த அப்ரீதி நிற்குமோ? .... (கூ)

சிலையாலிலங்கை செற்றான் மற்றோர் சினவேழம் *
கொலையார் கொம்புகொண்டான் மேய குறுங்குடிமேல் *
கலையார் பனுவல் வல்லான் கலியனொலிமாலை *
நிலையார் பாடல்பாடப் பாவம் நில்லாவே. (கு௦)

| | |
|---|---|
| சிலையால் | சார்ங்கத்தாலே |
| இலங்கை | லங்காபுரியை |
| செற்றான் | அழித்தவனும், |
| மற்று | அன்றியும் |
| சினம் | சீற்றங்கொண்ட |
| ஓர் வேழம் | (குவலயாபீடமென்கிற) ஒருயானையினது |
| கொலை ஆர் | கொலைத்தொழில்வல்ல |
| கொம்பு | தந்தங்களை |
| கொண்டான் | முறித்துக்கொண்டவனான பெருமான் |

| | |
|---|---|
| மேய | நித்யவாஸம்பண்ணுகிற |
| குறுங்குடி மேல் | திருக்குறுங்குடி விஷயமாக, |
| கலை ஆர் பனுவல் வல்லான் | சாஸ்த்ரோக்த லக்ஷணங்களமைந்த கவிகளைப் பாடவல்லவரான |
| கலியன் | திருமங்கையாழ்வார் |
| ஒலி | அருளிச்செய்த |
| மாலை | சொல்மாலையாகிய |
| நிலை ஆர் பாடல் | நிலைநிற்கும்பாசுரமாகிய [வேதரூபமான] இத்திருமொழியை |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| பாட | பாடவே | நில்லா | நில்லாமல் ஓடிப்போம். |
| பாவம் | பாவங்கள் | | |

* * *—ராம க்ருஷ்ணாதி அவதாரங்கள் செய்தருளி விரோதி நிரஸநம் பண்ணின பெருமான் இன்னமும் ஆச்ரித விரோதிகளைத் தொலைக்கும்பொருட்டு எழுந்தருளியிருக்குமிடமான திருக்குறுங்குடித் திருப்பதி விஷயமாகத் திருமங்கையாழ்வாரருளிச்செய்த இத்திருமொழியைக் கற்று வல்லவர்கள் பாவந் தொலையப் பெறுவரென்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று. .... (௧௦)

அடிவரவு:—அக்கு துங்கார் வாழ சிரமுன் கவ்வை தீநீர் வல்லி நாரார் நின்ற நிலையால் தந்தை.

ஆறாந் திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## ஒன்பதாம்பத்து—ஏழாந்திருமொழி,

# தந்தை தாய் மக்களே.

உரையவதாரிகை:—பாண்டி நாட்டுத் திருப்பதிகளின் அநுபவம் தலைக்கட்டாதிருக்கச் செய்தேயும் ஆழ்வாருடைய திருவுள்ளம் மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான திருவல்லவாழ்த் திருப்பதியில் சென்று மூண்டது; அதனை அநுபவிக்கிறார் இத்திருமொழியில்.

இவ்வாழ்வார் மங்களாசாஸநஞ் செய்தருளின மலைநாட்டுத் திருப்பதிகள் மூன்று; திருவல்லவாழ், திருமூழிக்களம், திருநாவாய் என்பன. மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றும் நான்கு வகுப்பாகவுள்ளன; திருவித்துவக்கோடும் திருநாவாயும் ஒரு இடவகுப்பு; திருக்காட்கரையும் திருமூழிக்களமும் மற்றோரிடவகுப்பு. திருச்சிற்றாறு, குட்டநாட்டுத்திருப்புலியூர், திருவாறன்விளை, திருவண்வண்டூர், திருவல்லவாழ், திருக்கடித்தானம் ஆகிய இவ்வாறு திருப்பதிகளும் வேறோரிட வகுப்பு. திருவண்பரிசாரம், திருவாட்டாறு, திருவனந்தபுரம் ஆகிய இம்மூன்று திருப்பதிகளும் ஓரிடவகுப்பு. இந்நான்கு வகுப்புகளிலும் மங்களா சாஸநஞ் செய்தருளியவர் நம்மாழ்வார்; மூன்று வகுப்புகளில் மங்களாசாஸநஞ்செய்தருளியவர் இவ்வாழ்வார்; ஒருவகுப்பில் மங்களாசாஸநஞ் செய்தருளியவர் குலசேகராழ்வார்.

திருச்செங்குன்றூர்ப் ப்ராந்தத்திலுள்ளது திருவல்லவாழ். இத்தலம் அவ்விடத்தவர்களால் 'திருவல்லா' என வழங்கப்படும். பெரிய நகரமாகவுள்ளது

http://acharya.org

இவ்வூர். ஸந்நிதிக்குள் ஸ்த்ரீகளைப் புகவிடுவதில்லையென்பது இத்தலத்திற்கு ஒரு விசேஷம்.

கீழ்த்திருமொழியில் "வல்லிச் சிறு நுண்ணிடையாரிடை நீர் வைக்கின்ற அல்லல் சிந்தை தவிர அடைமின்" என்று பரோபதேசத்துக்கு உறுப்பாக விஷயாந்தரங்களின் தண்மையை ஸ்மரித்தார்; பிறர்க்கு உபதேசிக்கிற நாம் இதில் நின்ற நிலை என்ன? என்று தம்மைப்பார்த்தார்; தமக்கு இன்னமும் ஸம்ஸார வாஸனை கழிந்ததில்லையாயிற்று. இழவுக்கு அடியான சரீரஸம்பந்தம் இன்னமும் தொடர்ச்சியறாதே நின்றது. போக்யமாய்த் தோற்றுகிற விஷயங்கள் ஸமீபத்திலுள்ளனவாயிருந்தன; ஐயோ! இப்படுகுழிகளையெல்லாம் எப்படி தப்பப் போகிறோமென்று கவலை மிகப்பெற்றார்; திருவல்லவாழ்த் திருப்பதியை வாயாலே சொல்லுவதாக நெஞ்சு மருவப்பெற்றால் நன்று என்று தோன்றிற்று; தோன்றவே, "வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவுநெஞ்சே" என்று தம் திருவுள்ளத்திற்கு உரைக்கிறார். .... .... .... .... .... (*)

தந்தைதாய் மக்களே சுற்றமென்று உற்றவர் பற்றிநின்ற *
பந்தமார் வாழ்க்கையை நொந்துநீ பழியெனக் கருதினையேல் *
அந்தமாயாதியாய் ஆதிக்குமாதியா யாயனாய *
மைந்தனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவுநெஞ்சே! (௧)

| | |
|---|---|
| நெஞ்சே | மனமே!, |
| தந்தை | தகப்பனென்றும் |
| தாய் | தாயென்றும் |
| மக்கள் | பிள்ளைகளென்றும் |
| சுற்றம் | ஜ்ஞாதிகளென்றும் |
| உற்றவர் என்ற | மற்றும் உறவுமுறையாரென்றும் |
| பற்றி நின்ற | பற்றிக்கொண்டிருக்கிற |
| பந்தம் ஆர் வாழ்க்கையை | ஸம்ஸாரபந்தம் வாய்ந்த வாழ்கை |
| நீ நொந்து | நீ வெறுத்து |
| பழி என | (இந்தவாழ்வு) அவத்யமென்று |
| கருதினாய் எல் | நினைப்பாயாகில், |

| | |
|---|---|
| அந்தம் ஆய் | (ப்ரளயத்தில்) லயத்துக்கு ஆச்ரயமாயும் |
| ஆதி ஆய் | உத்பத்திஸ்தாநமாயும் |
| ஆதிக்கும் ஆதி ஆய் | காரணாவஸ்தையிலுள்ள சேதநாசேதநங்களுக்கும் நிர்வாஹகனாயும் |
| ஆயன் ஆய | கோபாலக்ருஷ்ணனாக அவதரித்தவனுமான. |
| மைந்தனார் | பெருமானுடைய |
| வல்லவாழ் | திருவல்லவாழென்கிற திருப்பதியை |
| சொல்லும் ஆ | வாயாற்சொல்லுவதில் |
| வல்லை ஆய் | வல்லமையுடையையாய் |
| மருவு | பொருந்து. |

* * *—நெஞ்சமே!, 1. "சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும், மேலாத் தாய்தந்தையு மவரேயினி யாவாரே" என்கிறபடியே நமக்கு எல்லாவுறவுமுறையும் திருமகள் கொழுநனே யென்று அத்யவஸாயங் கொண்டிருக்க ப்ராப்தமாயிருக்க, அதற்கு மாறாக "அன்னையத்த னென்புத்தி

---

1. திருவாய்மொழி 5—1—8.

http://acharya.org

ரர் பூமி வாசவார் குழலாளென்று மயங்கி" என்னுமாபோலே ஆபாஸ பந்துக்க
ளிடத்தில் பற்றுவைத்து இன்னமும் ஸம்ஸார பந்தத்திற்கே ஆட்பட்டிருக்கும்
வாழ்வு போதும் போதுமென்று வெறுத்து ஈச்வரசேஷமான ஆத்மஸ்வரூபத்
துக்கு ஒரு அவத்யமும் விளையாதே நோக்கிக்கொள்ள வேண்டில் திருவல்ல
வாழ்ப்பதியை வாயாற் சொல்லவாகிலும் இசைந்திடுவாயாக—என்கிறார்.

"பந்தமார் வாழ்க்கையைப் பழியெனக் கருதினையேல் வல்லவாழ் சொல்
லுமா மருவு"=ஸம்ஸார வாழ்க்கையில் பற்றுள்ளவர்கள் பகவத் விஷயத்தைப்
பற்றுவதானது § செருப்பு வைத்துத் திருவடி தொழுவதை யொக்குமாதலால்,
ஸம்ஸார வாழ்க்கையில் வெறுப்பு உண்டானால் பகவத் விஷயத்தைப் பற்றப்பார்
என்கிறது. ஸம்ஸார வாழ்க்கையில் வெறுப்பு உண்டாயிற்றில்லையாகில் இன்ன
மும் அந்த வன்சேற்றிலேயே அழுந்திக்கிட என்னத் திருவுள்ளம் போலும்.

'பந்தஃ' என்னும் வடசொல் பந்தமெனத் திரிந்தது.

திருவல்லவாழ் யாருடையது? எம்பெருமானுடையது. அவன் எப்படிப்
பட்டவன்? அந்தமாயாதியாய் ஆதிக்குமாதியாய் ஆயனாய் மைந்தன். [அந்த
மாய்.] ஜகத்தின் உபஸம்ஹாரக்ரமம் சொல்லுமடைவில் "வ்யாப்ய …தை
…" என்றுவரிசையாகச் சொல்லிக்கொண்டுபோய்முடிவில்
"தமஃ பரே தேவ ஏகீபவதி" என்று எம்பெருமானளவில் லயத்தின் முடிவு
கட்டப்பட்டுள்ளமையறிக. [ஆதியாய்] ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே உத்பத்தி
ஸ்தானமும் தானேயாயிருக்கை. [ஆதிக்குமாதியாய்] அந்தந்த மதஸ்தர்கள் ஜகத்
காரண வஸ்துவாகக் கொள்ளுகிற பரமாணு, ப்ரதாநம், ப்ரஜாபதி, பசுபதி முத
லானவற்றுக்கும் காரண பூதன்—என்று பொருள்சொல்லிவிடக் கூடுமாயினும்,
பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம் பற்றின பொருள் இதுவன்று; "காரணு
வஸ்தமான சிதசித்துக்களுக்கும் நிர்வாஹகனாய்" என்பது வியாக்கியான வாக்கி
யம். (இதனை விவரிப்போம்.) உலகத்தில் ஒருகாரியம் பிறக்கவேணுமானால்
அதற்கு மூவகைபான காரணங்களுண்டு, நிமித்தகாரணம், உபாதாநகாரணம்,
ஸஹகாரிகாரணம் என்பன. இவற்றுள் நிமித்த காரணமாவது — உபாதாந
வஸ்துவைக் கார்யரூபேண விகாரப்படுத்துகிற கர்த்தாவாகிய வஸ்து. உபாதாந
காரணமாவது—காரியப் பொருளாக விகாரப்படுவதற்கு உரிய வஸ்து. ஸஹகாரி
காரணமாவது—காரியம் பிறப்பதற்கு உபகரணமான வஸ்து. பானையாகிற

§ செருப்பு வைத்துத் திருவடி தொழுகையாவது—செருப்புடன் நடந்துகொண்டிருந்த
ஒருவன் தேவாலயம் எதிர்ப்படக்கண்டு உள்ளே புக்குப் பெருமானைத் தொழவிரும்பிச் செருப்
புடன் ஸந்நிதிக்குள் புக வொண்ணாமையாலே அதைக் கோபுரவாசலில் விட்டிட்டுப் பெருமா
ளருகிற் சென்ற அளவிலும் 'செருப்பை யாரேனும் கொள்ளை கொள்வரோ!, என்கிற
கவலையே இவனது நெஞ்சை ஆக்ரமித்துக்கொண்டிருந்ததால் அதுவே ஞாபகமாயிருந்து விரைந்து
திரும்பிவரவேண்டி அர்ச்சகரை நோக்கி 'ஸ்ரீ சடகோபன் ஸாதிக்க' என்று ப்ரார்த்திக்க
வேண்டிய ஸ்தானத்தில்) 'ஸ்வாமின் செருப்பு ஸாதிக்க' என்றானாம்; அந்தக் கதையை
நினைப்பது

http://acharya.org

காரியம் பிறக்கவேணுமானால் குயவன் நிமித்தகாரணம்; மண் உபாதானகாரணம்; தடி, சக்கரம் முதலியன ஸஹகாரிகாரணம். இனி, உலகமாகிற காரியம் பிறக்க வேணுமானால் இம்மூவகைக் காரணம் எவையென்னில், ஈச்வரனே மூவகைக் காரணமுமாகிறானென்பது வேதாந்த ஸித்தாந்தம். எங்ஙனே யென்னில்; "ஸஹஸ்ரம் ப்ரஜாயேய" என்கிற ஸங்கல்பத்தோடு கூடியவனைக்கொண்டு நிமித்த காரணமாகிறான்; நாமரூப விபாகங்களுக்கு அர்ஹமல்லாதபடி தன்னுடன் கூடிக்கிடக்கிற ஸூக்ஷ்ம சேதநா சேதநங்களோடே கூடினவனைக் கொண்டு உபாதாந காரணமாகிறான். ஞானம் சக்தி முதலிய குணங்களோடு கூடினவனைக் கொண்டு ஸஹகாரி காரணமாகிறான். இப்படி, தானே ஜகத்தாய்ப்பரிணமிக்குமாகில் "அவிகாராய சுத்தாய= அவிகாராய சுத்தாய" இத்யாதிப்ரமாணங்கள் எம்பெருமானை விகாரமற்றவனைகச் சொல்லியிருப்பது எங்ஙனே பொருந்துமென்னில்; சேதநா சேதநங்களாகிற விசேஷணத்தோடு கூடின தானே ஜகத்தாய்ப் பரிணமிக்குமளவில் விசேஷ்யமான ஸ்வரூபத்துக்கு விகாரமில்லாமையாலே அது பொருந்தக் குறையில்லை. ஸ்வரூபத்துக்கு விகாரமில்லையாகில் இவன் தானே ஜகத்தாய்ப் பரிணமிக்கிறானென்று சொன்ன பரிணாமம் இவனுக்கு உண்டாகிறபடி எங்ஙனே யென்னில்; அது ஸாக்ஷாத்தாகவன்று; தன்னைவிட்டுப் பிரியாத விசேஷணமாயிருக்கிற சேதநாசேதநரூப சரீரத்வாரா உண்டாகிறதாகையாலே பொருந்தாமை யொன்றுமில்லை. ஆகையாலே காரணாவஸ்தை ஸூக்ஷ்ம சித்சித்துக்களுக்கு ஆகின்றது; ஆதிக்கும் ஆதியாய் என்றவிடத்தில் 'ஆதிக்கும்' என்ற பதத்தாலே காரணாவஸ்தமான சித்சித்துக்களைச் சொல்லுகிறது; 'ஆதியாய்' என்றது—அவற்றுக்கும் நிர்வாஹகனை எம்பெருமானைச் சொல்லிற்றாகிறதென்க. .... ... .... .... .... .... (க)

மின்னுமா வல்லியும் வஞ்சியும்வென்ற நுண்ணிடை நுடங்கும் *
அன்னமென் னடையினார் கலவியை அருவருத்தஞ்சினாயேல் *
துன்னுமாமணி முடிப்பஞ்சவர்க்காகி முன் தூதுசென்ற *
மன்னனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவுநெஞ்சே! (உ)

நெஞ்சே!—;

| | |
|---|---|
| மின்னும் | மின்னலையும் |
| மா வல்லியும் | அழகிய கொடியையும் |
| வஞ்சியும் | வஞ்சிக் கொம்பையும் |
| வென்ற | தோற்பித்த |
| நுண் இடை | நுட்பமான இடுப்பு |
| நடங்கும் | துவளும்படியிருப்பவர்களாய் |
| அன்னம் மென் நடையினார் | அன்னம்போல் மெதுவான நடையையுடையரான மாதருடைய |
| கலவியை | புணர்ச்சியை |
| அருவருத்து | வெறுத்து |
| அஞ்சினாய் எல் | அச்சமுறுவாயாகில், |
| முன் | முன்பொருகால் |
| துன்னு மா மணி முடி பஞ்சவர்க்கு ஆகி | நெருங்கின சிறந்த ரத்னங்களிழைத்த கிரீட மணியத்தக்க பஞ்சபாண்டவர்களுக்காக |
| தூது சென்ற | தூது நடந்த |

மன்னனார் வல்லவாழ் * * * மருவு—.

http://acharya.org

* * *—மின்னலையும் கொடியையும் வஞ்சிக் கொம்பையும் தோற்பிக்கும்படி நுட்பமான இடையையுடையராய் அன்னம்போலே மெதுவாக நடப்பவரான மாதர்களுடனே கலந்து வாழ்வது மிகவும் பொல்லாது; அது கடிது ஸ்வரூபத்துக்கும் நாசம்; ஆனால்—என்று வெறுப்புக்கொண்டு நெஞ்சமே! உஜ்ஜீவிக்க வழிதேடுவாயாகில்; ஆச்ரிதர்கட்குக் கையாளாயிருக்கும் தன்மையைக் குன்றிலிட்ட விளக்குப் போலாக்கப் பஞ்சபாண்டவர்களுக்குத் தூதெழுந்தருளின தேவாதி தேவன் வாழ்கிற திருவல்லவாழிலே பொருந்தப்பார் என்றதாயிற்று.

"மின்னும் ஆவல்லியும்" என்று பிரித்தார் அரும்பதவுரைகாரர்; அது வேண்டா; 'மாவல்லியும்' என்றே பிரிக்க. அஞ்சினையேல்="பாம்போடொரு கூரையிலே பயின்றாற்போல்" என்னுமாபோலே இவர்களோடே கூடி நாம் எங்ஙனே வாழ்வது! என்று பயமுண்டாகில் என்றபடி.

துன்னுமாமணி முடிப்பஞ்சவர்க்கு=கண்ணபிரான் துரியோதனனிடம் பக்கல் தூது செல்லுங்காலத்தில் பாண்டவர்கள் முடியிழந்து கிடந்தாலும் அவர்களை முடிபுனைந்து அரசாட்சிபுரிய உரியார் என்னும் பகவதபிப்ராயத்தாலே இவ்வண்ணமருளிச் செய்யப்பட்டதென்க. ... .... (உ

பூணுலாமென் முலைப்பாவைமார் பொய்யினை மெய்யிதென்று *
பேணுவார் பேசுமப்பேச்சை நீ பிழையெனக் கருதினையேல் *
நீணிலா வெண்குடை வாணனார் வேள்வியில் மண்ணிரந்த *
மாணியார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவுநெஞ்சே! (௩)

நெஞ்சே!—;

| | |
|---|---|
| பூண் உலாம் | ஆபரணங்கள் விளங்குகின்ற |
| மெல் முலை | மெல்லிய முலைகளையுடைய |
| பாவைமார் | ஸ்த்ரீகளினுடைய |
| பொய்யினை | சூதுகளை |
| இது மெய் என்று பேணுவார் பேசும் | இதுமெய்யென்று ஆதரிப்பவர்கள் பேசுகின்ற |
| அப் பேச்சை | அப்படிப்பட்ட வார்த்தைகளை |
| பிழை என நீ கருதினையேல் | தப்பென்று நீ கருதுவாயாகில், |
| நீள் நிலா வெண் குடை | பரந்த நிலாவைப்போன்ற வெண்கொற்றக் குடையுடனே |
| வாணனார் | வாழ்பவனான மஹாபலியினுடைய |
| வேள்வியில் | யாகத்திலே |
| மண் | (மூவடி) மண்ணை |
| இரந்த | யாசித்த |
| மாணியார் | பிரமசாரி வாமநமூர்த்தியானது |

வல்லவாழ் * * * மருவு—.

* * *—ஆண்களைச் செயற்கைபழகாலே மயக்குதற்காகப் பலவகை ஆபரணங்கள் பூண்ட முலைத்தடங்களையுடையரான ஸ்த்ரீகள் பொய்யாகப் பேசும் புறனுரைகளை மெய்யாகக் கொண்டு அவர்கள் பக்கல் ஆழங்காற்பட்டிருக்கும் ஸம்ஸாரிகளுடைய பேச்சுக்கள் நெஞ்சமே! உனக்கு அஸஹ்யமாயிருந்தனவாகில்,

http://acharya.org

தன்னுடைமையைத் தான் பெறுதற்கு இரப்பாளனாய்ச் சென்று மாவலி பக்கல் மூவடிமண் இரந்த குறட்பிரமசாரிப் பெருமான் நம்மைப் பெறுதற்கு வந்து நிற்குமிடமான திருவல்லவாழிலே பொருந்தப்பார் என்கிறார்.

பூண்=பூணப்படுவது பூண்; முக்தாஹாரம் முதலிய ஆபரணங்களைச் சொல்லுகிறது. பாவைமார்—பதுமைபோன்றவர் என்றபடி. பொய்யினை—சரீரத்தை என்னவுமாம்; பொய்யான சரீரத்திற்கு விபரீத லக்ஷணையாக 'மெய்' என்று பெயரிட்டிருக்கிறார்கள் தமிழர்; இவ்வுண்மையைத் தெரிந்துகொள்ளாதே மெய்யென்றே நினைத்துப் பேணுவார்களாயிற்று அவிவேகிகள். [பேணுவார் பேசுமப்பேச்சை] விஷயப்ரவணர்கள் பேசுகிற பேச்சு இன்னின்னவை யென்று நாம் விவரிக்க வேண்டுமோ? 'விஷயபோகமே ப்ரத்யக்ஷ ஸுகம்; பகவத்விஷயாநுபவ ஸுகமென்பது கட்டுக்கதை; அஃது உண்மையாயிருந்தாலும் காலாந்தரத்திலும் தேசாந்தரத்திலும் கிடைக்கக்கூடிய அவ்வின்பத்திற்காட்டிலும் இவ்விடத்தே இப்போதே வேண்டினபடி அநுபவிக்க வுரிய விஷயபோக ஸுகத்தை இழக்கலாமோ? என்றிப்படி பேசுகிற பேச்சுக்கள் பலவுண்டே; அவற்றைப் பிழையெனக் கருதினையேல். .... .... .... .... (௫)

பண்ணுலாமென்மொழிப் பாவைமார் பணைமுலையணைதும் நாமென்று *
எண்ணுவா ரெண்ணமதொழித்து நீபிழைத்துய்யக் கருதினையேல் *
விண்ணுளார் விண்ணின் மீதியன்ற வேங்கடத்துளார் * வளங்கொள்முந்நீர்
வண்ணனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவுநெஞ்சே! (௬)

நெஞ்சே!—;

| | |
|---|---|
| பண் உலாம் | இசைவிளங்குகின்ற |
| மெல் மொழி | இனிய பேச்சுக்களையுடைய |
| பாவைமார் | ஸ்த்ரீகளினுடைய |
| பணை முலை | பெருத்த ஸ்தனங்களை |
| நாம் அணைதும் என்று | நாம் அணைவோமென்று |
| எண்ணுவார் | சிந்திப்பவர்களினுடைய |
| எண்ணம் அது ஒழித்து | அப்படிப்பட்ட சிந்தனையைத் தவிர்த்து |
| நீ பிழைத்து உய்ய கருதினையேல் | நீ உஜ்ஜீவிக்க வேண்டில், |
| விண் உளார் | நித்யஸூரிகளுக்காக |
| விண்ணின் மீது | பரமபதத்தில் |
| இயன்ற | காட்சிகொடுத்துக் கொண்டிருப்பவரும் |
| வேங்கடத்து உளார் | திருவேங்கடமலையில் எழுந்தருளி யிருப்பவரும் |
| வளம் கொள் முந்நீர் வண்ணனார் | அழகிய கடல்போன்ற வடிவையுடையவருமான பெருமானுடைய |

வல்லவாழ் * * * மருவு—.

* * *—ஆண்களை வசப்படுத்திக் கொள்ளுதற்காகத் தேனொழுகப் பேசுகின்ற பெண்களை அணையவேணுமென்று காதலிப்பார் திரளில் புகாதே, அந்தக் காதல் ஸ்வரூபஹாநியென்று அத்யவஸித்து அதற்குத் தப்பி உஜ்ஜீவிக்க விருப்பமுண்டாகில் நெஞ்சமே!, நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டு பரமபதத்திலிருக்கிறவர் அந்தப் பரமபதத்தோடு ஒரு போலியான ஓக்கத்தை

http://acharya.org

யுடைத்தான திருமலையிலே நிற்பவர்; அழகிய கடல்போன்ற வடிவையுடையவர் வர்த்திக்கிற திருவல்லவாழிலே பொருந்தப்பார் என்கிறார்.

அணைதும்—தன்மைப்பன்மை வினைமுற்று. .... .... .... (௪)

மஞ்சுதோய் வெண்குடை மன்னராய் வாரணம் சூழவாழ்ந்தார் *
துஞ்சினரேன்பதோர் சோல்லை நீதுயரேனக் கருதினையேல் *
நஞ்சுதோய் கோங்கைமேல் அங்கைவாய் வைத்து அவள் நாளையுண்ட *
மைந்தனூர் வல்லவாழ் சோல்லுமா வல்லையாய் மருவுநேஞ்சே! (௫)

நெஞ்சே!—;

| | |
|---|---|
| மஞ்சு தோய் வெண் குடை மன்னர் ஆய் | மேகமண்டலத்தளவு மோங்கின வெண்கொற்றக் குடையையுடைய சக்ரவர்த்திகளாய் |
| வாரணம் சூழ | யானைத்திரள் சூழ |
| வாழ்ந்தார் | வாழ்ந்தவர்கள் |
| துஞ்சினர் என்பது ஓர் சொல்லை | மாண்டுபோனார்களென்கிற வார்த்தையை |
| துயர் என | துக்கமென்று |

நீ கருதினாய் எல்—;

| | |
|---|---|
| நஞ்சு தோய் | விஷம்தோய்ந்த |
| கொங்கை மேல் | (பூதனையின்) முலைமேல் |
| அங்கை வாய் வைத்து | அகங்கையையும் வாயையும்வைத்து |
| அவள் | அப்பூதனையினுடைய |
| நாளை | ஆயுளை |
| உண்ட | முடித்த |

மைந்தனூர் * * * மருவு—.

* * *—நெஞ்சமே! இவ்வுலகத்துச் செல்வம் நிலைநிற்பதன்று; உயர்ந்த வெண்கொற்றக் குடையின்கீழ் ராஜாதிராஜர்களாய் வீற்றிருந்து யானைகள் சூழ வாழ்ந்த மஹாநுபாவர்களும் நாலுநாளிலே மாண்டுபோனார்கள் என்பதை நீ கண்டறியாயோ - கேட்டறியாயோ? ஆகையாலே இஹலோகத்து ஐச்வரியம் துயரை விளைப்பதேயன்றி நிலைநின்ற ஆநந்தரூபமன்று என்பதை நீ ப்ரதிபத்தி பண்ணினையாகில், முலையிலே விஷத்தைத் தடவிக்கொண்டு நடுநிசியிலே முலை கொடுக்கும் வ்யாஜத்தாலே கொல்லவந்த பூதனையை முடித்த பெருமான் இன்னமும் அப்படிப்பட்ட விரோதிகளை முடிப்பதற்காக நித்யஸந்நிதி பண்ணியிருக்கிற திருவல்லவாழிலே பொருந்தப்பார் என்கிறார்.

வாரணம்—தற்சம வடசொல். துஞ்சினர்—துஞ்சுதலாவது உறங்குதல்; நீண்ட வுறக்கமாகிற மரணத்தைச் சொல்லுகிறது; உபசார வழக்கு. [சொல்லைத்துயரேனக் கருதினையேல்.] 'வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பரென்பதில்லை' யென்கிற ஐச்வர்யத்தின் நிலைநில்லாமையை யறிந்து, இப்படிப்பட்ட துக்கரூபமான ஐச்வர்யத்தில் நமக்கு விருப்பம் வேண்டாவென்று எண்ணினையாகில் என்றவாறு. அங்கை—அகங்கை. அங்கைவாய்—உம்மைத் தொகை. .... (௫)

உருவினார் பிறவிசேர் ஊன்போதி நரம்புதோற் குரம்பையுள் புக்கு *
அருவிநோய் செய்துநின்றைவர்தாம் வாழ்வதற்கஞ்சினையேல் *
திருவினார் வேதநான்கைந்துதீ வேள்வியோடங்கமாறும் *
மருவினார் வல்லவாழ் சோல்லுமா வல்லையாய் மருவுநேஞ்சே! (௬)



http://acharya.org

நெஞ்சே !—;

உருவின் ஆர் பிறவிசேர் } ஸூக்ஷ்மசரீரத்தோடே கூடியிருந்து பிறப்பையடைந்து

ஊன் பொதி } மாம்ஸத்தைப் பொதிந்து கொண்டுகிடக்கிற

நரம்பு தோல் குரம்பையுள் } நரம்பும் தோலுமாகிற குடிசையினுள்ளே

ஐவர்தாம் பஞ்சேந்திரியங்களானவை,

புக்கு புகுந்து

அருவி நோய் செய்து நின்று } ஹிம்ஸைகளைப்பண்ணி நோவுபடுத்திக்கொண்டு

வாழ்வதற்கு குடியிருப்பதற்கு

அஞ்சினாய் எல் } நீ பயப்பட்டாயாகில்

திருவின் ஆர் { பரமப்ரமாணமாயிருக்கை யாகிற ஸ்ரீயோடுகூடின

வேதம் நான்கு நான்குவேதங்களையும்

அங்கம் ஆறும் ஆறு வேதங்களையும்

ஐந்து தீ பஞ்சாக்நிகளையும்

ஐந்து வேள்வி பஞ்சமஹாயஜ்ஞங்களையும்

மருவினார் { பொருந்தியிருப்பவர்கள் வாழ்கிற

வல்லவாழ் * * * மருவு—.

* * *—நெஞ்சமே! இந்த சரீரத்தின் ஹேயத்தன்மை உனக்குத் தெரியாமையில்லையே; 1. "தீண்டா வழும்புஞ் செந்நீரும் சீயும் நரம்பும் செறிதசையும், வேண்டா நாற்றமிகு முடல்" என்றன்றோ இவ்வுடலின் நிலைமையிருப்பது; இத்தகையதான சரீரத்தினுள்ளே பஞ்சேந்திரியங்களாகிற வன்குறும்பர் புகுந்து நின்று 'எனக்கு வேண்டிய விஷயத்தைக் காட்டு எனக்குவேண்டிய விஷயத்தைக் காட்டு' என்று அருவித்து நின்றிடுவதற்கு அஞ்சி உய்யும்வகையென்னென்று நாடினையாகில், நான்குவேதங்களையுமதிகரித்து அவற்றின் அங்கங்களையும் பயின்று பஞ்சாக்நிஹோத்ரிகளாய்ப் பஞ்சயஜ்ஞ பராயணர்களாயிருக்கும் வைதிகர்கள் வாழுமிடமான திருவல்லவாழிலே பொருந்தப்பார் என்கிறது.

உரு என்றது ஸூக்ஷ்ம சரீரத்தை; குரம்பை என்றது ஸ்தூல சரீரத்தை. நித்யமான ஆத்ம வஸ்துவுக்குப் பிறப்பாவது—ஸூக்ஷ்ம சரீரத்தோடேகூட ஸ்தூல சரீரத்திலே பிரவேசிக்கையாம். .... .... .... .... (கூ)

நோயெலாம் பெய்ததோ ராக்கையை மெய்யெனக்கொண்டு * வாளா
பேயர்தாம் பேசும்அப்பேச்சை நீபிழையெனக் கருதினாயேல் *
தீயுலாவெங்கதிர்த் திங்களாய் மங்குல்வா னாகிநின்ற *
மாயனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவுநெஞ்சே! (எ)

நெஞ்சே !—;

நோய் எலாம் எல்லாநோய்களையும்

பெய்தது இட்டுப்பண்ணின

ஓர் ஆக்கையை சரீரத்தை

மெய் என கொண்டு } மெய்யென்றே எண்ணிக் கொண்டு

பேயர்தாம் அவிவேகிகள்

வாளா வீணாக

பேசும் அப்பேச்சை } பேசுகிற பேச்சுக்களை

பிழை என நீ கருதினாய் ஏல் } பிசகென்று நீ நினைத்தாயாகில் ;

தீ உலாம் வெம் கதிர் { ஜ்வாலையோடு கூடின உஷ்ணகிரணனான ஸூரியனாகவும்

1. திருவரங்கக் கலம்பகம்.

http://acharya.org

| | |
|---|---|
| திங்கள் ஆய் | சந்திரனாகவும் |
| மங்குல் வான் ஆகி நின்ற | மேகஸஞ்சாரத்தையுடைய ஆகாசமாகவும் பரம்பி நிற்கின்ற |
| மாயனார் | ஆச்சரியபூதனான பெருமானுடைய |

வல்லவாழ் * * * மருவு—.

* * *—நெஞ்சமே! உலகத்தில் எத்தனை வகையான நோய்களுண்டோ, அவையெல்லாவற்றையும் உபாதான காரணமாகக் கொண்டு நிருமிக்கப்பட்டதாயிற்று இவ்வுடல்; பின்னவுக்குள்ள நிலையுறுதியும் இவ்வுடலுக் கில்லாமையாலே விபரீதலக்ஷணையாக இதனை 'மெய்' என்ற சொல்லாலே வழங்கி வருகிறார்கள்; உண்மையில் இது பொய் என்று உணர்ந்துகொள்ளாதே, இந்த சரீரத்திற்கு மேற்பட ஆத்மா வேறொருவனில்லை யென்றும் இந்த சரீரத்திற்கே கரைந்து நையவேண்டுமென்றும் கொண்டிருக்கிற பேயர்களின் பேச்சிலே விச்வாஸமொழிந்து ஆத்மோஜ்ஜீவனத்திற்கு வழிதேடுவாயாகில், ஜகத் ஸ்வரூபியாய்ப் பார்த்து நிற்கிற ஆச்சரிய பூதனான எம்பெருமான் நித்யவாஸம்பண்ணுகிற திருவல்லவாழிலே பொருந்தப்பார் என்றாராயிற்று.

'யாக்கை' என்னுஞ் சொல் 'ஆக்கை' யென மருவி வந்துள்ளது; யாக்கை என்பதற்கு—(உயிரைக்) கட்டுப்படுத்துவதென்று காரணப் பொருள். .... (எ)

மஞ்சுசேர் வானெரி நீர்நிலம் காலிவை மயங்கிநின்ற *
அஞ்சுசே ராக்கையை அரணமன் றென்றுய்யக் கருதினையேல் *
சந்துசேர் மென்முலைப் பொன்மலர்ப் பாவையும் தாமும் * நாளும்
வந்துசேர் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவுநெஞ்சே! (அ)

நெஞ்சே!—;

| | |
|---|---|
| மஞ்சு சேர் வான் | மேகங்கள் சேர்ந்த ஆகாசம் |
| எரி | அக்நி |
| நீர் | ஜலம் |
| நிலம் | பூமி |
| கால் | காற்று ஆகிய |
| இவை | இப்பஞ்சபூதங்களும் |
| மயங்கி நின்ற | கூடிவர்த்திக்கிற |
| அஞ்சு சேர் ஆக்கையை | பாஞ்ச பௌதிகமான சரீரத்தை |
| அரணம் அன்று என்று | ரக்ஷகமல்லவென்று கொண்டு |
| உய்ய | உஜ்ஜீவித்துப் போக |
| கருதினாய் ஏல் | நினைத்தாயாகில் |
| சந்து சேர் | சந்தனமணிந்த |
| மென் முலை | மெல்லியமுலைகளையுடைய |
| பொன் மலர் பாவையும் தாமும் | பெரியபிராட்டியாரும் தாமுமாக |
| நாளும் | எப்போதும் |
| வந்து சேர் | கூடிவாழுமிடமான |

வல்லவாழ் * * * மருவு—.

* * *—நெஞ்சமே!, நிலம் நீர் தீ கால் விசும்பு என்கிற பஞ்ச பூதங்களையுஞ் சேர்த்துச் செய்யப்பட்டதாகையாலே 'பாஞ்சபௌதிகபிண்டம்' என்று வழங்கப்பட்டு வருகின்ற இவ்வுடல் நமக்குரக்ஷகமன்று; ஆத்மாவைக்கொண்டே நாம்கடைத்தேறவேணும் என்று அத்யவஸாயம் கொண்டிருப்பாயாகில், புருஷகாரத்திற்கு வேறோரிடம் தேடிப்போக வேண்டாதே பெரியபிராட்டியாரும்

http://acharya.org

தானுமாக எம்பெருமான் நித்யஸந்நிதி பண்ணியிருக்குமிடமான திருவல்லவாழிலே பொருந்தப்பார் என்கிறார்.

'சந்தநம்' என்னும் வடசொல் 'சந்து' எனச் சிதைந்து நின்றது. .... (அ)

வெள்ளியார் பிண்டியார் போதியார் என்றிவரோதுகின்ற *
கள்ளநூல் தன்னையும் கருமமன் றென்றுய்யக் கருதினையேல் *
தெள்ளியார் கைதொழும் தேவனார் மாமுநீ ரமுதுதந்த *
வள்ளலார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவுநெஞ்சே! (கூ

| | | | |
|---|---|---|---|
| வெள்ளியார் | பாசுபதர்களென்றும் | கருதினையேல் | நினைத்தாயாகில்; |
| பிண்டியார் | ஜைநர்களென்றும் | தெள்ளியார் | தெளிவுபெற்றவர்கள் |
| போதியார் | பௌத்தர்களென்றும் | கைதொழும் | வணங்கப்பெற்ற |
| என்றிவர் | { சொல்லப்படுகிற புறமதத்தவர்கள் | தேவனார் | ஸ்வாமியாயும் |
| ஓதுகின்ற | சொல்லிக்கொண்டுதிரிகிற | மா முநீர் | பெரிய கடலில் நின்றும் |
| கள்ளம் நூல் தன்னையும் } | பொய்யான சாஸ்த்ரங்களையும் | அமுது | அமுதத்தை |
| கருமம் அன்று என்று } | 'இவை நமக்கு உபாதேய மல்ல' என்றுகொண்டு | தந்த | எடுத்துத் தந்தருளின |
| உய்ய | உஜ்ஜீவித்துப்போக | வள்ளலார் | { உதாரராயுமிருக்கிற பெருமானுடையதான |
| | | வல்லவாழ் * * * மருவு—. | |

* * *—கீழ் எட்டு பாசுரங்களிலும் அருளிச்செய்தபடியே ஆபாஸ பந்துக்கள் உற்ற துணையல்லர் என்கிற வுணர்ச்சியும், விஷயபோகங்கள் நமக்கு ஸ்வரூப ப்ராப்தமன்று என்கிற வுணர்ச்சியும், இஹலோகத்துச் செல்வம் நிலைநிற்பதன்று என்கிற வுணர்ச்சியும், இவ்வுடல் துச்சம் என்னுமுணர்ச்சியும் உண்டாகப் பெற்றாலும் கண்டவிடமெங்கும் பரவிக்கிடக்கிற வேதபாஹ்யமதங்களிலே அந்வயிக்கப் பெறாமையாகிற பாக்கியமுண்டாவது அருமையாதலால் அதனை இப்பாசுரத்தில் ப்ரஸ்தாவிக்கிறார்.

வெள்ளியார் என்பதற்கு இரண்டுவகையாகப் பொருள்கூறுவர்; வெள்ளியென்று சுக்ரனுக்குப் பேராகையாலே அவனைச் சொல்லலாம்; லோகாயத மதத்திற்கு அவன் ப்ரவர்த்தகனென்க. இனி, வெள்ளிமலையாகிய கைலாஸகிரியை இருப்பிடமாகவுடைய பசுபதியைச் சொல்லவுமாம்; பாசுபத மதத்திற்கு அவன் பிரவர்த்தகனாதல் அறிக. [பிண்டியார்] பிண்டியென்று அசோகமரத்திற்குப்பெயர்; அதனை இருப்பிடமாகவுடைய அருக தெய்வம் ஜைநர்களுடையது. (ஜைநமதத்தினரான பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலின் தொடக்கத்தில் உள்ள கடவுள் வணக்கத்தில் "பூமலியசோகின் புனை நிழலமர்ந்த" என்றது காண்க.) [போதியார்] போதியென்று அரசமரத்திற்குப் பெயர்; அதனை இருப்பிடமாக வுடையது புத்த தேவதை; [புத்த தேவனைப் போதிவேந்தனென்ன வழங்குதல் காண்க.) ஆகவே போதியாரென்றது பௌத்தரைச் சொன்னபடி. ஆகவிப்படிப்

http://acharya.org

பட்ட பாஹ்ய மதஸ்தர்களின் கொள்கைகள் நமக்கு உபாதேய மல்லவென்று துணிந்து வைதிக ஸம்ப்ரதாய நிஷ்டையுடையையாகில் நெஞ்சமே! ஸ்வரூப ஜ்ஞாநிகளால் ஸேவிக்கப்படுபவரும், ப்ரயோஜநாந்தரபரர்க்குங்கூட உடம்பு நோவக் கடல்கடைந்து அமுதமளித்தவருமான பெருமாள் நித்யவாஸம் பண்ணுமிடமான திருவல்லவாழிலே பொருந்தப்பார் என்றாராயிற்று.

தெள்ளியார் என்றது தெளிவுள்ளவர்கள் என்றபடி; தெளிவாவது—'உபாய உபேயங்களிரண்டும் எம்பெருமானே' என்ற அத்யவஸாயம்; அஃது உடையவர்கள் 1. "கலக்கமில்லா நற்றவ முனிவர் கரைகண்டோர், துளக்கமில்லாவானவர்" என்கிறபடியே ஆத்மஸ்வரூபம் கைவந்திருக்கும் ஸநகாதி மஹர்ஷிகளும் முக்தரும் நித்யஸூரிகளும். மூநீர்—தொகுத்தல். .... .... .... (கூ)

மறைவலார் குறைவிலா ருறையுமூர் வல்லவாழடிகள் தம்மை *
சிறைகுலா வண்டறை சோலைசூழ் கோலநீளாலிநாடன் *
கறையுலா வேல்வல்ல கலியன்வாயொலியிவை கற்றுவல்லார் *
இறைவரா யிருநிலம் காவல்பூண்டு இன்பம் நன்கெய்துவாரே. (க௦)

| | | | |
|---|---|---|---|
| மறை வலார் | வேதம்வல்லவர்கள் | ஆலி நாடன் | திருவாலிநாட்டுக்குத் தலைவரும் |
| குறைவு இலார் | குறைவொன்றுமில்லாத வர்களாய்க் கொண்டு | கறை உலாம் | ரத்தக்கறைகழுவாத |
| உறையும் ஊர் | நித்யவாஸம்பண்ணுமிட மான | வேல் வல்ல | வேற்படையை யுடையருமான |
| வல்லவாழ் | திருவல்லவாழில் எழுந்தருளியிருக்கிற | கலியன் | திருமங்கையாழ்வார் |
| அடிகள் தம்மை | ஸ்வாமிவிஷயமாக | வாய் ஒலி | திருவாய்மலர்ந்த |
| சிறை குலா வண்டு அறை சோலை சூழ் | சிறகையும் கொண்டாட்டத் தையுமுடைய வண்டுகள் ரீங்காரஞ்செய்யப்பெற்ற சோலைகளால் சூழப்பட்ட | இவை | இப்பத்துப் பாசுரங்களை |
| | | கற்று வல்லார் | ஓதியுணரவல்லவர்கள் |
| | | இறைவர் ஆய் | அரசர்களாயிருந்துகொண்டு |
| | | இரு நிலம் | விசாலமான இந்நிலத்தை |
| | | காவல் பூண்டு | ஆண்டு கொண்டு |
| கோலம் | அழகிய | நன்கு இன்பம் எய்துவார் | பரமாநந்தமடையப் பெறுவர். |
| நீள் | பெரிய | | |

* * *—வேதம் வல்ல அந்தணர்கள் ஒரு குறையுமின்றி * நித்யஸ்ரீர்நித்ய மங்களமாக வாழுமிடமான திருவல்லவாழென்னும் மலைநாட்டுத் திருப்பதியில் எழுந்தருளியிருக்கு மெம்பெருமான் விஷயமாகத் திருமங்கையாழ்வா ரருளிச் செய்த இத்திருமொழியை ஓதி உணருமவர்கள் இவ்விபூதியிலுள்ளவரையில் தாங்களே தலைவராயிருந்து, இவ்வுடல் நீத்தபின் நித்யவிபூதியிலே புக்கு நித்யாநந்தம் பெறுவர் என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

1. திருவாய்மொழி 8—3—10.

http://acharya.org

வலார்—வல்லார். இலார்—இல்லார்.

கறையுலாவேல்=ஓய்வின்றி சத்ருநிரஸநம் பண்ணவேண்டுகையாலே ரக்தக்கறை கழுவவும் அவகாசமற்ற வேற்படையென்க. .... .... (கo)

அடிவரவு:—தந்தை மின்னும் பூண் பண் மஞ்சு உருவின் நோய் மஞ்சுசோ வெள்ளியார் மறை முந்துற.

ஏழாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## ஒன்பதாம்பத்து—எட்டாந்திருமொழி,

# முந்துறவுரைக்கேன்.

உரையவதாரிகை:-பாண்டிநாட்டுத் திருப்பதிகளை அநுபவித்துக்கொண்டே வந்த ஆழ்வார் திருக்குறுங்குடியில் நின்றும் மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான திருவல்லவாழ்ப்பதியிலே திருவுள்ளத்தைச் செலுத்தி அவ்வநுபவமாகக் கீழ்த்திருமொழியை யருளிச்செய்து மீண்டும் பாண்டிநாட்டுத் திருப்பதிகளுள் திருவுள்ளத்தை மீட்டு இரண்டு திருமொழிகளாலே திருமாலிருஞ்சோலையை அநுபவித்தருளுகிறார். .... .... .... .... *

முந்துற வுரைக்கேன் விரைக்குழல் மடவார் கலவியை விடுதடுமாறல் *
அந்தரமேழு மலைகடலேழுமாய எம்மடிகள்தம் கோயில் *
சந்தொடு மணியு மணிமயில் தழையும் தழுவிவந் தருவிகள் நிரந்து *
வந்திழி சாரல் மாலிருஞ்சோலை வணங்குதும் வா மடநெஞ்சே. (க)

மட நெஞ்சே விதேயமான மனமே!,

முந்துற உரைக்கேன் } (உனக்கு) முக்கியமாகச் சொல்லுகிறேன் ;

(கேள்;)

விரை குழல் மடவார் கலவி } பரிமளம்மிக்க கூந்தலை யுடையரான மாதர்களின் கலவியாகிற

தடுமாறலை விடு தடுமாற்றத்தை விட்டொழி;

(அதைவிட்டுச் செய்யவேண்டுவது யாதெனில் ;)

அந்தரம் ஏழும் ஏழுதீவுகளும்

அலை கடல் ஏழும் ஆய } அலையெறிகின்ற ஸப்த ஸாகரங்களுமாய்ப் பரந்து கிடக்கிற

http://acharya.org

| | |
|---|---|
| எம் அடிகள் தம் | நம் ஸ்வாமியினுடைய |
| கோயில் | இருப்பிடமாய்,— |
| அருவிகள் | அருவிகளானவை |
| சந்தொடு | சந்தனமரங்களோடு |
| மணியும் | ரத்னங்களையும் |
| அணி மயில் தழையும் | அழகிய மயில் தோகைகளையும் |
| தழுவி வந்து | உருட்டிக்கொண்டுவந்து |
| நிரந்து | நெருங்கி |
| வந்து இழி | ப்ரவஹிக்கப்பெற்ற |
| சாரல் | பக்கங்களையுடைத்தான |
| மாலிருஞ் சோலை | திருமாலிருஞ் சோலையை |
| வணங்குதும் வா | வணங்குவோம் வா. |

* * *—நெஞ்சே! ப்ராப்தமான பகவத்விஷயத்தை வணங்கினாலும் வணங்கு, தவிரிலும் தவிரு; முந்துற முன்னம் விஷயாந்தரஸங்கத்தை யொழித்து நிற்கப்பாராய் என்கிறார் முதலடியில்.

இவ்வாழ்வார் மேல் பதினோராம்பத்தில் "கண்ணாளன் கண்ணமங்கை நகராளன் கழல்சூடி அவனை உள்ளத்து, எண்ணாத மானிடத்தை யெண்ணாதபோதெல்லாமினியவாறே" என்றருளிச் செய்கிறார்; இதன் உட்கருத்து யாதெனில், 'எம்பெருமானைச் சிந்திக்கவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை; எம்பெருமானைச் சிந்தியாத பாவிகளை நெஞ்சிலிட்டெண்ணா திருக்கவேணுமென்பதே என்னுடைய நிர்ப்பந்தம்' என்பதாம். அதுபோலவே இங்கும் அருளிச்செய்கிறார்—பகவத்விஷயத்தைப் பற்றவேண்டுவது முக்கியமன்று; இதர விஷயப்பற்றை விட்டொழிக்க வேண்டுவதே முக்கியம் என்பது தோன்ற முந்துறவுரைக்கேன் என்கிறார்.

விட்டொழிக்க வேண்டியவர்களை "விரைக்குழல் மடவார்" என்று சிறப்பித்துக் கூறுவானேன்? உபாதேயமான விஷயங்களுக்கன்றோ சிறப்பான விசேஷணமிடவேண்டும்; ஹேயமான விஷயங்களுக்கு அவற்றின் இழிவு தோன்ற விசேஷணமிட வேண்டாவோ? என்னில்; இஃது உண்மையே; ஆழ்வார் தம்முடைய கருத்தாலே விரைக்குழல் மடவார் என்கிறாரல்லர்; உலகர் சொல்லிக்கொண்டு திரிகின்ற வாக்கியத்தை க்ஷேபமாக அநுவதிக்கிறபடியா மத்தனை. ஆழ்வாருடைய நாவிறு இருந்தபடி.

தடுமாறல்—இதனை எதிர்மறை வினைமுற்றாகவுங் கொள்ளலாம்; (நெஞ்சமே) தடுமாறாதே என்றபடி: தடுமாற்றமாவது—கலங்குதல், குழம்புதல். 'மடவார் கலவியையா விட்டுவிடுவது' என்று ஆலோசியாமல் சடக்கென விட்டுத் தொலை என்றவாறு.

அதனை விட்டால் வேறொன்றைப் பற்றவேணுமே; அதுதன்னை யருளிச்செய்கிறார் மேல் மூன்றடிகளாலே. ஸப்தத்வீபங்களையும் ஸப்த ஸமுத்ரங்களையும் எடுத்துக் கூறினது மற்றுமுள்ள பதார்த்தங்களுக்கெல்லாம் உபலக்ஷணமென்க. தானே காரியப் பொருள்களாக விரிந்து நிற்கின்ற பெருமான் எழுந்தருளியிருக்குமிடமாயும், சந்தன மரங்களையும் சிறந்த ரத்னங்களையும் மயில் தழைகளையும் உருட்டிக்கொண்டு அருவிகள் ப்ரவஹிக்கப் பெற்றதாயுமுள்ள திருமாலிருஞ்சோலைமலையை வணங்குவோம் வா என்றாராயிற்று.

http://acharya.org

ஸப்தத்வீபங்களாவன:—“நாவலந் தீவே இறலித் தீவே, குசையின் தீவே கிரவுஞ்சத் தீவே, சான்மலித் தீவே தெங்கின் தீவே, புட்கரத் தீவே யெனத் தீவேழே.” (திவாகரம்.)

ஸப்த ஸமுத்ரங்களாவன:—“உவரோடு கரும்புமது நெய் தயிர் பால் புனல், மாகடலேழென வகுத்தனர் புலவர்.” (இதுவுமது.)

சந்து—‘சந்தநம்’ என்ற வடசொல்லின் சிதைவு.

மாலிருஞ்சோலை=பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டில் ஒன்றும் ‘வ்ருஷகிரி’ என்று வடமொழியிற் கூறப்படுவதும், ‘கோயில் திருமலை பெருமாள் கோயில் அழகர் திருமலை’ என்று சிறப்பாக எடுத்துக் கூறப்படுகிற நான்கு திருப்பதிகளுள் ஒன்றும், “இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை யென்னும் பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர்” என்றபடி ஆன்றோர் கொண்டாடப் பெற்ற மஹிமை யுடையதுமானதொரு திவ்யதேசம். “ஆயிரம் பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே” என்றபடி மிகப்பெரிய பல சோலைகளையுடைய மலையாதலால் ‘மாலிருஞ்சோலைமலை’ என்று திருநாமமாயிற்று; மால்—பெருமை; இருமை—பெருமை; இவ்விரண்டும் தொடர்ந்து ஒரு பொருட் பன்மொழியாய் நின்றன. இனி, மால்—உயர்ச்சி; இருமை—பரப்பு என்று கொண்டு உயர்ந்து பரந்த சோலைகளையுடைய மலையென்றலு முண்டு. ... ... (க)

இண்டையும் புனலும் கொண்டிடை யின்றி யெழுமினோ தொழுதுமென்று * [இமையோர்
அண்டரும் பரவ வரவணைத் துயின்ற சுடர்முடிக் கடவுள்தம் கோயில் *
விண்டலர் தூளி வேய்வளர் புறவில் விரைமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன் *
வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை வணங்குதும் வாமட நெஞ்சே! (உ)

| | |
|---|---|
| இண்டையும் | பூமாலையையும் |
| புனலும் | தீர்த்தத்தையும் |
| கொண்டு | ஏந்திக்கொண்டு |
| இடை இன்றி | நிரந்தரமாக |
| தொழுதும் | ஸேவிப்போம் |
| எழுமின் என்று | ‘எழுந்திருங்கள்’ என்று சொல்லிக்கொண்டு |
| இமையோர் | நித்யஸூரிகளும் |
| அண்டரும் | தேவர்களும் |
| பரவ | ஆச்ரயிக்க |
| அரவு அணை துயின்ற | சேஷசயனத்தில் திருக்கண் வளர்ந்தருளு கின்றவனும் |
| சுடர் முடி | சோதிமிக்க கிரீடத்தை யுடையவனுமான |
| கடவுள் தம் | எம்பெருமானுடைய |
| கோயில் | இருப்பிடமாய்,— |
| விண்டு அலர் | விண்டுவிரியாநிற்பதாய் |
| தூளி | தூள்களை யுடையதான |
| வேய் | மூங்கில் |
| வளர் | வளரப்பெற்ற |
| புறவில் | சுற்றுப்பக்கங்களில் |
| விரை | பரிமளம் மிக்க |
| குறிஞ்சி மலரின் | குறிஞ்சிப்பூவினுடைய |
| நறு தேன் | செவ்வித்தேனிலே |
| அமர் | படிந்த |
| வண்டு | வண்டுகளை யுடைய |

சாரல், மாலிருஞ்சோலை வணங்குதும் மட நெஞ்சே வா—.

http://acharya.org

* * *—நெஞ்சமே! திருமாலிருஞ்சோலையை வணங்குவோம் வா; அஃது எப்படிப்பட்ட தலம் தெரியுமோ? மேலுலகத்தவர்கள் தங்கள் போல்வாரான பக்தர்களை நோக்கி, 'நல்ல பூமாலைகளையும் அர்க்கிய பாத்ய ஆசமநீயங்களுக்கு உரிய தீர்த்தத்தையும் சேகரித்துக்கொண்டு புறப்படுங்கோள்' என்று சொல்லிப் பலரையுங் கூட்டிக்கொண்டு வந்து ஆச்ரயிக்கத் (திருப்பாற்கடலிலே) திருவனந்தாழ்வான்மீது திருக்கண்வளர்ந்தருளின பெருமான் அவ்விடத்திற்காட்டிலும் இதுவே பாங்கானவிடமென்று போந்தருளித் திருவபிஷேகமணிந்து வாழுமிடமாயிற்று இத்திருமலை. இன்னமும், விண்டு விரிகின்ற மூங்கில்கள் வளரப்பெற்ற சுற்றுப்பக்கங்களில் நறுமணம் மிக்க குறிஞ்சிப் பூக்களினுடைய செவ்வித்தேனிலேபடிந்த வண்டுகளையுடைய பர்யந்தங்களை யுடையது. .... (உ)

பிணிவளராக்கை நீங்கநின் றேத்தப் பெருநிலமருளில் முன்னருளி *
அணிவளர் குறளா யகலிட முழுதும் அளந்தவெம் மடிகள்தம் கோயில் *
கணிவளர் வேங்கை நெடுநிலமதனில் குறவர்தம் கவணிடைத் துரந்த *
மணிவளர் சாரல் மாலிருஞ்சோலை வணங்குதும் வாமடநெஞ்சே! (ங)

மட நெஞ்சே!—;

| | |
|---|---|
| பிணி வளர் | நோய்கள் வளரப்பெற்ற |
| ஆக்கை | சரீரம் |
| நீங்க | நீங்குமாறு |
| நின்று ஏத்த | நின்று துதிப்பதற்காக |
| பெரு நிலம் | பரந்த பூமியை |
| அருளில் | க்ருபையினாலே |
| முன் அருளி | முன்னே தந்தருளினவனும் |
| அணி வளர் குறள் ஆய் | அழகுமிக்க வாமநமூர்த்தியாய் |
| அகல் இடம் முழுதும் | பூமிப்பரப்பையெல்லாம் |
| அளந்த | அளந்துகொண்டவனுமான |
| எம் அடிகள் தம் கோயில் | எம்பெருமானுடைய இருப்பிடமாய்,— |
| கணி வளர் வேங்கை | காலமுணர்த்தும் சோதிடன் போன்று வளர்கின்ற வேங்கைமரங்களையுடைய |
| நெடு நிலம் அதனில் | விசாலமான பூமியிலே |
| குறவர் | குறவர்கள் |
| தம் | தங்களுடைய |
| கவண் இடை துரந்த | கல்லெறியுங் கயிற்றில் வைத்து எறிந்த |
| மணி | மணிகளினொளி |
| வளர் | மிகுதியாகக் காணப்பெற்ற |
| சாரல் | சுற்றுப்பக்கங்களையுடைய |

மாலிருஞ்சோலை, வணங்குதும் வா—.

* * *—பிணிகள் வளராநின்ற சரீர சம்பந்தம் தொலையவேணுமென்று பக்தர்கள் தன்னைத் துதித்துப் பிரார்த்திக்கும் பொருட்டு விசாலமான இந்நிலவுலகத்தைப் படைத்தருளினவனும், இப்படி தன்னதான விபூதியைக் கொள்ளைகொண்ட மாவலியின் செருக்கை யடக்குதற்காக அழகிய வாமநமூர்த்தியாகத் திருவவதரித்து மூவடிமண் இரந்து நீரேற்கப்பெற்று நிமிர்ந்து மூவுலகமளந்துகொண்டவனுமான பெருமான் நித்ய ஸாந்நித்யம்பண்ணி யிருக்கப்பெற்ற திருமாலிருஞ்சோலையை வணங்குவோம் வா மட நெஞ்சே!.



http://acharya.org

[கணிவளர் இத்யாதி.] 'கணி' என்று சோதிடனுக்குப் பெயர்; (கணிப்பவன் என்று காரணப்பெயர்.) அத்தலத்தில் காலங் கூறுதற்குச் சோதிடரில்லை; வேங்கை முதலிய மரங்களே காலங்கூறுவனவாம்: அந்தந்த மரங்கள் உரிய காலங்களிலே புஷ்பிக்கின்றமையால் 'இதுஇன்னகாலம்,' இதுஇன்னகாலம்' என்று அதுகொண்டே அனைவரும் காலமுணர்ந்து கொள்ளும்படி யிருத்தலால் 'கணிவளர் வேங்கை' எனப்பட்டது. அன்றியே, கண்ணி என்பது கணியெனத் தொக்கியிருப்பதாகக் கொண்டு, பூங்கொத்துகள் வளரப்பெற்ற வேங்கைமரமென்று உரைக்கலாமாயினும் அது அத்துணைச் சிறவாதென்க. கவண்-கற்களை யெறியுங் கயிறு. குறவர்கள் ரத்னங்களைக் கவண்களிலிட்டு எறிவதாகக் கூறியதினால் ரத்னங்கள் எளிதாகக் கிடைக்குந் தலம் இது என்றதாம். .... (௮)

சூர்மையிலாய பேய்முலை சுவைத்துச் சுடுசர மடுசிலைத் துரந்து *
நீர்மையிலாத தாடகை மாள நினைந்தவர் மனங்கொண்ட கோயில் *
கார்மலிவேங்கை கோங்கலர் புறவில் கடிமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன் *
வார்புனல்சூழ்தண் மாலிருஞ்சோலை வணங்குதும் வாமடநெஞ்சே. (௯)

| | |
|---|---|
| சூர்மையில் ஆய | கொடுமையோடு கூடின |
| பேய் | (பூதனையென்னும்) பேய்ச்சியினுடைய |
| முலை | (விஷந்தீற்றிய) முலையை |
| சுவைத்து | (அவளுயிர்மாளச்) சுவைத்துண்டவனாய், |
| சுடு சரம் | கொடிய அம்புகளை |
| அடு சிலை துரந்து | பகைவரைமுடிக்கவல்ல வில்லிலே தொடுத்து விட்டு |
| நீர்மை இலாத தாடகை மாள நினைந்தவர் | இரக்கமற்றவளான தாடகைமுடியும்படி ஸங்கல்பித்தவனான பெருமான் |
| மனம் கொண்ட கோயில் | திருவுள்ளம்பற்றி வாழுமிடமாய்,- |

| | |
|---|---|
| கார் மலி | மேகமண்டலம்வரை ஓங்கிவளர்ந்த |
| வேங்கை | வேங்கைமரங்களும் |
| கோங்கு | கோங்குமரங்களும் |
| அலர் | விகஸிக்கப்பெற்ற |
| புறவில் | பொழில்களிலே |
| கடி | பரிமளம்மிக்க |
| குறிஞ்சி மலரின் | குறிஞ்சிப்பூவினுடைய |
| நறு தேன் | செவ்வித்தேனினுடைய |
| வார் புனல் | ப்ரவாஹம் |
| சூழ் | சூழப்பெற்றதான |

தண் மாலிருஞ்சோலை, வணங்குதும், மட நெஞ்சே! வா-.

* * *—திருவாய்ப்பாடியில் கள்ளிரவில் நஞ்சுதீற்றிய முலையை உண்ணக்கொடுத்துக் கொல்லவந்தவளான பூதனையென்னும் பேய்ச்சியை முலையுண்கிற பாவனையிலே உயிரை யுறிஞ்சியுண்டு முடித்தவனும், விச்வாமித்ரமா முனிவருடைய வேள்வியைக் காக்கும்பொருட்டு எழுந்தருளுமடைவிலே தாடகையென்னு மரக்கியைத் தடிந்தவனுமான பெருமான் இதுவே நமக்குப் பாங்கான விடமென்று விரும்பி வர்த்திக்குமிடமான திருமாலிருஞ்சோலையை வணங்குவோம் வா மடநெஞ்சே!

http://acharya.org

சூர்மையில் ஆய=சூர்மையாவது சூரத்தனம்; பயங்கரத்தன்மை; அதனோடு கூடிய என்றபடி. இனி, "சூர்மணங்கும் தெய்வப்பெண்ணை" என்கிறபடியே, 'சூர்' என்று தெய்வப்பெண்ணைச் சொல்லிற்றாகி, தெய்வப்பெண்ணாகிய யசோதைப் பிராட்டியின் வடிவுகொண்டு வந்தவளாகையாலே ஆரோபிதமான தெய்வப் பெண்தன்மையோடு கூடின என்று முரைக்கலாம்.

கார்மலிவேங்கை=நீலவேங்கைமரம் என்னவுமாம். .... .... (௪)

வணங்கலி லரக்கன் செருக்களத் தவிய மணிமுடி யொருபதும் புரள *
அணங்கெழுந் தவன்றன் கவந்தம்நின்றாட அமர்செய்த வடிகள்தம் கோயில் *
பிணங்கலில் நெடுவேய் நுதிமுகம் கிழிப்பப் பிரசம்வந்திழிதரப் பெருந்தேன் *
மணங்கமழ் சாரல் மாலிருஞ்சோலை வணங்குதும் வா மடநெஞ்சே. (௫)

மட நெஞ்சே!–;

| | |
|---|---|
| வணக்கல் இல் அரக்கன் | வணக்கமற்ற இராவணன் |
| செரு களத்து | போர்க்களத்தில் |
| அவிய | முடியும்படியாகவும் |
| மணி முடி ஒருபதும் புரள | (அவனது) மணியணிந்த முடிகள் பத்தும் தரையில் புரளும்படியாகவும் |
| அவன் தன் கவந்தம் | அவனுடைய கபந்தம் |
| அணங்கு எழுந்து | தெய்வாவேசங்கொண்டது போல |
| நின்று ஆட | நின்று ஆடும்படியாகவும் |
| அமர் செய்த | யுத்தம் பண்ணின |

அடிகள் தம் கோயில்–;

| | |
|---|---|
| பிணங்கலில் | ஒன்றுக்கொன்று பிணங்கியிருப்பதோடுகூடின |
| நெடு வேய் நுதி | நீண்ட மூங்கிலின் நுனி |
| முகம் கிழிப்ப | (மலையுச்சியிலுள்ள தேன் கூட்டின்) வாயைக்கிழிக்க, |
| பிரசம் வந்து இழிதர | (அதிலுள்ள) தேனீக்கள் சிதற |
| பெரு தேன் | அதிகமான தேனினுடைய |
| மணம் | பரிமளம் |
| கமழ் | வீசப்பெற்ற |
| சாரல் | பக்கங்களையுடைத்தான |

மாலிருஞ்சோலை, வணங்குதும் வா–.

* * *—"[illegible]—த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்" [இருபிளவாகப் பிளந்து இரு பக்கங்களிலும் இரு துண்டமாக விழுந்தாலும் விழுவனேயன்றி ஒருவர் காலில் தலைசாய விழமாட்டேன்] என்று வணங்காமுடி மன்னனாய் இறுமாந்திருந்த இராவணன் அமர்க்களத்திலே மடிய, தேவதைகளுடைய வரத்தாலே திண்ணியவையாய் மணிமயங்களான அவனது முடிகள் பத்தும் புற்று மறிந்தாற்போலப் புவிமேல் சிந்திப் புரள, அவனது கபந்தமானது தைவாவேசங் கொண்டது போல நின்றாட, ஸங்கல்பத்தாலன்றிக்கே படையெடுத்து வந்து வீரவாசி தோற்றப் பூசல் பொருத பெருமானுறையுமிடமான திருமாலிருஞ்சோலையை வணங்குவோம் வா மடநெஞ்சே! என்கிறார்.

ஒன்றோடொன்று பிணைந்து மிக்க ஒக்கத்தையுடைத்தான மூங்கில் மலைமுழஞ்சிலே வைத்த தேன்கூட்டளவும் வளர்ந்து தனது நுனியாலே அதனுடைய

http://acharya.org

வாயைக் கிழிக்க, அங்குள்ள தேனீக்கள் சிதற, அதனால் எங்கும் தேன் மண நாறப் பெற்ற சாரலையுடையதாம் இத்திருமலை.

அணங்கு—தெய்வம்; அணங்கெழுதல்—தெய்வாவேசங் கொள்ளுதல். கவந்தம்—கபந்த மென்னும் வடசொல் விகாரம்; தலைநீங்கிய உடற்குறை. பிரசம்—தேனுக்கும் தேனீக்கும் பெயர். .... .... .... .... (௫)

விடங்கலந் தமர்ந்த வரவணைத் துயின்று விளங்கனிக் கிளங்கன்று விசிறி *
குடங்கலந்தாடிக் குரவைமுன் கோத்த கூத்தவெம் மடிகள்தம் கோயில் *
தடங்கடல் முகந்து விசும்பிடைப் பிளிறத் தடவரைக் களிறென்று முனிந்து *
மடங்கல்நின் றதிரும் மாலிருஞ்சோலை வணங்குதும் வா மடநெஞ்சே. (௬)

மட நெஞ்சே!—;

விடம் கலந்து — (பிரதிகூலர்மேல் உமிழ்வதற்காக) விஷத்தோடே கூடி
அமர்ந்த — வாய்ப்பாக அமைந்த
அரவு அணை — திருவனந்தாழ்வானாகிற படுக்கையில்
துயின்று — பள்ளிகொள்பவனாயிருந்து
(அதைவிட்டுத் திருவாய்ப்பாடியிலே வந்து பிறந்தருளி)
முன் — முன்பொருகால்
விளங்கனிக்கு — (அஸுராவேசங்கொண்ட) விளாம்பழத்தின் மீது
இள கன்று — (அப்படியே அஸுராவேசங் கொண்ட ஒரு) கன்றுகுட்டியை
விசிறி — வீசியெறிந்தவனும்
குடம் கலந்து ஆடி — பலகுடங்களைச் சேர்த்தெடுத்தாடினவனும்
குரவை கோத்த — ராஸக்ரீடை நடத்தினவனும்
கூத்த — இப்படிப்பட்ட பலவகையான ஆச்சரிய சேஷ்டிதங்களையுடையனுமுள்ள
எம் அடிகள் தம் — எம்பெருமானுடைய
கோயில்—;
(மேகங்களானவை)
தட கடல் — ஆழ்ந்தகடலிலே
முகந்து — நீரைமொண்டுகொண்டு
விசும்பு இடை — ஆகாசத்திலே (ஏறி)
பிளிற — கர்ஜிக்க, (அதைக்கேட்டு)
மடங்கல் — சிங்கமானது
தட வரை களிறு என்று முனிந்து — பெரியமலையிலுள்ள யானை (கர்ஜிக்கிறது) என்றெண்ணிச் சீற்றங்கொண்டு
நின்று அதிரும் — நிலைநின்று பிரதிகர்ஜிக்கப்பெற்ற
மாலிருஞ்சோலை, வணங்குதும் வா—.

* * *—திருப்பாற்கடலிலே திருவனந்தாழ்வான் மேலே திருக்கண்வளர்ந்தருளி “ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:। நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம் = ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:—நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்” என்கிறபடியே அவ்விடத்தைவிட்டு வந்து வடமதுரையிலே பிறந்து திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளுகிற காலத்திலே கறுக்கொண்ட கஞ்சனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஒருவன் விளாமரமாகவும் மற்றொருவன் கன்றுகுட்டியாகவுமிருந்து நலியத் தேடியிருந்தவளவிலே முள்ளைக்கொண்டே முள்ளைக்களையும் நீதியிலே கன்றினால் விளவெறிந்து இரண்டையும் ஒருங்கே முடித்தவனும், கைகளிலும்

http://acharya.org

தோள்களிலும் தலையிலும் அடுக்குக் குடங்களை வைத்து ஆடுகையாகிற குடக்கூத்தை நிகழ்த்தினவனும், "𑌅𑌙𑍍𑌗𑌨𑌾𑌮𑌙𑍍𑌗𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑍇 𑌮𑌾𑌧𑌵𑌃 𑌮𑌾𑌧𑌵𑌂 𑌮𑌾𑌧𑌵𑌂𑌚𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌙𑍍𑌗𑌨𑌾 = அங்கநாமங்கநாமந்தரே மாதவ: மாதவம் மாதவஞ் சாந்தரேணாங்கநா" என்கிறபடியே ஒவ்வொரு கண்ணபிரானாகப் பல திருவுருவங்கொண்டு ஆடுவதாகிற ராஸக்ரீடை யென்கிற குரவைக்கூத்தை யியற்றினவனுமான திவ்ய சேஷ்டித நிதியான தேவன் ஸந்நிதிபண்ணியிருக்குமிடமான திருமாலிருஞ்சோலையை வணங்குவோம் வா மடநெஞ்சே! என்கிறார்.

கடலில் மணலை மிகுதி யென்னலாம்படியாக நீர்ப் பகுதியை முழுதும் முகந்துகொண்ட மேகங்கள் ஆகாசத்தே ஏறிப் பரமகம்பீரமாக முழங்க அம் முழக்கத்தைச் செவியுற்ற சிங்கம் மலையிலுள்ள யானையே இப்படி அச்சங்கெட்டுக் கர்ஜிக்கின்றதென்று மயங்கி 'நாம் வாழுமிடத்திலே யானையும் இப்படி செருக்குக் கொள்ளக் கடவதோ? என்று சீறி அதற்குப் பிரதிகர்ஜனை செய்யப்பெற்றதாம் இத்திருமலை.

மடங்கல்—சிங்கம். .... .... .... .... .... .... (௬)

தேனுகனாவி போயுகவங்கோர் செழுந்திரள் பனங்கனி யுதிர *
தானுகந் தெறிந்த தடங்கடல் வண்ணர் எண்ணிமு னிடங்கொண்ட கோயில் *
வானகச் சோலை மரதகச் சாயல் மாமணிக் கல்லதர் நிறைந்து *
மானுகர் சாரல் மாலிருஞ்சோலை வணங்குதும் வா மடநெஞ்சே. (௭)

மடநெஞ்சே !–;
தேனுகன் — தேநுகாஸுரனுடைய
ஆவி — பிராணன்
போய் உக — தொலைந்துபோவதற்காக
அங்கு — அவ்விடத்தில்
ஓர் செழு திரள் பனங்கனி உதிர — அழகாகத் திரண்டிருந்த பனம்பழங்கள் உதிரும்படியாக
தான் எறிந்து உகந்த — அக்கழுதையைப் பனங்கனிமேலெறிந்து திருவுள்ளமுவந்த
தட கடல் வண்ணர் — கம்பீரமான கடல்போன்ற வடிவையுடையரான பெருமான்
முன் — முன்பு
எண்ணி — இதுவே பாங்கான இடமென்று திருவுள்ளம்பற்றி
இடம் கொண்ட — இருப்பிடமாக ஸ்வீகரித்த
கோயில்–,
மான் — மான்களானவை,
மரதகம் சாயல் — மரதகமணிபோன்ற ஒளியையுடையவையாய்
வானகம் — ஆகாசத்தளவும் ஓங்கினவைகளான
சோலை — சோலைகளிலிருக்கிற
மா மணிக் கல் அதர் — நீலப்பாறைவழிகளில் (புகுந்து)
நிறைந்து — நிறைய இருந்து
நுகர் — மேயப்பெற்ற
சாரல் — பக்கங்களையுடைத்தான
மாலிருஞ்சோலை, வணங்குதும் வா–.

* * *—கம்ஸனது ஏவுதலால் கழுதையான வடிவைக்கொண்டு காட்டுக்குள்ளே கண்ணபிரானை நலிவதாக வந்தவன் தேனுகனென்னுமசுரன். கண்ணபிரான் பலராமனோடும் ஆயர் சிறுவர்களோடும் மாடு மேய்த்துக்கொண்டு, பழங்

http://acharya.org

கள் அழகாக மிகுதியாய்ப் பழுத்து வாஸனை வீசிக்கொண்டிருக்க ஒரு பனங் காட்டை யடைந்து அப் பனம்பழங்களை விரும்பி உதிர்த்துக்கொண்டு வருகையில் அவ்வனத்துக்குத் தலைவனும் கம்ஸன் பரிவாரத்தில் ஒருவனுமாகிய கழுதை வடிவங்கொண்ட தேனுகாசுரன் கோபமூண்டு ஓடிவந்து எதிர்த்துப்போர்செய்ய உடனே கண்ணன் அதிலாகவமாய்ப் பின்னங்காலிரண்டையும் பற்றி அவ்வசுரக் கழுதையைச் சுழற்றி உயிரிழக்கும்படி பனைமரத்தின் மேலெறிந்து அழித்தனன் என்ற வரலாறு இங்கு உணரத்தக்கது. இப்படி விரோதி நிரஸந சீலனாய் இதுவே ஹேதுவாகத் திருமேனி புகர் பெற்றிருக்கின்ற பெருமான் மற்றெல்லாவிடங்களிற் காட்டிலும் இவ்விடமே நமக்கு வாய்த்ததென்று விரும்பி வாழுமிடமான திருமாலிருஞ்சோலையை வணங்குவோம் வா மடநெஞ்சே! என்கிறார்.

மரகதப்பச்சையின் நிறங்கொண்டு ஆகாசப்பரப்படைய ஓங்கியிருந்துள்ள சோலையினுள்ளில் நீலப்பாறை வழியே போய்ப்புக்கு மான்கள் தேனைப்பருகாநின்றுள்ளதாம் இத்திருமலை.

அதர்—வழி. .... ... .... .... .... (௭)

புதமிகு விசும்பிற் புணரிசென் றணவப் பொருகடலரவணைத் துயின்று *
பதமிகு பரியின் மிகுசினம் தவிர்த்த பனிமுகில் வண்ணர்தம் கோயில் *
கதமிகு சினத்த கடதடக் களிற்றின் கவுள்வழி களிவண்டு பருக *
மதமிகு சாரல் மாலிருஞ்சோலை வணங்குதும் வா மடநெஞ்சே. (௮)

மடநெஞ்சே !–;

| | |
|---|---|
| புணரி | (திருப்பாற்கடலின்) அலைகளானவை |
| புதம் மிகு விசும்பில் சென்று அணவ பொரு | மேகங்கள் நிறைந்த ஆகாசத்திலே சென்று உரும்படியாகக் கொந்தளிக்கிற |
| கடல் | திருப்பாற்கடலிலே |
| அரவு அணை | திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மீது |
| துயின்று | பள்ளிகொள்பவனாயிருந்து |

(அதைவிட்டுத் திருவாய்ப்பாடியிலே வந்து பிறந்தருளி)

| | |
|---|---|
| பதம் மிகு பரியின் | முயற்சிமிக்க (கேசியென்கிற) குதிரைவடிவான அசுரனுடைய |
| மிகு சினம் | மிக்கசீற்றத்தை |
| தவிர்த்த | போக்கினவரும் |
| பனி முகில் வண்ணர் தம் | குளிர்ந்தமேகம்போன்ற வடிவையுடையவருமான பெருமானுடைய |

கோயில்-;

| | |
|---|---|
| கதம் மிகு | மிக்ககோபத்தையுடைத்தாய் |
| சினத்த | (அதற்கு மூலமான) த்வேஷத்தையுடைத்தாய் |
| கடம் | மதங்கொண்ட |
| தட | பெரிய |
| களிற்றின் | யானையினுடைய |
| கவுள் வழி | கபோலத்தின் வழியே (பெருகாநின்ற) |
| களி | மதஜலத்தை |
| வண்டு | வண்டுகள் |
| பருக | பானம்பண்ணுகிற்கச் செய்தேயும் |
| மதம் மிகு சாரல் | மதநீர்பாய்ந்து வெள்ளமிடாநின்ற பக்கங்களையுடைத்தான |

மாலிருஞ்சோலை, வணங்குதும் வா–.

http://acharya.org

* * *—இரண்டாமடியில் க்ருஷ்ணாவதார சேஷ்டிதத்தை அநுபவிக்க வேண்டி அவ்வவதாரத்திற்கு மூந்தின நிலைமையான க்ஷீராஸாகரசயனத் திருக்கோலத்தை அநுபவிக்கிறார் முதலடியில். திருப்பாற்கடலின் அலைகள் ஆகாசத்தளவுங் கிளர்ந்து கொந்தளிக்கின்றனவாம். அப்படிப்பட்ட அலைகள் தடைகுத்த உறங்கியருளி அங்கு நின்றும் திருவாய்ப்பாடியேறப் போந்தருளிச் செய்த சேஷ்டிதங்களில் ஒன்று பதமிகுபரியின் மிகுசினந் தவிர்த்தது;—ஒருநாள் கம்ஸனை லேவப்பட்ட கேசி யென்பானோர் அசுரன் குதிரையினுருவத்தோடு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படி கனைத்துத் தூக்கிக்கொண்டு தன்மேற் பாய்ந்துவர, தன் திருக்கையை நன்றாய்ப் பெருக்கி நீட்டி அதன்வாயிற் கொடுத்துத் தாக்கிப் பற்களை யுதிர்த்து உதட்டைப்பிளந்து அதனுடம்பையும் இருபிளவாக வகிர்ந்து தள்ளி இப்படிப்பட்ட விரோதி நிரஸநமே ஹேதுவாகத் திருமேனி புகர்பெற்றிருக்கும் பெருமான் உறையுமிடமான திருமாலிருஞ்சோலையைத் தொழுவோம் எழு நெஞ்சமே! என்கிறார்.

மத்தகஜங்களின் கபோலத்தின் வழியே உண்டான மதஜலத்தை வண்டுகள் பருக, பின்னையும் மதம்பாய்ந்து வெள்ளமிடா நின்றுள்ள சாரலையுடையதாம் இத்திருமலை.

புதமிகுவிசும்பு=‘அம்புதம்’ என்னும் வடசொல் மேகமென்னும்பொருளது; அச்சொல்லே இங்கு முதற்குறையாகப் புதம் என வந்துள்ளது. ‘கபோலம்’ என்னும் வடசொல் ‘கவுள்’ எனச் சிதைந்து கிடக்கிறது. [களிவண்டு பருக மதமிகுசாரல்] கடலில் ஒரு மூலையிலே கொசு இருந்து நீரைப்பருகினாலும் கடல் வற்றாதாப்போலே எத்தனை வண்டுகள் பானம் பண்ணினாலும் மதநீர் வற்றாதே பாய்ந்து வெள்ளமிடுமென்ப. .... .... .... .... .... (அ)

**புந்தியில் சமணர் புத்தரென் றிவர்கள் ஒத்தன பேசவுமுகந்திட்டு ***
**எந்தைபெம்மானு ரிமையவர் தலைவர் எண்ணிமு னிடங்கொண்ட கோயில் ***
**சந்தனப் பொழிலின் தாழ்சினை நீழல் தாழ்வரைமகளிர்கள் நாளும் ***
**மந்திரத் திறைஞ்சும் மாலிருஞ்சோலை வணங்குதும் வா மடநெஞ்சே.** (கூ)

மட நெஞ்சே !—;

| | |
|---|---|
| புந்தி இல் | விவேகமற்ற |
| சமணர் | சமணரென்றும் |
| புத்தர் என்று இவர்கள் | பௌத்தர் என்றும் சொல்லப்படுகிற வேதபாஹ்யர்கள் |
| ஒத்தன | தங்களுடைய அற்பபுத்திக்கு ஒத்த பொருள்களை |
| பேசவும் | சொல்லச் செய்தேயும் |

| | |
|---|---|
| உகந்திட்டு | (இப்பாவிகள் தம்மைப் பணியாவிட்டாலும் அன்பர்க்கு உதவப் பெற்றோமே! என்று) திருவுள்ள முவந்து |
| எந்தை பெம்மானுர் | என் தந்தைமுதலானோர்க்கும் நாதராய் |
| இமையவர் தலைவர் | நித்யஸூரிகளுக்குத் தலைவரான பெருமான் |
| முன் | முன்னே |

எண்ணி { இதுவேபாங்கானவிட மென்றெண்ணி
இடம் கொண்ட } ஸ்வீகரித்தருளின
கோயில்-;
வரை மகளிர்கள் } மலைப்பெண்கள்,
சந்தனம் பொழிலின் } சந்தனத் தோப்பிலுள்ள

தாழ் சினை — தாழ்ந்த கிளைகளினுடைய
நீழல் தாழ் { நிழலின் கீழே (இருந்துகொண்டு)
நாளும் — நாள்தோறும்
மந்திரத்து — மந்திரங்களைக் கொண்டு
இறைஞ்சும் — துதிக்கப்பெற்ற
மாலிருஞ்சோலை, வணங்குதும் வா-.

* * *—'வேதம் அப்ராமாணம்' என்று சொல்லுகின்ற அவிவேகிகளான சமணர் பௌத்தர் முதலிய புறமதத்தவர்கள் தங்களுடைய கொள்கைக்குத்தக்கவாறு மனம்போனபடியெல்லாம் பிசகாகப் பிதற்றுநிற்க, 'அந்தோ! இப்பாவிகள் நம்மை இழந்து நித்ய ஸம்ஸாரிகளாய்த் தடுமாறுகின்றனரே!' என்கிற பரிதாபம் திருவுள்ளத்தில் ஒருபுறமிருந்தாலும் 'இப்பாவிகளுக்கு நாம் வேண்டாவாகிலும் நம்மையே உகந்திருக்கும் அன்பர்கட்கு நாம் உதவப்பெற்றோமிறே!' என்றுகொண்டு திருவுள்ளமுவந்திருக்கின்றவரும் எங்கள் குலத்துக்கு நாதரும் அயர்வறுமமரர்களதிபதியுமான பெருமான் நித்யஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்குமொக்க முகங்கொடுக்கலாம் தேசம் இதுவென்று திருவுள்ளம்பற்றி நித்யஸந்நிதிபண்ணியிருக்குமிடமான திருமாலிருஞ்சோலையைத் தொழுது மெழு நெஞ்சமே! என்கிறார்.

பின்னடிகளின் வியாக்கியானம்:—"சந்தனச் சோலையிலுண்டான தாழ்ந்த பணைகளிலுண்டான நிழலின் கீழே போய் வரைமகளிர்களானவர்கள் நாடோறும் தங்கள் வரலாபத்துக் கீடான மந்த்ரத்தைக்கொண்டு ஆச்ரயியா நின்றுள்ள." என்பதாம். (வரைமகளிர்—குறிஞ்சி நிலமக்களான குறத்திகள் என்ப.) இவ்விடத்தில் மூலத்திலும் வியாக்கியானத்திலும் 'வரமகளிர்' என்றிருக்க வேண்டுவது பாடப் பிழையாக 'வரை மகளிர்' என்றாயிற்றென்று அழகிய மணவாளச்சீயர் அருளிச்செய்யக் கேட்டிருக்கை. சிறந்த ஸ்த்ரீகள் என்றபடி; அப்ஸரஸ் ஸ்த்ரீகளைச் சொல்லுகிறதாம். ஆழ்வானருளிச் செய்த ஸுந்தரபாஹு ஸ்தவத்தில் "வநாஶ்ரயாஸாஸ்து தீவிஷக்தஸ்வராஸஸாவயா தாஸா கிமீஸ்டீ ஶ்ரீவதி ஜ்யேஷ்டவதி வ்யஸக்தமாநஸ்ஸஹ வநஶௌஶதடீஷு வஸுதராஸு)." "உபவநதருஷண்டேஷ்வத்ர மஞ்ஜுஶௌஶவ்யாயஸதாஷ்டீஷு ஜ்யோத்ஸ்நாயி மங்கலிஷ்வேஷ வநமிஹிமதடஸம்ஸ்திதவ்யஸ்ஸுரை." "ஸ்வயம்புவஸம்ஹாஷ்கத்ர ஷண்டேஷு......" இத்யாதி ச்லோகங்கள் இங்கு அநுஸந்திக்கவுரியன. (கூ)

வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை மாமணி வண்ணரை வணங்கும் *
தொண்டரைப் பரவும் சுடரொளி நெடுவேல் சூழ்வய லாலிநன்னாடன் *
கண்டல்நல் வேலி மங்கையர் தலைவன் கலியன்வா யொலிசெய்த பனுவல் *
கொண்டிவை பாடும் தவமுடையார்கள் ஆள்வரிக் குரைகடலுலகே. (கல)

http://acharya.org

| | |
|---|---|
| வண்டு அமர் | வண்டுகள்படிந்த |
| சாரல் | பக்கங்களையுடைய |
| மாலிருஞ் சோலை | திருமாலிருஞ்சோலையிலுள்ள |
| மா மணி வண்ணரை | நீலமணிவண்ணரான அழகரை |
| வணங்கும் தொண்டரை | வணங்குகின்ற பாகவதர்களை |
| பரவும் | துதிப்பவரும் |
| சுடர் ஒளி நெடு வேல் | மிக்கவொளிபொருந்திய பெரிய வேற்படையையுடையவரும் |
| சூழ் வயல் ஆலி நல் நாடன் | பரந்த வயல்களையுடைய நல்ல திருவாலி நாட்டுக்குத் தலைவரும் |

| | |
|---|---|
| கண்டல் நல் வேலி மங்கையர் தலைவன் | தாழைகளை அழகிய வேலியாகக்கொண்ட மங்கைநாட்டிலுள்ளார்க்கு நிர்வாஹகருமான |
| கலியன் | ஆழ்வார் |
| வாய் ஒலி செய்த | திருவாய்மலர்ந்தருளிய |
| பனுவல் இவை கொண்டு | இப்பாசுரங்களைக் கொண்டு |
| பாடும் தவம் உடையார்கள் | பாடும்படியான பாக்யமுடையவர்கள் |
| குரை கடல் இவ்வுலகு | ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட இவ்வுலகை |
| ஆள்வர் | ஆளப்பெறுவர். |

* * *—எங்கும் தேன் நசையாலே வண்டுகள்படிந்த சாரலையுடைத்தான திருமாலிருஞ்சோலை மலையிலே விலக்ஷண திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டராய்க் கொண்டு எழுந்தருளியிருக்கிற அழகரை அவ்வடிவழகில் ஈடுபட்டு ஆச்ரயிக்குமவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களைத் துதிப்பதாகிற பாகவத நிஷ்டையிலே ஊன்றினவரான திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய இத்திருமொழியைக் கொண்டு ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடும்படியான பாக்யமுடையவர்கள் கடல்சூழ்ந்த பூமிக்கு நிர்வாஹகராயிருக்கப் பெறுவர்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டினராயிற்று. .... .... .... .... .... .... (௧௦)

அடிவரவு:—முந்துற, இண்டை, பிணி, சூர்மை, வணங்கலில், விடம், தேனுகன், புதமிகு, புந்தி, வண்டமர், மூவர்.

எட்டாந் திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## ஒன்பதாம்பத்து—ஒன்பதாந்திருமொழி,

# மூவரில்முன்முதல்வன்.

உரையவதாரிகை:—கீழ்த்திருமொழியில் "மாலிருஞ்சோலை வணங்குதும் வா மடநெஞ்சே!" என்று ஒருகால் சொன்னப்போலே ஒன்பதின்காற்சொல்லித் திருமாலிருஞ்சோலையை அநுபவித்த ஆழ்வார் அவ்விடத்து அழகருடைய லோக விலக்ஷணமான வடிவழகிலே நெஞ்சு பறியுண்டு தாமான தன்மையை யிழந்து ஒரு பிராட்டியின் நிலைமையை யடைந்தவராய், அது தன்னிலும் தன்வாயாலே தன் நிலைமையைச் சொல்லிக்கொள்ள மாட்டாதே வேற்று வாயாலே சொல்லிக் கொள்ள வேண்டும்படியான அவஸ்தை பிறந்து தாய் பாசுரமாகச்சொல்லுவதாய், 'என் பெண்மகளுடைய ஆற்றாமை யிருந்தபடியைப் பார்த்தால் சுந்தரத்தோளுடையானோடு அணைந்தல்லது தரிக்கமாட்டாள் போலே இருந்தது; அவனை யணைந்து ஆநந்திக்கும்படியான பாக்யத்தை இவள் பெற்றுளாவளோ? அன்றி இங்ஙனே நோவுபட்டுக்கொண்டே யிருக்கக்கடவளோ? என்று ஒன்பது பாட்டாலே சங்கித்து, முடிவுபாட்டிலே 'அவனைக்காணப் பெறுவள்' என்று அறுதி யிட்டுத் தரிக்கிறபடியை வெளியிடுவதாய்ச் செல்லுகிறது, இத்திருமொழி. *

மூவரில் முன்முதல்வன் முழங்கார்கடலுட்கிடந்து *<br>
பூவலருந்திதன்னுள் புவனம் படைத்துண்டுமிழ்ந்த *<br>
தேவர்கள்நாயகனைத் திருமாலிருஞ்சோலைநின்ற *<br>
கோவலர்கோவிந்தனைக் கொடியேரிடை கூடுங்கொலோ? (க)

| | |
|---|---|
| மூவரில் | த்ரிமூர்த்திகளுள் |
| முன் முதல்வன் | முக்யனும் |
| முழங்கு ஆர் | (திரைக்கிளப்பத்தாலே) கோஷித்தல் பொருந்திய |
| கடலுள் | திருப்பாற்கடலிலே |
| கிடந்து | திருக்கண்வளர்ந்தருளி |
| உந்தி | திருநாபியில் |
| அலர் | மலர்கின்ற |
| பூ தன்னுள் | (தாமரைப்) பூவிலே |
| புவனம் | உலகத்தை |
| படைத்து | ஸ்ருஷ்டித்து |
| உண்டு | (பிரளயகாலத்தில்) திரு வயிற்றில்வைத்து நோக்கி |
| உமிழ்ந்த | பிறகு வெளிப்படுத்தினவனும் |
| தேவர்கள் நாயகனை | நித்யஸூரிகளுக்கு நாதனும் |
| திருமாலிருஞ் சோலை நின்ற | திருமாலிருஞ்சோலை மலையில்நிற்பவனுமான |
| கோவலர் கோவிந்தனை | கோபாலக்ருஷ்ணனை எம்பெருமானை |
| கொடி ஏர் இடை | கொடிபோன்ற இடையை யுடையளான என்மகள் |
| கூடும் கொலோ | அணையப்பெறுவளோ? |

http://acharya.org

* * *—ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்குக் கடவர்களென்றும் த்ரிமூர்த்திகளென்றுஞ் சொல்லப்படுகிற அரி அயன் அரன் என்னுமிவர்தம்முள் முழுமுதற் கடவுளாய், திருப்பாற்கடலிலே பிரமன் முதலியோருடைய கூக்குரல் கேட்கும்படி வந்து திருக்கண்வளர்ந்தருளி, விலக்ஷணமான திருநாபிக்கமலத்திலே நான்முகன் வழியாக உலகங்களையுண்டாக்கிப் பின்னைப் பிரளயம் வந்தவாறே வயிற்றிலே யெடுத்துவைத்து அங்ஙனம் உள்ளேகிடந்து நெருக்குப்பட வொண்ணாதென்று வெளிநாடுகாணப் புறப்படவிட்டு இவ்வகையாக ரக்ஷணமே தொழிலாயிருக்கின்ற எம்பெருமான் நித்யஸூரிகளுக்கு நாதனாயிருக்கு மிருப்பையும் விட்டுத் திருமாலிருஞ்சோலையிலே க்ருஷ்ணாவதார ஸௌலப்ய காஷ்டையை வெளியிட்டுக்கொண்டு வந்து நிற்கிறான்; அவனோடே கூடவேணுமென்று என்மகளான பரகால நாயகி பாரிக்கின்றாள்; இப்பாரிப்பு பயன் பெறுமோ, அன்றி ஆசைப்பட்டிருக்குமித்தனையேயோ! என்று கவல்கிறாள் பரகாலஜநநி.

திருமாலிருஞ்சோலையழகரோடே கூடும்படியான பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ கிடைக்காதோவென்று ஆழ்வார் கவலைப்படுதல் இத்திருமொழிக்குப் பரமதாற்பரியம்.

மூவரில் முன் முதல்வன்=“ஸப்ரஹ்மா ஸஶிவஸ்ஸேந்த்ர:” என்ற சுருதியின்படி இந்திரனைக்கூட்டி மூவராக்கி, அம்மூவர்களிற்காட்டிலும் முழுமுதற் கடவுளாயிருப்பவன் என்றும் பொருள் கூறுவர். இரண்டாமடியில் “பூ வளருந்தி” என்றும் பாடமுண்டு. புவனம்—வடசொல். .... .... (௧)

புனைவளர் பூம்பொழிலார் பொன்னிசூழரங்கநகருள்
முனைவனை * மூவுலகும்படைத்த முதல்மூர்த்திதன்னை *
சினைவளர்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்றான் *
கனைகழல்காணுங்கொலோ? கயற்கண்ணியெம்காரிகையே. (௨)

புனை வளர் — புன்னைமரங்கள் வளரப்பெற்ற
பூ பொழில் ஆர் — பூஞ்சோலைகளையுடையதும்
பொன்னி சூழ் — திருக்காவேரியாலே சூழப்பட்டதுமான
அரங்கம் நகருள் — திருவரங்கம் பெரியகோயிலில்
(திருக்கண்வளர்ந்தருளுகிற)
முனைவனை — பிரதானனும்
மூ உலகும் படைத்த — மூன்றுலோகங்களையும் ஸ்ருஷ்டித்த
முதல் மூர்த்தி தன்னை — முக்கிய மூர்த்தியானவனும்
சினை வளர் பூ பொழில் சூழ் — பணைகள்மிக்க பூஞ்சோலைகளால் சூழப்பட்ட
திருமாலிருஞ் சோலை நின்றான் — திருமாலிருஞ்சோலையில் நிற்பவனுமான எம்பெருமானுடைய
கனை கழல் — (வீரக்கழலின்) ஒலியையுடைத்தான திருவடிகளை
கயல் கண்ணி — கயல்போன்ற கண்களையுடையளான
எம் காரிகை — எமது அழகியமகள்
காணும் கொலோ — ஸேவிக்கப் பெறுவளோ?

http://acharya.org

* * *—புன்னை மரங்கள் மிக வளரப்பெற்ற பூம்பொழில்களை யுடைத்தாய்க் காவிரியாலே சூழப்பட்டிராநின்ற திருவரங்கம் பெரியகோயிலில் திருக்கண் வளர்ந்தருள்பவனும் மூவுலகுக்கும் ஆதிகாரண பூதனுமான ஸர்வேச்வரன் திருமாலிருஞ்சோலையிலே வந்து நிற்கும் நிலைமையிலே அப்பெருமானுடைய திருவடிகளைக் காணப்பெறவேணுமென்றிருக்கிற என்மகள் காணப்பெறுவளோ?

புனை—புன்னை; தொகுத்தல் விகாரம். பொன்னி=பொன்களைக் கொழிக்கையாலே காவிரிக்கு இப்பெயர் வழங்கலாயிற்று. 'கநகநதீ' என்றும் 'ஹேமவஹா' என்றும் வடநூலில் வழங்கப்படுவதும் இதுவே. முனைவன்—கடவுட்பொதுப்பெயர்; முன்னையவன் என்றபடி: புராதனன். சினை—கருப்பம், அரும்பு, மரக்கொம்பு. கனைகழல்—வீரத்தண்டை யணிந்த திருவடிகளென்றவாறு. காரிகை—அழகு; அதனையுடையவளுக்கு ஆகுபெயர்.

இரண்டாமடியி லுள்ள பகவத்விசேஷணங்களிரண்டிலும் இரண்டாம் வேற்றுமை யுருபு அவிவக்ஷிதமென்று விடுக்க. .... .... .... .... (௨)

உண்டுலகேழினையுமோருபாலகனாலிலைமேல் *
கண்டுயில்கொண்டுகந்த கருமாணிக்க மாமலையை *
திண்டிறல்மாகரிசேர் திருமாலிருஞ்சோலைநின்ற *
அண்டர்தங்கோவினை யின்று அணுகுங்கொல்? என்னுயிழையே. (௩)

| | |
|---|---|
| உலகு ஏழினையும் | ஸப்தலோகங்களையும் |
| உண்டு | (ப்ரளயகாலத்தில்) திருவயிற்றினுள் அடக்கி |
| ஒரு பாலகன் | ஒரு சிறுகுழவியாய் |
| ஆல் இலை மேல் | ஓராலிலையின் மீது |
| கண் துயில் கொண்டு | திருக்கண்வளர்ந்தருளி |
| உகந்த | திருவுள்ள முவந்த |
| கரு மாணிக்கம் மா மலையை | பெரிய கருமாணிக்கமலை போன்ற வடிவையுடையவனும் |
| திண் திறல் மா கரி சேர் | மிக்கவலிமைவாய்ந்த மதயானைகள் சேரப்பெற்ற |
| திருமாலிருஞ் சோலை | திருமாலிருஞ்சோலை மலையில் |
| நின்ற | நிற்பவனுமான |
| அண்டர் தம் கோவினை | தேவாதிதேவனை |
| என் ஆய் இழை | சுத்தமான ஆபரணங்களை யணிந்துள்ள என்மகள் |
| இன்று | இப்போது |
| அணுகும் கொல் | கிட்டப்பெறுவளோ? |

* * *—ப்ரளயத்தில் ஸகல லோகங்களையுமெடுத்து வயிற்றினுள்ளே வைத்து ஒரு சிறு குழவியாய் ஆலந்தளிரிற் கண்வளர்ந்த தேவாதிதேவன் திருமாலிருஞ்சோலையிலே வந்து ஸம்ஸார ப்ரளயத்தில் நின்றும் நம்மைக் காத்தருள நிற்கிறனென்கையாலே அவனை அணுகி அநுபவிக்கவேணுமென்று ஆவல்கொண்டு, இயற்கை யழகுக்கு மேலே செயற்கை யழகுக்காக ஆபரணங்களை யணிந்துள்ள என்மகள் அணுகப் பெறுவளோ?

http://acharya.org

கருமாணிக்கமாமலையை = மாணிக்கம் கரிய நிறத்ததன்றாதலால் இதனை இல்பொருளுவமை [அபூதோபமை] யாகக் கொள்க.

"அண்டர்" என்று இடையர்க்கும் தேவர்க்கும் பெயர். ஆயிழை = ஆய்தல்—ஆராய்தல்; நல்லதாகப் பார்த்தெடுத்து அணியப்பட்ட ஆபரணங்களையுடையவள் என்கை; வினைத்தொகையன்மொழி. .... .... .... .... (௩)

சிங்கமதாயவுணன் திறலாகம்முன்கீண்டுகந்த *
பங்கயமாமலர்க்கண் பரனையெம்பரஞ்சுடரை *
திங்கள்நன்மாமுகில்சேர் திருமாலிருஞ்சோலைநின்ற *
நங்கள்பிரானை யின்று நணுகுங்கொல்? என்நன்னுதலே. (௪)

| | | | |
|---|---|---|---|
| முன் | முன்பொருகாலத்தில், | பரம் சுடரை | பரஞ்சோதியென்று ஓதப்பட்டவனும், |
| சிங்கம் அது ஆய் | நரஸிம்ஹ மூர்த்தியாகி | திங்கள் | சந்திரமண்டலத்தோடும் |
| அவுணன் | (இரணியனென்னும்) அசுரனுடைய | மா முகில் | மேகமண்டலத்தோடும |
| திறல் ஆகம் | வலிமையுள்ள மார்பை | சேர் | படிந்த (சிகரத்தையுடைத்தான) |
| கீண்டு | எளிதாகக்கிழித்து | நல் | விலக்ஷணமான |
| உகந்த | திருவுள்ளமுவந்தவனும் | | திருமாலிருஞ்சோலையில்—; |
| மா | பெரிய | நின்ற | நிற்பவனுமான |
| பங்கயம் மலர் | தாமரைப்பூப்போன்ற | நங்கள் பிரானை | எம்பெருமானை |
| கண் | திருக்கண்களை யுடையவனும் | என் நல் நுதல் | அழகிய நெற்றியை யுடையவளான என்மகள் |
| பரனை | எல்லாரினும் மேம்பட்டவனும் | இன்று | இப்போது |
| எம் | எமக்கு நாதனும் | நணுகும் கொல் | சென்று சேர்ந்திடுவளோ? |

* * *—பரம பக்தனான ப்ரஹ்லாதாழ்வானுக்குப் பல தீங்குகள் செய்த இரணியனுடைய உடலை நரஸிம்ஹமூர்த்தியாய்த் தூணில் தோன்றிக் கீண்டொழித்து 'ஆச்ரிதனுடைய விரோதி தொலையப்பெற்றோம்' என்று திருவுள்ளமுவந்தவனும், அவ்வுகப்புத் திருக்கண்களிலே தோற்றும்படி புண்டரீகாக்ஷனாயிருப்பவனும் அத்திருக்கண்களைக் கொண்டே ஸர்வஸ்மாத்பரனென்று நிச்சயிக்கலாம்படி யிருப்பவனும், பரஞ்சோதி ஸ்வரூபியானவனும் மிகவுமோங்கின திருமாலிருஞ்சோலைமலையிலே நமக்கு எளியனாய் நிற்பவனுமான பெருமானை என்மகள் இன்று கிட்டப் பெறுவளோ? .... .... .... .... (௪)

தானவன் வேள்விதன்னில் தனியேகுறளாய்நிமிர்ந்து *
வானமும்மண்ணகமுமளந்த திரிவிக்கிரமன் *
தேனமர் பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற *
வானவர்கோனையின்று வணங்கித்தொழ வல்லள்கொலோ? (௫)

http://acharya.org

தானவன் { (மஹாபலியென்னும்) அசுரனுடைய
வேள்வி தன்னில் } யாகத்திலே
தனியே அத்விதீயனாக
குறள் ஆய் { வாமநமூர்த்தியாய் (எழுந்தருளி)
நிமிர்ந்து { (உதகதானம் பெற்றவாறே) ஓங்கிவளர்ந்து
வானமும் மேலுலகங்களையும்
மண் அகமும் கீழுலகங்களையும்
அளந்த அளந்துகொண்ட
திரி விக்கிரமன் { த்ரிவிக்ரம மூர்த்தியானவனும்
தேன் அமர் பூ பொழில் சூழ் { தேன்மிக்க பூஞ்சோலைக ளால் சூழப்பட்ட
திருமாலிருஞ்சோலையில்—;
நின்ற நிற்பவனுமான
வானவர் கோனை } தேவாதிதேவனை
(என்பெண்மகள்)
இன்று இப்போது
வணங்கி தொழ வல்லள் கொலோ } ஸேவிக்கப்பெறுவளோ?

* * *—அஸுரகுலத்திற் பிறந்த மஹாபலியினுடைய யாகத்திலே ஆஸுர ப்ரக்ருதிகளின் நடுவே தனியே வாமந வேஷத்தைப்பூண்டு எழுந்தருளி மூவடி மண் யாசித்து, உதகதானம் பெற்றவாறே ஓங்கிவளர்ந்து கீழுலகங்களையும் மேலுலகங்களையும் அளந்துகொண்டவனும் தேன்மிக்க பூம்பொழில்களாலே சூழப்பட்ட திருமாலிருஞ்சோலையி லெழுந்தருளியிருப்பவனுமான தேவாதி தேவனை என்மகள் இன்று கிட்டி வணங்கப் பெறுவளோ?

இப்பாட்டில் எழுவாய் வருவித்துக் கொள்ளவேண்டும். .... (ரு)

நேசமிலாதவர்க்கும் நினையாதவர்க்குமரியான் *
வாசமலர்ப்பொழில்சூழ் வடமாமதுரைப்பிறந்தான் *
தேசமெல்லாம்வணங்கும் திருமாலிருஞ்சோலைநின்ற *
கேசவநம்பிதன்னைக் கெண்டையொண்கண்ணிகாணுங்கொலோ? (கூ)

நேசம் இலாதவர்க்கும் } பரபக்தியில்லாதவர்களுக்கும்
நினையாதவர்க்கும் { (‘ஈச்வரனில்லை’ என்ற நாஸ்திகவாதம் பண்ணுவதற்காகிலும் அவனை) நெஞ்சால் எண்ணாதவர்கட்கும்
அரியான் கிட்டக்கூடாதவனும்,
வாசம் மலர் பொழில் சூழ் } மணம்மிக்கமலர்களையுடைய சோலைகளால் சூழப்பட்ட
வட மா மதுரை } திருவடமதுரையில்
பிறந்தான் அவதரித்தவனும்
தேசம் எல்லாம் வணங்கும் } எல்லாத் தேசத்தவர்களாலும் வந்துவணங்கப்படுமவனான
திருமாலிருஞ்சோலையில்—;
நின்ற நிற்பவனும்
கேசவன் நம்பி தன்னை { சிறந்த குழல்கற்றையையுடையனுமான பெருமானை
கெண்டை ஒண் கண்ணி { கெண்டைமீன்போன்ற கண்ணழகுடையளான என்மகள்
காணும் கொலோ } காணப்பெறுவளோ.?

* * *—[நேசமிலாதவர்க்கும் நினையாதவர்க்கு மரியான்.] நேசமாவது— ஸ்நேஹம்; அதாவது பக்தி; அஃதில்லாதவர்களுக்கு எம்பெருமான் அரியவன்

http://acharya.org

என்றது தகுதியே; 'நினையாதவர்க்கு மரியான்' என்றது எங்ஙனே பொருந்தும்? நேசமிலாதவர்களுக்கு அரியனாகும்போது நினையாதவர்களுக்கு எளியனாக ப்ரஸக்தியே யில்லாமையாலே அப்ராஸக்தப்ரதிஷேதம்போல 'நினையாதவர்க்கு மரியான்' என்னக் கூடாதன்றோ? "இந்தச் சரக்கை நூறு காசு கொடுத்தாலும் கொடுக்கமாட்டேன் ஒருகாசு கொடுத்தாலுங் கொடுக்கமாட்டேன்" என்று சொல்லுவது எப்படி அஸம்பாவிதமோ அப்படியே இதுவும் அஸம்பாவிதமன்றோ? என்று சிலர் சங்கிக்கக்கூடும்; கேண்மின்;-'நேசமிலாதவர்க்கு அரியான்' என்று மாத்திரம் சொல்லிவிட்டால், நேசமிலாதவர்களான சிசுபாலாதிகளுக்கு ப்ராப்தியுண்டானதாகச் சொல்லுகிற ப்ரமாணங்களுக்கு என்ன கதி? வைது வல்லவா பழித்தவனான சிசுபாலனுக்கு மோக்ஷங் கிடைத்ததென்பதைப் பராசரர் சொல்லிவைத்தார்; "ஸஹ்யவைரேண வ்யாபாதிதஸ்ஸம்ஸ்மரணாநுபாவிதாவயவ ஸுதேவ ஸஹபதா ஜகத்ஸம்ஹர்த்ரா நிதநமவாப்ய ஸாயுஜ்யமவாப" என்பது ஸ்ரீ விஷ்ணுபுராணம்; 1. "கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும், சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன், திருவடிதாட்பாலடைந்த தன்மையறிவாரையறிந்துமே" என்றார் நம்மாழ்வாரும். ஆக, நேசமிலாதவர்களில் தலைவனான சிசுபாலனுக்கு எளியவனாகக் காண்கையாலே 'நேசமிலாதவர்க்கு அரியான்' என்றதற்கு மேலே ஒன்றுசொல்லிப் பரிஷ்கரிக்க வேண்டியதாயிற்று; அதற்காகவே "நினையாதவர்க்கு மரியான்" என்றது; சிசுபாலன் நேசமிலாதவர்களிற் சேர்ந்தவனாயினும் நினையாதவர்களிற் சேர்ந்தவனல்லன்; வைகிறவனுக்கும் பேர்சொல்லி வைய வேண்டுதலால் அதற்குறுப்பாக சிசுபாலன் எம்பெருமானை நினைந்தவனே யென்க.

இனி, "பரபக்திக்கும்அத்வேஷத்துக்கும் வாசிவையாதே தன்னைக் கொடுப்பானொருவனென்கை" என்ற பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்திப்படியே விவரணம் செய்து கொள்ளவுமாம்.

நேசமுள்ளவர்களுக்கும் நினைப்பவர்களுக்கும் எளியனும் என்பது முதலடியின் தேர்ந்த கருத்து. இதனால் எம்பெருமானுடைய ஸ்வாதந்திரியமே வெளியிடப்பட்டதாம்; பரமபக்தியுண்டானாலன்றிச் சிலர்க்கு இரங்கியருளான்; சிலர் திறத்தில் அந்யபரமான சிந்தனையையும் வியாஜமாகக்கொண்டு மடிமாங்காயிட்டு அருள்புரிவானென்றவாறு. ஆக இப்படிப்பட்ட திருக்குணம் வாய்ந்தவனும் இத்திருக்குணத்தை வடமதுரையிற் பிறந்தருளிப் பிரகாசிப்பித்தவனும், அது தன்னை வட்டப்புறத்தில் கேட்டுப் போகவேண்டாதபடி திருமாலிருஞ்சோலையிலே விளக்கா நிற்பவனுமான பெருமானை என்மகளான பரகால்நாயகி காணப் பெறுவளோ? என்றதாயிற்று. .... .... .... .... ... (சு)

புள்ளினைவாய்பிளந்து போருமாகரி கோம்போசித்து *
கள்ளச்சகடுதைத்த கருமாணிக்க மாமலையை *
தெள்ளருவிகொழிக்கும் திருமாலிருஞ்சோலைநின்ற *
வள்ளலைவாணுதலாள் வணங்கித்தொழ வல்லள்கோலோ? (எ)

1. திருவாய்மொழி 7—5—3.

http://acharya.org

| | |
|---|---|
| புள்ளினை வாய் பிளந்து | பகாஸுரனுடைய வாயைக் கிழித்தவனும் |
| பொரு மா கரி கொம்பு ஒசித்து | போர்செய்ய முயன்ற (குவலயாபீடமென்னும்) மதகரியின் கொம்பை முறித்தவனும் |
| கள்ளம் சகடு உதைத்த | திருட்டெண்ணங்கொண்ட சகடாஸுரனை (த் திருவடிகளால்) உதைத்தொழித்தவனும் |
| கரு மாணிக்கம் மா மலையை | பெரியகரிய மாணிக்கமலை போன்ற வடிவை யுடையவனும் |
| தென் அருவி கொழிக்கும் | தெளிந்த அருவிகள் பிரவஹிக்கப் பெற்ற |
| திருமாலிருஞ்சோலையில்—; | |
| நின்ற | நிற்பவனும் |
| வள்ளலை | உதாரனுமான பெருமானை |
| வாள் நுதலாள் | ஒளிபொருந்திய நெற்றியை யுடையவளான என்மகள் |
| வணங்கி தொழ வல்லள் கொலோ | ஸேவிக்கப்பெறுவளோ? |

* * *—கண்ணபிரானாய்த் திருவவதரித்து பகாஸுரனது வாயைக் கீண்டொழித்தும் கம்ஸனது மாளிகை வாசலிலே குவலயாபீட யானையைக் கொம்பொசித்துத் தொலைத்தும் மிகச் சிறுபிராயத்திலே சகடாசுரனைத் திருவடியாலுதைத் தொழித்தும் செய்தருளின விரோதிநிரஸன வைபவம் இன்றைக்கும் விளங்கும்படியாகத் திருமாலிருஞ்சோலையிலே நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கின்ற பரமோதாரரான பெருமானை என்மகள் வணங்கித் தொழும்படியான பாக்கியம் பெறுவளோ? .... .... .... .... .... (எ)

பார்த்தனுக்கன்றருளிப் பாரதத்தொருதேர்முன்நின்று *
காத்தவன்றன்னை விண்ணோர்கருமாணிக்க மாமலையை *
தீர்த்தனைப்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற *
மூர்த்தியைக் கைதொழவும் முடியுங்கொல்? என்மொய்குழற்கே (அ)

| | |
|---|---|
| அன்று | முன்பொருகாலத்தில் |
| பார்த்தனுக்கு | அர்ஜுநன் பக்கலிலே |
| அருளி | அருள்கூர்ந்து |
| பாரதத்து | பாரதயுத்தத்திலே |
| ஒரு தேர் முன் நின்று | ஸாரதியாயிருந்து |
| காத்தவன் தன்னை | ரக்ஷித்தருளினவனும், |
| விண்ணோர் | நித்யஸூரிகள் அநுபவிக்கவுரிய |
| கரு மாணிக்கம் மா மலையை | கரிய பெரிய மாணிக்கமலை போன்றவடிவு படைத்தவனும் |
| தீர்த்தனை | பரமபவித்திரனும் |
| பூம்பொழில் சூழ் திருமாலிருஞ்சோலையில்—; | |
| நின்ற | நிற்பவனுமான |
| மூர்த்தியை | ஸ்வாமியை |
| கை தொழவும் என் மொய் குழற்கு முடியும் கொல் | ஸேவிப்பதற்கு, அடர்ந்தகூந்தலை யுடையவளான என்மகளுக்கு வாய்க்குமோ?. |

* * *—சத்ருபக்ஷமான துர்யோதநாதிகள் மிகைத்தவன்று தன் உயிர் நிலையான அர்ஜுநன் பக்கலிலே பேரருள்செய்து பாரதப்போரிலே சத்ரு நிர

ஸந்த்துக்கு உபகரணமான தேரிலே $ ரதியைச் சிறுமவனுக்குத் தான் இலக்காய்க் கொண்டு உடம்புக்குக் கவசமுமிடாதே வெறுங்கையோடே நின்று அவனை நோக்கினவனும், விண்ணாட்டிலே நின்று அங்குள்ள நித்யஸூரிகளுக்குப் பரமபோக்யமாக அநுபவிக்கவுரியனா யிருப்பவனும், அவர்களநுபவித்த வடிவழகை இங்குள்ளாரும் இழவாதபடி திருமாலிருஞ்சோலையை இருப்பிடமாகக் கொண்டவனுமான பெருமானை என்மகள் கைதொழப் பெறுவளோ?.(அ)

வலம்புரியாழியனை வரையார்திரடோளன்றன்னை *
புலம்புரி நூலவனைப் பொழில்வேங்கட வேதியனை *
சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலைநின்ற *
நலந்திகழ் நாரணனை நணுகுங்கொல்? என்நன்னுதலே. (கூ)

| | |
|---|---|
| வலம்புரி ஆழியனை | சங்கும் சக்கரமுமுடையனும் |
| வரை ஆர் திரள் தோளன் தன்னை | மலைபோன்ற திரண்ட திருத்தோள்களையுடையவனும் |
| புலம்புரி நூலவனை | மனோஹரமான யஜ்ஞோபவீதத்தையுடையவனும் |
| பொழில் வேங்கடம் | சோலைசூழ்ந்த திருவேங்கடமலையிலுள்ளவனும் |
| வேதியனை | வேதப்ரதிபாத்யனும் |
| சிலம்பு இயல் ஆறு உடைய | 'சிலம்பு' என்ற சொல்லப்படுகிற நூபுரகங்கையையுடைத்தான |
| | திருமாலிருஞ்சோலையில்—; |
| நின்ற | நிற்பவனும் |
| நலம் திகழ் நாரணனை | திருக்கல்யாணகுணங்கள் விளங்கப் பெற்றவனுமான ஸ்ரீமந்நாராயணனை |
| என் நல் நுதல் | அழகிய நெற்றியையுடையளான என்மகள் |
| நணுகும் கொல் | கிட்டப்பெறுவளோ? |

* * *—ஆச்ரிதர்களுக்கு ஆபத்து வந்தவாறே தாமதமின்றி ரக்ஷித்தருள்வதற்காகத் திருவாழி திருச்சங்குகளை எப்போதும் திருக்கைகளில் ஏந்தியுள்ளவனும், அந்தத் திருப்படைகளில்லாமலும் ரக்ஷிக்கவல்ல தோள்மிடுக்கையுடையவனும், ரக்ஷித்தருளா தொழியினும் விட வொண்ணாதபடி திவ்யமான யஜ்ஞோபவீதமணிந்த அழகு வாய்ந்தவனும், ரக்ஷ்யவர்க்க முள்ளவிடந்தேடித் திருவேங்கடமலையிலே வந்து நிற்பவனும், 'அதுதானும் பரத்வத்தோடொக்கும்' என்று சொல்லவேண்டும்படி மிக நீசரானார்க்கும் முகங்கொடுத்துக்கொண்டு திருமாலிருஞ்சோலையிலே வந்து நிற்கையாகிற நீர்மையிலேற்றத்தை யுடையவனுமான ஸ்ரீமந்நாராயணனை என்மகள் நண்ணப் பெறுவளோ?.

சிலம்பியலாறு='சிலம்பு' என்கிற சொல்லையிட்டு வ்யவஹரிக்கப் படுகின்ற ஆறு; நூபுரகங்கையென்று வடமொழிப் பெயர்பெறும். திருமால் உலகமளந்த காலத்தில் மேலே ஸத்யலோகத்திற் சென்ற அப்பெருமானது திருவடியைப் பிரமன் தன் கைக்கமண்டல தீர்த்தத்தாற் கழுவி விளக்க, அக்காற்சிலம்பினின்று தோன்றியதனால் 'சிலம்பாறு' என்று பெயராயிற்று. நூபுரகங்கையென்ற வட

$ ரதீ—தேரையுடையவன்.



http://acharya.org

மொழிப் பெயரும் இதுபற்றியதே. (நூபுரம்—சிலம்பு; ஒருவகைக் காலணி.) இனி, சிலம்பாறு என்பதற்குத் திருக்கண்ணபுரம் ஸ்வாமி ரஸோக்தியாக ஒரு பொருள் பணிப்பதுண்டு; “சிலம்பொலி ஞெகிழிகுன்றம்” என்ற சூளாமணி நிகண்டின்படி சிலம்பு என்று குன்றுக்கும் பெயருண்டு; ஆழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் “வகுலதர ஸரஸ்வதீ விஷக்த ஸ்வரரஸபாவயுதாஸு கிந்நரீஷு। த்ரவதி த்ருஷதபி ப்ரஸக்தகாநாஸ்விஹ வநஶைலதடீஷு ஸுந்தரஸ்ய)=வகுளதர ஸரஸ்வதீ விஷக்தஸ்வரரஸபாவயுதாஸு கிந்நரீஷு— த்ரவதி த்ருஷதபி ப்ரஸக்தகாநாஸு இஹ வநசைலதடீஷு ஸுந்தரஸ்ய.” [கிந்நரஸ்த்ரீகள் திருமாலிருஞ்சோலைத் தாழ்வரையில் வந்து நம்மாழ்வாரது திருவாய்மொழிப் பாசுரங்களை இசைபாட, * மரங்களு மிரங்கும் வகை மணிவண்ணவோ வென்று கூவின அவ்வாழ்வாரது பாசுரங்களைக் கேட்ட குன்றும் உருகிப் பெருகாநின்றது.] என்றருளிச் செய்தமையால் குன்றே உருகி ஆறாயிற்றென்ற காரணங்கொண்டு சிலம்பாறு என்னலாயிற்று என்பர். (இது சமத்கார ஸூக்தி.)

“சிலம்பியலாறுடைய” என்றவிடத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளையருளிய வியாக்கியானம்—“ஸ்வர்க்கத்தினின்றும் அப்ஸரஸ்ஸுக்கள் வந்து ஆச்ரயிக்க, அவர்களுடைய சிலம்பினுடைய ஸ்வபாவத்தை யுடைத்தான ஆற்றையுடைய திருமலை” என்றுள்ளது. .... .... .... ... (கூ)

தேடற்கரியவனைத் திருமாலிருஞ்சோலைநின்ற *
ஆடற்பறவையனை அணியாயிழைகாணுமென்று *
மாடக்கொடிமதிள்சூழ் மங்கையார் கலிகன்றிசொன்ன *
பாடல்பனுவல்பத்தும் பயில்வார்க்கில்லைபாவங்களே. (கo)

| | | | |
|---|---|---|---|
| தேடற்கு அரியவனை | (ஒருவர்க்கும் தன் முயற்சியாலே) தேடிப்பிடிக்க முடியாதவனும் | மாடம் கொடி மதிள் சூழ் மங்கையார் கலிகன்றி சொன்ன | மாடங்களில் நாட்டின கொடிகளோடு கூடின திருமதிள்களாலே சூழப்பட்ட திருமங்கை நாட்டிலுள்ளார்க்குத் தலைவரான ஆழ்வாரருளிச்செய்த |
| திருமாலிருஞ் சோலை நின்ற | திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருப்பவனும் | | |
| ஆடல் பறவையனை | (ஸந்தோஷத்திற்குப் போக்குவீடான) ஆட்டத்திற்சிறந்த பெரியதிருவடியை வாஹனமாகவுடையனுமான ஸுந்தரபாஹுவை | பாடல் | பாடலாகிய |
| | | பனுவல் பத்தும் | இப்பத்துப்பாசுரங்களையும் |
| | | பயில்வார்க்கு | கற்பவர்களுக்கு |
| அணி ஆய் இழை காணும் என்று | அழகிய ஆபரணங்களையுடைய என் மகள் காணப் பெறுவளென்று, | பாவங்கள் இல்லை | பாவமொன்றுமில்லையாகும். |

* * *—தானே தன்னைக் கொண்டுவந்து காட்டினால் காணலாமத்தனையொழிய ஸ்வப்ரயத்நத்தினால் ஒருவர்க்கும் அணுக அரியனானவன் ஸர்வஸுலப

http://acharya.org

னுகப் பெரிய திருவடியின் தோளிலேறித் திருமாலிருஞ்சோலை மலையிலே வந்து நிற்கிறுனாயிற்று; அன்னவனை என்மகள் காணப்பெறுவளோ வென்று சங்கித்துக் காணப்பெறுவள் என்று நிச்சயித்துப் பேசின இத்திருமொழியைப் பயில்பவர்கள் பாவந்தொலையப் பெறுவர் என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

இத்திருமொழியின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான அவதாரிகையில் "இவளாற்றாமை யிருந்தபடியால் அவனோடே அணைந்தல்லது தரிக்கமாட்டாள் போலே யிருந்தது; அணைத்துவிட வல்லளோ? அன்றிக்கே இங்ஙனே நோவுபடுமித்தனையோ? என்று சங்கித்துப் பின்னையும் அவனைக் கிட்டியேவிடுவளென்று அறுதியிட்டுத் தரிக்கிறாளாயிருக்கிறது" என்றருளிச் செய்திருக்கக் காண்கையாலே இப்பாட்டில் "அணியாயிழை காணுமேன்று" என்றதை நிச்சயபரமாகவே உரையிடவேண்டும். ஆனால், கீழ் ஒன்பது பாசுரங்களிலும் சொன்ன விஷயத்தையே யன்றோ நிகமனப் பாசுரத்தில் எடுத்துரைக்க வேண்டும்; கீழெல்லாம் நிச்சயமின்றி ஸந்தேஹிப்பதாகத் தானே உள்ளது; நிச்சயித்ததாக எங்குக் கிடைத்தது? என்று சிலர் சங்கிப்பர்; இப்பாசுரத்தில் 'காணுங் கொலோ வென்று' என்றிராமையாலே நிச்சயிப்பதாகவே இதில் விளங்குமென்க. ....(௧௦)

அடிவரவு:—மூவரில் புனை உண்டு சிங்கமது தானவன் நேசம் புள்ளினை பார்த்தனுக்கு வலம்புரி தேடற்கு எங்கள்.

ஒன்பதாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## ஒன்பதாம்பத்து—பத்தாந்திருமொழி,

# எங்களெம்மிறையெம்பிரான்.

**உரையவதாரிகை:**—வாடினேன் வாடி யென்று தொடங்கித் தமக்குத் திருமந்திரம் லபித்தபடியைப் பேசி, அந்தத் திருமந்திரத்தின் அர்த்தத்தையும் கூடவே ஆராய்ச்சி செய்தருளித் திருமந்த்ரார்த்தத்துக்கு எல்லை நிலமான திவ்ய தேசங்களிலே சென்று எம்பெருமானை ஸேவிக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றி முதலில் வடநாட்டுத் திருப்பதிகளையும் அதன்பிறகு தொண்டைநாட்டுத் திருப்பதிகளையும் அதன்மேல் நடுநாட்டுத் திருப்பதிகளையும் பிறகு சோழநாட்டுத் திருப்பதிகளையும் அநுபவித்துப் பிறகு பாண்டிநாட்டுத் திருப்பதிகளை

http://acharya.org

யநுபவிக்கையிலே இடையில் திருவல்லவாழென்கிற மலைநாட்டுத் திருப்பதியொன்றை யநுபவித்து மீண்டும் பாண்டிநாட்டுத் திருப்பதிகளுள் மிகச்சிறந்ததான திருமாலிருஞ்சோலையை யநுபவித்து, இனி அப்பாண்டி நாட்டுக்குத் திலகம்போன்று விளங்குகின்ற திருக்கோட்டியூரை யநுபவிக்க வொருப்படுகிறார்.

ஹிரண்யாஸுரன் மூவுலகத்தையும் ஆட்சிசெய்த காலத்தில் தேவர்கள் அவ்வசுரனை யொழித்தற்கு வேண்டும் உபாயத்தை ஆலோசிப்பதற்கு ஏற்றதாய் அஸுரர்களது உபத்ரவமில்லாததான ஓரிடத்தைத் தேடுகையில் கதம்ப முனிவரது சாபத்தால் 'துஷ்டர் ஒருவரும் வரக்கூடாது' என்று ஏற்பட்டிருந்த இந்த க்ஷேத்ரம் அவர்கள் கூட்டமாக இருந்து ஆலோசித்தற்கு ஏற்ற இடமாயிருந்த காரணம்பற்றி இத்தலத்திற்கு 'கோஷ்டீபுரம்' என்று வடமொழியிற் பெயர்; அதுவே 'கோட்டியூர்' எனத் தமிழில் வழங்குகின்றது. .

சைவப்பற்றும் விஷ்ணுத்வேஷமும் கொண்ட சோழராஜனது கொடுமையினால் திருவரங்கம் பெரியகோயிலில் ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள் நிர்ப்பயமாக வாழ்வதற்கு இயலாத காலத்திலே கூரத்தாழ்வான் அத்தலத்தை விட்டுச் சில காலம் திருமாலிருஞ்சோலையில் வாழ்ந்ததுபோல, அவரது திருக்குமாரரான பட்டர் இத்தலத்தில் நெடுநாள் வாழ்ந்த விசேஷமும், எம்பெருமானாரும் கூரத்தாழ்வானும் இத்தலத்திற்குப் பலமுறை எழுந்தருளிப் பெருநிதிபெற்ற விசேஷமும் உணரத் தக்கன. .... .... .... .... *

எங்களெம்மிறை யெம்பிரான் இமையோர்க்குநாயகன் * ஏத்தடியவர்
தங்கள்தம்மனத்துப் பிரியாதருள்புரிவான் *
பொங்குதண்ணருவிபுதம்செய்யப் போன்களேசிதற இலங்கொளி *
செங்கமலமலரும் திருக்கோட்டியூரானே. (௧)

| | |
|---|---|
| எங்கள் எம் இறை | எமக்கு அஸாதாரண ஸ்வாமியும் |
| எம்பிரான் | எமக்கு உபகாரகனும் |
| இமையோர்க்கு நாயகன் | நித்யஸூரிகளுக்குத் தலைவனும் |
| ஏத்து | துதிக்கின்ற |
| அடியவர் தங்கள் தம் | பக்தர்களினுடைய |
| மனத்து | நெஞ்சிலே |
| பிரியாது | பிரியாமல் பொருந்தியிருந்து |
| அருள் புரிவான் | (அவர்கட்கு) அருள் செய்பவனுமான எம்பெருமான் |

(எவ்விடத்துள்ளானென்னில் ;)

| | |
|---|---|
| பொங்கு | மேன்மேலும் கிளர்கின்ற |
| தண் | குளிர்ந்த |
| அருவி | அருவிகளானவை |
| புதம் செய்ய | தாவிப் பாய, |
| பொன்களே சிதற | (அவ்வருவிகள் மூலமாகப்) பொன்மணிகள் சிந்த |
| இலங்கு ஒளி | (அதனால்) விளங்குகின்ற ஒளியையுடையதாயும் |
| செம் கமலம் மலரும் | செந்தாமரைப்பூக்கள் மலரப் பெற்றதாயுமுள்ள |
| திருக்கோட்டியூரான் | திருக்கோட்டியூரி லெழுந்தருளியுள்ளான். |

http://acharya.org

* * *—'எங்களிறை' என்றோ 'எம்மிறை' என்றோ அருளிச்செய்தால் போதுமாயிருக்க 'எங்களெம்மிறை' என்பானேன்? புநருக்தியன்றோ? என்னில்; 'எங்களுக்கே இறை' என்று திடமான அஸாதாரணத் தோற்றச் சொல்லவேண்டுவது ஆழ்வார்க்கு விவக்ஷிதமாதலால் இரட்டித்துச்சொல்லப்பட்டதென்க. பிறர்க்கும் ஸ்வாமியாய் எங்களுக்கும் ஸ்வாமியாயிருக்கிறானல்லன்; எங்களுக்கே அஸாதாரண ஸ்வாமியா யிருக்கிறானென்கிறார். சரணாகதிகத்யத்தில் எம்பெருமானார் "ஸ்வாமிந்!" என்றதற்கு மேலும் "ஸ்வஸ்வாமிந்" என்று விசேஷித்து அருளிச்செய்ததும் இங்கு அநுஸந்திக்கத் தக்கது. 'பிறர்க்கும் எமக்கும் பொதுவான ஸ்வாமியல்லன், எமக்கே அஸாதாரண ஸ்வாமி' என்கிற விதற்குக் கருத்து யாதெனில்; கேண்மின்; பரவாஸுதேவனா யிருக்குமிருப்பு நித்யமுக்தர்களின் அநுபவத்திற்காக; வ்யூஹநிலை பிரமன் முதலானாருடைய கூக்குரல் கேட்கைக்காக. ராமக்ருஷ்ணாதி விபவாவதாரங்கள் அக்காலத்திலிருந்தவர்கட்காயொழிந்தன; அந்தர்யாமியா யிருக்குமிருப்பு ப்ரஹ்லாதாழ்வான் போல்வார்க்குப் பயனளிக்கும். அர்ச்சாவதார நிலையொன்றே எமக்கு ஜீவநம். ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுக்கைக்காகவே யன்றோ இது ஏற்பட்டது. குருடர்க்கு ஏற்பட்ட இடத்திலே விழிகண்ணர் புகுரலாமோ? விழிகண்ணர்க்கு ஏற்பட்ட இடம் குருடர்க்கு உதவுமோ? ஆகையாலே எமக்கே அஸாதாரண ஸேவ்யமாக வாய்த்தது திருக்கோட்டியூர் நிலை யென்கிறார். பதியே பரவித்தொழும் தொண்டரனைவரையுட் 'எங்கள்' என்றதில் கூட்டிக்கொள்க. "அடியோமுக்கே யெம்பெருமானல்லிரோ நீர் இக்தளூரீரே!" என்றருளிய பாசுரமும் இங்கு ஸ்மரிக்கவுரியது.

'எங்களெம்மிறை' என்றதிற்காட்டில் 'எம்பிரான்' என்றதற்கு வாசி என்னென்னில்; ஸொத்தையுடையவன் என்பதுமாத்திரம் அதனால் சொல்லிற்று; ஸொத்துக்கு ஆவனசெய்யும் உபகாரகத்வம் இதனாற் சொல்லுகிறது. 'இவன் நமக்கு உரியவன்' என்னும்படி சேஷத்வத்திலே நிறுத்திவைப்பது மாத்திரமான ஸ்வாமித்வம் முதல்விசேஷணத்தின் பொருள். சேஷத்வத்தின் பயனான கைங்கரியத்தைக் கொள்ளுகையும், கைங்கரியம் செய்யுமிடத்து நேரும் இடையூறுகளைப் போக்கிப் பணிகொள்ளுகையும் இரண்டாவது விசேஷணத்தின் பொருளாக விவக்ஷிதம். பிரான்—உபகாரஞ் செய்பவன். அவிச்சிந்ந கைங்கர்யங் கொள்ளப் பெறுவதையே உபகாரமாக நினைப்பர் மாஞானிகள்.

இப்படி எமக்கு ஸ்வாமியாயிருப்பதும் எமக்கு உபகாரகனாயிருப்பதும் வேறு அடியார்கள் அவனுக்கு இல்லாமையாலன்று; நித்யவிபூதியை ஒரு நாடாகவுடையவனா யிருந்து வைத்தும் 'மீனுக்குத் தண்ணீர் வார்ப்பதுபோல அவர்கட்குக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கும் நிலைமை ஒரு சிறப்போ!' என்று இங்கே போந்தருளி எங்களெம்மிறை யெம்பிரானா யிருக்கிறானென்னுங் கருத்துப்பட 'இமையோர்க்கு நாயகன்' என்கிறார்.

"ஸததம் கீர்த்தயந்தோ மாம்" "நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா" என்கிறபடியே த்ரிகரண வ்ருத்திகளையும் தன்பக்கற் செலுத்தி யிருக்குமடியவர்களின் மனத்

http://acharya.org

திலே ''வடதடமும் வைகுந்தமும் மதிள் துவராபதியும் இடவகைகளிகழ்ந்திட்டு என்பாலிடவகை கொண்டனையே'' என்னுமாபோலே நித்யவாஸஞ் செய்தருளும்படியை நான்காவது விசேஷணத்தாலே அருளிச்செய்தாராயிற்று.

இப்படிப்பட்ட எம்பெருமான் திருக்கோட்டியூரி லெழுந்தருளியிருக்கிறானென்று சொல்லவேண்டி, அத்தலத்தின் வளத்தைப் பின்னடிகளில் அருளிச்செய்கிறார். அருவிப் பெருக்குகள் குதிரை தாவுமாபோலே தாவித் தாவிப் பிரவஹிக்கும்படியை ''பொங்குதண்ணருவி புதஞ்செய்ய'' என்றதனால் சொன்னாராயிற்று. கீழ்த்திருப்புல்லாணிப் பதிகத்தில் ''வெண்திரை புரவியென்னப் புதஞ்செய்து'' என்றது காண்க. புதஞ்செய்தல்—தாவிப்பாய்தல். பொன்களே சிதற' என்றது அவ்வருவிப் பெருக்குகள் வாயிலாக ரத்னங்கள் கொழிக்கப்பட்டு வருதலைச் சொன்னவாறு.

பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் ''புதம் பொன்களே சிதற'' என்றெடுத்து ''மேகம் பொன்களையே சிந்த'' என்று உரைக்கப்பட்டிருத்தலால் 'புதம்' என்னும் பதம் மீண்டும் அந்வயித்துக் கொள்ளப்பட்டதென்று கொள்ளவேணும். 'அம்புதம்' என்ற வடசொல் முதற்குறையாகப் புதம் என்று கிடக்கிறது; ''புதமிகு விசும்பில்'' என்றவிடத்திற் போல.

'சிதறுமிலங்கொளி' என்றே பெரும்பான்மையாக வழங்கிவரும் பாடமும் வியாக்கியானத்திற்கு இணங்கியதே. பொன்கள் சிதறப்பெற்ற திருக்கோட்டியூர் என இயையும். .... .... .... .... (க)

எவ்வநோய்தவிர்ப்பான் எமக்கிறையின்னகைத்துவர்வாய் * நிலமகள்
செவ்விதோயவல்லான் திருமாமகட்கினியான் *
மௌவல்மாலைவண்டாடும் மல்லிகைமாலையோடுமணைந்த மாருதம் *
தெய்வநாறவரும் திருக்கோட்டியூரானே. (உ)

| | | | |
|---|---|---|---|
| எவ்வம் நோய் தவிர்ப்பான் | துக்கஹேதுவான வியாதிகளை நீக்கியருள்பவனும் | வண்டு ஆடும் | வண்டுகள் சுழலமிடா நிற்கப்பெற்ற |
| எமக்கு இறை | எமக்குவகுத்த ஸ்வாமியும் | மௌவல் மாலையோடும் | சாதிமல்லிகைப் பூக்களோடும் |
| இன் நகை, துவர் வாய் நிலம் மகள் | இனியபுன்சிரிப்பையும் சிவந்த அதரத்தையுமுடையளான பூமிப்பிராட்டியினுடைய | மல்லிகை மாலையோடும் | மல்லிகைப் பூக்களோடும் |
| செவ்வி | அழகை | அணைந்த | ஸம்பந்தித்த |
| தோய வல்லான் | அநுபவிக்கவல்லவனும் | மாருதம் | காற்றானது |
| திரு மா மகட்கு இனியான் | பெரியபிராட்டியார்க்கு போக்யனுமான எம்பெருமான்,— | தெய்வம் நாற | திவ்யமான பரிமளத்தை வீசிக்கொண்டு |
| | | வரும் | வந்து உலாவப்பெற்ற |
| | | திருக்கோட்டியூரான் | திருக்கோட்டியூரிலுள்ளான். |

http://acharya.org

* * *—நம்முடைய துன்பங்களை யெல்லாம் தீர்த்தருள்வதற்காகத் திருமகளும் நிலமகளுமாகிற பிராட்டிமாருடனே திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனென்கிறார். எவ்வநோய் தவிர்ப்பான் = எவ்வமாவது துக்கம்; துக்கங்களைத் தருகின்ற நோய் என்று ஸம்ஸாரமாகிற பெரிய வியாதியைச் சொல்லுவதாகவுங் கொள்ளலாம். “ எருத்துக்கொடியுடையானும் பிரமனு மிந்திரனும், மற்றுமொருத்தரும் இப்பிறவியென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை” என்கிறபடி ஸம்ஸார நோய்க்கு அத்விதீய வைத்யனிறே எம்பெருமான். எமக்கிறையாகையாலே எவ்வநோய் தவிர்ப்பான் என்று கார்ய காரணபாவந்தோற்ற யோஜிப்பது.

இன்னகைத் துவர்வாய் நிலமகள் செவ்விதோயவல்லான் = அடியார்களின் குற்றங்களைக் கணக்கிட்டு எம்பெருமான் தகுந்த சிக்ஷை நடத்துவதாக இருக்கையில், அருகேயிருக்கும் பூமிப்பிராட்டியானவள் அவனுடைய ப்ரபுத்வத்தைப் பரிஹஸிப்பது தோற்றப் புன்சிரிப்பாகச் சிரிப்பள்; ‘நீர் செய்ய நினைத்தது மிகவும் நன்றாயிருந்தது; இச் சேதநனுடைய குற்றங்களைக் கணக்கிட்டு நீர் இப்படி இவனைப் படுகுழியிலே தள்ளப்பார்த்தால் இவனுக்கு வேறொரு போக்கிடமுண்டோ? இவனுக்கும் உமக்குமுள்ள ஸம்பந்தம் ஒழிக்க வொழியாததன்றோ? இவனைப் பெறுகை உம்முடைய லாபமன்றோ? ‘நம் வலையில் ஆர் அகப்படுவார்?’ என்று தேடித்திரிகிற உமக்கு நான் சொல்லவேணுமோ? நீர் ஸர்வஜ்ஞராயிருந்து வைத்து நன்றுசெய்யப் பார்த்தீர்!’ என்பதான உட்கருத்துத் தோன்றப் புன்சிரிப்புச் செய்வளாம்; அதிலே ஸீடுபட்டு மயங்கிப்போவன் எம்பெருமான் என்க.

திருமாமகட்கு இனியான் = நிலமகள் செவ்விதோயவல்லனாகையாலே அதுவே ஹேதுவாகப் பெரியபிராட்டியார்க்கு இனியனாயிருப்பனென்று சுவைமிக்க பொருளருளிச் செய்வர் பெரியவாச்சான்பிள்ளை. “தேவ்யஸ்ஸஹஸ்ரம் தயா யாஸி ஸ்நவாஹத்ருஷ்டிஷிரிவ ஶ்லாகிஃ ப்ரியம் ஶ்ராவயஸே” என்று ஸ்ரீ குணரத்நகோசத்தில் பட்டர் அருளிச்செய்தபடியே, பூமிப்பிராட்டி முதலான தேவிமார்களுக்கு எம்பெருமான் விதேயனாக இருக்குமிருப்பைப் பெரியபிராட்டியார் தம் முலைகளோடும் தோளோடும் அணைந்திருக்குமிருப்பாக உகந்து வர்த்திக்கக் கடவராதலால் நிலமகள் செவ்வியிலே எம்பெருமான் தோய்ந்திருப்பது திருமகட்கு இனிமையாகக் குறையில்லை யென்க.

இப்படிப்பட்ட எம்பெருமான் உறையுமிடமான திருக்கோட்டியூர் நறுமலர்களின் பரிமளத்தை அளைந்துகொண்டு வீசுகின்ற மாருதம் கமழப்பெற்றதென்பன பின்னடிகள். மௌவல் என்று மல்லிகைக்கும் முல்லைக்கும் மாலதிக்கும் பெயர்; “ மல்லிகை மௌவல்,” “மௌவலும் தளவுங் கற்புமுல்லை” “ மாலதி மௌவலாகுமென்ப ” என்பவை சேந்தன் திவாகரம்.

மூன்றாமடியில் ‘ அணைந்து’ என்றும்பாடமுண்டு. ‘மணந்து’ என்பது சிலருடைய பாடமாம். .... .... .... (௨)

வெள்ளியான்கரியான் மணிநிறவண்ணன்விண்ணவர்தமக்கிறை * எமக்கு
ஒள்ளியானுயர்ந்தான் உலகேழுமுண்டுமிழ்ந்தான் *
துள்ளுநீர்மொண்டுகொண்டு சாமரைக்கற்றை சந்தனமுந்திவந்தசை *
தெள்ளுநீர்ப்புறவில் திருக்கோட்டியூரானே. (௩)

| | |
|---|---|
| வெள்ளியான் | (க்ருதயுகத்தில்) வெளுத்த நிறமுடையவனும் |
| கரியான் | (கலியுகத்தில்) கறுத்தநிற முடையவனும் |
| மணி நிறம் வண்ணன் | (த்வாபரயுகத்திலே) நீல மணியின்நிறம் போன்ற நிறமுடையவனும் |
| விண்ணவர் தமக்கு இறை | நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனும் |
| உயர்ந்தான் | எல்லாரினும் மேம்பட்டவனும் |
| | (இப்படியிருந்தும்) |
| எமக்கு ஒள்ளியான் | எனக்குத்தன்னழகைக் காட்டித்தந்தவனும் |
| உலகு ஏழும் உண்டு | (பிரளயகாலத்திலே) ஸப்தலோகங்களையும் திருவயிற்றிலே வைத்துக்காத்து |
| உமிழ்ந்தான் | பிறகு வெளிப்படுத்தினவனுமான ஸர்வேச்வரன், - |
| துள்ளு நீர் | கொந்தளிக்கின்ற அலைகளாலே |
| சாமரை கற்றை | சாமரத்திரள்களையும் |
| சந்தனம் | சந்தனமரங்களையும் |
| மொண்டு கொண்டு வந்து | இழுத்துக்கொண்டுவந்து |
| உந்தி | தள்ளி |
| அசை | ப்ரவஹிக்கின்ற |
| தெள்ளு நீர் | தெளிந்தநீரையுடைய |
| புறவில் | சுற்றுப்பக்கங்களோடுகூடின |
| திருக்கோட்டியூரான் | திருக்கோட்டியூரிலுள்ளான். |

* * *—எம்பெருமான் ஒவ்வொருயுகத்திலும் ஒவ்வொரு நிறத்தைக் கொள்வன்; க்ருதயுகத்திலுள்ளவர்கள் ஸத்வகுணம் நிறைந்தவர்களாய் சுத்தமான நிறத்தை உகக்குமவர்களாகையாலே அவர்கட்காகப் பால்போன்ற வெண்ணிறத்தைக் கொள்வன்; அந்த நிறமே இங்கு வெள்ளியான் என்று அநுஸந்திக்கப்பட்டது. கலியுகத்தில் எந்த நிறங்கொண்டாலும் ஈடுபடுவாரில்லாமையாலே இயற்கையான கரியநிறத்தைக் கொள்வன்; அந்தநிறமே இங்கு 'கரியான்' என்று அநுஸந்திக்கப்பட்டது. த்வாபரயுகத்தில் பசுமைநிறத்தைக் கொள்வன்; அந்த நிறமே இங்கு மணிநிறவண்ணன் என்று அநுஸந்திக்கப்பட்டது. அயர்வறும் அமரர்களதிபதியாய் ஸர்வஸ்மாத்பரனாயிருந்துவைத்து எனக்கு வைத்தகண் வாங்கவொண்ணாதபடி தன்வடிவழகைக் காட்டியருள்பவன் உலகங்களையெல்லாம் பிரளயாபத்துக்குத் தப்பிப்பிழைக்கச் செய்தருளியது போலவே நம்மை ஸம்ஸாரப்ரளயத்துக்குத் தப்பவைப்பதற்காகத் திருக்கோட்டியூரிலே வந்து ஸந்நிஹிதனாயிராநின்றான்.

சாமரைக்கற்றை, சந்தநவ்ருக்ஷம் முதலிய சீரியபொருள்களைக் கொழித்துக் கொண்டு ப்ரவஹிக்கின்ற மணிமுத்தாறு அருகே விளங்கப் பெற்றதாம் இத்தலம்.

http://acharya.org

ஏறுமேறியிலங்கு மொண்மழுப்பற்றும் ஈசற்கிசைந்து * உடம்பிலோர்
கூறுதான்கொடுத்தான் குலமாமகட்கினியான் *
நாறுசண்பகமல்லிகைமலர்புல்கி இன்னிளவண்டு * நன்னறும்
தேறல்வாய்மடுக்கும் திருக்கோட்டியூரானே. (௪)

| | |
|---|---|
| ஏறு ஏறி | விருஷபத்தை வாஹனமாகக்கொண்டு ஏறியிருப்பவனும் |
| இலங்கும் ஒண் மழு பற்றும் | விளங்குகின்ற அழகிய மழுவாயுதத்தைக் கையிலேந்திக்கொண்டிருப்பவனுமான |
| ஈசற்கு | சிவபிரானுக்கு |
| இசைந்து | திருவுள்ளமிணங்கி |
| உடம்பில் ஓர் கூறு கொடுத்தான் | தனது திருமேனியில் ஒரு பாகத்தை இருப்பிடமாகக் கொடுத்தருளினவனும் |
| குலம் | சிறந்த |
| மா மகட்கு | பெரியபிராட்டியார்க்கு |
| இனியான் | போக்யனுமான எம்பெருமான்,— |
| இன் இள வண்டு | இனிய இளவண்டுகளானவை |
| நாறு | மணம்மிக்க |
| செண்பகம் | செண்பகப்பூவையும் |
| மல்லிகை மலர் | மல்லிகைப்பூவையும் |
| புல்கி | தழுவி |
| நல் நறு தேறல் | நல்லமணமுள்ள தேனிலே |
| வாய் மடுக்கும் | வாய்வைத்துப் பருகுமிடமான |
| திருக்கோட்டியூரான் | திருக்கோட்டியூரிலுள்ளான். |

* * *— அன்பே வடிவான பிராட்டியோடு வாசியற அஹங்காரமே வடிவான ருத்ரனுக்கும் திருமேனியிலே இடங்கொடுக்கும் சீலகுணம் வாய்ந்த பெருமான் திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனென்கிறார்.

எம்பெருமானுடைய வாஹனமோவென்னில் 1. "ஸுபர்ணோஸி கருத்மாந்" என்ற வேதவாக்கியத்தாலும் 2. "வேதாத்மா விஹகேச்வர:" என்ற ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியாலும், 3. "சிரஞ்சேதனன் விழி தேகம் சிறைபின் சினைபதம் கந், தரம் தோள்களுரு வடிவம் பெயரெசுர் சாமமுமாம்.......அரங்கர் தமூர்திச்சுவணனுக்கே" என்ற ஐயங்கார் பாசுரத்தாலும் வேதஸ்வரூபியாகப் பிரதிபாதிக்கப்பட்ட பெரிய திருவடியென்னும் கருடாழ்வான். அரனுடைய வாஹநமோவென்னில், 'அடா மாடே!' என்று மூர்க்கரை நிந்திப்பதற்கு த்ருஷ்டாந்தமாகக் கொள்ளப்படுகிற எருது; எம்பெருமானுடைய திவ்யாயுதமோவென்னில்; * அருளார் திருச்சக்கரமென்றே புகழ்பெற்று உலகங்களையெல்லாம் பாதுகாக்குமாறுள்ள சக்கரப்படை; அரனது ஆயுதமோவென்னில்; அவனது கொலைத்தொழிலுக்கு ஏற்ற கரியவிரும்பு— என்னுமிவ்வாசி தோன்ற 'ஏறுமேறியிலங்கு மொண்மழுப்பற்று மீசன்' என்றார். அப்படிப்பட்டவனுக்கும் [இசைந்து உடம்பிலோர் கூறு தான்கொடுத்தான்] ஆபத்துக்களிலே திருமேனி

1. கிருஷ்ணயஜுர் வேதம் 4. வது காண்டம்— முதல்ப்ரச்நம்—43.
2. சதுச்ச்லோகீ (காத்தாஸ்தோத்ரம்)—1.
3. திருவரங்கத்துமாலை—88.

யிலே இடங்கொடுத்தருள்வது சிறந்த குணமாகையாலே ஆழ்வார்கள் இதை நித்யமாக அருளிச்செய்வரென்ப.

குலமாமகட்கு இனியான் = கீழ்ச்சொன்ன சிலகுணத்தைக்கண்ட பெரிய பிராட்டியார் 'இப்படிப்பட்ட குணசாலியை நாம் ஒரு நொடிப்பொழுதாகிலும் விட்டுப்பிரியலாமோ' வென்று நித்யஸம்புக்தையாயிருக்க, அவளுக்குத் தன்னுடைய போக்யதையை யெல்லாம் முற்றூட்டாக அநுபவிப்பிக்குமவன் என்றபடி.

வண்டுகள் நறுமணம் மிக்க செண்பகப்பூக்களையும் மல்லிகைமலர்களையுந் தழுவி அவற்றால் வந்த வெப்பம் ஆறுகைக்காகத் தேனிலே வாய்வைக்குமிடமான திருக்கோட்டியூரிலுள்ளானென்பன பின்னடிகள். .... .... (ச.)

வங்கமா கடல்வண்ணன் மாமணிவண்ணன் விண்ணவர்கோன் *மதுமலர்த்
தொங்கல் நீண்முடியான் நெடியான் படிகடந்தான் *.
மங்குல்தோய் மணிமாட வெண்கொடி மாகமீதுயர்ந்தேறி * வானுயர்
திங்கள்தா னணவும் திருக்கோட்டியூரானே. (ரு)

| | |
|---|---|
| வங்கம் மா கடல் வண்ணன் | கப்பல்களையுடைய பெரிய கடலின் நிறம்போன்ற நிறமுடையவனும் |
| மா மணி வண்ணன் | நீலமணி நிறமுடையவனும் |
| விண்ணவர் கோன் | நித்யஸூரிகட்குத் தலைவனும் |
| மது | தேனையுடைத்தான |
| மலர் தொங்கல் | பூமாலையை |
| நீள் முடியான் | நீண்ட திருவபிஷேகத்திலணிந்துள்ளவனும் |
| நெடியான் | ஸர்வோத்க்ருஷ்டனும் |
| படி கடந்தான் | (த்ரிவிக்ரமாவதாரத்தில்) பூமியையளந்து கொண்டவனுமான பெருமான்,— |
| மங்குல் தோய் மணி மாடம் | மேகமண்டலத்தை அளாவியிருக்கின்ற மணிமாடங்களிலே (கட்டின) |
| வெண் கொடி | வெளுத்த த்வஜபடங்கள் |
| மாகம் மீது | ஆகாசத்தின் மேலே |
| உயர்ந்து ஏறி | வியாபித்து |
| வான் உயர் திங்கள் தான் | மிகவுமுயர்ந்த சந்திரனை |
| அணவும் | ஸ்பர்சிக்கப்பெற்ற |
| திருக்கோட்டியூரான் | திருக்கோட்டியூரிலுள்ளான். |

* * *— கடல் போலவும் நீலமணி போலவுமுள்ள திருமேனி நிறத்தையுடையனாய், இப்படிப்பட்ட வடிவை நித்யஸூரிகளுக்கு நித்ய போக்யமாகக் கொடுத்தருள்பவனாய், "பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற வெம்பெருமான்" என்பது நன்கு விளங்கத் திருத்துழாய் மாலையணிந்த திருவபிஷேகத்தையுடையனாய், தன்னோடொப்பாரையும் தன்னில் மிக்காரையுமுடையனாகாதபடி ஸர்வாதிகனாய், இந்திரனுக்குக் காரியஞ் செய்கிறவியாஜத்தாலே உலகமுழுவதையும் தன் ஸ்ரீ பாததூளி ஸ்பர்சத்தாலே புனிதமாக்கினவனான பெருமான் வானளவு மோங்கின மாடமாளிகைகளையுடைத்தான திருக்கோட்டியூரிலுள்ளானென்றதாயிற்று.

http://acharya.org

வங்கம் என்பதைத் தமிழ்ச்சொல்லாகவே கொண்டால் மரக்கலம் [கப்பல்] எனப் பொருள்படும்; அன்றி, “ஹங்கஸ்தரங்க ஊர்மிர்வா” என்ற அமரகோசத்தின்படி அலையென்னும் பொருளதான ‘பங்கம்’ என்னுஞ் சொல்லின் விகாரமாகவுங் கொள்ளலாம். இருவகைப் பொருள்களிலும் இச்சொல் கடலுக்கு இயற்கையடைமொழியாம்.

மாகம்=‘நாகம்’ என்ற வடசொல்லின் விகாரம்; பரம்பின ஆகாசம் என்றபடி. மாடமாளிகைகளில் கொடி கட்டியிருப்பதாக வருணித்தல் செல்வச் சிறப்பு. .... .... .... .... .... (௫)

காவலனிலங்கைக்கிறை கலங்கச் சரம்செலவுய்த்து * மற்றவன்
ஏவலம் தவிர்த்தான் என்னையாளுடைய யெம்பிரான் *
நாவலம் புவிமன்னர் வந்துவணங்க மாலுறைகின்றதிங்கென *
தேவர் வந்திறைஞ்சும் திருக்கோட்டியூரானே. (௬)

| | | | |
|---|---|---|---|
| காவலன் | ‘நானே ஜகத்ரக்ஷகன்’ என்று அஹங்காரங் கொண்டிருந்த | எம்பிரான் | எம்பெருமான் (எவ்விடத்திலுள்ளானெனில்,) |
| இலங்கைக்கு இறை | லங்காதிபதியான இராவணன் | நாவலம் புவி மன்னர் | ஜம்பூத்வீபத்திலுள்ள அரசர்கள் |
| கலங்க | முடியும்படியாக | மால் இங்கு உறை கின்றது என வந்து | ‘எம்பெருமான் இவ்விடத்தில் நித்யஸந்நிதி பண்ணியிருக்கிறான்’ என்று தெரிந்துவந்து |
| சரம் | பாணங்களை | வணங்க | ஆச்ரயிக்க, |
| செலவுய்த்து | பிரயோகித்து | தேவர் | பிரமன்முதலிய தேவர்களும் |
| அவன் | அவ்விராவணனுடைய | வந்து இறைஞ்சும் | வந்துவணங்கப்பெற்ற |
| ஏவலம் | பாணப்ரயோக ஸாமர்த்தியத்தை | திருக்கோட்டியூரான் | திருக்கோட்டியூரிலுள்ளான். |
| தவிர்த்தான் | தொலைத்தவனும் | | |
| என்னை ஆளுடை | என்னை அடிமைகொண்டருளினவனுமான | | |

* * *—“காவலன்” என்பதை எம்பிரானுக்கு விசேஷணமாக்கவுமாம், இராவணனுக்கு விசேஷணமாக்கவுமாம். காக்க வல்லவன் என்றபடி. எம்பிரானுக்கு விசேஷணமாகக் கொள்ளில் “காக்குமியல்வினன் கண்ண பெருமான்” என்கிறபடியே அவனுடைய இயற்கைக் குணமாகிய ரக்ஷகத்வத்தைச் சொல்லுகிறது. இராவணனுக்கு விசேஷணமாகக் கொண்டால், ரக்ஷகத்வத்தை ஏறிட்டுக் கொண்டவன் என்றதாகிறது. ஸர்வேச்வரனொருவனுளனென்றும் அவனுக்கு அடிமைப்பட்டு உய்தல் நம்முடைய ஸ்வரூபமென்றும் உணரப்பெறாதே தானே ஸர்வரக்ஷகனாக அஹங்கரித்திருந்த இராவணனைஅவன் ‘இன்றளவும் நாம் அநுபவியாதிருந்த பரிபவம் இன்று அநுபவிக்கலாயிற்றே! இன்னமும் என்னருமோ!’ என்று மனந் தளரும்படியாக அவன்மீது அம்புகளைப் பொழிந்து அவனுடைய மிடுக்கைத் தவிர்த்தவனும், இப்படிப்பட்ட வீரச்செயலுக்கு என்.

http://acharya.org

னைத் தோற்பித்து அடிமை கொண்டருளினவனுமான பெருமான் திருக்கோட்டியூரான்.

[நாவலம் புவிமன்னர் இத்யாதி.] உப்புக்கடல் கருப்புக்கடல் கள்ளுக்கடல் நெய்க்கடல் தயிர்க்கடல் பாற்கடல் நீர்க்கடல் என்ற ஏழுகடல்களாலுஞ் சூழப்பட்ட ஏழு தீவுகளுக்கு, முறையே, ஜம்பூத்வீபமென்றும் ப்லக்ஷத்வீபமென்றும் சால்மலத்வீபமென்றும் குசத்வீபமென்றும் க்ரௌஞ்சத்வீபமென்றும் சாகத்வீபமென்றும் புஷ்காரத்வீபமென்றும் பெயர். இவற்றுள் ஜம்பூத்வீபம் மற்ற எல்லாத் தீவுகளுக்கும் நடுவிலுள்ளது. அதன் நடுவில் மேரு என்னும் பொன்மலையுள்ளது. அதனைச் சுற்றியுள்ள இளாவ்ருதவருஷத்தில் ஸ்ருஷ்டிக்கப்பட்டுள்ள நான்கு மலைகளைச்சுற்றி நாற்றிசையிலும் நான்கு மரங்களுள்ளன; அவற்றிலொன்றாகிய நாவல் மரம் ஜம்பூத்வீபமென்று இத்தீவின் பெயர் வழங்குதற்குக் காரணமாயிற்றென்று புராணங்கூறும். [ஜம்பூ—நாவல்.] மற்றைத் தீவுகள் கருமபலாநுபவத்திற்கே உரியவையாகையாலும், இத்தீவு பலன்களுக்குச் சாதனமான கருமங்களை அநுட்டித்தற்கு உரிய இடமாகையாலும் இத்தீவு ஒன்றே சிறப்புறுமென்க. இத்தீவில் நவமகண்டமான பாரத வருஷத்துக்கன்றோ இவ்வுரிமை உள்ளதென்னில்; ஆம்; இத்தீவுக்கு இக்கண்டம் முக்கியமானமைபற்றி அச்சிறப்பை இத்தீவுக்கு உள்ளதாகச்சொல்லக் குறையில்லை. இத்தீவினில் மானிடப்பிறவி படைப்பது அரிய பெரிய தவங்களின் பயனாகுமென்பர். அப்படிப்பட்ட தவங்களைச் செய்து இத்தீவில் பிறந்து அரசர்களாக வாழ்பவர்கள் திருக்கோட்டியூரை வந்து வணங்காநிரார்கள்; அவர்கள் வணங்குவதைக் கண்ட இந்திராதி தேவர்கள் இவ்விடத்திலே தேவ ஸந்நிதானமுண்டென்றுணர்ந்து தாங்களும் வந்து இறைஞ்சுவர்களாம்.

சரம்—வடசொல். சேல—செல்ல. 'மற்றவன்' என்றதில், மற்று—அசை. வலம்—'நாமே அம்பு எய்யவல்லோம்; நம்மோடொப்பாரில்லை' என்னும் மிடுக்கு. .... .... ... .... .... .... (௬)

கன்றுகொண்டு விளங்கனியெறிந்து ஆநிரைக்கழிவென்று * மாமழை
நின்று காத்துகந்தான் நிலமாமகட்கினியான் *
குன்றின் முல்லையின் வாசமுங் குளிர்மல்லிகை மணமு மளைந்து * இளந்
தென்றல் வந்துலவுந் திருக்கோட்டியூரானே. (௭)

| | | | |
|---|---|---|---|
| கன்று கொண்டு | வத்ஸாஸுரனைக் கொண்டு | மா மழை | பெருமழையை |
| விளங்கனி | கபித்தாஸுரன் மீது | நின்று காத்து | மலையின்று தடுத்து |
| எறிந்து | வீசியெறிந்து இரண்டையும் முடித்தவனும் | உகந்தான் | திருவுள்ளமுவந்தவனும் |
| ஆநிரைக்கு அழிவு என்று | பசுக்கூட்டத்திற்குத் தீங்கு வந்ததேயென்றறிந்து | நிலம் மா மகட்கு | பூமிப்பிராட்டிக்கு |
| | | இனியான் | போக்யனுமான எம்பெருமான்,— |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| இள தென்றல் | இளமைதங்கிய தென்றற்காற்று | அளைந்து | முகந்துகொண்டு |
| குன்றின் முல்லையின் வாசமும் | மலைமுல்லைப்பூக்களின் பரிமளத்தையும் | வந்து உலவும் | வந்து (வீதிகளில்) உலாவப்பெற்ற |
| குளிர் மல்லிகை மணமும் | குளிர்ந்தகொடிமல்லிகையின் பரிமளத்தையும் | திருக்கோட்டியூரான் | திருக்கோட்டியூரிலுள்ளான். |

* * *—தீயபுந்திக் கஞ்சனுடைய ஏவுதலாலே கன்றினுருவாகவும் விளாமரமாகவும் வந்து நலியநின்ற இரண்டு அசுரர்களை 'அவை ஒன்றோடொன்று மோதியொழிந்தன' என்னும்படி தொலைத்தவன்; பசிக்கோபத்தினால் இந்திரன் ஏழுநாள் பெய்வித்த விடாமழையினால் திருவாய்ப்பாடிக்குக் கெடுதல் விளையுமென்று கோவர்த்தனமலையைக் குடையாகவெடுத்துப் பிடித்துத் தடுத்து ஆயர்களையும் ஆநிரைகளையும் சிறிதும் துளக்கமின்றிக் காத்தருளி 'நம்முடைய ரக்ஷ்யவர்க்கம் நோவுபடாமே ரக்ஷிக்கப்பெற்றோமன்றோ' என்று திருவுள்ளமுவந்தவன்; இப்படிப்பட்ட அதிமாநுஷ திவ்ய சேஷ்டிதங்களாலே சிஷ்டர்களை வாழ்வித்து துஷ்டர்களை மாள்வித்து மண்ணின் பாரம் நீக்குகையாலே நிலமாமகட்கு இனியான். அப்படிப்பட்ட பெருமான் நறுமலர்களில் பரிமளத்தைக் கொய்துகொண்டு தென்றல் வந்துலவும் போக்யதை வாய்ந்த திருக்கோட்டியூரிலுள்ளான்.

முதலடியில் 'அழிவென்று' என்றபாடத்திற் காட்டிலும் 'அழிவன்று' என்றபாடம் சிறக்கும்; வியாக்கியானத்திற்கும் நன்கு பொருந்தும்; "பசுக்களுக்கு அழிவு வருமன்று" என்பது வியாக்கியான வாக்கியம். (அழிவன்று—கெடுதல் நேர்ந்த காலத்திலே.) .... .... .... .... .... (எ)

பூங்குருந்தொசித் தானைகாய்ந்துஅரிமாச்செகுத்து * அடியேனையாளுகந்து
ஈங்கென்னுள்புகுந்தான் இமையோர்கள் தம்பெருமான் *
தூங்குதண் பலவின்கனி தொகுவாழையின்கனியோடு மாங்கனி *
தேங்கு தண்புனல்சூழ் திருக்கோட்டியூரானே. (அ)

| | | | |
|---|---|---|---|
| பூ | பூத்திருந்த | அடியேனை | அடியேனை |
| குருந்து | குருந்தமரத்தை | ஆள் உகந்து | ஆட்கொண்டருளத் திருவுள்ளமுவந்து |
| ஒசித்து | முறித்துத் தள்ளினவனும், | ஈங்கு | இந்த ஸம்ஸாரத்திலே |
| ஆனை | (குவலயாபீடமென்னும்) யானையை | என்னுள் புகுந்தான் | என்னெஞ்சினுள்ளே புகுந்தருளினவனும் |
| காய்ந்து | சீறிமுடித்தவனும் | இமையோர்கள் தம் பெருமான் | நித்யஸூரிகளுக்குத் தலைவனாயுமுள்ள பெருமான்,— |
| அரிமா | (கேசியென்னும்) குதிரையை | | |
| செகுத்து | கொன்றவனும் | மாங்கனி | மாம்பழங்கள், |

http://acharya.org

| | |
|---|---|
| தூங்கு | (பழுத்துத்) தொங்குகின்ற |
| தண் | அழகிய |
| பலவின் கனி | பலாப்பழங்களோடும் |
| தொகு வாழையின் கனியொடும் | திரண்டவாழைப்பழங்களோடுங்கூட |
| தேங்கு | (விழுந்து) தேங்கியிருக்கப்பெற்ற |
| தண் புனல் | குளிர்ந்த நீர்நிலங்களாலே |
| சூழ் | சூழப்பட்ட |
| திருக்கோட்டியூரான் | திருக்கோட்டியூரிலுள்ளான். |

***-கம்ஸனாலேவப்பட்ட ஓரசுரன், கண்ணபிரான் மலர்கொய்தற்பொருட்டு விரும்பியேறும் குருந்தமரத்தில் ஆவேசித்து அப்பெருமான் வந்து தன்மீது ஏறும்போது தான் முறிந்து விழ்ந்து பெருமானை வீழ்த்திக் கொல்லக் கருதியிருந்தபோது, மாயவனான கண்ணபிரான் அம்மரத்தைக் கைகளாற் பிடித்துத் தன் வலிமைகொண்டு முறித்து அழித்தனனென்பது பூங்குருந்தொசித்த வரலாறு. இங்ஙனே குருந்தமரத்தை யொசித்தொழித்தவனும், கம்ஸன் மதமூட்டி வரவிட்ட குவலயாபீடமென்னும் யானையை முடித்தவனும், குதிரை வடிவுகொண்டு கொல்லவந்த கேசியென்னு மசுரனைக் கொன்றொழித்தவனும், என்னை அடிமைகொள்ள விரும்பி * அயர்வறுமமரர்களதிபதியான தன் மேன்மையைக் கணிசியாதே இந்த ஸம்ஸாரத்திலே என்னுள்ளே புகுந்தருளினவனுமான தேவாதி தேவன், பலாப்பழங்களும் வாழைப்பழங்களும் மாம்பழங்களும் விழுந்து தேங்குகின்ற தீர்த்தங்களாற் புடைசூழப்பட்ட திருக்கோட்டியூரிலெழுந்தருளியுள்ளான்.

"ஆனைகாய்ந்து" என்பதில் காய்ந்து என்றது, உபசாரவழக்கு; கொன்று என்றவாறு. அரிமா='ஹரி' என்னும் வடசொல்லுக்குள்ள பல பொருள்களில் குதிரை என்பதும் ஒருபொருள்; 'மா' என்பது விலங்கின் பொதுப் பெயர்; குதிரையாகிய விலங்கு என்றபடி. ... .... .... (௯)

கோவையின்தமிழ் பாடுவோர் குடமாடுவார் தடமாமலர்மிசை *
மேவு நான்முகனில் விளங்குபுரிநூலர் *
மேவுநான்மறைவாணர் ஐவகைவேள்வி ஆறங்கம்வல்லவர் தொழும் *
தேவதேவபிரான் திருக்கோட்டியூரானே. (௰)

| | |
|---|---|
| கோவை இன் தமிழ் | ஒழுங்குடைத்தான இனிய தமிழ்ப்பாசுரமாகிய இத்திருமொழியை |
| பாடுவார் | (விரும்பி ஆதரித்துப்) பாடக்கூடியவர்களும், |
| குடம் ஆடுவார் | குடமெடுத்து ஆடுமாபோலே (ப்ரீதிக்குப்போக்கு வீடாக) நர்த்தனஞ் செய்பவர்களும் |
| தட மா மலர் மிசை மேவு | மிகப்பெரிய (திருநாபிக்) கமலத்தின்மீது பொருந்தியுள்ள |
| நான்முகனில் | பிரமனிற்காட்டிலும் |
| விளங்கு புரி நூலர் | விளங்குகின்ற யஜ்ஞோபவீதத்தையுடையவர்களும் |
| மேவு நால் மறை வாணர் | நான்கு வேதங்களையும் விரும்பிக் கற்றவர்களும் |
| ஐவகை வேள்வி | பஞ்சமஹாயஜ்ஞாநுஷ்டானத்திலும் |
| ஆறு அங்கம் | வேதாங்கங்கள் ஆறையும் பயில்வதிலும் |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| வல்லவர் | ஸமர்த்தர்களுமான ஸ்ரீவைஷ்ணவர்கள் | தேவதேவபிரான் | தேவாதிதேவன் |
| தொழும் | வணங்கப்பெற்ற | திருக்கோட்டியூரான் | திருக்கோட்டியூரிலுள்ளான். |

* * *—இப்பாசுரத்தின் முதல் மூன்றடிகளும் திருக்கோட்டியூரிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களின் சிறப்பைக் கூறுவன. இத்தலத்து ஸ்ரீவைஷ்ணவர்களின் சிறப்பு ஒப்புயர்வற்றது; பெரியாழ்வார் திருமொழியிலும் "நா அகாரியஞ்சொல்லி லாதவர் நாடொறும் விருந்தோம்புவார், தேவகாரியஞ் செய்து வேதம்பயின்று வாழ் திருக்கோட்டியூர்" என்றும், "குற்றமின்றிக் குணம் பெருக்கிக் குருக்களுக்கனுகூலராய்ச், செற்றமொன்றுமிலாத வண்கையினார்கள் வாழ்திருக்கோட்டியூர்" என்றும், "பூதமைந்தொடு வேள்வியைந்து புலன்களைந்து பொறிகளால், ஏதமொன்றுமிலாத வண்கையினார்கள் வாழ்திருக்கோட்டியூர்" என்றும், "காசின் வாய்க் கரம் விற்கிலுங் கரவாது மாற்றிலி சோறிட்டுத் தேசவார்த்தை படைக்கும் வண்கையினார்கள் வாழ் திருக்கோட்டியூர்" என்றும் ஸௌம்ய நாராயணனுடைய வைபவத்திற்காட்டிலும் அவ்விடத்துப் பாகவதர்களின் வைபவமே மேரப் பொலியக் கொண்டாடியுரைக்கப்பட்டதென்பது உணரத்தக்கது.

**கோவையின் தமிழ் பாடுவோர்**="கோவையையுடைத்தாய் இனிய தமிழான இத்திருமொழியைப்பாடுவார்" என்பது வியாக்கியானம். இத்திருமொழி ஆழ்வார் திருவாக்கில் நின்றும் பூர்த்தியாக அவதரிப்பதற்கு முன்னமே திருக்கோட்டியூர்ஸ்வாமிகள் இதனைப் பாடிக்கொண்டிருப்பதாக இங்கு அருளிச்செய்வது எங்ஙனே பொருந்தும்? என்று சிலர் சங்கிப்பதுண்டு; கேண்மின்; நம்மாழ்வார் "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றாப்போலே, பகவத்குணங்களில் ஈடுபட்டிருக்கும் பாகவதர்களின் நித்யாநுஸந்தாநத்திற்காகவே அருளிச்செய்யும் திவ்யப்ரபந்தமாதலால், அவ்விடத்து ஸ்ரீவைஷ்ணவர்கள் இத்திருமொழியைக் கேட்டால் விடாதே விரும்பிப் பயின்று பாடுவர்களென்னும் நிச்சயத்தாலே இங்ஙனமருளிச்செய்யக் குறையில்லையென்றுணர்க. **கோவை**-ஒழுங்கு. இனி, தொக்கப்பட்ட மாலைக்கும் பேராதலால் அதுபோலப் பரமபோக்யமான தமிழ்ப்பாசுரமென்னவுமாம்.

**குடமாடுவோர்**="செருக்காலே திருவாய்ப்பாடியிற் படியாகக் குடக்கூத்தை யாடுவாராய்" என்பது வியாக்கியானம். குடக்கூத்தாடுதலாவது—தலையிலும் இருதோள்களிலும் அநேக்குக்குடங்களை வைத்துக்கொண்டு கைகளிலே சில குடங்களையேந்தி யாடுவதொருகூத்து; இது இடையர் சாதிக்கு ஏற்ற கூத்து; இதனைத் திருக்கோட்டியூர் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆடுவதாகச் சொல்லுகிற விதற்குக் கருத்து யாதென்று விமர்சிப்பாருண்டு; இதற்குச் சிலர் சொல்லுவதாவது, பெரியாழ்வார் திருமொழித் தொடக்கத்தில் "வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்க், கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்" என்றும் "செந்நெலார் வயல் சூழ் திருக்கோட்டியூர் மன்னு நாரணன் நம்பி பிறந்தமை"

http://acharya.org

என்றும் கிருஷ்ணாவதாரத்திற்குத் திருக்கோட்டியூரை வேர்ப்பற்றாக அருளிச் செய்கையாலே இவ்வூரிலுள்ளார் திருவாய்ப்பாடியாயர்படியை ஏறிட்டுக் கொள்ளுதல் பொருந்து மென்பர்; இது பொருத்தமான ஸமாதான மென்று பெரியோர் கொள்கின்றிலர்; பின்னைப் பொருளென்னென்னில்; 'குடமாடுவார்' என்றது இடையர்களது குடக்கூத்தையே ஆடுகிறவர்களென்றபடியன்று; அதை உபலக்ஷணமாகக் கொள்ளவேணும். இடையர்க்குச் செல்வச் செருக்குவிஞ்சினால் அதற்குப் போக்குவீடாகக் குடக்கூத்தாடுவது போல இத்தலத்திலுள்ளாரும் கோவையின் தமிழ் பாடுதலாலும் நிரந்தரபகவத்குணாநுபவத்தாலுமுண்டாகும் ப்ரீதிக்குப் போக்குவீடாக "மொய்ம்மாம் பூம்பொழிற் பொய்கை" என்னுந் திருவாய் மொழியிற்படியே ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுவார்களென்பதாகப் பெரியோர்பணிக்கக் கேட்டிருக்கை.

தடமாமலர்மிசை மேவுநான்முகனில் விளங்குபுரிநூலர் = அத்யயநஜ்ஞாநாநுஷ்டாநங்களில் * உந்திமேல் நான்முகனை வென்றவர்கள் என்றபடி. இதற்கே விவரணம் மேவுநான்மறையித்யாதி. நான்கு வேதங்களிலும் வ்யாஸபதம் செலுத்தவல்லவர்கள்; வேதாங்கங்கள் ஆறையும் அதிகரித்தவர்கள்; பஞ்ச மஹாயஜ்ஞங்களை யனுட்டிப்பதில் வல்லவர்கள். ஆக இப்படிப்பட்ட பரம வைதிக ஸ்ரீவைஷ்ணவர்களால் ஸேவிக்கப்படா நின்றுகொண்டு தேவ தேவ பிரான் திருக்கோட்டியூரிலெழுந்தருளி யிருக்கிறானென்றதாயிற்று.

ஐவகை வேள்வி = ப்ரஹ்மயஜ்ஞம் தேவயஜ்ஞம் பூதயஜ்ஞம் பித்ருயஜ்ஞம் மநுஷ்யயஜ்ஞம் என்பன பஞ்சமஹாயஜ்ஞங்கள். ப்ரஹ்ம யஜ்ஞமாவது—'ப்ரஹ்ம யஜ்ஞப்ரச்நம்' என்று தினப்படியாக வேதத்தில் ஒவ்வொரு ப்ரச்நம் ஓதுவது. தேவயஜ்ஞமாவது—அக்நிஹோத்ரஞ் செய்வது. பூதயஜ்ஞமென்பது—பிராணிகட்குப் பலியிடுவது. பித்ருயஜ்ஞமென்பது பித்ருக்களை யுத்தேசித்துத் தர்ப்பணம்விடுவது. மநுஷ்ய யஜ்ஞமென்பது விருந்தாளிகட்கு உணவு முதலியன கொடுப்பது. ஆகவிவை பஞ்ச மஹாயஜ்ஞங்க ளெனப்படும்.

ஆறு அங்கம் = "ஶிக்ஷா வ்யாகரணம் ச²ந்தோ³ நிருக்தம் ஜ்யோதிஷம் ததா² கல்பஶ்சேதி ஷட³ங்கா³நி வேத³ஸ்யாஹுர்மநீஷிண: = சிக்ஷா வ்யாகரணம் சந்தோ நிருக்தம் ஜ்யோதிஷம் ததா—கல்பச்சேதி ஷடங்காநி வேதஸ்யாஹுர் மநீஷிண:." என்கிறபடியே சிக்ஷை வியாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என வேதாங்கங்கள் ஆறு. அச்சுக்கள் ஹல்லுக்கள் என்னும் அக்ஷரங்களை உச்சரிக்கவேண்டிய முறைகளும் அவை ஒன்றோடொன்று சேரவேண்டும் முறைகளும் சிக்ஷையில் சொல்லப்படும். ப்ரக்ருதி ப்ரத்யயங்களின் பாகுபாடும், அவற்றின் அர்த்தவிவேகமும் வியாகரணத்திலும் நிருக்தத்திலும் நிர்ணயிக்கப்படும். காயத்ரீ, த்ரிஷ்டுப், ஜகதீ இத்யாதியான ச²ந்தஸ்ஸுகள் சந்தஸ்ஸில் கூறப்படும். வேதங்களில் விதிக்கப்படுங்கருமங்களைக் காலமறிந்து அநுஷ்டிக்க வேண்டுகையாலே அக்காலங்களை யறிவிப்பது ஜ்யோதிஷம். ஆச்வலாயநர்

http://acharya.org

ஆபஸ்தம்பர் முதலிய மஹர்ஷிகளால் செய்யப்பட்ட கல்பங்களில் வைதிக கருமங்களை அநுஷ்டிக்கவேண்டிய முறைமைகள் விளக்கப்படும். இப்படிப்பட்ட ஆறு அங்கங்களின் பாடப்ரவசநங்கள் திருக்கோட்டியூரில் நிகழ்கின்றன வென்கை. .... .... .... .... (௯)

ஆலுமாவலவன் கலிகன்றி மங்கையர்தலைவன் * அணிபொழில்
சேல்கள் பாய்கழனித் திருக்கோட்டியூரானை *
நீலமாமுகில்வண்ணனை நெடுமாலை யின்தமிழால்நினைந்த * இந்
நாலுமாறும் வல்லார்க்கு இடமாகும் வானுலகே. (௧௦)

| | |
|---|---|
| ஆலும் மா வலவன் | ஆடல்செய்கின்ற குதிரையை ஏறிச் செலுத்துதலில் ஸமர்த்தரும் |
| மங்கையர் தலைவன் | திருமங்கை நாட்டிலுள்ளார்க்குத் தலைவருமான |
| கலிகன்றி | ஆழ்வார், |
| அணி பொழில் | அழகியசோலைகளையும் |
| சேல்கள் பாய் கழனி | மீன்கள் துள்ளிவிளையாடுகின்ற கழனிகளையு முடைத்தான |
| திருக்கோட்டியூரானை | திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருப்பவனும் |
| நீலம் மா முகில் வண்ணனை | கறுத்துப்பெருத்த மேகம்போன்ற நிறத்தையுடையவனும் |
| நெடு மாலை | (அடியார்திறத்தில்) அதிகமான வ்யாமோஹத்தையுடையனுமான எம்பெருமானை |
| இன் தமிழால் | இனிய தமிழ்ப்பாசுரங்களைக் கொண்டு |
| நினைந்த | சிந்தித்த |
| இ நாலும் ஆறும் | இப்பத்துப்பாசுரங்களையும் |
| வல்லார்க்கு | ஓதவல்லவர்களுக்கு |
| வான் உலகு | பரமபதம் |
| இடம் ஆகும் | இருப்பிடமாகும். |

* * *—திருக்கோட்டியூர்த் திருமாலைச் சிந்தித்துத் திருமங்கையாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய இத்திருமொழியைக் கற்று வல்லார்களுக்குப் பரமபதமே வாஸஸ்தாநமாகுமென்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

இந்நாலுமாறும் வல்லார்க்கு இடம் வானுலகு ஆகும்=இத்திருமொழியை ஓதுமவர்கள் எவ்விடத்தில் வஸிக்கிறார்களோ அவ்விடமே பரமபதம் என்பதாகவும் கொள்ளலாம். 1. "ஓராயிரத்துளிப்பத்தும் உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்" என்றாரிறே நம்மாழ்வாரும். 2. "திருவாய்மொழியின் மணந்தருமின்னிசை மன்னுமிடந்தொறும்..........புக்கு நிற்குங் குணந் திகழ் கொண்ட இராமாநுசன்" என்றாற்போலே, இத்திருமொழியைப் பாடுமவர்களுள்ளவிடத்தே பரமபதநாதனும் நித்யமுக்தர்களும் வந்து படுகாடு கிடப்பர்களென்றவாறு.

ஆலும் மா=ஆடல்மா என்றபடி. ஆழ்வார் தனதாகக்கொண்டு ஏறிச் செலுத்திய சிறந்த குதிரைக்கு இப்பெயர் வழங்கும். வலவன்—வல்லவன்; ஸமர்த்தன்; பாகன் என்றபடி.

1. திருவாய்மொழி 5—3—11. 2. இராமாநுச நூற்றந்தாதி—60.

161

நெடுமாலை நினைந்த இந்நாலுமாறும்—எம்பெருமானது திருக்குணங்களை மனத்திலே நினைக்க, அவ்வநுபவம் உள்ளடங்காமல் வெளியே பாடல்களாகப் பொசிந்ததென்க. .... .... .... .... (கம)

அடிவரவு:—எங்கள் எவ்வம் வெள்ளி ஏறு வங்கம் காவலன் கன்று பூம் கோவை ஆலும் ஒருகல்.

## பத்தாந்திருமொழி உரை முற்றிற்று.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிச்செய்த
திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில்
பெரிய திருமொழி ஒன்பதாம்பத்து
முற்றுப்பெற்றது.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org